# இலங்கையில் கல்வியும் இன உறவும்

கௌரி சண்முகலிங்கன்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கல்வியும் இன உறவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கல்வியும் இன உறவும்

கௌரி சண்முகலிங்கன்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு – சென்னை
2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண்: 374
இலங்கையில் கல்வியும் இன உறவும்
கௌரி சண்முகலிங்கன் ©
முதல் பதிப்பு : 2009
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
361, 1/2 டாம் வீதி, கொழும்பு-12, தொ.பே. 060 209 7608, மி. அஞ்சல்: kumbhlk@gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026
குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
361, 1/2 டாம் வீதி, கொழும்பு-12

Ilṅkaiyil Kalviyum Iṉa Uṟavum
(Education and Ethnic Relationship in Sri Lanka)
by: Gowri Shanmugalingan
Copright: Ambikai Shanmugalingan
First edition :2009
*Published by* Kumaran Book House
361,1/2 Dam Street, Colombo -12,Tel. - 060 209 7608, E.mail: kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026
*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
361,1/2 Dam Street, Colombo -12
ISBN 978 - 955 - 659 - 188 - 0
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

அமரரான என் அப்பா
பீதாம்பரம் சபாரத்தினம்
பொன்னடிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | *அணிந்துரை* | *viii* |
| | *முன்னுரை* | *ix* |
| | *அட்டவணைகள், விளக்கப்படங்களின் பட்டியல்* | *xvi* |
| 1. | பன்மைச் சமூகங்களில் கல்வியும் இன உறவும் | 1 |
| 2. | இலங்கையின் இன அமைவும் கல்வி நிர்வாக அமைப்பும் | 21 |
| 3. | இன முரண் வரலாறும் | 42 |
| 4. | மொழிவழிக் கல்விக்கொள்கைகள் | 58 |
| 5. | இனவழி அசமத்துவங்கள் | 85 |
| 6. | எதிர்காலம் ..... | 143 |
| | உசாத்துணை | 153 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பன்மைப் பண்பாடு என்பது இன்றைய காலத்தின் மந்திரச் சொல்லாகி யுள்ளது. அதனைக் கட்டமைப்பதில் கல்வியின் இடம் பற்றியும் உலக நாடுகளிடையே நிறைய எதிர்பார்ப்பு உள்ளது. நடைமுறை யதார்த்தம் மட்டும் மகிழ்ச்சி தருவதாக இல்லை. இலங்கையும் இதற்கு விதி விலக்கல்ல.

பின்பற்றக் கூடிய உலக அனுபவங்கள் புறந்தள்ளப்படுகின்றன. மேலாண்மைப் போக்குகளினால் பண்பாடுகளுக்கிடையிலான உறவுகள் சிதைந்து போகின்றன. மனித அவலங்கள் அதிகரிக்கின்றன.

அறிவின் அரசியல் பிழையும் அரசியலின் அறியாமைப் பிழை யும் அறிவை அழிவின் சாட்சியாக மட்டும் நிலை நிறுத்தியுள்ளன. அந்தரமான இந்நிலையில் பன்மைப் பண்பாடுகளுக்கிடையான கல்வி சார்ந்த ஆய்வுகள் அவசியமாகும். இந்தக் காலத் தேவையை உணர்ந்து திருமதி கௌரி சண்முகலிங்கன் தருகின்ற 'இலங்கையில் கல்வியும் இன உறவும்' எனும் புதிய நூலின் வரவு பெருமகிழ்ச்சி தருகின்றது. எனது ஆய்வு ஆர்வப் பரப்பிலேயே என் மாணவியின் ஆய்வும் அமையப் பெற்றதில் இரட்டிப்பு மகிழ்ச்சி.

நூலாசிரியரின் நிதானமான கிரகிப்பும், பலதுறை இணை நோக் கிலான பகுப்பாய்வும் நூலின் வெற்றிக்கான அடிப்படைகள் எனலாம். இன்று நம் பண்பாடுகள் எதிர் கொள்ளுகின்ற நெருக்கடிகளை விளங்கிக் கொள்வதில், எதிர்காலத்துக்கான பாதையை தெரிந்து கொள்வதில் இவ்வாய்வு வெளிக்காட்டும் உண்மைகள் பெரிதும் துணையாகும்.

தமிழில் புதிய அறிவு வெளிச்சம் பாய்ச்சும் கௌரியைப் பாராட்டு வோம். மேலும் பல நூல்களை சமூகத்துக்கு தரவேண்டி அவரை வாழ்த்துவோம்.

**பேராசிரியர் வ. ஆறுமுகம்**
முன்னாள் தலைவர், கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

பல்லின சமூகங்களில் கல்விக்கும் இன உறவுக்குமிடையிலான இடை வினை இன்று பெரிதும் உணரப்படுகிறது. இதன்வழி பன்மைச் சமூகங் களின் இன உறவைத் தீர்மானிக்கும் கல்விக் கொள்கைகளையும், அவற்றின் நடைமுறைகளையும் மதிப்பீடு செய்யும் ஆய்வு ஆர்வங்கள் இன்று அதிகரிக்கக் காணலாம். இவை பல்வேறு சட்டகங்களுக்குள் (Paradigms) இடம் பெறுகின்றமையும் எம் கவனத்துக்குரியதாகும்.

தொடக்க காலத்தில் மொழியியல் பன்மை, பொருத்தமான பன் மொழிக்கல்விக் கொள்கை என்பன தொடர்பாகவே ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. அடுத்த கட்டத்தில் இனவாதத்துக்கு எதிரான ஆய் வுகள் (Anti-Racial Studies) அல்லது பன்மைப் பண்பாட்டியல் கல்வி (Multi-Cultural Education) என இவ்வாய்வுப் பரப்பு விரிவு கண்டது (Gundara, 2000). இவ்விரிவின் போதும் இனமையவாத கலைத் திட்டங் கள் பற்றிய பகுப்பாய்வே முக்கிய இடத்தைப் பிடித்தது. சில ஆய்வுகள் மட்டும் சமூக அமைப்பின் முக்கியத்துவத்தினையும் இணைத்து நோக் கின. எனினும் அண்மைக் காலங்களில் இத்துறைசார் ஆய்வுகள் தன்மை ரீதியாக புதிய மாற்றங்களைக் காண்கின்றன.

பண்பாடுகளுக்கிடையிலான கல்வி (Inter - Cultural Education) எனும் நோக்கில் சமூகங்களுக்கிடையிலான இடைவினை, இணக்க நிலை, முரண்பாடு தொடர்பான அத்தனை செயன்முறைகளையும் புதிய ஆய்வுகள் கருப்பொருளாகக்கொள்கின்றன. கல்விப் புலத்தில் நிலவும் இன ரீதியான பாரபட்ச நிலைமைகளை விளங்கும், விளக்கும் இவ் வாய்வுகளை இனத்துவ மேம்பாட்டிற்கான கல்வியியல் ஆய்வுகளா கவும், புதிய ஆய்வாளர்கள் சிலர் வரையறுக்கின்றனர் (Ejis, 1994). பன்மைச் சமூகங்களின் பண்பாட்டுத் தனித்துவங்களை பேணுதற்கான கல்வியினை கருத்தில் கொள்ளும் அதேவேளையில், இங்கு வாழும் இனக்குழுக்களுக்கிடையிலான உறவின் மேம்பாட்டிற்கே இவ்வாய்வு கள் முதன்மை தருகின்றன எனலாம்.

லண்டன் பல்கலைக்கழகத்திலுள்ள பண்பாட்டு ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (Inter National Centre for Inter Cultural Studies - University of London), பண்பாட்டிடைக் கல்விக்கான சர்வதேச நிறுவனம் (International Institution of Inter Cultural Education) போன்ற ஆய்வு அமைப்புக்களும், இனத்துவ மேம்பாட்டுக்கான ஆய்வேடு (Journal of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ethno - Development), பண்பாட்டிடைக் கல்விக்கான ஐரோப்பிய ஆய்வேடு (Journal of Inter Cultural Studies - EJIS) போன்ற வெளியீடு களும், இன்று கல்விக்கும் இன உறவு மேம்பாட்டிற்குமான புதிய பல ஆய்வுகளைத் தருகின்றன. இவ்வாறான ஆய்வு முயற்சிகளுக்கென 'ஐரோப்பிய ஒன்றியம்' போன்ற சர்வதேச நிதியமைப்புக்களும் பெரு மளவு நிதியினை ஒதுக்கி இப்புலத்தின் ஆய்வுச் செழுமைக்கு துணை புரிகின்றன.

இந்த வகையில் கல்வியும் போர்க்களமாகிய இலங்கையின் இனத்துவ வரலாற்றில் கல்விக்கும் இன உறவுக்குமிடையிலான பிரச் சினை மையங்களை இனம் காணும் தேடலாக இவ்வாய்வு அமை கின்றது.

பல்லின சமூகங்களில் கல்வியானது அங்குள்ள மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கும், சுமுகமாக வாழ்வதற்கும் வழிகாட்டி யாக விளங்க வேண்டும். அவ்வாறே இங்கு மேற்கொள்ளப்படும் கல்வியியல் ஆய்வுகளும் மக்களின் அமைதியான வாழ்வுக்குரிய அறிவு சார்ந்த அனுபவங்களைத் தருபவையாக அமைய வேண்டும் (Arumugam, 1992:3). இந்த வகையில் எங்கள் புலங்களில் கல்வியின் நோக்கத்தினை அர்த்தத்துடன் விளங்கிக் கொள்ள இவ்வாய்வின் முடிவுகள் துணை யாகும். நீளுகின்ற போர் அவலங்கள், இனங்களுக்கிடையிலான முரண் பட்ட நிலைமைகள், இவற்றினை முடிவுக்கு கொண்டுவருவதன் அவசியம் இன்று பெரிதும் உணரப்படுகின்றது. இச் சூழ்நிலையில் பிரயோகப் பயன்பாடுள்ளதாக இவ்வாய்வு கால முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையின் இன உறவு சார்ந்த கல்வியியல் கொள்கைகளை இனம் கண்டு அவற்றைப் பகுப்பாய்வுக்குட்படுத்தும் இவ்வாய்வானது, உலக அரங்கில் அதிகரித்துக் காணப்படும் இனத்துவ அடையாளத் துக்கான சமூக நெருக்கடிகளை விளங்குவதற்கான ஒரு கருவியாகவும் பயன்படும். குறிப்பாக தென் ஆசியப் புலங்களின் சமூக, அரசியல் பண்பாட்டு பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதில் துணையாவதால் இவ்வாய்வின் பயன்பரப்பு விரிந்ததாக அமையும் எனலாம்.

மேற்கண்ட பிரயோக பயன்பாட்டிற்கும் அப்பால் இன்றைய பண்பாட்டு ஆய்வுகள் தொடர்பான கோட்பாட்டு உருவாக்கம், வளர்ச்சி என்பன தொடர்பான அறிவுத்திரளுக்கும் இவ்வாய்வின் முடிவுகள் பயன்படும். இந்த வகையில் இது ஒரு தூய கல்வியியல் ஆய்வுத் தன்மை யினையும் பெறும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இனத்துவ பரிமாணங்களைத் தொடும் மிகச் சில ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள்ளும் பெரும்பாலானவை தேசியவாத நோக்கிலான ஆய்வுகளாகவே அமைந்துள்ளமையைக் காணலாம். இன முரண் உச்சம் கண்ட அண்மைய தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இன முரண் நிலைபற்றிய பகுப்பாய்வு களாகவே பெரிதும் விளங்குவன. மேற்கண்ட ஆய்வுகள் தனிப்பட்ட நூல்களாகவும் ஆய்வுச் சஞ்சிகைக் கட்டுரைகளாகவும், கட்டுரைத் தொகுப்பு நூல்களாகவும் எமக்குக் கிடைக்கின்றன.

இந்த வகையில் பேராசிரியர்கள் ஏ.ஜே.வில்சன் (Wilson, 1974, 1988), றொபேட் கேணி (Kearney, 1975), ஊர்மிளா பாட்னீஸ் (Padnis, 1976) சி. அரசரட்ணம் (Arasaratnam, 1979), மைக்கல் றொபேட்ஸ் (Roberts, 1979), ஜேன் ரஸ்சல் (Rusell, 1987), கணநாத் ஒபயசேகரா (Obeyesekera, 1984), குமாரி ஜயவர்த்தனா (Jayawardena, 1987), ஜெயதேவ உயங்கொட (Uyangoda, 2007) ஆகியோரின் எழுத்துக்கள் குறிப்பிடத்தக்கன.

தொகுப்பு நூல்கள் என்ற வகையில் மைக்கல் றொபேட்ஸ் தொகுத்த Collective Identities Nationalism and Protest in Modern Sri Lanka (1979), சமூகவிஞ்ஞானிகள் சங்க வெளியீடான இலங்கையின் இனத்துவமும் சமூக மாற்றமும் *(1985)*, எம்.டி.தரம்தாசனி (M.D. Dharamdasani, 1988) தொகுத்த Sri Lanka - An Island in Crisis, ராஜன் பிலிப்ஸ் (Rajan Philips, 2001) தொகுத்த Sri Lanka: Global Challenges and National Crisisஎன்பன சிறப்பான கவனத்திற்குரியன.

இவ்வாய்வுத் தொகுப்புக்களிடை இன முரண் உறவு நிலைக்கு காரணமான கல்வியியல் அம்சங்கள் சில ஆய்வுகளின் மைய பொருளா கியமையை காணலாம் (De Silva, 1979; Bastian, Sriwardana, 1981). கல்விசார் இன உறவை பேசும் ஆய்வுகளைத் தவிர ஏனைய ஆய்வுகள் பலவற்றிலும் கல்விசார் அம்சங்கள், கல்வி வழியான, தொழில் வாய்ப் புக்களில் ஏற்பட்ட பாரபட்ச நிலைமைகள் என்பனவும் மட்டுப்படுத்தப் பட்ட அளவில் கருத்திற் கொள்ளப்பட்டன (Warnapala, 1994; Sahadevan & Nayak, 1988: 40-83, Manoharan, 1987: 115-148). இவ்வாய்வுகளும் இங்கு கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

மேற்கண்ட ஆய்வுகளிடை ஆய்வாளரின் கருத்தியல், ஆய்வுப்புல வரையறை என்பவற்றிற்கு அமைய வேறுபாடுகளை காணமுடிகின்றது. தேசியவாத வரையறை முதல், இன முரணிற்கான காரணங்கள்வரை இந்த வேறுபாடு வெளிப்படக்காணலாம். ஒன்றுபட்ட இலங்கை, சுயநிர்ணயமான இனத்துவ குழுக்களின் ஒன்றியமான இலங்கை என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபடும் கருத்தியல் குழுமங்களை இவ்வாய்வுகளைப் பகுப்பாய்வு செய்வதன் வழி இனங்காண முடிகிறது. அவ்வாறே இன முரண் வளர்ச்சியை சிறுபான்மை மீதான பெரும்பான்மையினரின் பாரபட்ச நடவடிக்கையாகக் காணுதல், வளமட்டுப்பாட்டின் விளைவான பகிர்வுப் பிரச்சினையாக இனங்காட்டல் என ஆய்வு முடிவுகளிடையும் வேறு பாடுகளை அவதானிக்க முடிகிறது.

இத்தகு பின்னணியிலேயே மேற்கண்ட ஆய்வுகளின் கருத்தியல் முரண்கள் மற்றும் குறைநிலை நோக்குகள் (reductionism) என்பவற்றினை கவனத்தில் கொண்டு இந்த ஆய்வின் முறையியல் வகுக்கப் பட்டுள்ளது. இந்த வகையில் கல்விக்கும் இன உறவுக்குமிடையிலான பரஸ்பர இடைவினையை முழுதளாவிய (Holistic) நிலையில் தரிசிக்கும் முக்கியத்துவத்தை இவ்வாய்வு பெறுகின்றது.

கல்விசார் இன உறவு தொடர்பாக இன்று உலக நாடுகளில் நிலவும் பொதுவான தன்மைகளை இன்றைய கல்வியின் சமூகவியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. "தன்னமைவாக்கல், நெகிழ்வுடன் பொருத்தப் பாடு காணல், இணைத்தல், இணைந்து போதல், பண்பாட்டுப் பன்மை நிலை எனும் நடைமுறைகளுள் யாதேனும் ஒன்றாதல் வேண்டும்" என்பார் ஸ்மொலிக்ஸ் (Smolicz, 1981:75).

பல்லின சமூகங்களில் கல்வியானது இன-பண்பாட்டு ஒன்றிணைப்பையா அல்லது பன்மைப் பண்பாட்டு மேம்பாட்டினையா இலக்காகக் கொள்ள வேண்டும் என்பதே இன்றைய பன்மைச் சமூகங்களில் காணப்படும் இன உறவுசார் மையநிலை பிரச்சினையாகும். ஒன்றுக்கு மேற்பட்ட முரண்பட்ட தேர்வுகளில் பொருத்தமானதை இனங்கண்டு கொள்வதில் முழுதளாவிய சமூகவியல் பார்வை இன்றியமையாதது என்பது நோலன் ஸேன், ஸ்டான்லி சூ போன்றோரின் ஆய்வு அனுபவமாகும் (Zane, and Sue, 1986: 291&292).

இந்த வகையில் ஆரம்பகால எதிர் இனவாத ஆய்வுகளான பன்ரொக்கின் - Freedom and Authority in Education (Bantock, 1953), போல் வாஷின் இன் Authority and Freedom in Education (Wash, 1966) ஆகிய நூல்கள், Negro Vs White Intelligence போன்ற கட்டுரைகள் (Haward Education Review, 1958) முக்கிய கவனம் பெறுகின்றன.

தொடரும் காலப்பகுதியில் இனத்துவ முரண்பாட்டிற்கான அடிப்படைகளாக சமூக பொருளாதார காரணிகளை இனங்காட்டும் ஜோர்ஜ், ஈ.சிம்சன், ஜே.மில்ரன் ஜிங்கர் ஆகியோரின் Racial and Cultural Minorities: An analysis of Prejudice and Discrimination (Simpson and Yinger, 1972), லியோ.ஏ.டிஸ்பிறிஸின் Ethnicity and Resource competition

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in plural societies (Despress, 1975), மற்றும் நோலன் ஸேன், ஸ்டான்லி சூ (Zane & Sue, 1986) போன்றோரின் சமூகவியல் ஆய்வு அனுபவங்களையும் இவ்வாய்வு அடிப்படையாகக் கொள்கின்றது.

பன்மைப் பண்பாட்டியல் நோக்கிலான ஜேம்ஸ் ஏ.பாங்கின் Multicultural Education: Theory and Practice (Bank, 1988), Multi - Cultural Education : Its effects on Students Racial and Gender role attitudes (Bank, (1990) போன்ற கல்வியியல் ஆய்வுகளையும் மேற்கண்ட ஆய்வுகளுடன் இணைத்து நோக்குதலின் அவசியம் இங்கு கருத்தில் கொள்ளப்படு கின்றது. பன்மைச் சமூகங்களில் பண்பாட்டிடைக் கல்வியெனும் ஒன் றிணைந்த கருத்தியல் நோக்கில், இலங்கையின் இன்றைய நிலைமை இவ்வாய்வின் வழி பகுப்பாய்வுக் குள்ளாக்கப்படுகின்றது.

இன்றைய உலகம் பன்மைப் பண்பாடுகளின் சேர்க்கையாய் அமைந்துள்ளது. 2000 வரையிலான இனத்துவ குழுக்களையும், 2796 மொழிவழிக் குழுக்களையும் கொண்டது. (Gulevich, 1979:228) நிலவும் 250 வரையிலான உலக நாடுகளில் 90% திற்கும் அதிகமான நாடுகள் பல்லினத் தன்மையனவாகவே விளங்குகின்றமையும் இன்றைய இனத்துவ ஆய்வுகளின் வழி வெளிப்படுத்தப்படக் காணலாம். (Connor, 1972:320) இந்நாடுகளின் பல்லினத் தன்மையே பல்வேறு பிரச்சினை களுக்கும் காரணமாகிவிடுதல் அரசியல் வரலாறாகவும், அரசியல் நெருக்கடிகளாகவும் இன்று உலக அரங்கில் பேசப்படுகின்றது. மூன்றாம் உலக நாடுகளில் உணரப்படும் தேசிய இனங்களுக்கிடையிலான பிணக் குகளும் அல்லது முரண்பாடுகளும் வரலாற்று மூலங்கள், இனச் சிறப் பியல்பு, இனத் தனித்துவம், பண்பாட்டுச் சிறப்பம்சங்களினடியாகவே எழுகின்றமையையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இலங்கைத் தீவானது ஆரம்ப முதலே ஒரு பன்மைச் சமுதாய அமைப்பாக விளங்கி வருதலைக் காணமுடிகின்றது. இனம், மதம், மொழி என்பவற்றின் அடிப்படையில் இலங்கையின் பன்மைத் தன்மை காணப்படுகின்றது. இன அடிப்படையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் கள், பறங்கியர் எனவும் மொழி அடிப்படையில் சிங்களத்தைத் தாய் மொழியாகக் கொண்டோர், தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோர் எனவும், மத அடிப்படையில் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லா மியர்கள், கிறீஸ்தவர்கள் எனவும் இலங்கை வாழ் மக்கள் பிரிக்கப் பட்டுள்ளனர்.

மேலே குறித்தவாறு இலங்கையின் இன்றைய இனங்களுக் கிடையிலான உறவுச் சிக்கலானது இனங்களின் வரலாறு, அதன் தோற்று வாய், தகுநிலை, தனித்துவம், பண்பாடு, மேம்பாடு முதலியனவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றினைக் கருவியாய் கொண்டுள்ளது. இந்த அடிப்படை அம்சங்களே இன உறவு விரிசலுக்கு எண்ணெய் ஊற்றி வந்ததுடன் இன்றைய போர் நிலை அவலங்களுக்கும் காலாகவுள்ளன. (பண்டாரநாயக்கா, 1985)

இனம் தொடர்பான உணர்வுகளை ஆழ்ந்து நோக்கின் அவை அதிக அர்த்தம் கொண்டவையல்ல. இருப்பினும் சமுதாயத்தில் இன வேறுபாடுகள் எழும் போது அவ்வேறுபாடுகள் வாழ்வின் வெவ்வேறு துறைகளைப் பாதிக்கும் போது, அத்தகைய உணர்வைப் பெரும்பாலும் தவிர்க்க முடிவதில்லை. இன உணர்வானது மனிதனுடைய தனித்துவ அடையாளங்களில் ஒன்றாக வெளிப்படுகின்றது. மனித சமுதாயமும் சிந்தனையும் வளர வளர இந்த உணர்வும் இயல்பாய் வளர்ச்சி பெறு கின்றது. இந்த உணர்வு நிலை வெளிப்பாட்டிற்குத் தடைகளோ அன்றி மட்டுப் பாடுகளோ ஏற்படுகின்றபோதுதான் சம்பந்தப்படும் இனங் களுக்கிடையிலான உறவுகளும் சிக்கல் நிலையை எய்தும். குடியேற்ற நாட்டாதிக்க கால அரசியல் நிலைமைகளின் விளைவாகவும், அக் காலத்தில் எழுந்த தேசிய விழிப்புணர்வுகளின் வழியாகவும் பன்மைச் சமூகங்களைக் கொண்ட 3ம் உலக நாடுகள் பலவற்றிலும் நெருக்கடிகள் தீவிரம் பெற்றமை வரலாறாகும்.

இலங்கையின் இனத்துவ வரலாற்றில் முரண்களின் தொடக்கப் புள்ளிகளை, வரலாற்றுக்கு முற்பட்ட ஐதீகங்களிடை இனம் காணும், இனம் காட்டும் நிலைமைகள் பின்னாட்களில் வெளிப்படுத்தப்பட்ட போதும், உண்மையான இன உறவின் வழியான உறவுச் சிக்கல்கள் முகிழ்த்த காலப்பகுதியாக இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதி கவனத்தை ஈர்க்கின்றது. தேசிய மறுமலர்ச்சி இயக்கங்களின் ஒருமித்த குரலாக பல்வேறு இனங்களும் இணைந்திருந்த எழுச்சி நிலை தளர்வடைந்து இனரீதியாக சிந்திக்கவும் செயல்படவும் தொடங்கிய இக்காலப்பகுதி யிலேயே இன உறவு விரிசலாக வடிவம் பெறுகின்றது. தொடர்ந்து வந்த முற்சாய்வு எண்ணங்களும், இடைவிடாத பாரபட்ச நடவடிக்கைகளும் இன்று ஓர் இன முரண்போராகி பல அவலங்களைக் காணும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில்தான் இலங்கையில் இனஉறவு விரிசலுக்கு நேரடி யாகவும் மறைமுகமாகவும் துணையாகிப்போன கல்வியுடனான இனத் துவ தொடர்புகளை இவ்வாய்வு பகுப்பாய்வு செய்கின்றது. இனத்துவ முரண்பாடு கூர்ப்படைந்த இருபதாம் நூற்றாண்டு காலப் பரப்பெல்லை யைத் தன் ஆய்வுக்கான கால எல்லையாகக் கொள்கின்றது. இக்காலப் பரப்பானது குடியேற்ற நாட்டாதிக்க காலம், சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலம் எனும் இரு வேறு காலப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரைப் பகுதி குடியேற்ற நாட்டாதிக்க தேவைகளினடியான கல்வியமைப்பைக் கொண்டது. 1948 இனைத் தொடரும் சுதந்திர இலங்கையின் கல்வியமைப்பானது முழுக்க முழுக்க சுதேசிகளின் வசமாகியது. குடியேற்ற நாட்டாதிக்க கால பிற் கூறுகளிலேயே தொடங்கி விட்ட பெரும்பான்மை-சிறுபான்மை கருத்தாக்கமும், அதன் வழியான இனவாத முடிவுகளும் நிலைபெற்ற காலப் பகுதியாக, இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதி பதிவு பெறுகின்றது.

இருபத்தியொராம் நூற்றாண்டானது முன்னை வினைகளின் அறுவடையாய்த் தொடர்கின்றது.

பூகோள ஒழுங்கு மாற்றங்களுடன் இன்று நேர்ந்துள்ள புதிய நிலைமைகளிடை இலங்கையில் இனங்களின் இருப்பும் உறவும் எத்தகைய வடிவினைப் பெறும் என்ற கேள்விக்கான விடையைக் கட்டமைக்கும் பொறுப்பு இன்று அனைவருக்குமான பெரும் பணியாகின்றது.

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்

என்பார் திருவள்ளுவர்.

இந்த வகையில் நோயின் முதலை – மூலங்களை இனங்காட்டும் இருபதாம் நூற்றாண்டு இலங்கையில் கல்வியும் இனஉறவும் பற்றிய இவ்வாய்வு நூல் வடிவம் பெறுதலின் கால முக்கியத்துவத்தினை உணர்த்தி வழிசமைத்த அனைவரையும் நன்றியுடன் இவ்வேளை மனங்கொள்கின்றேன்.

ஆய்வின் வழிகாட்டியாய், தந்தையென ஆலோசனைகள் தந்து நெறிப்படுத்திய கல்வியியல் பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்களுக்கு என்றென்றும் என் அன்பும் கடப்பாடும் உரியன. நூல் வடிவம் தந்த குமரனுக்கு என் அன்பு நன்றி. இந்த ஆய்வின் துணையாகவும் நிறைந்த என் வாழ்க்கைத் துணைக்கு எப்படி நன்றி சொல்வது.

நிறைவாக என் கல்வி வளர்ச்சியின் ஒவ்வொரு அசைவிலும் தூண்டியாய் உடனிருந்த என் அப்பாவுக்கு இந்நூலினைக் காணிக்கையாக்குகின்றேன்.

**கௌரி சண்முகலிங்கன்**

"கந்தன் அருள்"
அம்பலவாணர் பாதை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
22.06.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டவணைகள், விளக்கப்படங்களின் பட்டியல்

## அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| 1.1 | தென்னாபிரிக்காவின் இன அமைவு | 8 |
| 1.2 | தென்னாபிரிக்க அரசு ஒரு மாணவனுக்கு செலவிட்ட தொகை - 1970 | 11 |
| 1.3 | ஐக்கிய அமெரிக்காவின் இன அமைவு - 1980 | 14 |
| 1.4 | உயர் கல்வியில் இன இடைவெளி (மொத்தச் சனத்தொகையில்) | 15 |
| 1.5 | நியூசிலாந்தின் இன அமைவு | 16 |
| 2.1 | இனத்தொகை ரீதியான குடித்தொகை அமைப்பு - 1981 | 21 |
| 2.2 | மாவட்டரீதியான இனப்பரம்பல் - 1971/1981 | 26 |
| 2.3 | தனித்தனி மாவட்டங்களில் இனவிகிதப்பரம்பல் - 1971-1981 | 27 |
| 2.4 | மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் தொகை - 1827 -1981 | 28 |
| 2.5 | அம்பாறை மாவட்டத்தில் மக்கள் தொகை - 1963-1981 | 29 |
| 2.6 | திருகோணமலை மாவட்ட மக்கள் தொகை - 1881-1981 | 30 |
| 2.7 | வவுனியா மாவட்ட மக்கள் தொகை - 1881-1981 | 31 |
| 2.8 | மொத்த சனத்தொகையில் இந்தியரின் விகிதம் - 1911-1981 | 32 |
| 2.9 | உதவி பெறும் ஆங்கிலப் பாடசாலைகள் - 1900-1915 | 34 |
| 2.10 | உதவி பெறும் ஆங்கில - சுயமொழிப் பாடசாலைகள் - 1900 - 1915 | 34 |
| 2.11 | உதவி பெறும் சுயமொழிப் பாடசாலைகள் - 1900-1915 | 35 |
| 2.12 | அரசுப் பாடசாலைகள் - 1900-1915 | 35 |
| 2.13 | அரசு பொறுப்பேற்பதற்கு முன்னைய நிலை | 36 |
| 2.14 | அரசு பொறுப்பேற்றபின் நிலை | 36 |
| 3.1 | தமிழ் மொழி மூலமான பாடசாலை மாணவர் வரவு - 1989 | 55 |
| 3.2 | தமிழ்-சிங்கள மொழி மூலமான மாணவர்களின் வரவு -1990 | 55 |
| 5.1 | பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இனரீதியான வெட்டுப்புள்ளி 1969-1970, 1970-1971 | 87 |
| 5.2 | பல்கலைக்கழக அனுமதி பெற்ற தமிழ் மாணவர்கள் 1969-1975 வரை | 89 |
| 5.3 | பல்கலைக்கழக அனுமதி பெற்ற சிங்கள மாணவர்கள் 1969-1975 வரை | 89 |
| 5.4 | பல்கலைக்கழக அனுமதி - இனரீதியான வீதம் 1969-1970 - 1978 வரை | 91 |
| 5.5 | யாழ்ப்பாண மாவட்ட மாணவர் அனுமதி திறமைச்சித்தி 1991-1993 வரை | 95 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.6 தமிழ் மாணவரின் மொத்த அனுமதியும், யாழ் மாணவரின் அனுமதியும் 1991-1994 வரை 95

5.7 இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம் - மருத்துவம் 97

5.8 இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம் - பொதுவேலை 97

5.9 இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம் - நீதி 98

5.10 இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம் - குடியியல் 98

5.11 இன ரீதியான பிரதிநிதித்துவம் - மருத்துவத் திணைக்களம் 98

5.12 இன ரீதியான பிரதிநிதித்துவம் - பொதுவேலைப் பகுதி 99

5.13 அரசாங்க சேவையில் தமிழர்களின் நிலை 101

5.14 வெளிநாட்டுச் சேவையில் இனத்துவ விகிதாசாரம் 102

5.15 அரசாங்க சேவையில் இன அமைவு - 1972 103

5.16 பொதுநலத் துறையில் இன அமைவு - 1972 (எண்.) 104

5.17 பாதுகாப்புப்படையில் இன அமைவு - 1982 (எண்.) 104

5.18 தோட்டப் பள்ளிக்கூடங்களின் தொடர்பான விபரங்கள் - 1903 129

5.19 தோட்டப் பள்ளிக்கூடங்கள் கல்வி விபரங்கள் 129

5.20 தமிழ் மாணவர்களுக்கான பள்ளிக்கூடங்கள் 1956-1963 132

5.21 பள்ளிக்கூடங்களில் தமிழ்ப்பிரிவு 133

5.22 தோட்டப் பாடசாலைகளில் மாணவர் ஆசிரியர் தொகை 133

5.23 மலையகப் பள்ளிக்கூட நிலைமை - 1980 134

5.24 பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாமை, பாடசாலைக்கு செல்லாதோர் தொகையும் காரணமும் 140

5.25 சிறுவர் பிரச்சினை நிலைமை 140


## விளக்கப்படங்களின் பட்டியல்


உரு 2.1 இலங்கையின் இனப்பரம்பல் 25

உரு 5.1 பாடநூல்களில் இனவாதம் - Lanka Guardian இதழ் முகப்பு 109

உரு 5.2 English For Me Year - 4 117

உரு 5.3 The World Through English Grade - 6 118

உரு 5.4 இனவாத அரசியலும் அதிகாரிகளும் 137

உரு 5.5 போர்ச் சூழலின் பிள்ளை மனப்பதிவு 141

உரு 6.1 இலங்கையின் கல்விசார் இன உறவுக் கோலம் 150


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - I

# பன்மைச் சமூகங்களில் கல்வியும் இன உறவும்

பன்மைச் சமூகங்களில் கல்வியும் இன உறவும் கொண்ட தொடர்பினை விளங்குவதற்கும் விமர்சிப்பதற்கும் பன்மைச் சமூக அனுபவங்கள் பெருந் துணையாகின்றன. இந்த வகையில் பொருத்தமான எடுத்துக் காட்டுக்களுடன் ஒப்பீட்டு ரீதியில் இன உறவின் வேறுபடுதன்மைகளை இவ் இயல் நோக்குகின்றது. அத்தோடு இன உறவு சார்ந்த கல்விக் கொள்கைகளும் நடைமுறைகளும் இங்கு மதிப்பிடப்படுகின்றன.

ஒரு நாட்டிலோ குறிப்பிட்ட பிரதேசத்திலோ ஒன்று கூடிவாழும் மக்கள், சமூகம் என்ற கணிப்பினைப் பெறுவர். அவ்விதம் ஒன்றாக வாழும் மக்களிடையே மொழி, இனம், மதம் என்ற அம்சங்களின் அடிப்படையிலான பிணைப்புக்கள் நெருக்கமான, இறுக்கமான உறவு களுக்கு வித்திடுகின்றன. ஒரு குறிப்பிட்ட அம்சங்களில் தமக்குள் ஒருமித்த தன்மையுள்ள மக்கள் வாழும் சமூகம் ஒருமைச் சமூகம் என அழைக்கப்படும். அதிலிருந்து மொழி, இன, மத அடிப்படை அல்லது அடிப்படைகளிலும் வேறுபடும் மக்கள் தொகுதி கொண்ட சமூகம் 'பன்மைச் சமூகம்' என்றழைக்கப்படும். ஒருமை அல்லாதது பன்மை என்ற கோட்பாட்டில் அந்த சமூகம் அந்தப் பெயரைப் பெறுகின்றது. இந்த விளக்கத்தின் அடிப்படையில் பன்மைச் சமூகம் என்ற பாவனை இங்கு கையாளப்படுகின்றது. *(ஆறுமுகம், 1994 : 97)*

பன்மைச் சமூகங்களின் சமூக வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ப இனங்களுக்கிடையிலான உறவு நிலைகளும் வேறுபடு தன்மை கொண்ட வைகளாக இருக்கக் காணலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் குடியேற்ற நாட்டாதிக்க ஆட்சியாளர்கள், தாம் குடியேறிய நாடுகளில் தம் ஆதிக் கத்தை நிலை நாட்ட, சமூக, பொருளாதார செயற்பாடுகளில் கையாண்ட நடைமுறைகள் தான் இன்று கல்விசார் இன உறவுப் பிரச்சினைகளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இனத்துவ அடிப்படையில் காணப்படும் வேறுபாடுகளை நிரந்தரமாகப் பேணவும், கல்வி வழி அசைவைத் தடுக்கவும் கல்வி வாய்ப்புக்களை மறுக்கும் அல்லது குறைக்கும் நடைமுறைகளே பெரும்பாலும் இன முரண்பாடு வளரக் காலாகின்றது. இதனைவிட ஆதிக்கம் பெறும் இனக் குழுக்கள் பிறவற்றை அழிக்கின்ற அல்லது ஒதுக்குகின்ற நிலைமைகள் இனப் போராகவும், புதிய தேசங்களுக்கான விடுதலைப் போராட்டங்களாகவும் வடிவம் பெறுகின்றன. இன இசைவான பன்மைச் சமூகத்தின் அடிப்படைகளைத் தேடும் இன்றைய கல்வியியல் ஆய்வுகள், குறிப்பான சில தேர்வுகளை முன்வைக்கின்றன. இவ்வடிப்படைகள் தேசங்களின் சமூக பண்பாட்டு நிலைமைக்கு ஏற்ப மாறுபடலாம்.

பன்மொழி, பல்லின, பல்பண்பாடுகளைக் கொண்ட ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் மொழி பெரும்பாலும் இனத்துவ அடையாளத்துக்கான அடிப்படையாக அமைகின்றமையை இன்றைய ஆய்வுகள் சுட்டும் (Pattanayak, 1981:X). பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பன்மைச் சமூகங்களின் பிரச்சினை மையமாகவும் இம் மொழியே அமைந்திருப்பதைக் காணலாம். இந் நிலையில் பன்மைச் சமூகங்களின் இன உறவுகள் பற்றிய தேடல்கள் இச் சமூகங்களில் நிலவும் மொழிகளின் அந்தஸ்து நிலைமை தொடர்பான ஒரு மதிப்பீடாகவும் அமைதல் இன்றியமையாதது. பன்மொழித்துவ சூழ்நிலையில் மொழியின் செயற்பாடு மேல்வரும் நிலைமைகளில் யாதேனும் ஒன்றாக அமைந்திருக்கலாம்:

- ***உத்தியோக மொழி:*** இங்கு ஒரு மொழி அனைத்து அரசியல் பண்பாட்டுத் தேவைகளுக்கும் ஏற்றதாக வழங்கப்படுகின்றது. அனேகமான இடங்களில் இந்நிலை அரசியல் யாப்பிலேயே குறிப்பிடப்படுகின்றது. அப்பகுதியில் உத்தியோக மொழியே கல்வி, இலக்கிய தேவைக்காகவும் பரவலான தொடர்புகளுக் காகவும் பொதுவாக எப்போதும் பயன்படுத்தப்படுகிறது.
- ***குழுமொழி:*** இன அல்லது பண்பாட்டு ரீதியிலமைந்த குழுக் களினாலோ அல்லது உப குழுக்களினாலோ பயன்படுத்தப்படும், இம்மொழிக் குழுவினரை இனம் காண உதவும் அளவு கருவியாக விளங்கும் மொழியை இது குறிக்கின்றது.
- ***பரவலான தொடர்புமொழி:*** நாட்டின்பரப்பிலும் மொழி எல்லைகளுக்கு அப்பாலும் தொடர்புகளுக்கும், வர்த்தக உறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் உத்தியோக மொழி தவிர்ந்த வேறு மொழி அல்லது மொழிகளின் உபயோகத்தினை இது குறிக்கின்றது.

- **கல்வி மொழி:** கல்வி அமைப்பின் யாதேனும் ஒரு மட்டத்தில், கல்வி மொழியாக, உத்தியோக மொழி தவிர்ந்த ஒரு மொழியின் உபயோகத்தை இது குறிக்கின்றது.
- **இலக்கிய மொழி:** உத்தியோக மொழி தவிர்ந்த வேறொரு மொழியினை முக்கியமாக இலக்கிய அல்லது அறிவியல் முயற்சி களுக்குப் பயன்படுத்தும் நிலையை இது கருதும்.
- **சமய மொழி:** சமய அனுட்டானத் தேவைக்காக ஒரு மொழியைச் செயற்படுத்தும் நிலையை இது குறிக்கும்.
- **தொழில் நுட்பமொழி:** சர்வதேச தொழில்நுட்ப விஞ்ஞான நூல்களைப் பயன்படுத்த உதவும் சாதனமாக ஒரு மொழியைப் பயன்படுத்துவதை இது குறிக்கும். (Stewart, n.d: 20-21)

சில நாடுகளில் மொழி, இனத்துவ உணர்வு நிலையின் வெளிப்பாடா கவும் காணப்படுகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பயன்படும் இடங்களில் அவையெல்லாம் சமநிலையில் இருப்பதில்லை. பின்வரும் வகைப்பாடு இந்நிலையைத் தெளிவுபடுத்தும்:

1. எண்ணிக்கை உயர்வு, நாட்டின் சனத்தொகையில் 50% திலும் அதிகமானோர் பயன்படுத்தும் ஒரு மொழி மற்றையவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துதல்.
2. நாட்டிலுள்ள ஏனைய மொழிகளின் பாவனையாளரால் ஒரு குறிப்பிட்ட மொழி கற்கப்படும் அளவு.
3. சட்டங்கள், பிரகடனங்கள் போன்ற உத்தியோக பூர்வமான வெளியீடுகளுக்கும், அரசு பாடசாலைகளில் கல்வி மொழியா கவும் இராணுவ தொடர்புகளுக்கும் நாட்டிலுள்ள ஒரு மொழி யின் உபயோகம் (Furguson, n.d; 11-12).

இந்த அறிகுறிகளிடையே முழு உடன்பாடு காணப்படுமிடத்து அக் குறிப்பிட்ட மொழி அல்லது மொழிகளின் ஆதிக்கம் சிறப்பானதாகவும், உடன்பாடு காணப்படாதவிடத்து நெருக்கடிகளும் பிரச்சினைகளும் தோற்றம் பெறுகின்றன. பல மூன்றாம் உலக நாடுகளில் இத்தகைய நெருக்கடிகளின் அதிகரிப்பை குடியேற்ற நாட்டு ஆதிக்க விடுதலை யுடன் அவதானிக்கலாம். சுதந்திரத்துக்கு முன் அனைத்து சுதேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளும் இரண்டாந்தர அந்தஸ்து நிலையைத்தான் பெற்றிருந்தன. ஆனால் சுதந்திரத்துக்குப்பின் யாதேனும் ஒரு மொழியை ஆட்சி மொழியாக்கும் நிலையில் அம் மொழியின் அந்தஸ்து உயர்வதும், அம்மொழிவழி இனத்துவக் குழு அதிக நன்மைகளைப் பெறுவதும் யதார்த்தமாகின்றது. இதனால் ஏனைய மொழிக்குழுக்களின் எதிர்ப்பின் வழி தேசிய போராட்டங்கள் தோற்றம் பெறுகின்றன. தொழில் வாய்ப் புக்கள், பிறவசதிகள் என்பவற்றினை பெறுவதில் பாதிப்புக்குள்ளாகும் நிலைமைகளில் வாய்ப்புத்தரும் மொழிகளைப் பயில ஏனைய மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். கற்றலுக்கான இச் சூழல் எங்கணும் ஒரே நிலையில் அமைவதில்லை. வேறுபடும் பின்வரும் பன்மொழித்துவ நிலைமைகளினடியாக இதனை நாம் விளங்கிக் கொள்ளமுடியும்:

- ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய பல மொழிகள் ஒன்றாக இயங்கும் வேளையில் அவற்றில் ஒன்று தொடர்பு மொழி அந்தஸ்தினைப் பெறுதல்.
- நெருக்கமான தொடர்பில்லாத பல மொழிகளுள் ஒன்று மட்டும், நீண்ட பண்பாட்டு பாரம்பரியத்தை உடையதாயிருத்தல்.
- எந்த ஒரு மொழிக்கும் நீண்ட பாரம்பரியம் இல்லாது ஒன்றோ டொன்று தொடர்பில்லாத பல மொழிகள் காணப்படல்.
- கணிசமான பண்பாட்டு பாரம்பரியத்தைக் கொண்ட பல மொழி கள் காணப்படல். (Das Gupta, 1970:20)

முதலிரு நிலைமைகளிலும் பாரிய அரசியல் பிரச்சினைகள் உரு வாகுமென எதிர்பார்க்கமுடியாது. ஏனைய இரண்டிலும் ஒரு மொழி, பண்பாட்டு ரீதியில் மற்றையதின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடிய அளவுக்கு உயர்ந்திருக்காத நிலையில் அரசியல் உருவில் வெளிப்படும் மொழிப்போட்டிகள் தவிர்க்க முடியாதவையாகும்.

இத்தகு பிரச்சினைகளை எதிர் நோக்கும் அரசு, அவற்றைப் பின்வரும் வழிகளில் தீர்த்து நாட்டில் ஒற்றுமையையும், ஒத்துழைப் பையும் வளர்க்க முற்படுகின்றது.

1. கல்விக்கூடாகவும், சட்டத்தின் மூலமும் ஒரு மொழிதவிர்ந்த ஏனையவற்றை நலியச் செய்தல், ஒரு மொழியை மட்டுமே உத்தியோகத் தேவைகளுக்கும் பொதுத் தேவைகளுக்கும் பயன் படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தேசிய நிலையில் காணப்படும் முக்கிய மொழிகளின் அங்கீகாரமும் பாதுகாப்பும் இதனுடன் இணைந்த ஒன்று அல்லது அதிகமான மொழிகளை உத்தியோக தேவைகளுக்கும், மொழி எல்லைகளுக்கும் அப்பால் தொடர்புகளுக்கும் பரவலாகப் பாவித்தல் (Stewart, n.d: 15).

மொழிவழி ஒற்றுமையை வளர்க்கும் நோக்கில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தாய் மொழியும், தொடர்பு மொழியும் ஒன்றாக அமையாத இடத்து மொழிவழி ஒற்றுமையை நிலைநாட்டலின் போது எதிர்மறையான விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம். அத்தகு வேறுபாடுகள் அரசியல், சமூக, பண்பாட்டு நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்பட்டு ஒத்துழைப்புக்கும் ஒற்றுமைக்கும் குந்தகத்தினை ஏற் படுத்தும்.

பிரச்சினை மையங்கள் பலவாகலாம். தமது மொழிக்குழுவிற்கு இடமில்லை என்ற நிலை பல நிலைகளில் உணரப்படுகின்றபோதும் கல்விப் புலத்தில் இதன் தாக்கம் அதிகமாகி ஏனைய புலங்களிலும் பிரதிபலிக்கும் நிலை ஏற்படுகிறது. எடுத்துக் காட்டாக கல்வி மொழியாக எதனைக் கொள்வது என்ற கேள்விக்குத் தரப்படும், இலட்சிய பதில் களுக்கும் நடைமுறைகளுக்கும் உள்ள முரண்பாட்டைக் குறிப்பிட லாம். தூய மொழியே இலட்சிய போதனா மொழி என்பது இன்றைய கல்வி உளவியல் தரிசனமாக முன்வைக்கப்படுகின்றது. இதன் வழி ஒரு தேசத்தில் பயன்படுத்தப்படும் சகல மொழிகளுக்கும், மொழிவழிக் குழந்தைகளுக்கும் இந்த வாய்ப்புக் கிட்டவேண்டும். வளர்ச்சி குறைந்த மொழிகளையும் மேம்படுத்தி கல்வி மொழியாக்கும் கடப்பாடு அரசுக்கு உண்டு. இந் நிலை, தேசத்து அரசியல் முரண்பாடுகளின் விளைவாக சாத்தியமற்றுப் போவதையும் பல தேசங்களில் காணமுடிகின்றது.

தமது தாய்மொழிக்கு மேலதிகமாக மற்றொரு மொழியை கற்பது தொடர்புகளுக்கும் ஏனைய சர்வதேச தேவைகளுக்கும் துணையா கின்றது. ஆயினும், இந்த மேலதிக மொழியைக் கட்டாயப்படுத்தி திணிக்கும் நிலைமைகளே பிரச்சினைகளை விளைவிக்கின்றன. இந்த மொழித் திணிப்பு இருக்கின்ற உறவுகளையே பாதித்து விடக்கூடியது. போட்டியும் பரஸ்பர சந்தேகமும் நிறைந்த நிலைமைகளில் பாதிப்பு ஏற்படுவது போல புரிந்துணர்வு நிலைமைகளில் மேலதிக மொழிக் கல்வி நல்ல பலாபலன்களைத் தருவதும் உண்டு. பெரும்பான்மை இனக்குழுக்களின் பெருந்தன்மையான அணுகுமுறையும் இத்தகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளில் சுமுகமான உறவுகளைப் பேணப்பெருந்துணை புரியும் (ஆறுமுகம் - 1994:103).

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது கல்வித்திட்டங்களும் நடைமுறைகளும் பொருளாதாரம், நிர்வாகம், பண்பாடு, சமூகம், மதம் எனப் பரந்து ஒன்றோடொன்று தொடர்புபட்ட பல காரணிகளால் தீர்மானிக்கப்படுமெனினும், சிறுபான்மை இனக் குழுக்கள் தொடர்பான பெரும்பான்மை குழுக்களின் உளச்சார்பு-முற்சாய்வு என்பவற்றினடியாகவே நிர்ணயிக்கப்படுகின்றது என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பண்பாட்டுக் குழுக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வாழும் நிலைமைகளால் ஒன்றையொன்று புரிந்து கொள்வதில் அல்லது மற்றையதை மதிப்பதில் சிக்கல்கள் தோன்றலாம். தம் சொந்த இனக் குழுவின் பண்பாட்டு விழுமியங்களினடியாக, பிற பண்பாடுகளை மதிப்பதும் அம்மதிப்பீட்டின் வழி ஈற்றில் தன் சொந்தப் பண்பாட்டின் முறைமையே உயர்ந்ததென்று நிலை நாட்டப் புறப்படுதலையும் இனமையவாதம் (Ethnocentrism) என மானுடவியலாளர்கள் (Crapo, 1990:30&31) குறிப்பிடுவர். குழு ஒற்றுமைக்கு இனமையவாதம், தன்னிலைவாதம் துணையாகி குழுவிசுவாசம், குழுவுடனான அடையாளப்படுத்தல் என்பவற்றில் இதன் பங்கு அதிகமாகக் காணலாம். அதேவேளை பிறபண்பாடுகளை இனத்துவக் குழுக்களைப் புரிவதற்கு இது தடையாக உள்ளது; சமூகத்தின் பண்பாடு வேறுபடும் தன்மையைப் புரிதலுக்குப் பதில் முரண்படுதலையே ஊக்கப்படுத்தி நிற்கின்றது. இந்த முரண் உளச்சார்பு இனங்களுக்கிடையே உறவைப் பாதித்து பல்வேறு பாரபட்ச நிலைமைகளையும் ஏற்படுத்துகின்றது.

> பல்லின சமூகங்களில் பெரும்பான்மை சிறுபான்மை என்பது ஒரு சமூகத்தின் எண்ணிக்கை அளவினால் தீர்மானமாக வேண்டும் என்றில்லை. ஒரு குழுமத்தின் சிறுபான்மைத் தகுதி நிலை பற்றிய உணர்வினை உருவாக்குவது சமூக வரலாற்றுக் காரணிகளே

என்ற கருத்துநிலையும் (மெயின்டல், 1993:10) இங்கு கவனத்திற்குரியதாகும். கூடவே தங்களது உடலமைப்பு அம்சங்கள் காரணமாக தாங்கள் வாழ்கின்ற சமூகத்திலிருந்து மற்றவர்களால் தனிமைப்படுத்தப்பட்டு வேறுபாட்டோடும், தாழ்வாகவும் நடத்தப்படும் போது தாங்கள் அனைவரும் பாரபட்சத்திற்கு இலக்காகிவிட்டவர்கள் என்ற எண்ணம் பெறுகின்ற மக்களைக் கொண்ட பிரிவினரே சிறுபான்மையினர் என்ற முன்னைய கருத்துநிலையைவிட அரசியல், பொருளாதார ஆதிக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வலியுறுத்துவனவாகவே இன்றைய சிறுபான்மையினர் தொடர் பான வரையறைகள் அமையக் காணலாம். (Hicks, 1981:7).

இனக்குழுக்கள், இன உறவுநிலை தொடர்பான இந்த அடிப்படை விளக்கத்தின் துணையோடு தெளிவான கல்வி இன உறவு சார் வேறு பாடுகளைப் புலப்படுத்தும் சில நாடுகளின் அனுபவங்கள் இங்கு விரிவாக நோக்கப்படுகின்றது.

இந்த வகையில் இன ஒதுக்கலை அமைப்பு ரீதியாக சட்ட மூல நடவடிக்கையாகக் கண்ட தென் ஆபிரிக்கா கல்வி நிலை முதலில் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

## தென்னாபிரிக்க கல்விநிலை

ஆபிரிக்கக் கண்டத்தின் தென் முனையில் மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட ஒரு நாடாக விளங்கும் தென் ஆபிரிக்கா மேற்கே அத்திலாந் திக் சமுத்திரத்தையும், கிழக்கே இந்து சமுத்திரத்தையும் கொண்டுள்ளது. பொதுவாக ஆபிரிக்காக் கண்டம் மிகவும் உஷ்ணமான பிரதேசம் என எண்ணப்படுகின்ற போதும் தென்ஆபிரிக்க நாடுமத்திய ரேகைக்கு மிகவும் தூரத்தில் இருப்பதால் உஷ்ணப் பிராந்தியமாக அல்லாமல் மிதமான காலநிலை உடையதாக இருப்பது கவனிக்கத்தக்கது. அதாவது ஐரோப்பியர் வாழ்வதற்கு ஏற்ற காலநிலை உடையதாக இருக்கின்றது. கேப் காலனி (Cape Colony), ஒரேஞ்ச் பீறி ஸ்ரேற் (Orange Free State), டிரான்ஸ்வால் (Transvaal), நேற்றால் (Netal) எனும் நான்கு குடியிருப்புக் களைக் கொண்ட இன்றைய ஆபிரிக்க நாட்டின் மொத்த நிலப்பரப்பு 4,71,443 சதுர மைல்களாகும் இதன் மொத்த சனத்தொகை 1974ஆம் ஆண்டு உத்தியோகபூர்வக் கணிப்பின்படி 25,471,000 ஆகும். (Boateng, 1979:157 – 166)

தென்ஆபிரிக்கா 1910ம் ஆண்டிலிருந்து பொதுநலவாய அமைப் பின் (Commonwealth of Nation) ஓர் அங்கத்துவ நாடாக இருந்து வந்ததெனினும், 1961ம் ஆண்டு முதல் பொதுநலவாயத்துடனான தனது சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டதுடன் தன்னைத் தானே ஒரு சுதந்திரக் குடியரசாகப் பிரகடனம் செய்து கொண்டது. (De Beer, 1961:39&40)

இவ்விதம் அமைக்கப்பட்ட இன்றைய தென் ஆபிரிக்காவின் கல்விப் பிரச்சினையை தெளிவாக விளங்கிக் கொள்ள அதன் இன சமூக அமைப்பு முறையை அறிதல் அவசியம். தென் ஆபிரிக்காவின் இன அமைப்பு பின்வருமாறு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 1.1

தென் ஆபிரிக்காவின் இன அமைவு

| இனக்குழு | வீதம் |
|---|---|
| பண்டுக்கள் | 68% |
| இந்தியர் | 3% |
| நிறத்தவர் | 9% |
| வெள்ளையர் | 20% |

மூலம் : *The Statesmans Year Book,* 1982/83.

இவ்வாறு பல்வேறு இனங்கள் வாழ்கின்றன, கூடவே அவ்வினங் களுக்கிடையே உப பிரிவுகளும் சிக்கலான உறவு முறைகளும் காணப் படுகின்றன. இவ்வகையில் தென் ஆபிரிக்காவின் பூர்வீகக் குடிகள் என்று கூறப்படும் அதே வேளை நாட்டின் பெரும்பான்மை இனமாகிய ஆபிரிக்க மக்களை எடுத்துக் கொண்டால் இவர்கள் பண்டுக்கள் அல்லது கறுப்பர் அல்லது சுதேசிகள் என அழைக்கப்படுகின்றனர். இவர்களி டையே நிகுனி (Nguni) மொழி பேசும் ஸுலு (Zulu), கோசா (Xhosa), ஸ்வாசி (Swazi), நிடிஹெல் (Ndehele) என்ற இனத்தவர்களும், திசோங்கா (Tsonga) மொழிபேசும் வெண்டா (Venda) இனத்தவரும், சோதோ (Sotho) மொழிபேசும் திஸ்வானா (Tswana) இனத்தவர்களும் காணப் படுகின்றனர். ஐரோப்பிய பண்ணைகளில் இத்தகைய கறுப்பு இனத்த வர்களே பெரும்பான்மையினராக வேலை செய்கின்றனர். அத்துடன் தங்க - வைர சுரங்க வேலைகளிலும் இரண்டாந்தர கைத்தொழில் களிலும் இவர்களது உழைப்பு பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. வெள்ளையரை எடுத்துக் கொண்டால் இவர்களிலும் இரண்டு பிரிவினர் காணப்படுகின்றனர். ஒரு பிரிவினர் முதன் முதலாக 17ம் நூற்றாண்டில் தென்ஆபிரிக்காவில் குடியேறிய ஒல்லாந்தர், சிறு அளவில் வந்து சேர்ந்த ஜேர்மனியர்கள், பிரெஞ்சுக்காரர்களை உள்ளடக்கியோர் இவர்கள் தம்மைப் போயர்கள் (Boers) என அழைக்கின்றனர். மற்றையோர் பிரித்தானியாவிலிருந்து வந்து குடியேறிய வெள்ளையர்கள்.

நிறத்தவர் அல்லது கலப்பினத்தவர் என்பது மலேயாவிலிருந்து அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்டோரையும் குடியேற்ற நாடாதிக்க ஆரம்ப காலங்களில் ஐரோப்பியருக்கும் கறுப்பினத்தவர்களுக்குமிடை யிலான இனக்கலப்பினால் உருவானவர்களின் சந்ததியினரையும் குறிக் கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியர் அல்லது இந்தியர் என்பது இந்துக்களான இந்திய குடியேற்ற வாசிகளைக் குறிக்கும் (Corvevin, 1980:70-75).

மக்கள் தொகையில் 20% மான வெள்ளையர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மைச் சுதேசிகளைத் தமதாட்சி அதிகாரத்திற்குள் கட்டுப்படுத்தும் நிலை இங்கு சிறப்பாகக் கவனிக்கப்படக் கூடியது. கல்வி வளர்ச்சியில் உயர் நிலையில் இருந்த வெள்ளையர்கள், தமது நிலையினை அவ்வாறே பேணும் நோக்கோடு சுதேசிகளின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருந்தனர். அவர்களை மேம்பட விடாது தாழ் நிலையிலேயே வைத்திருப்பதற்கு ஏற்ற ஒரு சித்தாந்தத்தை தென் ஆபிரிக்கா வகுத்துக் கொண்டது. APARTHEID எனப்பட்ட இன ஒதுக்கல் கொள்கையின் கீழ் வெள்ளையர்களை ஏனையோருடன் சேர்ந்து வாழ விடாது தடுப்பதுதான் நடைமுறையாக இருந்தது. இந்த இன ஒதுக்கல் அரசின் நடைமுறையாக, சட்டபூர்வமாக, அமைப்பு ரீதியாக இங்கு வெளிப்படுத்தப்பட்டமை குறிப்பாகக் கவனம் பெறவேண்டும்.

1910ஆம் ஆண்டு அரசியல் திட்டப்படி கறுப்பு இனத்தவர்களுக்கு அரசில் உரிமை இல்லை என்றதும், மேலும் பல ஆண்டுகளின் பின் 1948 இல் தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தபோது இனங்களை வேறு வேறாக ஒதுக்கும் கொள்கையைப் பிரகடனமாக்கியதும், தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் வரலாறாகப் பதிவு பெறுகின்றது. இக் கொள்கையின் நடைமுறையாக தென் ஆபிரிக்க முழு நிலப்பரப்பில் ஏறத்தாழ 1/8 அளவான பண்டுஸ்தான் என்ற வளமற்ற, முன்னேற்றமற்ற நிலப் பகுதியிலேயே பண்டு இன மக்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது மட்டுமன்றி பண்டு இனத்தவர் தாம் பிறந்த இடத்திலிருந்து அசைய முடியாதபடி, குழுப்பிரதேச எல்லைச் சட்டங்களும் உருவாக்கப்பட்டன. இத்தகைய ஒரு சமூகப் பொருளாதாரப் பின்னணியில் கல்வியிலும் தம் இன ஒதுக்கல் கொள்கைக்கு அனுசரணையான கொள்கைகளை ஆட்சியாளர் நிறைவேற்றினர். சுதேசிகளுக்கான தனித்துவமான கல்வியை அவர்களிடமே விட்டுவிடுவது என்ற பிரகடனத்துடன் சுதேசிகளின் கல்விமேம்பாட்டினை மட்டுப்படுத்தும் கல்விச் சட்டங்களை உருவாக்கினர். 1953ஆம் ஆண்டு பண்டு கல்விச் சட்டம், 1963ஆம் ஆண்டு கலப்பினக் கல்விச் சட்டம், 1965ஆம் ஆண்டு இந்தியக் கல்விச் சட்டம் என்பன அறிமுகம் செய்யப்பட்டு கடுமையான விதத்தில் இன ஒதுக்கலுக்கு வழி சமைக்கப்பட்டது. இத்தகைய கொள்கைகளின் மூலம் தரத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி முறையை நாட்டின் வெள்ளையர் அல்லாத இனத்தவர்களுக்கு விசேடமாக ஆபிரிக்க பண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வழங்குவதன் மூலம் இவர்கள் கல்வி ரீதியாக அடைந்து கொள்ளக் கூடிய விழிப்புணர்ச்சியை முளையிலேயே கிள்ளிவிடுவது அரசாங்கத்தின் அதி விசேட நோக்காயிருந்தது. இதன் மூலம் நீண்ட காலத்தில் அரசியல் ரீதியாக ஏற்படக் கூடிய ஒரு சவாலை அரசாங்கம் புத்திசாலித் தனமாக ஆனால் மிக அநாகரிகமான முறையில் அணுகியது. (Ravm, 1965:368-375).

அதேசமயம் பொருளாதார ரீதியான ஒரு காரணியும் இவ்விதமான கல்வி முறையினுள் மறைந்து கிடப்பது அவதானிக்கப்படக் கூடியது. சட்டரீதியாக நாட்டின் கறுப்பு இனத்தவர் நுட்பத் தொழில்களில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை, அவர்களுக்கு வழங்கப்படும் சிறந்த கல்விமுறையினால் நாளடைவில் பலவீனப்படுத்தப்படலாம் என்று அரசாங்கம் கருதியது. அதாவது கல்வி வசதியைப் பெறும் ஆபிரிக்கர் சிறப்பான தேர்ச்சியைப் பல துறைகளிலும் பெற்று விட்டால், அவர்களை வெள்ளை இனத்தவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள நுட்பத்துறைகளில் மாத்திரமன்றி ஏனைய சகலதுறைகளிலும் அனுமதி யளிக்க வேண்டிய நிலை அரசுக்கு வரலாம். இதனால் இன ஒதுக்கல் கொள்கை மூலம் வெள்ளையர் தவிர்ந்த ஏனைய இனத்தவர் பொரு ளாதார அலுவல்களில் ஈடுபடவோ, அன்றி நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்கு செலுத்தவோ முடியாதவாறு அரசு தடைசெய்தது.

1953ஆம் ஆண்டு தென்னாபிரிக்க கறுப்பர் கல்வி தொடர்பாக அப்போது நாட்டின் சுதேசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருந்த ஹென்றிக் வேவோட் (Hendrick Verwoerd) ஆபிரிக்கக் குழந்தைகள் தமது சொந்த சமூகத்தில் வாழ்வதற்கு எது தேவையோ அது அவர் களுக்கு வழங்கப்படும் என்றும், தொழிலாளராக வாழ்வதற்கு மேலாக, ஐரோப்பிய சமூகத்தில் அவர்களுக்கு எதுவித அந்தஸ்தும் அளிக்கப்பட மாட்டாது என்றும் கூறினார். 1953ஆம் ஆண்டு நாட்டின் கல்வி நிலை இருந்தமைக்கும், இன்று இருப்பதற்கும் அத்துணை வித்தியாசம் இல்லை என்பதுடன் இனவாத அடிப்படையில் அதுமேலும் இறுக்கம் அடைந்துள்ளது என்பதற்குத் தக்க சான்றாக 1986ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய கல்வி அமைச்சர் அரசாங்கம் தனது பாடசாலைப் பிரிவினையின் அடிப்படைக் கொள்கை யில் உறுதியாக இருக்கின்றது என்று கூறியமையை மேற்கோள் காட்ட முடியும்.

அரசானது நாட்டின் ஆபிரிக்க மக்களுக்குத் தரக்குறைவான கல்வியைத் தொடர்ந்தும் வழங்குவதுடன் அவர்களின் அதே அந்தஸ்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் தொடர்ந்தும் பேணுவதில் மிக உறுதியாக இருந்தது. ஓர் ஆபிரிக்கன் தக்க அனுமதி இன்றித் தனது இல்லத்தில் தனது ஆபிரிக்க நண்பர்களுக்கு எழுத, வாசிக்கச் சொல்லித் தருவது ஒரு கிரிமினல் குற்றமாகக் கருதப்பட்டது. அத்துடன் ஒரு வெள்ளை இனத்தவன் கூட தன் வீட்டு வேலையாளுக்கு ஓய்வு நேரத்தில் கற்றுக் கொடுப்பதும், ஒரு மதபோதகர் தொடர்ச்சியாக தனது மதத்தைப் பின்பற்றும் ஆபிரிக்கக் கூட்டத்தவருக்கு வேதாகமத்தை (Bible) வாசிக்கக் கற்றுக் கொடுப்பதும், ஊனமுற்ற ஒரு குழந்தைக்கு பண்டு கல்வி அமைச்சின் முன் அனுமதி யின்றி ஒரு மனிதன் சில விசேட கல்வி முறைகளைப் புகட்டுவதும் கூடத் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டன. 1959ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பல்கலைக்கழக சட்டத்திலான ஒரு திருத் தத்தின்படி வெள்ளையர் அல்லாத சகல மாணவர்களும் வெள்ளையர் கல்விகற்கும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இன்றும் கூட இந் நிலைமைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறிவிட முடியாது. பல்கலைக்கழகங்களின் ஒரு சில துறை களிலேயே கலப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் அரசாங்கம் வெள்ளையர் வெள்ளையர் அல்லாதோர் என இரு சாராருக்கிடையில் கல்வி வசதி குறித்துக் காட்டிவந்த பாகு பாட்டினை அது கல்விக்கென ஒதுக்கும் பணத்தின் அளவில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

*அட்டவணை : 1.2*

*தென்னாபிரிக்கா அரசு ஒருமாணவனுக்கு செலவிட்ட தொகை (1970)*

| **இனக்குழு** | **செலவிட்ட தொகை (ரண்டுகளில்)** |
|---|---|
| பண்டுக்கள் | 25.31 |
| நிறத்தவர் | 94.41 |
| இந்தியர் | 124.40 |
| வெள்ளையர் | 46,100.00 |

மூலம் : Racism & Apartheid in South Africa & Namibia, UNESCO, 1974

தென்னாபிரிக்க வெள்ளை இன அரசு வெள்ளை இன மக்களின் கல்வியில் கொண்ட அக்கறையின் தன்மையினை மேலே கண்ட அட்ட வணை புலப்படுத்தியது, இதே நிலையை இன்றும் கூட காணமுடி கின்றது. 1991 இல் கறுப்பினக் குழந்தைகளின் பள்ளிக் கூடங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கப்படும் பணத்தின் 4 மடங்கு அதிகமான தொகை வெள்ளையினப் பிள்ளைகள் பயிலும் பள்ளிக்கு ஒதுக்கப்பட்டது. வெள்ளையினக் குழந்தைகளின் வகுப்பறையில் 14 பிள்ளைகள் இருக்கையில், கறுப் பினப் பிள்ளைகளின் வகுப்பறையில் 70 பிள்ளைகள் இருக்கின்றன. இன்னொரு பாதகமான விடயம் கறுப்பினப் பள்ளி ஆசிரியர்களில் 78% மானோர் சரியாகப் பயிற்றப்படாதோராகவும் தாழ்ந்த கல்வித் தர முடையோராகவும் இருப்பதனை இன்றைய ஆய்வுகள் சுட்டும் (Behrens & Ranch, 1991:402-411).

இதற்கான காரணம் அடிப்படை மற்றும் உயர் நிலை ஆசிரியர் பயிற்சிக்கான அரசின் நிதி உதவி மட்டுப்பாடாகும். அத்தோடு கறுப்பு மாணவர்களின் பரீட்சைகளுக்கும், பாடப் புத்தகங்களுக்கும், சீருடை களுக்கும் கட்டணம் செலுத்தப்படுவது கட்டாயமானது. ஆனால், வெள்ளையருக்கு அனைத்தும் இலவசமானது. இது அரசின் இன ஒதுக்கலின் உச்சமாகக் கொள்ளப்படுகின்றது. இதனால் 70% மான பண்டுமாணவர்கள் ஆரம்ப வகுப்புகளிலேயே இடைவிலகலுக்கு உள்ளாவதும் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இது போலவே நிறத்த வரும், இந்தியரும் கூட பெருமளவில் இடைவிலகலுக்கு உள்ளா கின்றனர். வெள்ளையரைப் பொறுத்தவரை அவர்களில் 63% தினர் பாடசாலைக் கல்வியை முடிக்கின்றனர். 30% தினர் உயர்கல்வியைக் கற்பதுடன் 7% தினர் பல்கலைக்கழகத்திற்கும் அனுமதி பெறுகின்றனர். ஆனால் கறுப்பர்களைப் பொறுத்தவரை அவர்களில் 0.2% தினர் மட்டுமே பல்கலைக்கழகக் கல்வியைக் கற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். அத்துடன் 1988இல் 5 மில்லியன் கறுப்பினத்தவர் சாதாரண தரவகுப்பு சித்தி கண்டனர். இதில் 42% தினரே 1989 இல் உயர்தர சான்றிதழ் பெற்றமை (Sparks, 1990:376) இங்கு குறிப்பிடத்தக்கது.

நீண்டகால தென்னாபிரிக்க இன ஒதுக்கல் கொள்கைக்கும் நடை முறைக்கும் முடிவுகாணும் 'புதிய சிந்தனை' (Pretoria Minute) எனும் எண்ணக்கரு செயல் வடிவம் பெற தொண்ணூறுகள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. 1990 மே மாதத்தில் தென் ஆபிரிக்க அதிபர் கிளார்க் கும், ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவும் ஒரே மேசையில் பேசத் தொடங்கியதும், 29 வருடகால ஆயுதப் போராட் டத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததும், அதன் பின்னாலே 1991இன் முதல் ஆறு மாத காலத்து துரிதப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இந்த வகையில் கறுப்பினமக்களின் கல்வி தொடர்பான சீர்திருத்த நடவடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகள் மிகவும் முக்கியமானதொரு துறையாகக் கருத்தில் கொள்ளப் பட்டமையையும் அவதானிக்கலாம். 1990 களில் வெள்ளையினப் பெற்றோர் கறுப்பினக் குழந்தைகளுக்காகப் பள்ளிக்கூடக் கதவுகளைத் திறந்து விட அரச சட்டத்தில் அங்கீகாரம் கிடைத்தது. 1953இன் கல்விச் சட்டமும், புதிய சட்டமூலத்தின் கீழ் வலுவிழந்தது. எனினும் 1991 இல் கூட கறுப்பினக் குழந்தைகளின் பள்ளிக்கூடங்களுக்கு ஒதுக்கப்படும் பணத்தைவிட 4 மடங்கு அதிகமானதாக வெள்ளையினப் பிள்ளைகள் பயிலும் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்டமை கவனத்திற்குரியதாகும். புதிய சீர்திருத்தங்களின் போது கறுப்பின இளைஞர்களின் பல்கலைக்கழக கல்வி தொடர்பாக அதிக கவனம் எடுக்கப்பட்டு வருவதனைக் காணலாம். போராட்ட காலங்களில் கல்வியைப் புறக்கணித்ததன் விளைவாக கறுப்பின இளைஞர்களின் ஆளுமை முழுமை பெரிதும் பாதிக்கப் பட்டமையை இன்றைய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் முதன்மை தலைவர்களின் அண்மைய உரைகளிடை அதிகமாகக் காணமுடிகிறது. (Hartshorne, 1990:6) புதிய சமூக, பொருளாதார புனர்நிர்மாண நட வடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன. வெள்ளையின மக்களிற்கும், கறுப்பின மக்களுக்குமான சமூக செலவீனங்களுக்கான ஒதுக்கீட்டுக்கிடையிலான இடைவெளி 18 மடங்கிலிருந்து 4 மடங்காகப் புதிய சமாதான நிலைமையின் கீழ் குறைக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த இனவாத இடைவெளி இன்னமும் குறைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இன்று கல்வி வாய்ப்புக்காக நகரங்களை நோக்கிச் செல்லும் கறுப்பினக் குடும்பங்களுக்கான விடுதி வசதிகளைச் செய்து தருவதில், கறுப்பினப் பிள்ளைகளுக்கான பள்ளிக் கூட இடங்களைத் தேர்ந்து தருவதில், நிறைய பிரச்சினைகளை தென் ஆபிரிக்கா எதிர் நோக்குகிறது. (Commonwealth Secretariat, 1993: 84-85) எனினும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து புரிந்துணர்வுடன் அனைத்து இன மக்களும் தத்தமது தனித்துவங்களுடன் மேம்பட்ட வாழ்வினை காணுதற்கேற்ற சட்ட நடவடிக்கைகள் புதிய அரசியல் சூழலில் தொடர்ந்து மேற் கொள்ளப்படுதலும், கடந்த கால இன உறவு இடைவெளி குறைந்து செல்வதும் நம்பிக்கை தரும் விடயங்கள் எனலாம்.

இன ஒதுக்கல் கல்வி முறை மூலம் இன உறவுகள் சீரழிந்ததற்கு உதாரணமாக விளங்கிய தென் ஆபிரிக்கா உதாரணத்துடன் ஐக்கிய அமெரிக்க அரசினை ஒப்பு நோக்கும் போது இங்கு ஒன்றிணைதல் என்ற உறவுநிலை மேலோங்கி நிற்கக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய அமெரிக்க கல்விநிலை

இன்றைய உலகின் முதன்மை வல்லரசாகவும், உலகளாவிய பொரு ளாதார முக்கியத்துவம் கொண்ட நாடாகவும் விளங்குவது ஐக்கிய அமெரிக்கா. உலக நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 6% தினையும், உலக குடித் தொகையில் ஏறத்தாழ 7% தினையும் கொண்டதாக விளங்கும் ஐக்கிய அமெரிக்கா உலக உற்பத்தியில் 40% தினை, தனதாக்கிக் கொண் டுள்ளது. இத்தகு பொருள்சார் உற்பத்தியின் அடிப்படையாகக் கல்வியை முதன்மைப் படுத்தும் நாடாகவும் ஐக்கிய அமெரிக்கா உலக அரங்கில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஐக்கிய அமெரிக்கா என்பது உண்மையில் 50 குடியரசுகளை உள்ளடக்கிய ஓர் ஒன்றியமாகும். இதன் நிலப்பரப்பு 3,615,122 சதுர மைல்களாகவும், 1980ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 226.5 மில் லியன் குடித்தொகையினைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. இந்நாட்டில் பல இனக்குழு மக்கள் வாழ்கின்றனர். (Remy, 1987:1.5).

அட்டவணை: 1.3

ஐக்கிய அமெரிக்காவின் இன அமைவு (1980)

| இனக்குழு | மொத்த வீதம் | மொத்தம் ஆயிரங்களில் |
|---|---|---|
| வெள்ளையர் | 84.36 | 189,035 |
| கறுப்பினம் | 11.69 | 26,482 |
| அமெரிக்க இந்திய இனம் (செவ்விந்தியர்) | 0.68 | 1,534 |
| யப்பானியர் } ஆசியர் | 1.64 | 3726 |
| சீனர் } ஆசியர் | | |
| | 100 | 226,546 |

மூலம் : *U.S.Bureau of the Census*, 1980.

இங்கும் பூர்வீக செவ்விந்திய குடிகளைத் தோற்கடித்து குடியேறிய வெள்ளையர்கள் தமது பண்ணைகளை வளப்படுத்த ஆபிரிக்காவி லிருந்து கொண்டுவந்த கறுப்பினமக்களே இனப் பாரபட்சத்திற்கு உள்ளாகினர். 19ஆம் நூற்றாண்டில் லிங்கனின் அடிமைவிடுதலைக் கோட்பாட்டினைத் தொடர்ந்து கறுப்பினப் பிள்ளைகளும் வெள்ளை யரோடு சமமாக வாழும் நிலை தோன்றியது. இதனைத் தொடர்ந்து மக்களை வழிப்படுத்திய புச்சர் வாஷிங்டன் (Bucher-Washington),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டூபோஸ் (Dubois) போன்ற தலைவர்களின் கருத்து நிலையும் வெள்ளை, கறுப்பு இனமக்களை சமமான வாழ்வுக்கு இட்டுச் செல்லக் காணலாம். புச்சர் வாஷிங்டன் பொருளாதாரசமத்துவ இலக்கில் கறுப்பின பிள்ளை களுக்கு விவசாயக்கல்வியை அழுத்த, டூபோஸ் வெள்ளையரின் கல் வியை அவர்களின் கல்விக் கூடங்களிலேயே கறுப்பினப் பிள்ளைகள் பெற வேண்டும் என வற்புறுத்தி நின்றமை அமெரிக்க வரலாற்றில் குறிப்பான பதிவைப் பெறுகின்றது.

கறுப்பின மக்கள் தொடர்பான இந்த எதிர்பார்ப்பு ஆரம்பத்தில் வெள்ளையர்களால் நிராகரிக்கப்பட்டதும் அதற்கு விவேக அடிப் படையில் கறுப்பர்கள் பின்தங்கியவர்கள் என்ற 'நுண்ணறிவு ஆய்வுகள்' செய்யப்பட்டதும் இன்று வரலாறாகும். லிங்கனின் அடிமை விடுதலை முயற்சிகளின் பின்னரும் 'சமூகவடுவாக' கறுப்பர் பற்றிய அடிமை நிலைப் பதிவுகள் தொடர்வதும் அதன் விளைவாக வெள்ளையர் பாடசாலைகளில் கறுப்பினப் பிள்ளைகளின் அனுமதி மறுக்கப்படுவதும் தொடர்ந்தன. எடுத்துக் காட்டாக இங்குள்ள இலவச உயர் பாடசாலை களில் (இலவசம் என்றிருப்பினும் கட்டணம் செலுத்தியே இங்கு கல்வி பெற முடியும்) கறுப்பு இனத்தவர்களும் அனுமதி பெறலாம் என நீதிமன்றம் சட்டபூர்வமாக அனுமதி வழங்கி இருந்தும் கூட பாடசாலை அதிகாரிகள் கறுப்பின பிள்ளைகளுக்கு அனுமதி அளிக்காமை இங்கு நிலவுகின்ற இன முற்சாய்வின் தீவிரத்தை பிரதிபலிக்கின்றது. அத்துடன் இன அடிப்படையில் பாடசாலைகள் வேறுவேறாக இருப்பதும் அதில் வழங்கப்படும் கல்வியிலும், கல்லூரிக்கான வளப்பகிர்வில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுவதும் இங்கு இன உறவு இடைவெளி அதிகரித் தமைக்கான காரணங்களாகின்றன. அமெரிக்க உயர்கல்வி தொடர்பான இன்றைய ஆய்வு முடிவுகள் கூட இன்னமும் தொடரும் இடைவெளி நிலையைக் காட்டி நிற்கின்றன. உயர்கல்வியில் இன இடைவெளியை இவ் அட்டவணை காட்டும்:

*அட்டவணை: 1.4*

***உயர்கல்வியில் இன இடைவெளி (மொத்த சனத்தொகையில்)***

| இனக்குழு | கலாநிதிப்பட்டம் பெற்றோர் | வீதம் |
|---|---|---|
| வெள்ளை இனம் | 23,077 | 89.6% |
| கறுப்பினம் | 951 | 3.7% |

மூலம் : Statistical Abstract- US Bureau of the Census, 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பின மாணவர்களின் இப் பின்னடைவுக்கு நீண்டகாலமாக அவர்கள் கல்வியில் ஈடுபாடு கொள்ளாமல் இருந்தமையே காரணமாகக் காட்டப் படுவதுண்டு. எனினும் இன்னமும் முற்றாக மாற்றமுறாத வெள்ளை யரின் முற்சாய்வு மனப்பாங்கே இதன் அடிப்படையாகும் என்பதே இன்றைய சமூகவியல் ஆய்வுகள் காட்டும் உண்மையாகும் (Henslin, 1995:326-342).

இதேவேளை அமெரிக்கமயமாக்கம் (Americanization) என்ற சமூகமயமாக்கல் கல்விக் கொள்கைகளின் அடியாக கடந்த காலத்து பாரபட்ச நிலைமைகள் குறைக்கப்பட்டுள்ளமையும் எம் கவனத்திற்கு உரித்தாகின்றது. இன, மொழி, மத வேறுபாடுகளைக் கடந்து அமெரிக் காவின் மூன்றாவது தலைமுறையினர் அமெரிக்கர்களாகும் இயை பாக்கலின் வழி கல்வியுலகிலும் மாற்றங்களைத் தரிசிக்கமுடிகின்றது.

## நியூசிலாந்தின் கல்விநிலை

சமநிலையில் ஒன்றிணைவு என்ற பண்பிலிருந்து, பண்பாட்டுப் பன் மையை நோக்கிய பாதையில் வெற்றிகரமான இன உறவைக் காட்டும் நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக நியூசிலாந்தினைக் கொள்ள முடியும். நியூசிலாந்து, அவுஸ்திரேலியாவிற்கு தென்கிழக்காக 1200 மைல் தூரத் தில் அமைந்துள்ளது. தஸ்மன்கடல் இவ்விரு நாடுகளையும் பிரிக் கின்றது. வடதீவு, தென்தீவு, ஸ்ருவாட் தீவு, சதாம் தீவு ஆகிய நான்கு தீவுகளை உள்ளடக்கியதாக நியூசிலாந்து அமைகின்றது.

*அட்டவணை: 1.5*

*நியூசிலாந்தின் இன அமைவு*

| இனக்குழு | வீதம் |
|---|---|
| ஆங்கிலேய இனம் (வெள்ளையர்) | 95% |
| மவோரிய இனம் | 5% |

மூலம் : The Statesman's Year Book, 1982/83.

நியூசிலாந்தின் பூர்வீகக் குடியினராக மவோரிய இனத்தினர் விளங்கு கின்றனர். இவர்கள் பெரும்பாலும் கடலை நம்பி வாழ்ந்தபடியால் கடலை அண்டியதாகவே இவர்களது குடியிருப்புக்கள் காணப்பட்டன. நியூசிலாந்தின் சுதேசிகள் என்ற பதம் மவோரியரையே குறிக்கின்றது. மவோரியர்களிடம் ஆரம்பத்தில் எழுத்து மொழி இருக்கவில்லை. இவர்களது ஐதீகக் கதைகள், மரபுகள், பாடல்கள் யாவும் வாய் மொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபாகவே கையளிக்கப்பட்டன. மவோரியரின் குடியிருப்புக்களில் அதிகமானவை வடதீவில் அமைந்துள்ளன. மவோரிய இனம் தற்போது அழிந்து கொண்டுவருவதாக ஆய்வுகள் காட்டுகின்றன. இந்த இன வீழ்ச்சிக்குப் பௌதீக காரணிகளும், ஏனைய பண்பாட்டுக் காரணிகளும் பொறுப்பாக இருப்பதாக சொல்லப்படுகிறது. காலநிலை அழுத்தங்களோடு இவர்களது சுகாதார பழக்கவழக்கங்களும், காலநிலைக்கு உகந்ததாக அமையாத குடியிருப்புக்களும் பாதிப்புக்களைத் தந்துள்ளன. கூடவே வெள்ளை இன நாகரீகங்களின் நல்ல பழக்கங்களுக்குப்பதில் மோசமான விடயங்களைத் தழுவியதன் விளைவாக ஒழுக்க நிலை சார்ந்த பாதிப்புக்களும் இவர்களின் எண்ணிக்கை குறைவிற்குக் காரணங்களாகின்றன. (Labborede, 1957:171)

நியூசிலாந்தில் இன ஒதுக்கல் கிடையாது. இங்கும் ஆதிக்குடிகளான மவோரியர்களுக்கும் குடியேற்றவாசிகளான ஆங்கிலேயருக்குமிடயிலான உறவு நிலைபற்றியதாகவே இனம்சார் கல்விப் பிரச்சினைகள் அமையக் காணலாம். ஆட்சியமைப்புக்கும், பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கும் படிப்படியாக சுதேசிகளையும் ஈர்த்து சமூக ஒற்றுமையை நிலைநாட்டல் என்பதே ஆரம்ப கால எதிர்பார்ப்பாக இருந்தது. இந்நிலையில் பிரித்தானியர் நிறுவிய பாடசாலைகளில் மவோரியருக்கும் இடம் கொடுக்கப்பட்டது. எனினும் கலைத்திட்டம் ஆங்கிலேயரின் பண்பாட்டு அம்சங்களைக் கொண்டிருந்தது. 1930களில் எழுந்த எதிர்ப்பினைத் தொடர்ந்து மவோரிய பண்பாட்டு அம்சங்களுக்கும் இடம் கிடைக்கலாயிற்று. மவோரிய மொழியும் பள்ளிக் கூடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைக் கல்வி மொழியாக்கும் முயற்சிகளும் பரீட்சார்த்த நிலையில் இடம் பெற்றன. இவ்விதமான மாற்றங்கள் நிகழ்ந்த போதும் கல்வித் துறையில் இனங்களிடையே நல்லெண்ணமும் நல்லுறவும் இயல்பாய் நிலவக் காணலாம்.

சிறுபான்மை மவோரியர்கள் எண்ணிக்கையில் மிகக்குறைந்த வீதமாக அமைந்த போதிலும் இங்கு வெள்ளையர்கள் இவர்களை தம்மைவிடத் தாழ்ந்தவர்களாகக் கருதிச் செயற்படாமையே இங்கு சுமுகமான இன உறவு நிலவுவதற்கான அடிப்படை எனலாம். வெள்ளையர்களுக்கு வழங்கிய அதே கல்வியை வழங்கியதும், அவர்கள் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து வசதிகளைச் செய்து தந்ததும் நியூசிலாந்தின் சிறப்பான முன் உதாரணங்கள் ஆகும். எனினும் சுதேசிகள் சுய பண்பாட்டு உணர்வின் காரணமாக ஒன்றிணைத்தல் நிகழாது போக பண்பாட்டு பன்மைத் தன்மையாக இன உறவு இங்கு பரிணமிக்க காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் பண்பாடு தொடர்பான பெருமித உணர்வு கொண்ட மவோரியர்கள் இணைவு தம் தனித்துவத்தை இழக்க வைக்கும் என்ற நிலப்பாட்டில் உறுதியாக இருந்ததினால் தான் கலைத்திட்டமாற்றங்கள் வழி அவர்கள் பண்பாடு, மொழி என்பன பேணப்பட்டன. சிறுபான்மை யினரின் கல்வி அபிவிருத்திக்கென இங்கு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கல்விக்குப் பொறுப்பாக மாவட்ட கல்வி சபைகள், அரசு கல்வித் திணைக்களம் ஆகிய இரண்டும் இருந்தன. இவர்களால் பகிரங்கப் பாடசாலை, சுதேசிகள் பாடசாலை என இருவகைப் பாட சாலைகள் அமைக்கப்பட்டன. இவற்றில் எதிலும் எவரும் கற்கலாம் என்ற நிலை இருக்கின்றது. ஆயினும் நடைமுறையில் அரசு கல்வித் திணைக்களம் நடத்தும் சுதேசிய பாடசாலைகளில் 50% மான மவோரியப் பிள்ளைகளையே காணமுடிகின்றது. அதேவேளை 100%மான வெள்ளை யர்கள் இங்கு கல்வி பெறும் நிலையைக் காணலாம்.

இன உறவு நிலையில் சுமுகமான நிலை காணப்பட்ட போதிலும் இங்கு மேலைக் கல்வி பெறும் சுதேசிய மாணவர்கள் தமது கல்விக்கும் மவோரிய பண்பாட்டு வாழ்க்கைக்கும் இடையில் பொருத்தப்பாட்டின் மையை உணரும் நிலையில் உளவியல் ரீதியான பாதிப்புக்குள்ளா கின்றமையும் இங்கு குறிப்பான அவதானம் பெறும் எனினும், இது இங்குள்ள இன உறவை எந்தளவிலும் பாதிப்பதாயில்லை.

இவ்வாறாக ஒரு பல்லின சமூகத்தின் கல்வி இயக்கங்கள், கொள் கைகள் அங்கு வாழும் சமூகத்தினர் அனைவரையும் தழுவியதாகவும், அவர்கள் விருப்பங்களை மதிப்பதாகவும் அமையும் போதே சிறப்பான பயன்களைத் தரும்.

மேலே நாம் நோக்கிய எடுத்துக்காட்டுக்களில் தென்னாபிரிக்கா வில் எண்ணிக்கை ரீதியில் சிறுபான்மையினராக இருந்த போதிலும், அரசியல், பொருளாதார ஆதிக்கத்தின் அடியாக வெள்ளையர்கள் கறுப்பர்களை இன ஒதுக்கல் கொள்கை வழி கல்வி சமவாய்ப்புக்களை மறுக்கும் நிலையில், நியூசிலாந்தில் 5%மான சிறுபான்மையினர் விருப்பப்படி இணையவும், கல்வியை வளர்க்கவும் ஏற்பாடுகளை காணமுடிகின்றது. முன்னையதில் இன முரண்போராட்டங்களாக வெடிக்க, பின்னையதில் சுமுகமான இன உறவு இயல்பாக அமைந்திடக் காணலாம். இந்த வேறுபாடுகள் அனைத்தும் பலம் பொருந்திய பெரும் பான்மைக் குழுக்களின் சிறுபான்மையோர் தொடர்பான மனப்பாங்கு, மற்றும் நடைமுறைகளினடியாகவே ஏற்படுவன என்பது இதனால் தெளிவாகின்றது. உரிய கல்வியை வழங்குவதன் மூலம் இன இசைவைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேண முடியும் என்பதும் இன்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் படும் கோட்பாடாக இருக்கின்றது.

சிறுபான்மைக் குழுக்களை இல்லாது ஒழிப்பதிலிருந்து தனித் துவமாய் வளர விடுவது வரையான வீச்சு எல்லையின் கீழ் தன்னமை வாக்கல், இசைந்து போதல், ஒன்றிணைத்தல், பண்பாட்டுப் பன்மை நிலை காணல் என இந்த உறவு நிலைகளும் வேறுபடக் காணலாம்.

மேலே ஆழமாகக் கண்ட நாடுகளின் அனுபவங்களுடன் ஏனைய பல்லின சமூக உறவு நிலைகளையும் இணைத்து நோக்கும் போது அனைத்து நாடுகளிலும் இவ்வாறான உறவு நிலைகளைப் பேணுவ தற்கான கருவியாக கல்வியே பெரிதும் கருதப்படுகின்றமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியது.

தன்னமைவாக்கல் உறுதிப்படுத்துதற்கு உகந்த சிறந்த கருவியாக சிறுபான்மை இனக்குழுக்களின் வேறுபட்ட தன்மைகளைக் கலைத் திட்டங்களில் கவனியாமல் விடுவதும் உத்தியோகபூர்வமாக ஒரு மொழி வழியேதான் கல்வி என வலியுறுத்தி, ஒரு தொகுதி சமூக விழுமியங் களை நிலைநாட்டலும் இங்கு கல்விவழி சாத்தியமாகின்றது.

நீண்ட பாரம்பரியமான வாழ்வினைக் கொண்ட சுதேசிகள் விடயத்தில் அந்தக் கொள்கை, பிரச்சினைகளை விளைவித்தாலும், புதிதாக மிக அண்மைக் காலங்களில் ஐக்கிய இராச்சியம் போன்ற இடங்களில் குடியேறிய பல ஆசியர்கள் விரும்பிக்கைக் கொள்ளும் உறவு நிலையாக தன்னமைவாக்கல் அமையக் காணலாம். இவற்றினை விட பொருத்தப்பாடு காணல், ஒன்றிணைத்தல் என்ற நிலைகளிலும் பண்பாட்டு இணைவு சில பல்லின சமூகங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற மையும் முன்னைய உதாரணங்களிலிருந்து தெளிவாகின்றது.

இவ்வாறு குறித்த பல்லின சமூகத்தின் வேறுபட்ட பண்பாட்டுக் குழுக்கள் தமக்குள் பரஸ்பர கொடுத்து வாங்கல்களின் வழி புதியதொரு கலப்புப் பண்பாட்டினைக் காணும் எதிர்பார்ப்பே மேலைப் புலங்களில் அண்மைக்காலம் வரை மேலோங்கிய கல்விசார் கொள்கையாகவும் விளங்கக் காணலாம். பொதுவுடமை நாடுகளான முன்னைய சோவியத் ஒன்றியம், மக்கள் சீனா ஆகிய நாடுகளிலும் கூட இவ்வாறான ஓர் இசைவே எதிர்பார்ப்பாக இருந்தமை கவனத்தில் கொள்ளப்படுகிறது. 'புதிய மலேசியா' என்ற தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்றான மலேசிய கொள்கையின் நடைமுறையிலும் இதனைக் காணமுடியும், இங்கு வாழும் சீன, மலே, தமிழ் இனக்குழுக்கள் தமது அன்றாட இன அபிமானங்களை விட்டு மலேசியர் என்ற ஒருவித கலப்புப்பண்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளத்தை வெளிப்படுத்துவதை இன்று காணமுடிகின்றது. ஆங்கிலம் கல்வி மொழியாகக் கண்ட விரிவாக்கமும், இந்த கலப்புப் பண்பாடு நிலையாக துணையாயின. நவகுடியேற்ற நாட்டாதிக்க மொழியாக மட்டுமன்றி சுதந்திரத்தின் பின்னான கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான மொழியாகவும் ஆங்கிலம் இங்கு பயன்தருகின்றது. (Chai Hon-Chan, 1977:27)

நவகுடியேற்றவாத அலைகளிடை கலைத்திட்ட உள்ளடக்கங்களின் வழியும் இந்தப் பண்பாட்டிணைவு மேலும் வலுப்படுத்தப் படுகின்றமையை இன்றைய கல்வியியல் ஆய்வுகள் உறுதி செய்கின்றன. (Watson, 1985:104&105)

எனினும் பல்லின சமூகங்களின் இன உறவு நிலை தொடர்பான அண்மைக்கால விவாதங்களில் பன்மைப் பண்பாட்டு நிலையே முதன்மை பெறக் காணலாம். குறிப்பாக எழுபதுகளைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளிலும், தென்கிழக்காசியப் பிராந்தியங்களிலும், இது ஒரு சிறந்த வழியாக பல்வேறு ஆய்வுகளின் வழி முன்வைக்கப்படக் காணலாம். நியூசிலாந்து இத்தகைய உறவு நிலையின் இயல்பான வெற்றிக்கு உதாரணமாக அமைவது, எனினும் பண்பாட்டுப் பன்மை நிலை என்பது தனியான ஆனால் சமமான வளர்ச்சி நிலையை அனைத்து இனக் குழந்தைகளுக்கும் தருகின்றதா? இரண்டு அல்லது பன்மையான பண்பாட்டு நிலையில் ஒரு சமூகக் குழு, ஒன்றுக்கு மேற்பட்ட ஏனைய குழுக்களின் மொழி - பண்பாடுகளைக் கற்றிடல் வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றதா? இலட்சிய நிலையில் இந்த எதிர்பார்ப்பு இருந் தாலும் அதிகார இனக்குழுக்கள் பன்மைப்பண்பாடுகளை உணராத நிலையே நடைமுறை அனுபவமாகும்.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து எமது ஆய்வுக்களமான இலங்கை வரை பண்பாட்டுப் பன்மை வாதம் வெறும் கொள்கை நிலைப்பாடா கவே அமைந்திருப்பது நீண்டகால மதிப்பீடுகளால் உணர்த்தப்படும். பண்பாட்டுப் பன்மை நிலை என்பது வசதிக்கேற்ப அர்த்தம் கொள்ளப் படும் நிலையிலேயே பெரிதும் அமையக் காணலாம். இதுவே தனியான அதிகாரம், தனியான கல்வி முறை என்ற தீர்வு நிலைகளை நோக்கிப் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனங்கள் செல்லக் காரணம் எனலாம். இலங்கையின் இன முரண் வரலாற்றின் திசையும் இத்தகைய வழி யிலேயே அமைவதனைக் காணமுடியும். இனி வரும் இயல்களில் இது விரிவாக நோக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் - 2

# இலங்கையின் இன அமைவும் கல்வி நிர்வாக அமைப்பும்

### இன அமைவு

பல்லின சமூகங்களைக் கொண்ட இலங்கையின் பிரதான இனக்குழுக் களாக சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் அமைகின்றனர் மிகச் சிறிய வீதத்தில் பறங்கியரும் மலாயரும் ஏனையோரும் இடம் பெறு கின்றனர்.

மொழி அடிப்படையில் சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண் டோர், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர், ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டோர் என இவர்களைப் பிரித்து நோக்கலாம். 10 வருடங்களுக்கு ஒருதடவை எடுக்கப்படும் குடித்தொகை மதிப்பீட்டின் படி இறுதியாக 1981ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தக் குடித்தொகை 14,846,750 எனக் கணிப்பிடப்படுகின்றது. இனத்தொகுதி ரீதியான குடித்தொகைப் பிரிவு பின்வருமாறு அமையும்.

அட்டவணை:2.1

இனத்தொகுதி ரீதியான குடித்தொகை அமைப்பு - 1981

| இனத்தொகுதி | தொகை | வீதம் |
|---|---|---|
| சிங்களவர் | 10979569 | 74.0% |
| இலங்கைத் தமிழர் | 1886872 | 12.7% |
| இந்தியத் தமிழர் | 818656 | 5.5% |
| இலங்கை முஸ்லீம்கள் | 1046926 | 7.0% |
| பறங்கியர் | 39374 | 0.8% |
| மலாயர் | 46963 | |
| ஏனையோர் | 28398 | |

Source:- Census of population of Housing General report 1981:111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் குடித்தொகை எண்ணிக்கையில் பெரும்பான்மையின ராக அமைபவர்கள். சிங்களவர் கி.மு.3ஆம் நூற்றாண்டு காலத்தில் பௌத்தமதம் இங்கு அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பெரும் பான்மையோர் பௌத்தர்களாகவும் இந்தோ ஆரியக்கிளை மொழியான சிங்களத்தைப்பேசும் மக்களாகவும் காணப்படுகின்றனர். சிங்கள மக்களின் ஆதிப் புலப்பெயர்வு எங்கிருந்து ஏற்பட்டது, இலங்கையி லிருந்த ஆதிக்குடிகளுடன் இவர்கள் எத்தகைய இனக் கலப்புகளுக்கு உள்ளானார்கள் என்பது பற்றி வரலாற்றியலாளர்கள், தொல்லியலாளர் களிடையே கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. (Daraniyagala, 1972; Ragupathy, 1987)

இனம், மதம், மொழி என்பன சிங்களவரை ஏனைய மக்கட் பிரிவினரிடமிருந்து வேறுபடுத்துவன. இவ்வாறு வேறுபடும் சிங்கள மக்கள் தமக்குள்ளும் இருவேறு பிரிவினராக இனங்காட்டுகின்றனர். இலங்கையின் தென்மேற்கு பகுதிகளின் தாழ் பூமிப் பிரதேசங்களில் வசிப்போர் கரையோரச் சிங்களவர் அல்லது தாழ் பூமிச் சிங்களவர் எனப்படுகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் மேல்மாகாணம், தென்மாகாணம் ஆகியவற்றிலும், சிலாபப் பகுதிகளிலும் வசிக்கின் றனர். இலங்கையின் மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவா மாகாணம் ஆகிய மாகாணங்கள் கண்டிச் சிங்களவரின் பிரதான வாழிடமாகும். சிங்கள மக்களில் 3/5 பங்கினர் தாழ் பூமிச் சிங்களவர்களாக இருக்கின்றனர். பிரதேச வேறுபாடு, பொருளாதார முறைமை என்பவற்றோடு பண்பாட்டு அடிப்படையிலும் இவர்களிடையே வேறுபாடுகளை அவதானிக்க முடியும்.

இலங்கை மக்களிடையே எண்ணிக்கையில் இரண்டாவது பெரும் பான்மையினராக விளங்குவோர் தமிழர்கள் ஆவர். சிங்களவரைப் போலவே தமிழர்களும் இலங்கையின் ஆதிக்குடிகளாவர். தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய தொல்லியல் ஆய்வு கள் இதனை நிறுவி நிற்பன. (Daraniyagala, 1972: 1-18; Sitrampalam, 1984; Ragupathy, 1987) இவர்களின் மொழியாகிய தமிழ் திராவிட மொழிகளில் தொன்மையானது. அம் மொழியின் செல்வாக்கு, புவி யியல் அமைவிடத்தின் தன்மையினாலும் அவ்வப்போது நிகழ்ந்த தென்னிந்திய செல்வாக்குகளினாலும் இங்கு உறுதிபெறக் காணலாம். தமிழர்களில் பெரும்பான்மையோர் இந்துக்களாவர். தமிழர்களிடை யேயும் இருபெரும் பிரிவுகளைக் காண முடிகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செறிந்து வாழ்வோர் இலங்கைத் தமிழர் எனப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர். 1837ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் பெருந்தோட்டங் களில் வேலை செய்வதற்கென பிரித்தானியர்களால் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர் மரபினர் மலையகத் தமிழர் எனப்படு கின்றனர். மத்திய மலைநாடு இவர்களின் பிரதான வாழ்விடமாகும். இவர்கள் இடவமைவு, பொருளாதார சூழ்நிலை, பேச்சுவழக்கு, மற்றும் வழிபாட்டு மரபுகள் போன்ற பண்பாட்டுக் காரணிகளின்வழி தனியான பிரிவினராக தம்மை இனம் காட்டுகின்றனர். வடமாகாணம், கிழக்கு மாகாணம், தவிர்ந்த மேற்கு மாகாணத்திலும் வடமேற்கு மாகாணப் பகுதிகளான புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு பகுதிகளிலும் கணிச மான அளவு தமிழர்கள் வாழ்கின்றனர்.

முஸ்லீம்கள் இலங்கையில் 7.0% தினராக இருக்கின்றனர். இஸ்லாம்மதத்தினைப் பின்பற்றும் அனைவரையும் இவ்வினம் குறிக் கின்றது. இவர்களுக்குள்ளும் இலங்கை முஸ்லீம்கள், இந்திய முஸ்லீம் கள், மலாயர் என்ற மூன்று பிரிவினர் அடங்கியுள்ளனர். வியாபார நோக்கினுக்காக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பரந்திருக் கின்றனர். கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் அதிகளவில் வாழ்கின்றனர். மொத்த முஸ்லீம்களில் 46% தினர் அம்பாறைப் பிரதேசத்தில் செறிந்துள்ளனர். சோனகர், அல்லது இஸ்லாமியர் என அழைக்கப்படுகின்ற இவர்கள் மத்திய கிழக்கு, தென்கிழக்கு ஆசியா ஆகிய பகுதிகளிலிருந்து வந்துள்ளனர். வியாபார நோக்கிலான தென்னிந்திய முஸ்லீம்களின் செல்வாக்கும் இன்று அதிகமாக வலுப்பெற்றுள்ளது. முஸ்லீம்களின் தாய்மொழியாக தமிழ் அமைந்துள்ளது. இவர்களது தமிழ் பேச்சுவழக்கு ஏனைய தமிழர் களினது மொழி வழக்கினின்றும் வேறுபடுகின்றது. (Samaraweera, 1979:243&244; Warnapala, 1994:4&5)

இவர்களைவிடப் பறங்கியர்கள் மிகக் குறைந்தளவு வீதத்தினராக அதாவது இலங்கையின் குடித்தொகையில் ஒரு வீதத்திற்கும் குறைந் தளவாக அமைகின்றனர். கொழும்பு, கம்பஹாப் பகுதிகளில் இவர்கள் செறிவாக வாழ்கின்றனர். குடியேற்ற நாட்டாதிக்கக் காலத்துப் போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோருடனான சுதேசிகளின் கலப்பில் உருவாகியோரே பறங்கியர். ஐம்பதுகளில் கொண்டுவரப்பட்ட அரசகருமமொழி மாற்றத்தினைத் தொடர்ந்து இவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் வெளிநாடுகளுக்கு குறிப்பாக, கனடா, அவுஸ் திரேலியா போன்ற நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட ரீதியான இன அமைவு வீதங்களை உரு 3.1 புலப் படுத்தும், 1971ஆம், 1981ஆம் ஆண்டுகளில் குடித்தொகைக் கணிப் பினடியாகப் பெறப்பட்ட புள்ளிவிபரங்களை இது பிரதிபலிக்கின்றது. அட்டவணை 3.2 மாவட்ட ரீதியான இனவிகிதப் பரம்பலையும் அட்டவணை 3.3 தனித்தனி மாவட்டங்களில் இனவிகித அமைப் பினையும் பிரதிபலிக்கின்றது.

## இன அமைவு மாற்றங்கள்

வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் திட்டமிட்டவாறு மேற்கொள்ளப்பட்ட இனவாத நோக்கிலான குடியேற்றத்திட்டங்கள், குடியுரிமைப்பறிப்புக்கள், அவ் வப்போது நடந்த இன வன்செயல்களின் அடியான குடியசைவு என்பன நாட்டின் குறிப்பான சில பிரதேசங்களில் இன விகிதாசார அமைப்பில் மாற்றங்களுக்குக் காலாகின.

இந்தவகையில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு திருகோணமலை அம்பாறைப் பகுதிகளிலும், வடமாகாணத்தின் வவுனியாப் பகுதியிலும் நடந்த இனவிகித மாற்றங்களையும், மலை யகத்தில் ஏற்பட்ட குடித்தொகை வீழ்ச்சி, குடியுரிமை இழப்பு என்பன வும் இங்கு கவனத்திற்குரியனவாகும்.

எடுத்துக்காட்டாக 1946ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் படி மடடக்களப்பு மாவட்டத்தில் (அம்பாறைப் பிரதேசத்தையும் உள்ளடக்கியது.) சிங்களவர்களின் எண்ணிக்கை 11850 பேராகும். இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 5.8 சதவீதமாகும். கல்லோயாத் திட்டத்தின் அறிமுகத்தின் பின்னர் 1953ஆம் ஆண்டு குடிசன மதிப் பீட்டின்படி இம்மாவட்டத்தின் சிங்களவர்களின் எண்ணிக்கை 31174 பேராகும். இது மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 11.5 சத வீதமாகும். 1946-1953 காலப் பகுதியில் இம் மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 33 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்திருந்தது. ஆனால் இதே காலப்பகுதியில் இம் மாவட்டத்தின் சிங்களவர்களின் தொகை 163 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததனை இவ் அட்டவணை புலப் படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு 2.1

இலங்கையின் இனப்பரம்பல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2:2 : மாவட்ட ரீதியான இனப்பரம்பல் 1971/81

| மாவட்டம் | சிங்களவர் | | இ.தமிழர் | | இந்.தமிழர் | | இ.முஸ்லீம் | | பறங்கியர் | | மலேயர் | | ஏனையோர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 |
| ஸ்ரீலங்கா | 72.0 | 74.0 | 11.2 | 12.7 | 9.3 | 5.5 | 6.5 | 7.0 | 0.4 | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.2 | 100 | 100 |
| கொழும்பு | 83.1 | 77.6 | 6.3 | 10.0 | 2.2 | 1.2 | 5.5 | 8.2 | 1.2 | 1.2 | 1.0 | 1.3 | 0.5 | 0.5 | | |
| கம்பஹா | - | 92.0 | - | 3.5 | - | 0.4 | - | 2.7 | - | 0.6 | - | 0.6 | - | 0.2 | | |
| களுத்துறை | 86.5 | 87.2 | 1.0 | 1.2 | 5.3 | 4.1 | 6.9 | 7.4 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | | |
| கண்டி | 62.3 | 74.3 | 4.0 | 5.0 | 24.1 | 0.4 | 8.2 | 10.5 | 0.3 | 0.2 | 0.3 | 0.3 | 0.5 | 0.3 | | |
| மாத்தளை | 74.5 | 80.0 | 3.5 | 5.8 | 14.9 | 7.0 | 6.4 | 7.0 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 | 0.4 | 0.2 | | |
| நுவரெலியா | 40.8 | 42.1 | 4.1 | 12.7 | 52.3 | 42.7 | 1.6 | 2.0 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 | 0.4 | 0.2 | | |
| காலி | 94.3 | 94.5 | 0.5 | 0.9 | 2.1 | 1.4 | 3.0 | 3.2 | 0.1 | 0.1 | - | - | - | - | | |
| மாத்தறை | 93.9 | 94.5 | 0.3 | 0.7 | 3.2 | 2.2 | 2.5 | 25 | - | - | - | - | - | - | | |
| அம்பாந்தோட்டை | 97.2 | 97.1 | 0.5 | 0.6 | 0.1 | 0.1 | 1.3 | 1.2 | - | - | 1.0 | 1.0 | - | - | | |
| யாழ்ப்பாணம் | 0.9 | 0.8 | 94.4 | 95.2 | 2.6 | 2.4 | 1.4 | 1.6 | 0.0 | 0.1 | - | - | 0.1 | - | | |
| மன்னார் | 41 | 82 | 51.4 | 51.3 | 16.7 | 13.0 | 25.3 | 26.1 | 0.1 | - | - | - | 2.4 | 1.4 | | |
| வவுனியா | 16.8 | 16.6 | 61.3 | 56.8 | 14.5 | 19.6 | 6.6 | 6.8 | 0.1 | - | 0.1 | 0.1 | 0.5 | 0.2 | | |
| முல்லைத்தீவு | - | 5.2 | - | 75.4 | - | 14.5 | - | 4.7 | - | 0.1 | - | 00 | - | 0.0 | | |
| மட்டக்களப்பு | 4.6 | 3.4 | 69.1 | 70.8 | 1.7 | 1.2 | 23.7 | 23.9 | 0.8 | 0.7 | - | - | 0.2 | 0.1 | | |
| அம்பாறை | 30.1 | 37.8 | 22.2 | 20.0 | 0.6 | 0.4 | 46.4 | 41.5 | 0.2 | 0.2 | - | - | 0.2 | 0.1 | | |
| திருகோணமலை | 29.0 | 33.4 | 35.0 | 34.3 | 2.7 | 2.1 | 31.9 | 29.5 | 0.6 | 0.5 | 0.3 | 0.3 | 0.4 | 0.1 | | |
| குருநாகல் | 92.8 | 93.9 | 0.9 | 1.2 | 1.3 | 0.6 | 4.5 | 5.0 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.3 | 0.1 | | |
| புத்தளம் | 82.1 | 82.9 | 6.8 | 6.6 | 1.6 | 0.5 | 9.8 | 9.9 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.3 | 0.1 | | |
| அனுராதபுரம் | 90.3 | 91.1 | 20.1 | 1.4 | 0.5 | 0.1 | 6.0 | 7.1 | - | - | - | 0.1 | 0.1 | 0.2 | | |
| பொலநறுவை | 89.7 | 91.4 | 3.0 | 2.0 | 0.2 | 0.1 | 0.0 | 6.4 | - | - | - | 0.1 | 0.1 | 0.2 | | |
| பதுளை | 58.7 | 69.1 | 3.2 | 5.9 | 34.0 | 20.2 | 3.2 | 4.2 | 0.2 | 0.1 | 0.3 | 0.2 | 0.5 | 0.4 | | |
| மொனறாகலை | 90.0 | 92.7 | 1.6 | 2.0 | 6.0 | 3.2 | 2.1 | 1.5 | - | - | - | 0.1 | 0.1 | 0.1 | | |
| இரத்தினபுரி | 79.8 | 85.0 | 1.4 | 2.4 | 17.1 | 10.6 | 1.2 | 1.7 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.4 | 0.2 | | |
| கேகாலை | 84.1 | 85.9 | 1.7 | 2.2 | 9.4 | 6.7 | 4.4 | 5.0 | - | - | 0.1 | 0.1 | 0.3 | 0.1 | | |

மூலம் : Census of Population & Housing General Report, 1981.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2:3: தனித்தனி மாவட்டங்களில் இனவிகிதப் பரம்பல் 1971/1981

| மாவட்டம் | சிங்களவர் | | இ.தமிழர் | | இந்.தமிழர் | | இ.முஸ்லீம் | | பறங்கியர் | | மலேயர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 | 71 | 81 |
| ஸ்ரீலங்கா | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| கொழும்பு | 24.3 | 12.0 | 11.9 | 9.0 | 5.1 | 24.0 | 17.9 | 13.3 | 7.2 | 50.0 | 63.7 | 47.3 |
| கம்பஹா | - | 11 | - | 2.6 | - | 0.7 | - | 3.6 | - | 12.4 | - | 18.5 |
| களுத்துறை | 6.9 | 6.6 | 0.5 | 0.5 | 3.3 | 4.1 | 6.0 | 5.8 | 0.9 | 1.1 | 1.6 | 1.6 |
| கண்டி | 8.1 | 7.1 | 0.8 | 1.1 | 24.3 | 12.0 | 11.7 | 10.5 | 6.6 | 5.4 | 7.6 | 5.9 |
| மாத்தளை | 2.6 | 2.6 | 0.8 | 1.1 | 3.9 | 3.0 | 2.4 | 2.4 | 0.9 | 0.7 | 1.4 | 1.2 |
| நுவரெலியா | 2.0 | 2.3 | 1.3 | 4.1 | 20.0 | 31.5 | 0.9 | 1.2 | 1.5 | 1.8 | 1.8 | 2.4 |
| காலி | 7.6 | 7.0 | 0.3 | 0.4 | 1.3 | 1.4 | 1.7 | 1.5 | 1.1 | 0.7 | 0.5 | 0.4 |
| மாத்தறை | 6.6 | 5.5 | 0.1 | 0.2 | 1.6 | 1.7 | 1.8 | 1.5 | 0.4 | 0.5 | 0.2 | 0.2 |
| அம்பாந்தோட்டை | 3.6 | 3.8 | 0.1 | 0.1 | 0.3 | 0.3 | 0.5 | 0.5 | - | 0.2 | 7.6 | 9.5 |
| யாழ்ப்பாணம் | 0.1 | 0.1 | 46.7 | 41.9 | 1.5 | 2.4 | 1.2 | 1.2 | 0.7 | 1.0 | 0.5 | 0.2 |
| மன்னார் | 0.0 | 0.1 | 2.8 | 2.9 | 1.1 | 1.7 | 2.4 | 2.6 | - | 0.1 | - | 0.1 |
| வவுனியா | 0.2 | 0.1 | 4.1 | 8.9 | 1.2 | 2.3 | 0.8 | 0.6 | 2.2 | 0.1 | 0.2 | 0.1 |
| முல்லைத்தீவு | - | 0.4 | - | 3.1 | - | 1.4 | - | 0.3 | - | 0.2 | - | 0.4 |
| மட்டக்களப்பு | 0.1 | 0.1 | 12.4 | 12.4 | 0.4 | 0.5 | 7.4 | 7.5 | 4.2 | 5.8 | 0.2 | 0.1 |
| அம்பாறை | 0.9 | 1.3 | 4.2 | 4.1 | 0.2 | 12 | 15.3 | 15.4 | 1.5 | 1.8 | 0.5 | 0.4 |
| திருகோணமலை | 0.6 | 0.8 | 4.6 | 4.7 | 0.4 | 0.7 | 7.3 | 7.2 | 2.6 | 3.0 | .1 | 1.8 |
| குருநாகல் | 10.4 | 10.3 | 0.7 | 0.8 | 1.1 | 0.8 | 5.6 | 5.8 | 1.5 | 1.4 | 3.2 | 2.7 |
| புத்தளம் | 3.4 | 3.7 | 1.8 | 0.7 | 0.5 | 0.3 | 4.5 | 4.7 | 0.9 | 1.1 | 1.8 | 2.0 |
| அனுராதபுரம் | 3.9 | 4.9 | 0.5 | 0.4 | 0.2 | 0.1 | 1.1 | 4.0 | 0.4 | 0.6 | 0.7 | 0.7 |
| பொலநறுவை | 1.6 | 2.2 | 6.3 | 0.3 | 0.2 | 0.2 | 1.4 | 1.6 | 2.2 | 0.1 | - | 0.2 |
| பதுளை | 4.0 | 4.0 | 1.4 | 2.0 | 17.8 | 15.8 | 2.4 | 2.5 | 1.9 | 1.6 | 3.9 | 3.0 |
| மொனறாகலை | 1.9 | 2.3 | 0.2 | 0.3 | 0.9 | 1.1 | 0.4 | 0.5 | 0.2 | 0.2 | 0.2 | 0.4 |
| இரத்தினபுரி | 5.8 | 6.2 | 0.7 | 1.0 | 9.6 | 10.4 | 0.9 | 1.3 | 0.9 | 0.9 | 1.4 | 0.9 |
| கேகாலை | 6.0 | 5.4 | 0.8 | 0.8 | 5.3 | 5.6 | 3.5 | 3.3 | 0.7 | 0.4 | 1.1 | 0.5 |

மூலம்: குடித்தொகை மதிப்பு, இலங்கை, 1981:118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2.4

மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் தொகை 1827-1981

| வருடம் | தமிழ் | முஸ்லீம் | சிங்களவர் |
|---|---|---|---|
| 1827 | 69.5 | 30.2 | - |
| 1901 | 55.0 | 37.3 | 5.2 |
| 1921 | 53.3 | 39.8 | 4.6 |
| 1946 | 50.3 | 40.2 | 5.8 |
| 1953 | 48.2 | 39.4 | 11.5 |
| 1963 | 72.2 | 23.4 | 3.4 |
| 1971 | 70.8 | 23.7 | 4.6 |
| 1981 | 72.0 | 23.9 | 3.4 |

மூலம்: குடித்தொகை மதிப்பு, இலங்கை 1827-1981

மேலும் 1959ஆம் ஆண்டு தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் சிபார்சின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதியில் அம்பாறை எனும் புதியதொரு தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அம்பாறைத் தேர்தல் தொகுதியில் ஒரு சிங்களப் பிரதிநிதி வெற்றிபெற்று பாராளுமன்றம் சென்றதும் இதன்வழி கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு சிங்களப் பிரதிநிதி முதன் முதலில் பாராளுமன்றம் செல்வதற்கு வழியேற்பட்டதும் இனவிகிதாசாரத்தில் ஏற்பட்ட பாரிய மாற்றத்தைப் பிரதிபலிப்பன. கல்லோயாத்திட்ட அறிமுகத்தினைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டம் என ஒன்று உருவாக்கப்பட்டதும் அதனைத் தொடரும் பத்து ஆண்டு காலத்துள் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்கு ஏதுவாக இந்த சிங்களத் தேர்தல் தொகுதி அமைந்ததும் குடியேற்றத்திட்டங்களின் இனவிகிதப் பாதிப்புக்கள் தொடர்பான ஆய்வுகளில் பிரதான கவனம் பெறக்காணலாம். (வரதராஜன் 1992 :44) இன்றைய கணிப்புக்களின்படி 78.5 சதவீதமான நிலப்பரப்பு சிங்களவர் வாழும் நிலப்பரப்பாக உள்ளதுடன் இதன் பெயரும் 'திகாமடுல்ல' என சிங்களப் பெயராக்கப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடலாம். இதனைப் பின்வரும் அட்டவணை புலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2.5

அம்பாறை மாவட்டத்தில் மக்கள் தொகை (1963 - 1981)

| வருடம் | தமிழ் | முஸ்லீம் | சிங்களம் |
|---|---|---|---|
| 1963 | 23.8 | 46.5 | 29.4 |
| 1971 | 22.8 | 46.6 | 30.2 |
| 1981 | 20.4 | 41.5 | 37.8 |

மூலம் : குடித்தொகை மதிப்பு, இலங்கை 1963 - 1981

கிழக்குமாகாணத்தில் பரவலாக பல குடியேற்றத்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்ட மற்றுமொரு மாவட்டம் திருகோணமலையாகும். மீனவக் குடியேற்றங்கள், விவசாய நீர்ப்பாசனக் குடியேற்றங்கள், புனிதபிரதேசக் குடியேற்றங்கள், ஆயுதப்படையினர் குடியேற்றங்கள் என இங்கும் தொடர்ச்சியாகப் பல குடியேற்றத் திட்டங்களின் உரு வாக்கம் நடந்துள்ளன. சுதந்திரத்தைத் தொடர்ந்து 1947-1949ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிகழ்ந்த கந்தளாய் - பதவியாக் குடியேற்றத்திட்டங்கள் முக்கியமானவை. இவற்றின் வழி இம் மாவட்டக் குடித்தொகையின் இன விகிதாசாரத்திலும் வெகுவான மாற்றங்கள் எற்பட்டது. குடித் தொகை மதிப்பீடுகளினடியாக நோக்கும் போது 1881-1981 காலப் பகுதியில் தமிழர்களின் தொகை 510 சதவீதத்தினால் அதிகரித்திருக்க சிங்களவரின் தொகை 9045 சதவீதத்தினால் அதிகரிப்பைக் காட்டியது. 1881 இல் மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 4.2 சதவீதமாக மட்டும் இருந்த சிங்களவரின் தொகை 1981இல் 33.4 சதவீதமாக உயர்ந்தது. கூடவே 1971இல் இம்மாவட்டத்தில் 'சேருவல' என்ற தேர்தல் தொகுதி மூலம் சிங்களப் பிரதிநிதி ஒருவர் தெரிவாகும் நிலை ஏற் பட்டமையும் இங்கு நிகழ்ந்த மாற்றத்தினைத் துல்லியமாகப் பிரதி பலிக்கின்றது எனலாம். இதனைப் பின்வரும் அட்டவணை புலப் படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2.6

திருகோணமலை மாவட்ட மக்கள் தொகை (1881-1981)

| வருடம் | தமிழர் | முஸ்லீம்கள் | சிங்களவர் |
|---|---|---|---|
| 1881 | 64.8 | 25.9 | 4.2 |
| 1891 | 66.4 | 25.0 | 1.3 |
| 1901 | 60.0 | 24.0 | 4.2 |
| 1911 | 57.9 | 32.6 | 3.8 |
| 1921 | 54.5 | 37.7 | 4.4 |
| 1946 | 44.5 | 30.6 | 15.3 |
| 1953 | 44.7 | 34.1 | 18.2 |
| 1963 | 39.1 | 30.8 | 24.6 |
| 1971 | 37.7 | 31.8 | 29.0 |
| 1981 | 36.4 | 24.0 | 33.4 |

மூலம்: குடித்தொகை மதிப்பு, இலங்கை 1881-1981

வடமாகாணத்தில் குடியேற்றத்திட்டங்களும், இனவிகித மாற்றங்களும் வவுனியாவை மையமாகக் கொண்டவை. இந்தவகையில் 1956இல் பாகற்குளத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட குடியேற்றத்திட்டம் குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் 595 தமிழ்க் குடும்பங்களும் 463 சிங்களக் குடும்பங்களும் குடியமர்த்தப்பட்ட போதிலும் பிற்காலத்தில் இங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் துரத்தப்பட்டதைத் தொடர்ந்து, இக் குடியேற்றத் திட்டம் தனிச்சிங்களக் கிராமமாகியமை இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும். குடியேற்றத்திட்டங்களினாலும், இத்தகைய இன அசைவுகளாலும் இங்கு இன விகிதாசாரத்தில் பாரிய மாற்றங்களை அவதானிக்கலாம். 1881-1981 காலப் பகுதியில் தமிழர்களின் எண்ணிக்கை 312 சதவீதத்தினால் மட்டும் அதிகரிக்க சிங்களவர்களின் தொகை 1265 சதவீதத்தினால் அதிகரிக்கக் காணலாம். இதன் விளைவாக 1881இல் வவுனியா மாவட்ட மொத்த குடித்தொகையில் 7.4 சதவீதமாக இருந்த சிங்களவர் தொகை 1981இல் 16.6 சதவீதமாக அதிகரிக்க தமிழர் நிலை 84.6 சதவீதத்திலிருந்து 76.4 ஆக வீழ்ச்சியடைவதை பின்வரும் அட்டவணை புலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை: 2.7

வவுனியா மாவட்ட மக்கள் தொகை (1881-1981)

| வருடம் | தமிழர் | முஸ்லீம்கள் | சிங்களவர் |
|---|---|---|---|
| 1881 | 84.6 | 7.3 | 7.4 |
| 1891 | 84.1 | 7.3 | 7.7 |
| 1901 | 84.0 | 7.1 | 7.4 |
| 1911 | 81.1 | 7.1 | 10.7 |
| 1921 | 80.1 | 7.2 | 11.8 |
| 1946 | 73.4 | 9.3 | 16.6 |
| 1953 | 73.7 | 8.6 | 16.9 |
| 1963 | 75.1 | 7.2 | 17.5 |
| 1971 | 75.8 | 6.6 | 16.8 |
| 1981 | 76.4 | 6.8 | 16.6 |

மூலம்: குடித்தொகை மதிப்பு, இலங்கை 1881-1981

இலங்கையின் குடித்தொகையில் 'இந்தியத் தமிழர்கள்' என்றவகைப் பாட்டுக்குள் அடக்கப்படும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குடித் தொகைப் பரம்பலும் நிலையற்றதாக அமைவது கவனத்திற்குரியது. பெருந்தோட்டப் பயிர்களின் அதிகரிப்பு, வீழ்ச்சி, பொருளாதார மந்தம், யுத்தம் எனப் பலகாரணங்களினால் தளம்பல் நிலை ஏற்பட்டபோதும், அவ்வப்போது இயற்றப்பட்ட பல்வேறு சமூக நல சட்டங்களின் விளை வாக குடியேற்றத்தொகையில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டது எனலாம். குறிப்பாக மருத்துவச் சட்டம் (1912), கல்வி சகாயச் சட்டம் (1920), தொழிலாளர் சட்டம் (1921), சம்பளச் சட்டம் (1927) என்பவற்றின் விளைவாக இந்த அதிகரிப்பு அவதானிக்கப்படும். (ஜெயசிங்க, 1969: 12)

எனினும் சுதந்திர இலங்கையில் தோட்டத் தொழிலாளரின் குடியியல் உரிமையைப் பறிக்கும் சட்டம் நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்து அவர்களின் குடித்தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது மட்டு மன்றி ஒரு வித தளம்பல் நிலையும் ஏற்பட்டதனை பின்வரும் அட்ட வணை புலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2.8

மொத்த சனத்தொகையில் இந்தியரின் விகிதம் (1911-1981)

| ஆண்டு | மொத்த சனத் தொகை | மொத்த இந்திய சனத்தொகை | விகிதம் |
|---|---|---|---|
| 1911 | 4,106,400 | 5,31,000 | 12.9 |
| 1921 | 4,448,600 | 6,02,700 | 13.6 |
| 1931 | 5,306,400 | 8,18,500 | 15.4 |
| 1946 | 6,657,300 | 7,80,600 | 11.7 |
| 1953 | 8,097,900 | 9,74,100 | 12.0 |
| 1963 | 10,582,000 | 1,123,000 | 11.6 |
| 1971 | 12,689,900 | 1,174,000 | 9.3 |
| 1981 | 14,850,000 | 8,25,233 | 5.6 |

மூலம்: 1981 சனத்தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம்.

1964 சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம், 1974இல் சிறிமாவோ - இந்திரா காந்தி ஒப்பந்தம் எனக் காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட உடன் படிக்கைகளின் வழி ஏற்பட்ட குடியகல்வு இந்த நிலமைக்குக் காலானது எனலாம்.

இவற்றினைவிட நீர்கொழும்பு போன்ற சில பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களை இன ரீதியாகப் பிரித்தலில் உள்ள சிக்கல் நிலையும் இங்கு கவனிக்கப்பட வேண்டும். இங்கு இன ரீதியாகப் பிரித்தல் என்பது இங்கு வாழ்கின்ற மக்களின் எண்ணப் பாங்கிற்கு ஏற்ப வேறுபடக் காணலாம். பெரும்பாலான அரச தரவுகளில் சிங்கள இனத் தொகுதியில் தான் இவர்களில் பலரும் அடக்கப்பட்டாலும் இவர்களை இவ்வாறு பிரித்தலின் பொருத்தப்பாடுபற்றி வினா எழுப்பப்படும். இங்கு சிங்களம் பேசும் தமிழர், தமிழ் பேசும் சிங்களவர் என புதிய பண்புக் கோலங் களைக் காண முடியும். இங்கு மொழியைவிட மதம் பொருத்தமான இனப்பிரிப்புக் குறியீடாகக் கொள்ளக்கூடியது என்பது இப்பிரதேச கள ஆய்வின் முடிவாகும் (யசோதா, 1992:38). இவ்வாறாக இலங்கையின் இன அமைவில் வேறுபட்ட மாற்றங்களை நாம் அவதானிக்கலாம்.

இலங்கையின் வேறுபட்ட இந்த இன அமைவுக் கோலங்களும், அவற்றில் ஏற்படும் மாற்றங்களும், கல்வி சார் நடவடிக்கைகளிலும் பிரதிபலிக்கக் காணலாம். ஒரு முகப்படுத்தப்பட்ட கல்வி அமைப்பில் இன அமைவின் தன்மைக்கேற்பவே கல்வி மொழி, பாடசாலை வசதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன தீர்மானிக்கப்படுகின்ற நிலையில் இன விகித மாற்றங்களின் பாதிப்பும் பெரியளவில் உணரப்படுகின்றது. மொழிவழி இனக்குழுக் கள் எதிர்நோக்கும் இப்பிரச்சினையினை விளங்குவதற்கு இலங்கை யின் இன்றைய கல்வி நிர்வாக அமைப்பு தொடர்பான தெளிவான விளக்கம் இன்றியமையாதது.

கடந்த காலத்தில் இலங்கையின் கல்வி அமைப்பு கண்ட மாற்றங் களும் அதன் இன்றைய நிலைமையும் தொடரும் பகுதியிலே விளக்கப் படுகின்றது.

## இலங்கையின் கல்வி நிர்வாக அமைப்பு

ஒரு முகப்படுத்தப்பட்ட கல்வி மரபுகளை மிக நீண்டகாலமாக கொண் டிருந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அக்காலக் கல்வி மையங் களாக ஆசிரியரின் இல்லங்களும், மதநிலையங்களும் விளங்கின. குறித்த உயர் வகுப்பினருக்கே ஏட்டுக் கல்வி வாய்க்கப் பெற்றது. ஏனையோர் குலவழித் தொழில் கல்வியினை வழி வழி பேணி நின்றனர். அன்றைய காலத்து சமூக அமைப்பின் தேவைகளை நிறைவு செய்வன வாகவும், நிலவிய சமூக அமைப்பினை பேணுகின்றனவாகவும் அக்கால கல்விச் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

நீண்டகாலமாக நிலைபெற்ற இந்த கல்வி மரபு குடியேற்ற நாட்டாதிக்கக் காலத்தில் கண்ட மாற்றங்கள் பலவாகும். ஏறத்தாழ 450 ஆண்டு கால குடியேற்ற நாட்டாதிக்க ஆட்சியிலே வர்த்தக விருத்தியும், சமயம் பரப்புதலுமே இவர்கள் கல்வி அமைப்பின் பிரதான அடிப் படைகளாகவிருந்தன. மேலும் கல்விப் பொறுப்பை சமயக் குழுக் களிடமும், தனியாரிடமும் ஒப்படைத்தனர். கல்வி அரசின் கட்டுப் பாட்டின் கீழ் இருத்தல் வேண்டும் என்ற குடியேற்றவாத ஆட்சி யாளரின் கொள்கை முதலில் வந்து சேர்ந்த போர்த்துக்கேயர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாத போதிலும் ஒல்லாந்தர் காலத்தில் ஓரளவு சாத்தியப்பட்டது. படிப்படியாக மேலைக் கல்வி இங்கு பரவியது. அரசாங்கப் பாடசாலைகள், சமயக் குழுப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என இயங்கிவந்த பாடசாலை முறைகளை கட்டுப் படுத்தி ஒருங்கிணைந்து நிர்வகிப்பதற்கான அமைப்புகள் படிப்படியாக பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தோற்றம் பெற்றன.

இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத் தசாப்தத்தில் நிலவிய பாடசாலை வகைகளை பின்வரும் அட்டவணைகள் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை: 2:9

உதவி பெறும் ஆங்கிலப் பாடசாலைகள் 1900-1915

| விபரங்கள் | 1900 | 1905 | 1910 | 1915 |
|---|---|---|---|---|
| 1. அமெரிக்கன் மிஷன் | 5 | 9 | 8 | 10 |
| 2. பப்திஸ்த மிஷன் | - | - | - | 1 |
| 3. பௌத்த பாடசாலைகள் | 12 | 14 | 17 | 21 |
| 4. லண்டன் திருச்சபை | 46 | 53 | 51 | 21 |
| 5. மொகமடியன் | 2 | 3 | 1 | 1 |
| 6. பிறிஸ்பெரெரியன் | 2 | 2 | 4 | 4 |
| 7. தனியார் & சைவ | 14 | 20 | 20 | 25 |
| 8. றோமன் கத்தோலிக்க | 34 | 42 | 48 | 55 |
| 9. வெஸ்லியன் மிஷன் | 27 | 30 | 28 | 27 |

மூலம் : பொதுப் போதனை பணிப்பாளர் நிர்வாக அறிக்கை 1900-1915

அட்டவணை: 2:10

உதவி பெறும் ஆங்கில-சுயமொழிப் பாடசாலைகள் 1900-1915

| விபரங்கள் | 1900 | 1905 | 1910 | 1915 |
|---|---|---|---|---|
| 1. அமெரிக்கன் மிஷன் | - | - | 2 | 1 |
| 2. பப்திஸ்த மிஷன் | 1 | 1 | - | 1 |
| 3. பௌத்த பாடசாலைகள் | 1 | - | 1 | 4 |
| 4. லண்டன் திருச்சபை | 5 | 6 | 8 | 8 |
| 5. இஸ்லாமியப் பாடசாலைகள் | - | - | 1 | 1 |
| 6. தனியார் | - | 1 | 7 | 6 |
| 7. குவாக்கர் | - | 1 | 1 | 4 |
| 8. றோமன் கத்தோலிக்கம் | 1 | 1 | 6 | 7 |
| 9. வெஸ்லியன் மிஷன் | 8 | 8 | 8 | 9 |

மூலம் : பொதுப் போதனை பணிப்பாளர் நிர்வாக அறிக்கை 1900-1915

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை: 2:11

உதவி பெறும் சுயமொழிப் பாடசாலைகள் 1900-1915

| விபரங்கள் | 1900 | 1905 | 1910 | 1915 |
|---|---|---|---|---|
| 1. அமெரிக்கன் மிஷன் | 124 | 119 | 121 | 116 |
| 2. பப்திஸ்த மிஷன் | 24 | 21 | 29 | 33 |
| 3. பௌத்த பாடசாலைகள் | 129 | 141 | 208 | 325 |
| 4. லண்டன் திருச்சபை | 267 | 272 | 344 | 333 |
| 5. கன்சபாப | - | 7 | 4 | 1 |
| 6. இஸ்லாமியப்பாடசாலை | 2 | 4 | 3 | 5 |
| 7. மாநகரசபை | - | - | - | 1 |
| 8. தனியார் & சைவ | 51 | 146 | 257 | 262 |
| 9. குவாக்கர் | - | 14 | 20 | 20 |
| 10. றோமன் கத்தோலிக்க | 301 | 350 | 399 | 428 |
| 11. இரட்சணிய சேனை | - | - | 2 | 5 |
| 12. வெஸ்லியன் மிஷன் | 272 | 289 | 312 | 298 |

மூலம் : பொதுப் போதனை பணிப்பாளர் நிர்வாக அறிக்கை 1900-1915

அட்டவணை: 2:12

அரசுப் பாடசாலைகள் 1900-1915

| விபரங்கள் | 1900 | 1905 | 1915 |
|---|---|---|---|
| 1. ஆங்கிலப் பாடசாலைகள் | 4 | 5 | 5 |
| 2. இரு மொழிப்பாடசாலைகள் | 12 | 18 | 20 |
| 3. சுயமொழிப் பாடசாலைகள் | 484 | 801 | 734 |

மூலம் : பொதுப் போதனை பணிப்பாளர் நிர்வாக அறிக்கை 1900-1915

இலங்கைக் கல்வி நிர்வாக வரலாற்றில் ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேலாக நிலைபெற்றிருந்த பொதுப் போதனைத் திணைக்களம், தேசிய. பாடசாலை அமைப்பினுக்கு வழிவகுத்தது. கூடவே அரசாங்கம் கல்வி சேவைகளில் நேரடியாக ஈடுபடுவதற்கும், சமயசார்பற்ற பாடசாலை களின் தோற்றத்திற்கும் இது காலாகியது.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்துப் பாடசாலை அமைப்பின்கீழ் வகுப்பு அடிப்படையிலும் கல்விமொழி, சமய அடிப்படையிலும் நிலவியபாரபட்ச நிலைகளை நீக்கி கல்வியில் சமசந்தர்ப்பத்தை உறுதி செய்தல் எனும் நோக்கில் சுதந்திரத்திற்கு பின்னைய கல்வி அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்படியான மாற்றங்களைக் கண்டது. கல்வியை சனநாயகப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்ட மத்திய பாடசாலைகளின் விரிவாக்கமும், இலவசக்கல்வியைத் தாய்மொழியில் வழங்கலும் பிரதான மாற்றங்களுக்குக் காலாகின. காலப்போக்கில் நாட்டின் கிராமப்புற மாணவர்கள் வரை, சமூக அசைவுக்கான அடிப்படை நிறுவனமாக கல்வி அமையுமாறு கல்வியமைப்பு விரிவு கண்டதோடு உறுதியான நிர்வாக கட்டமைப்பும் அமையப் பெற்றது.

அரசாங்கப் பாடசாலைகள் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகள் பயிற்சிப் பாடசாலைகள் என இருந்த இலங்கையின் கல்வி அமைப்பானது அறுபதுகளில் நிகழ்ந்த அரசுப் பொறுப்பேற்றலைத் தொடர்ந்து பெருமளவிற்கு அரசாங்கப் பாடசாலைகளைக் கொண்ட ஓர் அமைப்பாக மாற்றம் கண்டது. தனியார் பாடசாலைகள் என்ற பெயரில் மிகக் குறைந்தளவு பாடசாலைகளையே காணமுடிகின்றது. பாடசாலைகளை அரசு பொறுப்பேற்பதற்கு முன்னைய காலத்தும், பின்னைய காலத்தும் காணப்பட்ட பாடசாலைகளின் வகைப்பாட்டினை பின்வரும் அட்டவணைகள் வெளிப்படுத்தும்.

அட்டவணை: 2.13

அரசு பொறுப்பேற்பதற்கு முன்னைய நிலை

| | பாடசாலை | மொத்தம் |
|---|---|---|
| 1. | ஆங்கில அரசுப் பாடசாலைகள் | 328 |
| 2. | உதவி பெறும் ஆங்கிலப் பாடசாலைகள் | 328 |
| 3. | அரசு சிங்கள & தமிழ்ப் பாடசாலைகள் | 3593 |
| 4. | உதவி பெறும் சிங்கள & தமிழ்ப் பாடசாலைகள் | 2870 |

மூலம் : Department of Census & Statistics 1958:91

அட்டவணை: 2.14

அரசு பொறுப்பேற்ற பின்நிலை

| | பாடசாலை | மொத்தம் |
|---|---|---|
| 1. | அரச பாடசாலைகள் | 5660 |
| 2. | தனியார் உதவிபெறும் பாடசாலைகள் | 67 |
| 3. | தனியார் உதவி பெறாத பாடசாலைகள் | 50 |
| 4. | பிரிவேனாக்கள் | 206 |
| 5. | தோட்டப் பாடசாலைகள் | 866 |
| 6. | ஏனைய பாடசாலைகள் | 24 |

மூலம் : Department of Census & Statistics 1965:254

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடங்களை அரசு பொறுப்பேற்றதனைத் தொடர்ந்து தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை அருகியது மட்டுமன்றி அரசினதோ தனியாரினதோ பொறுப்புக்குள் அமையாத தோட்டப் பாடசாலைகள் எனத்தனித்ததோர் வகையின் தோற்றத்தினையும் அவதானிக்க முடிகின்றது.

இன்றைய அமைப்பில் கல்வி நிர்வாக இயந்திரத்தின் ஒருமுகப் படுத்தப்பட்ட செயற்பாடு இலகுவான நடைமுறைகளைக் கண்டது. முன்னைய அரசில், மத்திய அரசு மட்டத்தில் கல்வி, உயர்கல்வி அமைச்சின் கீழ் மூன்று இராஜாங்க அமைச்சுக்கள் காணப்பட்டன. இவை கல்விச் சேவைகள், கல்வி, உயர்கல்வி என மூன்று பிரிவுகளுக்குப் பொறுப்பாய் இருந்தன. இவைகளைவிடக் கல்வி அமைச்சருக்கு ஒரு செயலாளரும். ஒவ்வொரு இராஜாங்க அமைச்சர்களுக்கு தனித்தனி செயலாளர்களும் நியமிக்கப்பட்டனர். கல்விச்சேவைகள் செயலாளரின் கீழ் பரீட்சைத் திணைக்களமும், கல்விநூல் வெளியீட்டுத் திணைக் களமும், தேசிய நூலக சபையும் அமையப் பெற்றுள்ளது. கல்விச் செயலாளரின் கீழ் தேசிய கல்வி நிறுவகமும் மாகாணப் பணிப்பாளர் களும் இடம்பெறுவர். இதேபோல் உயர்கல்விச் செயலாளரின் கீழ் பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவும் அதன் கீழ் பல்கலைக் கழகங்களும், தொழில்நுட்பக்கல்லூரிகளும் இடம்பெற்றன. (குலசேன & செல்வராஜா. 1991)

இவ்வாறு எண்பதுகளில் கல்வி நிர்வாகக் கட்டமைப்பானது தொண்ணூறுகளில் மாற்றங்களுக்கு உட்பட்டதைக் காண முடிகின்றது. தற்போது கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கள் என இரண்டு அமைச்சுக்கள் உள்ளன. உயர் கல்வி அமைச்சின் கீழ் பல்கலைக்கழக கல்வி நிர்வகிக்கப் படுகின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்ற அமைப் பின் கீழ் பல்கலைக்கழக நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயற்பாடுகளில்தான் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கல்வி அமைச்சரின் கீழான புதிய நிர்வாக அமைப்புக்கள் இம் மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றன. இன்றைய இலங்கையின் கல்விநிர்வாக அமைப்பின் முதன்மை அமைப்பாக தேசிய கல்வி ஆணைக்குழு அமைகின்றது. கல்வி தொடர்பான கொள்கை வகுப்பிற்கு இது பொறுப்பாக உள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட 12 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு 1992 முதல் செயற்படுகின்றது.

இவ்வாணைக்குழுவின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பணியில், தேசிய கல்வி நிறுவகம் (NIE) என்ற அமைப்பு செயல்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. தேசிய கல்வி ஆணைக்குழுவினதும் தேசியகல்வி நிறுவகத் தினதும் தலைவராக ஒருவரே நியமிக்கப்பட்ட நிலையில் கொள்கை, நடைமுறைகளுக்கிடையில் முரண்பாடு தவிர்க்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்க அம்சமாகும். தன்னாதிக்கம் கொண்ட அமைப்பாக தேசியக் கல்வி நிறுவகம் செயற்பட்ட போதும் கல்வி அமைச்சினால் நியமிக்கப் படும் அங்கத்தவர்களைக் கொண்டே இதன் செயற்பாடு, கலைத் திட்டமேம்பாடு, பாடங்கள் தயாரிப்பு என்பன உள்ளது. இவற்றிற்கென ஒரு பணிப்பாளர் சபையின் கீழ் பிரதம நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர், 50 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், ஆய்வு அனுபவங்களுடன் கூடிய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்களைக் கொண்டதாக இவ் அமைப்புக் காணப்படுகின்றது. இவ்வமைப்புக்குப் புறம்பாக கல்வி அமைச்சின் கீழ் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் தொடர்ந்து செயற்படுகின்றது. ஆனால் முன்னைய ஆக்கப் பணிகளுக் குப் பதில் வெறுமனே பதிப்பக உரிமையை வழங்கும் ஒரு பணி மட்டுமே தற்போது அதற்குரியதாகும்.

புதியகல்விச் சீர்திருத்த ஆலோசனைகளின் அடியாக தேசிய மதிப்பிடலுக்கான சபை என்ற தன்னாதிக்க அமைப்பு ஒன்றும் 2000மாம் ஆண்டில் உருவாக்கப்பட்டுள்ளமையை காணலாம். பாடசாலை சார் கல்வி மதிப்பீடு மட்டுமன்றி, நாட்டின் பல்வேறு தேர்வுக்கும் இவ் அமைப்பே இன்று பொறுப்பாகும். மதிப்பிடல் சார்ந்த ஆய்வுகள், பின்னூட்டல்களின்வழி அதன் தரத்தை உயர்த்துதலும், விரிவாக்கலும் இம்மதிப்பிடல் சேவையின் முக்கிய பணிகளாகும்.

மேலும் ஆசிரியர்கல்வியை ஒருங்கிணைக்கும் வகையில் ஆசி ரியர் கல்விக்கான தேசிய அதிகாரசபை (National Authority for Teacher Education) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. நிலவும் பல்வேறுவகையான ஆசிரியர் கல்விக்கான கலைத் திட்டம், நடைமுறைகள் என்பவை இச் சபையின் கீழ் மீளமைக்கப்படவுள்ளன.

இதுபோலவே நாட்டின் தொழில் நுட்பக் கல்வியை ஒருங்கிணைக் கும் வகையில் தொழில் நுட்ப அதிகார சபை என்ற அமைப்பும் உருவாக்கப்பட்டு அதன் கீழ் நாட்டின் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங் களின் செயற்பாடுகள் நெறிப்படுத்தப்படுகின்றன.

மாகாணசபைக் கல்வி அறிமுகத்தினைத் தொடர்ந்து மாகாணப் பணிப்பாளர்களின் கீழ் பிராந்தியக் கல்வி அதிகாரிகளும், அவர்களின் கீழ் கல்விக் கொத்தணிகளும், கொத்தணிகளின் கீழ் பாடசாலைகளுமாக இந்த நிர்வாக அமைப்பு அமைந்திருந்தது. பல்வேறு நடைமுறைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்களின் விளைவாக இந்த அமைப்பில் இருந்த கொத்தணி முறை கைவிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

மாகாண கல்வி முறைமை பற்றிய உயர் கல்வி அமைச்சு செயலாளரின் அறிக்கை அதன் அரசாங்கங்களின் பிரதான பணிகள் பற்றிய விளக்கத்தினைத் தருகின்றது. இவ்வறிக்கையின்படி (பீரிஸ், 1991) மாகாணக் கல்வி அமைச்சானது மாகாணக் கல்விச் செயலாளரினால் தலைமை வகிக்கப்படும், அவரது செயற்பாடுகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட மாகாணக் கொள்கை வழிகாட்டலுக்கு ஏற்புடையதாக அமைய வேண்டும். மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு மாகாணக் கல்விச் செயலாளர் தேசியக் கொள்கை, மாகாணக் கொள்கை மீதான விளக்கங்களை அறிவிப்பார். தேசியகொள்கையின் அடிப்படையிலேயே இங்கு மாகாணக்கொள்கைகள் வகுக்கப்பட்டு பணிப்புரைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றமை குறிப்பான கவனத்தைப் பெற வேண்டிய அம்சமாகும். நிதி தொடர்பாக நோக்குகையில் மாகாணப் பாதீட்டினைத் தயாரித்தல், தேவையான இடங்களில் பிரதேசக் கல்வி அலுவலர்களிற்கான நிதி ஒதுக்கீட்டினை வழங்கல், மாகாணக் கல்விக்கான சகல பொதுநிதிகளையும் கட்டுப்படுத்தல் என்பன மாகாணக் கல்வி அமைச்சின் கடமைகள் ஆகின்றன. இங்கு மத்திய அரசின் கல்வி அமைச்சு மாகாணங்களுக்கென ஒதுக்கும்தொகையையும் அவை பகிர்ந்து கொள்ள முடியும் என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். இச் செயற்பாடுகளின் மையமாகும் மாகாணக் கல்வித் திணைக்களம் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நிர்வகிக்கப்படுகிறது. இவர் மாகாணத்தின் திட்டமிடல், அமுலாக்கல், முகாமைத்துவம், ஆற்றுப்படுத்தல் முதலிய கல்வி நிகழ்ச்சிகளுக்குப்பொறுப்பானவராக விளங்குகின்றார். இவருக்கு உதவியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் செயற்படுவார்.

மேலும் மாவட்ட மட்டத்தில் வலயங்களாக கல்வி அமைப்பானது பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயமும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (DDE) ஒருவரினால் நிர்வகிக்கப்படும். இவர்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எனவும் அழைப்பர். (Zonal Directors) எடுத்துக்காட்டாக யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் என ஐந்து வலயங்களாக வகுக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. இவ்வலயப் பணிப்பாளரை ஒருங்கிணைப்பவராக மேலதிகக் கல்விப்பணிப்பாளர் விளங்குகின்றார். இவர் மாகாண மட்டத்திலான தொடர்புகளைக் கவனிக்கின்றார். மேலும் மாவட்டத்திலுள்ள வளங்கூடிய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தேசியப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் எனும் அந்தஸ்தினைப் பெறுகின்றன. இவை மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் (தணிகாசலம்பிள்ளை, 1999: 76-79).

இனஅமைவுக்கும் கல்விசார் அதிகாரக் கட்டமைப்பிற்கும் உள்ள தொடர்பினை தொகுத்து நோக்குகையில் சிறுபான்மையினரின் கல்வி சார் பாதிப்புக்களை குடியேற்ற நாட்டாதிக்க காலம் முதல் காண முடிகின்றது. தனி அரசுகளாகக் காணப்பட்ட இனத்துவக் குழுக்கள் ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட போது கல்வி உட்பட அனைத்து விடயங்களும் மையநிலை அரசின் கீழானது. ஆரம்பகாலத்து இனத்துவக் குழுக்களிடையே காணப்பட்ட சமபல பிரதிநிதித்துவ நிலை மாற்றம் கண்டபோது எண்ணிக்கைகுறைந்த குழுக்களின் பிரதிநிதித்துவ அளவிலும் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்ததை அவதானிக்கலாம். காலப் போக்கில் இன அமைவு விகிதத்திற்கேற்பவே பிரதிநிதித்துவம் என்றான போது மையநிலை அரசின் தீர்மானங்கள் பெரிதும் பெரும்பான்மை இன முடிவுகளானது.

சுதந்திரத்திற்கு முன்னைய கால டொனமூர் அரசியல் அமைப்பின் கீழேயே தனிச் சிங்கள மந்திரிசபை அமைந்திடக் காணலாம். சுதந்திர இலங்கையின் அரசுகளிலும் இதே நிலை தொடரும். தமிழ்ப் பிரதி நிதிகளாக ஒரு சிலர் செயற்பட்ட போதும் அவர்கள் பெரும்பான்மை இன ஆட்சியாளர்களுக்கு இசைந்துபோகும் அடிப்படையிலேயே பிழைத் திருக்க வேண்டியிருந்தது. இத்தகு நிலையிலேயே பெரும்பான்மை - சிறுபான்மை என்ற இன அமைவின் தாக்கங்களை இலங்கையின் கல்வி அமைப்பிலும் உணரத்தக்க நடவடிக்கைகள் பலவும் மேற்கொள்ளப் படக் காணலாம்.

தமிழ்ப் பிரதிநிதிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பெரும்பான்மை இன முடிவுகளாகக் கல்வி அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட பல மாற்றங் களை இலங்கையின் கல்வி வரலாறு முழுமையும் காணமுடியும். பாடசாலைகள் தேசிய மயமாக்கல், மலையகப் பாடசாலைகளுக்கு இலவசக்கல்வி மறுப்பு, தமிழ்மாணவர்களின் உயர்கல்வியில் தரப் படுத்தல், பள்ளிக்கூட வள ஒதுக்கீடுகளில் பாரபட்சம் என பல முடிவு களிடை இன மேலாண்மைப் போக்கினை அவதானிக்கலாம்.

மைய நிலை அதிகாரங்களை மாகாண நிலையில் பகிர்ந்து கொள்வதாக பின்னாளில் ஏற்படுத்தப்பட்ட மாகாணக் கல்வி அமைச்சு நிலமைகளாலும் மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்ததில்லை. கொள்கை வகுப்பு, மூலநிதி ஒதுக்கீடு என்பன மையநிலை அரசின் கைகளிலேயே இருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்ற நிலைமையில் மாகாண மட்டத்தில் அடிப்படை மாற்றங்களைக் காணும் வல்லமை ஏற்படவில்லை. இவ்வாறான நிலைமைகளின் கீழ் வடகிழக்கிலுள்ள தமிழ் மாணவர்கள் எதிர்கொண்ட பாதிப்புக்களை விட ஒப்பீட்டு ரீதியில் மலையகத் தமிழ் மாணவர்களும் வடகிழக்கு, மலையகத்திற்குப் புறம்பான இலங்கையின் வடமேற்குப் பிரதேசத்தில் குறிப்பாக நீர்கொழும்பு, சிலாபம், கற்பிட்டி போன்ற பிரதேச தமிழ் மொழி மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வி வாய்ப் புக்களை இழத்தல், கல்வி வாய்ப்புக்களில் பாரபட்சம் என்பதற்கு மேலாக கல்வி மொழி மாற்றலின்வழி இனத்துவ அடையாளத்தையே இழத்தல்வரை இந்தப் பாதிப்புக்களைக் காணமுடியும். இலங்கையின் இனமுரண் வரலாறு, கல்வி மொழிக் கொள்கைகள் என எதிர்வரும் இயல்களில் இந்நிலைமைகள் பற்றி விரிவாக ஆராயப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 3

# இன முரண் வரலாறு

இனத்துவ அடிப்படையில் அடுக்கமைவுகளைக் கொண்ட நாடுகளுக்கு உதாரணமாக இலங்கையை இன்றைய ஆய்வாளர் குறிப்பிடுவர் (Sharma 1988:27) இந்த நிலைமையானது சுதந்திர இலங்கையில் குறிப்பாக கடந்த காலங்களில் இன முரண்பாடுகள், வன்முறை, வெறுப்பு, இனங்களுக் கிடையிலான இசைவின்மை என துல்லியமாக வெளிப்படக் காணலாம். உலகின் பண்பாட்டுப் புலங்களில் சிறுபான்மை இனக் குழுக்கள் தொடர்பான ஆய்வு அனுபவங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளை இலங்கையின் இன முரண்பாட்டிலும் காணமுடியும். கடந்த காலத்து இனஉறவு சார் ஆய்வுகள் கண்ட முடிவுகள் இன்றைய இலங்கையின் இனத்துவ வரலாற்றினையும், முரண்நிலை வளர்ச்சியையும் விளங்கு வதில் துணையாகின்றன. மேலைப் புலங்களில் இன அடிப்படையில் நுண்ணறிவு ஆளுமை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பல ஆய்வுகள் இன்று சர்ச்சைக்குரியனவாகி நிராகரிக்கப்படுகின்றன. (Jorgensen, 1973: 33-40) அவ்வாறே பண்பாட்டு அடிப்படையிலான முற்சாய்வான கோட்பாட்டு உருவாக்கங்களும், சிறுபான்மை இனங்கள் தொடர்பான நடத்தைகளை ஆங்கிலேய நிலைநின்று காண்பதும் உரிய முடிவுகளை எய்துவதற்கு சிறுபான்மையினர் பிரச்சினை தொடர்பாக திட்டமான நெறிமுறைகள் காணப்படாமையும், இன்றைய ஆய்வுலகின் கவனத் தைப் பெறும் பிரதான அம்சங்களாகும். பல சந்தர்ப்பங்களில் இனத்துவ ஆய்வுகளில் ஆய்வாளரின் இன மூலம் முற்சாய்வான முடிவுக்கு இட்டுச் சென்றமையும் இன்று சிறப்பான கவனத்தைப் பெறுகின்றது.

இந்நிலையில் சமுதாய உளவியல் அறிஞரான றப்பபோட் (Rappaport, 1981:25) குறித்தவாறு "ஒன்றுக்கு மேற்பட்ட முரண் விழுமியங் களுக்கிடையில் இன்றைய நடத்தையியல் விஞ்ஞானிகள் இனமுரண் நிலைகளை விளங்க வேண்டியுள்ளமையை" இந்த ஆய்வு சிறப்பாக கருத்தில் கொள்கின்றது. இனவாத அடிப்படையிலான கல்விக் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விளங்க இது அவசியமாகின்றது. இவ்வாறு இனங்காணப்பட்டுள்ள முரண் விழுமிய நிலைகளை வகைப்படுத்திக் காண்கையில் முதலில் Emic, Etic என உளவியலாளர் ஒரு பண்பாட்டு ஆய்வினை பிரித்துக் காண்கின்ற அகவய-புறவய முரண்நிலையைக் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாகின்றோம். ஆய்வுக்குள்ளாகும் புலம் சார்ந்த மக்கள் தம் பண்பாட்டு நிலையினை எவ்வாறு காண்கின்றார்களோ அக்கண் கொண்டு நோக்கும் அணுகுமுறையே அகவய நோக்கு எனப் படுகின்றது. அவ்வாறன்றி ஆய்வாளர் ஒருவெளியாராக நின்று விளங்க முற்படுதலே புறவய நோக்கு எனப்படுகின்றது. *(பக்தவத்சல பாரதி, 1990:149)*

இந்த வகையில் இலங்கையின் பிரதான முரண் நிலைக்குள்ளான இரண்டு இனங்களும் தத்தமது இனங்கள் பற்றி அகவயமான வியாக் கியானங்களை, கருத்தாக்கங்களை கொண்டுள்ளமையைக் காணலாம். இக் கருத்தாக்கங்கள் இந்த இனங்களின் சமூக பண்பாட்டு வரலாற்றின் வழி தீர்மானமாவன. தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய ஆய்வு ஆதாரங்களினடியாக பெருங்கற்பண்பாட்டுக்கால புராதனத்தைச் சுட்டு வதுடன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான இலக்கிய நாகரீக வளம் கொண்ட ஒரு மொழிப் பண்பாட்டுக் குழுமமாக அமைகின்ற மையைக் காணலாம். திராவிட பாரம்பரியத்துள் தம்மை இனம் காணும் தமிழர்கள் பண்பாட்டு ரீதியில் மட்டுமன்றிச் சமூக, அரசியல் அடிப் படையிலும் மேலாண்மை செலுத்திய ஒரு குழுவாகத்தன்னைக் காண்கின்றது. தென்னிந்திய சேர சோழ பாண்டியர்களுடனான அரசியல் தொடர்புகளையும், ஈழத்து அரசியல் வரலாற்றில் அதனை நிறுவுதலில் முனைந்து நிற்கின்றமையையும் காணமுடியும். குடியேற்ற நாட்டா திக்கத்திற்கு முன் இலங்கையில் தமிழர் செறிந்து வாழும் யாழ்ப் பாணத்தில் அரசு ஒன்று இருந்தமை ஆய்வுகளின் வழி இன்று நிறுவப் படுகின்றது (Pathmanathan. S., 1978). இதற்கும் முன்னதாக சோழர் ஆட்சியின் தடயங்களைக் காணும் இன்றைய தொல்லியல் ஆய்வுகள் *(புஸ்பரத்தினம். ப 1993)* தொன்மையான ஒரு தமிழர் ஆட்சியியல் வரலாற்றினைக் காண்பிப்பதில் ஈடுபடக் காணலாம். 'சிங்கை நகர்' என அன்று அழைக்கப்பட்ட புராதன வடமராட்சிப் பகுதியை இனங்காட்டி அக்காலத்திற்கும் பின்னைய யாழ்ப்பாண அரசுக்கும் இடையில் தொடர்ச் சியை நிரப்புதலில் இந்த ஆய்வு முயற்சிகள் பெரிதும் கவனம் செலுத்து கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *மொழி பண்பாட்டு விழிப்புணர்வு என்பது ஆரம்பத்தில் சமயத்துறையில் ஏற்பட்ட விழிப்புணர்வாகவே அமைந்து, காலப்போக்கிலே குடியேற்ற நாட்டாதிக்கத்துக்கு எதிரான கலாசார தன்னுறுதிப்பாடாக அமைந் திருந்தது (கைலாசபதி, 1983: 191)*

பின்னர் இதுவே சிங்கள இன மேலாதிக்கத்திற்கு எதிரான தமிழர் பண்பாட்டு மறுதலிப்புக்களாகவும், தமிழர் பண்பாட்டு முதன்மை முன்வைப்புக்களாகவும், இன்று தமிழ் தேசிய உருவாக்க அடிப்படை களாகவும் வளர்ச்சி காண்கிறது.

மொழி, இனம், மதம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்ட சிங்கள கருத்தமைவின் இன்றைய வடிவம் சமகால மேற்தட்டு வர்க்க கலாசாரத்தின் இன்றியமையாத ஒரு பகுதியாக உள்ளது. சமகால சிங்கள உணர்வு, மிகப் பழைய வரலாறு கொண்டது. உடலியல் பண்புகளால் ஒரு குழுவை இன்னொரு குழுவிடம் இருந்து பிரிக்கும் கருத்தில் இனம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது மிகச் சமீபத்தில் என்பதனைக் கருத்தில் கொள்வதுடன் தமிழிலும் சிங்களத்திலும் 'Race' என்ற பதத்திற்குச் சமமான திருப்திகரமான ஒருசொல்லை கண்டுபிடிப்பது சிரமமாக உள்ளமையையும் இங்கு கருத்தில் கொள்ளலாம்.

> *உண்மையில் சிங்கள உணர்வு இன்றைய நிலையை அடைதற்கான தீவிர மாற்றத்தை அடைந்தது குடியேற்ற நாட்டாதிக்க காலப்பகுதியில் தான்*

என குணவர்த்தனா *(1983 : 63)* குறிப்பிட்டவாறு தமது குழு உணர்வை வளர்த்தெடுக்கும் போது, குடியேற்ற நாட்டாதிக்க காலத்திலேயே உருவாக்கப்பட்ட சமூக வர்க்கங்கள், தம்மிடமிருந்த பழைய மரபுகளைப் பின்பற்றிய அதே அளவில் ஐரோப்பிய சிந்தனையையும் பயன்படுத் தியமையை கவனிக்க வேண்டும். ஐரோப்பிய புலத்து இனவாத கொள் கைகள், தூய இனமாக்கல்கள் என்பன முதன்மை பெற்றிருந்த ஒரு கால கட்டத்தில்தான் இந்த சிங்கள விழிப்புணர்வு அலைகளும் எழுந் தமையைக் காணமுடியும்.

வில்லியம், ஜோன்ஸ் போன்ற ஐரோப்பிய மொழியியலாளர்கள் ஆசிய, ஐரோப்பிய மொழிகளிடை செய்த ஆய்வுகளின் விளைவாகத் தோன்றிய 'ஆரியர்' என்ற கொள்கை உருப்பெற்றதும், பின் மக்ஸ் முல்லரின் வழி இக் கோட்பாடு பிரபலமாகி சிங்களவர்களைத் தொற்றிக் கொண்டதும் கவனிக்கத்தக்கது. எனினும் ஆரிய இனம், ஆரிய இரத்தம், ஆரிய கண்கள், தலைமுடிபற்றி இலக்கணம்பற்றி பேசும் மொழியி யலாளன் ஒரு குற்றவாளியாகவே கணிக்கப்படுவான் என்றும், 'ஆரிய'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல் இனங்கள் பற்றி குறிப்பிடவிஞ்ஞானரீதியாக முற்றிலும் பொருத்தமற்றது எனவும் மக்ஸ் முல்லரே பின்னால் கூறியிருந்த போதிலும், ஆரிய இனக் கோட்பாடு தொடர்ந்து தன் செல்வாக்கினை நிலைநாட்டியது. பின்னாளில் ஆரியக் கொள்கைக்கு எதிரான வகையில் 'கால்வெல்ட்' திராவிட பதத்தை அறிமுகம் செய்த பின் மேலும் தீவிரமாக ஆரியவாதம், சிங்கள இன மேலாதிக்கத்துள் கலந்து இலங்கை யின் இனமுரணாக வளர்ச்சி நிலையையடையக் காணலாம்.

> இலங்கைத் தீவு ஒரு பௌத்தபள்ளி, அதன் அங்கத்தவர்கள் சிங்கள பௌத்தர்கள் மட்டுமே என்ற தம்மதீபக் கோட்பாடே இன்று இங்கு வாழும் பெரும்பான்மை மக்களின் மத்தியிலே வளர்த்தெடுக்கப்பட்டு வரும் ஒரு நோயாக, இரு சமூகத்தினரிடையே நிலவிவரும் நீண்டகால இனப்பிரச்சினைக்குரிய கருவாக இருந்து வருவதனைக் காணலாம். *(கிருஸ்ணராசா, 1986:115)*

குறிப்பாக பௌத்தமறுமலர்ச்சியின் காவலன் எனப்படும் அநகாரிக தர்மபாலாவின் செயற்பாடுகள் இலங்கையின் வரலாற்றில் அடி ஆழத் தில் வேர்விட்டிருந்த சிங்கள பௌத்த இனவாதத்திற்கு நீர் ஊற்றி புத்துயிர் அளிப்பதாக அமைந்தமையை இன்றைய சமூகவியல், மானுட வியல் ஆய்வுகள் இனங்காட்டுகின்றன. (Obeyesekera, 1970:46)

ஐரோப்பியரின் ஆதிக்கத்தின் கீழ் பௌத்தம் தன் மேனிலையை இழந்து கிறிஸ்தவ மதம் வேகமாக பரவிய போது பௌத்தம் தன்னைப் புதுப்பிக்கவும், ஈடு கொடுக்கவும் என எடுத்த முயற்சியே பௌத்த மறுமலர்ச்சி என்ற பெயரில் அமைந்தது. காலத்தால் இதற்கு முந்தியதாக யாழ்ப்பாணத்தில் எழுச்சி பெற்ற நாவலர் கால சைவ மறுமலர்ச்சி தன் பண்பாட்டு எல்லைகளுக்குள்ளேயே நிற்க, பௌத்த மறுமலர்ச்சியோ தன் எல்லைகளைத் தாண்டிச் சென்றது. இலங்கையின் பல்லின, பன்மத, பன்மொழி தன்மைகளைப் புறக்கணித்து வெறியூட்டியது. பௌத்த சிங்களவர் தவிர ஏனையோர் அனைவரும் இலங்கைக்கு அன்னியர் என்பது போன்ற அவர் தந்த கருத்தியலானது கிறிஸ்தவ எதிர்ப்பு, முஸ்லீம் எதிர்ப்பு, தென்னிந்திய தமிழ் எதிர்ப்பு என நீண்ட காழ்ப் புக்களோடு மறைமுகமாக இலங்கைத் தமிழர் எதிர்ப்பு என்பதில் முடிந்தது. சிங்கள பௌத்த மக்களை மண்ணின் மைந்தர் எனத் தழுவியும், துட்டகைமுனுவை சிங்கள பௌத்த இலட்சிய புருஷராக வர்ணித்தும், ஐதீகங்களிலிருந்து சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைக் கட்டியெழுப்பும் பணியில் வெற்றி கண்டார் அநகாரிகதர்மபாலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிங்களபௌத்த' போன்ற அவரது தொடர்பியல் சஞ்சிகைகளின் வழி இந்த வாதம் வெற்றிகரமாக வளர்க்கப்பட்டது.

இந்தக் கருவிற்கு உரமூட்டி வளர்க்கும் திரிபுவாத அரசியல் வாதிகளுக்கு துணைபோகும் தொல்லியல்திணைக்கள அறிஞர்கள், வரலாற்றாசிரியர்கள் இந்தத் தம்மதீபக் கோட்பாட்டின் வழி சிங்கள பௌத்த பண்பாட்டு இன முதன்மையை வளர்த்து, தமிழ் இன விரோத நிலைகளை நிலை நாட்டலையும் இன்றைய ஆய்வுகள் விமர்சிக் கின்றனர். உலக அங்கீகாரம் பெற்ற விஞ்ஞான முறையியல் வழியான மானுடவியல், சமூகவியல் ஆய்வுகளைக் கூட இனவாத நோக்கில் அரசியலாக்கும் இலங்கையின் போலி அறிவியல் (Pseudo Interlectual) குழுமங்களை இவ்வாய்வுகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரக் காணலாம். (சண்முகலிங்கன், 1997;2004)

'வரலாற்றைக் கற்கமுன் வரலாற்று ஆசிரியனைக் கற்க வேண்டும்' என்னும் எட்வேட் ஹாலட் கார் (Carr, 1961:24) இன் கருத்து நிலை முன் வைப்புடன் கலாநிதி சிறிவீரா போன்ற வரலாற்று ஆசிரியர்கள் முன்னைய இனவாத கருத்து நிலைகளை மறுதலிக்கின்றமையை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஆதிக் குடியேற்ற கால படைத் தலைவர்களிடையிலான சிறிய சண்டைகளை பின்னாலே வந்த வரலாற்று ஆசிரியரும், மத எழுத் தாளரும் பாரிய இன-மத போர்களாக மிகைப்படுத்தி ஆரிய-திராவிட முரணாக வளர்த்த விதத்தை துட்டகைமுனு எல்லாளன் கதைத் திரிபு களின் வழி நிறுவுவார் சிறிவீரா (1985:19) மகாவம்சம், பூஜாவளி போன்றவற்றின் நம்பகம் பின்னைய ஆய்வுகளில் சந்தேகத்திற்கு இட மின்றி மறுதலிக்கப்பட்டுள்ளது. ஆரிய சிங்கள ஒருமைப்பாட்டுக்குப் பதில் திராவிட பண்பாட்டு ஒற்றுமைகளை, தொன்மை நிலையில் வலியுறுத்தும் இன்றைய பெருங்கற் பண்பாடுபற்றிய தொல்லியல் ஆய்வு முடிவுகளும் இக்கருத்து நிலைக்கு ஆதரவாக அமைகின்றன. தெரணியகல, (1979) ரகுபதி, (1987) போன்ற தொல்லியல் அறிஞர்களின் அண்மைய ஆய்வுகள் இவ்வுண்மையை வெளிப்படுத்திய போதும் அவை பெருமளவில் சமூக அங்கீகாரம் பெறாத நிலையிலேயே காணப் படுகின்றன. உண்மையான இன பண்பாட்டு வரலாறுகளை எழுது வதில், காண்பதில் உள்ள இந்த அகவய முற்சாய்வு அம்சமானது, இலங்கையின் இனமுரண் வளர்ச்சியில் கணிசமான பங்கினை வகிப் பதனை ஏனைய பண்பாட்டியல் ஆய்வாளர்கள் பலரும் சுட்டியுள்ள மையைக் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் தொடர்ந்த சமூகமயமாக்கலில் இந்த ஐதீகங்களும் முற்சாய்வுகளும் வளர்க்கப்பட்டமையே உண்மை வரலாறாகும். முன்னர் குறிப்பிட்டவாறு இத்தகு ஐதீகங்களின் வழியான இனமுரண் செயல் வடிவம் காண குடியேற்ற நாட்டாதிக்க காலமே வாய்ப்பான சூழலை தந்தமையை இன்றைய அரசியல் வரலாற்று ஆய்வுகளின் வழி துணிய முடியும். இந்தவகையில் குறிப்பாக பிரித்தானியராட்சிக்காலம் நாட்டின் இனவாத சிந்தனைக்கும், செயற்பாடுகளுக்கும் களம் அமைத்த காலப் பகுதியாக பதிவு பெறுகின்றது.

ஆரம்ப நாட்களில் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் கீழ் தாழ்நிலப் பிரதேசங்கள் ஆட்சி செய்யப்பட்ட வேளை, பிரித்தானி யருக்கு எதிராக நாட்டின் சகல பகுதிமக்களும் போராடத்துணிந்தனர். வரிப்பண அளவீடு தொடர்பாக மதுரையிலிருந்து வரவழைக்கப்பட்ட தமிழ் வரிசேகரிப்பாளருக்கு எதிராக அன்று நடந்த போராட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாகவே அமைந்தமையினால் வெற்றி யும் கண்டது வரலாறு. (விடுதலை தரும் ஒன்றியம் 1982 : 21-22) எனினும் தொடர்ந்து தம் பிரித்தாளும் கொள்கை வழி சாதி, இனம், பிரதேசம் என நிலவிய சகல வேறுபாடுகளையும் பயன்படுத்தினர். இவற்றை எதிர்த்துக் கிளம்பிய தேசிய இயக்கங்களைக் குலைப்பதற்கு மேலும் மேலும் மக்கள் மத்தியிலான பிளவுகளை அதிகரிக்கும் வழி முறைகளையே சட்ட வடிவில் தந்தனர்.

இன அடிப்படையிலான தேர்தல் தொகுதிகள் என்ற பிரித்தானிய அரசியல் யாப்புக் கொள்கை இந்த வகையில் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலக் கல்வி வழி மேம்பட்ட உயர்குழாத்தினரும், அக்காலத்து முகிழ்த்த தேசியமறுமலர்ச்சி இயக்கத்தினரும், இன அடிப்படையிலான பிரிவுகளை எதிர்த்த போதும் பிரித்தானிய அரசு தன் இன அடிப்படை யிலான கொள்கையை நிலை நாட்டியமை குறிப்பிடத்தக்கது. எனினும் மக்கள் மத்தியில் இனவாத உணர்வு நிலைக்கு இடமில்லாதமையை இக்கால அரசியல் நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. 1912ம் ஆண்டு படித்த இலங்கையர் பிரதிநிதிக்கான தேர்தலில் சிங்களவரான மாக்கஸ் பெர்னான்டோவை எதிர்த்து போட்டியிட்ட தமிழரான சேர் பொன். இராமநாதன் வெற்றி பெற்று இலங்கையர் பிரதிநிதியாக தெரிவு செய்யப் பட்ட சம்பவம் அக்கால நிலைமைக்கு தகுந்த எடுத்துக் காட்டாகும். இந்நிலைமை பிரித்தானியர்களுக்கு பெரும் சவாலாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (விடுதலை தரும் ஒன்றியம் 1982, 21-22) 1915 இல் சிங்கள மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் இடையில் கம்பளையில் ஏற்பட்ட கலவரம் தீவிரமடைந்த வேளை பிரித்தானிய அரசு தனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெதிரான சதியென நம்பி சிங்கள தலைவர்களைக் கைது செய்து இராணுவ சட்டத்தை அமுலாக்கியதும், அவ்வேளை சிங்களத்தலை வர்களுக்காக நியாயம் கேட்ட சேர் பொன்.இராமநாதன் உலகயுத்த சூழலையும் பொருட்படுத்தாது இங்கிலாந்து சென்று சமரசம் கண்டதும் இலங்கையின் பிரதான இனங்களுக்கிடையே நிலவிய இணக்கத்தை மேலும் உறுதிப்படுத்திய நிகழ்வெனலாம். அன்றைய இலங்கையின் பரிபாஷையில் சிங்களவரும், தமிழரும் நாட்டின் இரு பெரும் இனங் களாகவே கருதப்பட்டமையும் இங்கு கவனத்திற்குரியது. ஏனைய சிறிய இனக்குழுக்களே அவ்வேளை சிறுபான்மைகள் எனப்பட்டன. தமிழர் களுக்கும், சிங்களவருக்குமிடையிலான இக்கால இணக்கத்தின் ஓர் அடையாளமாக 1919இல் நிறுவப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரசைக் குறிப்பிடலாம். தேசிய மட்டத்திலான போராட்டங்களை முன்னெடுத்த இவ்வமைப்பின் தலைமைப்பொறுப்பு சேர் பொன். அருணாசலம் அவர்களுக்கே வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நித்தியானந்தன், 1987:237)

தமிழ் சிங்கள தலைவர்களிடையே நிலவிய இந்த இணக்கப்பாடு பிரித்தானிய ஆட்சியாளரின் விருப்பத்துக்குரியதாக இருக்கவில்லை. தமக்கெதிரான போராட்டமாக அது வளர்ச்சி கண்டுவிடாதபடி தமது செயற்பாடுகளையும், தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொண்டனர். பிரித்தானிய குடியேற்ற அரசு ஆரம்பகாலத்தில் தமிழர்களுக்கு சலுகை களை வழங்கிவந்தது. ஆயினும் படிப்படியாக சிங்களவர் சார்பாக செயற்படத் தொடங்கியது. இதன் காரணம் முதலாம் உலகயுத்தத்தின் பின் இந்தியத் துணைக் கண்டத்தில் தோன்றிய விடுதலை இயக்கத் தினால் இலங்கைத் தமிழரிடையே தோன்றிய தேசிய உணர்வை பிரித்தானியக் குடியேற்ற அரசு விரும்பவில்லை. (தமிழீழ மக்கள் மன்றம், 1988:63)

தேசிய காங்கிரஸ் என்பது சுதந்திர போராட்டத்துக்கான ஓர் அமைப்பு என்பதற்கு மேலாக, தேசிய ஒருமைப்பாடு, இன ஒருமைப் பாடு என்பவற்றுக்கான ஒரு சாதனமாகவும் கருதப்பட்டது. எனினும் இந்தக் கருத்தியல் நிலை பெற முடியவில்லை. 1922ஆம் ஆண்டளவிலே சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடுகளும், தமிழர் தம்மைச் சிறு பான்மை இனம் எனக் கருதும் நிலையும் ஏற்பட்டது. சிங்களவர்-தமிழர் ஒற்றுமையின் உச்சமாக சேர் பொன்.அருணாசலத்தின் தலைமை கருதப்பட்டமை போன்றே இந்த இனங்களின் எதிர்காலத்திற்கான பிரிநிலை கோடாக 1921இன் பிற்பகுதியில் சேர் பொன்.அருணாசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியகாங்கிரசுடனான உறவை முறித்தமையும் அமைகின்றது. 1921இல் அருணாசலம் தமிழ் மகாசபையை ஆரம்பித்த பின்னர், அனைத்து சமூகங்களுக்குமான குரலாக இருந்த தேசியகாங்கிரஸின் தன்மை இழக்கப்பட்டது.

மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவம் தொடர்பான சர்ச்சையே இந்த பிளவுக்கு அடிப்படையாக அமைந்தபோதிலும் அக்கால பிரித்தானிய ஆட்சியாளர்களின் மதிநுட்பமான போக்கினாலேயே தமிழ் சிங்கள உறவுப்பிணைப்பு உடைக்கப்பட்டதென்பதே பொருத்தமானது. இந்த வகையில் ஆள்பதியான மனிங்கின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கன. ஒருபுறம் அருணாசலத்தின் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும் பாணியில் நடந்து கொண்டார். மறுபுறம் சிங்கள தலைவர்கள் விருப்பப்படி அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கினார். சிங்களவர் திருப்திகாண, தமிழர் அதிருப்தியுற்றனர். தேசிய காங்கிரஸ் அதன் கரு நிலையிலேயே உடைந்தது, இதற்கான பெருமை மனிங்கையே சாரும். *(சுசில் சிறிவர்த்தனா, 1985:280)*

பிரித்தானியத் தந்திரோபாயங்களிற்குப் பலியாகாமல் திடசித்தத்துடன் சிங்களத் தலைவர்கள் நடந்து கொண்டிருந்தால் இவ்வாறான இந்தப் பிளவுகளை தவிர்த்திருக்க முடியும் என்பது அரசியல் வரலாற்றாசிரியர்களின் முக்கியமான அவதானிப்பாக இன்று வெளிப்படக் காணலாம். அவ்வாறே பிரித்தாளும் தன்மைக்கு சிறுபான்மையினரில் ஒருசாரார் ஆதரவு தந்தமையும் இனவாத முரண்வளர துணையாகியது எனலாம். *(நித்தியானந்தன், 1989:245)*

இலங்கையின் இனமுரண் வளர்ச்சியில் அடுத்த முக்கிய கால கட்டமாக டொனமூர் அரசியல்திட்டக் காலப்பகுதியைக் குறிப்பிடலாம். 1924 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மனிங் அரசியலமைப்பு இரண்டு பிரதான இனங்களுக்கும் சமமான பிரதிநிதித்துவத்தினை தருவதாக அமைந்திருந்த இரண்டாண்டு காலத்துள் மீண்டும் தமிழரை அரசியல் சக்தியற்றவராக்கும் டொனமூர் ஆணைக்குழுவின் வருகை அமைந்தது. ஏழு வாரங்கள் மட்டும் இலங்கையில் தங்கி விசாரணை செய்து திரும்பிய டொனமூர் குழுவினர் சிங்களவரின் கையில் அதிக அரசியல் அதிகாரங்களை ஒப்படைக்கக் கூடியவகையிலும் தமிழர் அரசியலில் எந்தவித அதிகாரங்களும் அற்றவராக இருக்கக் கூடிய வகையிலும் அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கினர். (Mendis, 1948:25)

டொனமூர் அரசியலமைப்பு சிங்களவருக்குக் கிடைத்த 'ஓர் எதிர்பாராத அதிஸ்டம்' என ஜி.ஜி.பொன்னம்பலம் கருத்து வெளியிட்டார். 1924ஆம் ஆண்டு அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கு உயிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த ஒரு சொத்துப் போன்றே இருந்தது என அவர் குறிப்பிட்ட கருத்தும் இங்கு கவனத்துக்குரியது. ஜேன் ரஸல் எனும் அறிஞரின் கூற்றுப்படி டொனமூர் அரசியலமைப்புத் தந்த சர்வசன வாக்குரிமை ஏனைய சமுதாயங்களை விட சிங்கள சமூகத்தினருக்கு அதிகளவிலான பிரதிநிதிகளைத் தருவதாகவே அமைந்தது. (பாரதி, 1993:9)

டொனமூர் அரசியலமைப்பின் வழி இலங்கை அரசியலில் மக்கள் பங்கேற்பு என்ற நல்ல அம்சம் அறிமுகமான போதும் நாட்டின் இன உறவுக்குப் பாதகமானதாக இவை அமைந்தன. ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போல சனத் தொகையில் 2/3 ஆக இருந்த சிங்கள நிலையை உறுதிப்படுத்துவதாகவே இந்த மாற்றம் அமைந்தது. 1936இல் அமைந்த சிங்களவர்களையே முழுமையாகக் கொண்ட அமைச்சரவையுடன் தமிழர் வாழ்வின் அரசியல் அவலங்கள் தொடங்கப் பெறுவதாகக் கூறமுடியும். (கீதபொன்கலன், 1987:48)

இலங்கை அரசியல் அரங்கில் மற்றுமொரு முக்கிய காலகட்டமாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவினால் உருவாக்கப்பட்ட சிங்கள மகாசபை அமைந்தது. சிங்கள மகாசபை உறுப்புரிமை சிங்களவருக்கே என்ற வரையறையுடன் சிங்கள சமுதாயத்தில் முதன்மையான இன வாதகட்சியாக அது தன்னை இனம்காட்டிக் கொண்டது.

இக்காலகட்டத்தில் பாரம்பரியத் தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுவிய செயற்பாடுகளும் தீவிரமடைந்தன. வரண்ட வலைய குடியேற்றத்திட்டம் என்ற பெயரில் டி.எஸ்.சேனநாயக்காவின் நடவடிக்கைகள் தமிழரைத் தமிழ் பிரதேசங்களிலேயே சிறுபான்மையினராக்கியதுடன், தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் துண்டாடப்படவும் வழிவகுத்தது. டொனமூர் திட்டத்தின் முன்பு 2:1 என்ற விகிதத்தில் இருந்த பெரும்பான்மை சிறுபான்மை விகிதம் 5:1 என்றானது. சிறுபான்மையினர் பிரச்சினைகளைத் தீர்க்கும் முன்னைய திட்டக் குறைகளைப் போக்கும் எண்ணத்துடன் 1946இல் அறிமுகமான சோல்பரி அரசியல்யாப்பு காலனித்துவ ஆட்சியமைப்பிலே சுதந்திர ஆட்சிக்கு மாறுதற்கான அரசியல் யாப்பாகக் கருதப்பட்டது. 9 மாகாணப் பிரிவுகளிலும் சனத்தொகை மற்றும் பிராந்திய அடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை அறிமுகமானது.

1948இல் ஒருதுளி இரத்தம் சிந்தாமல் இலங்கையும் தனது சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. (Wilson, 1974:189)

குடியேற்ற நாட்டாதிக்கத்தினைத் தொடரும் சுதந்திர இலங்கையானது, ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவ்வாட்சியமைப்பில் சுமுகமான சிறப்பான செயற்பாடு இன்று இழக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுதலும், பண்பாட்டுபன்மை நிலைக்கான போராட்டங்களும், அதன் உச்சநிலை விளைவான பிரிவினைக்கான குரல்களும் இன்றைய அரசியல் சமூக சூழ்நிலையாகும். இவ்வாறான ஒரு முரண்நிலை திடீரென விளைந்த ஒன்றல்ல.

> எந்த ஒரு பல்லின தேசத்திலும் சுதந்திரத்தின் பின் அதனைச் சார்ந்த அரச இயக்கங்கள் கையாளுகின்ற தந்திரோபாயங்கள் கருத்து நிலைகளின் வழியே அத்தேச இனங்களின் ஆட்சி அனுபவங்கள் தீர்மானமாகும். (Arasaratnam, 1986:1)

குடியேற்ற நாட்டாதிக்க விடுதலை, பொதுமக்கள் மத்தியில் கலாசார விழிப்புணர்வாக வெளிப்படுவது உலகின் பல நாடுகளினதும் பொது வான பண்பாக அமைய, இலங்கையில் இப்போக்கு இன, மத வேறுபாடு இன்றி ஆரம்பத்தில் காணப்பட்டாலும் காலப்போக்கில் சிங்களபௌத்த வாதத்தின் செல்வாக்குக்கு உட்பட்டதாக, இன மேலாண்மைச் சட்ட முன் வைப்புக்களுடன் முனைப்புப் பெறக் காணலாம்.

> முழுமையான தேசியவாதமாகவோ அன்றி விடுதலை இயக்கமா கவோ மலராது பெரும்பான்மை இனத்தினால் கலாசார மதக் கட்டுக் கோப்புக்குள் அடக்கப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பானது பின்னர் சிறுபான்மையினருக்கு எதிரான வகுப்பு வாதமாக சீரழிந்தது

என குமாரிஜெயவர்த்தனா (Kumari Jayawardena, 1983:9) அவர்கள் குறிப்பிடுகின்றமை இங்கு மனதில் கொள்ளத் தக்கது.

குடியேற்ற நாட்டாதிக்கத்தில் உருவான பொருளாதாரத் தன்மை, இனம், மதம், பிரதேசம் சார்ந்த நோக்கங்கள் என்பவற்றுடன் பிரித் தானிய குடியேற்ற நாட்டாதிக்கம் விட்டுச் சென்ற அரசியல் அமைப்பின் அகச்செயற்பாடுகளையும் விளங்கிக் கொள்வதன் மூலமே, இந்தப் பெருந் தேசிய வகுப்புவாத நிலைமையை விளங்கிக் கொள்ள முடியும். முதலா ளித்துவ வளர்ச்சிக்குரிய இயக்க சக்திகள் குன்றிய பொருளாதாரமானது பெருந்தொகையானோருக்கு மிகச் சிறிய வாய்ப்புக்களையே தந்தது.

> சிறிய பண்ட உற்பத்தி, பரவலாகும் பண்டமயமாக்கல் இவையோடு தொடர்பான குட்டி முதலாளிகளின் படிகளை தடைப்படுத்திய சுழற்சி, வணிக மூலதன ஆதிக்கம் போன்றவற்றின் தாக்கங்களே குடியேற்ற ஆதிக்க எதிர்ப்பின் புறநிலை சார் தளங்கள், இந்தப் புறநிலையோடு ஓர் அங்கமாக இருத்தல், கிறிஸ்தவ மயமாக்கல் இயக்கம், இவற்றுடன் இலங்கைச் சமூகத்தின் இன, மத வேறுபாடுகளையும் சேர்த்துத் தன் இயக்க ரீதியான பரிணாமத்தை சிங்கள பௌத்த தேசியவாதம் உரு வாக்கிக் கொண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என சமுத்திரன் (1983:28) குறிப்பிடுகின்றமை இங்கு கவனத்திற்குரிய தாகும். இவ்வாறாக பொருள் முதல்வாத அடிப்படையில் இலங்கையின் இன உறவு சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான நீதியான எடுத்துரைப்பு களை முன்வைத்த இடதுசாரி அரசியல் வாதிகள் பலரும் இனவாத அரசியலின் முன், நின்று பிடிக்க முடியாமல் போனமையும், இவர்களில் கணிசமானோர் இனவாதிகளுடன் சமரசமாய் ஒடுங்கிப் போனமையும் இலங்கையின் இனத்துவ வரலாற்றில் துரதிஷ்டமான பதிவுகளாகின் றமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

அநகாரிகதர்மபாலாவின் பிரச்சாரங்களிலேயே விதைக்கப்பட்டு விட்ட தமிழர் எதிர்ப்புணர்வும், சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக் கமும் சுதந்திர அரசின் முதல் பாராளுமன்றத்திலேயே தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. தேசியக்கொடியை வடிவமைத்தலுடனேயே இந்த இனவாதத்தின் விஸ்வரூபத்தைக் காணமுடியும். சிங்கத்தில் இருந்து சிங்களவர் தோன்றினர் என்ற கருத்தியலின் வழி குடியேற்ற நாட்டாதிக்கத்திற்கு முன்னைய சிங்கள ஆட்சியாளர்கள் சிங்கத்தைத் தமது சின்னமாகக் கொடியில் தாங்கியிருந்தனர். சுதந்திர இலங்கையின் தேசிய கொடியாகவும் அதனையே சிங்களத் தலைவர்கள் முன்மொழிந் தனர். இதனைக் கடுமையாக எதிர்த்த தமிழ்த் தலைவர்கள் இலங்கை யின் சகல இனத்துவக் குழுக்களுக்குமே பொதுவான சிவனொளிபாத மலையை கொடியின் சின்னமாக்க வேண்டினர். (கீதபொன்கலன், 1987:147) சிறுபான்மையினரின் இந்தக் கோரிக்கை அடியோடு நிராகரிக் கப்பட்டமை இலங்கையின் இனத்துவ உறவுகளில் விழுந்த குறியீட்டு நிலை அதிர்ச்சியாக அமைந்தது எனலாம். இவ்வாறான அதிர்ச்சிகள் தொடர்ந்து சிறுபான்மை மக்களின் அனுபவம் ஆக்கப்படும். தமிழர் களை கள்ளத் தோணிகளாகக் காணும், அரசியல் அந்தஸ்து அற்றவர் களாக்கும் செயற்பாட்டின் தொடக்கப் புள்ளியாக இலங்கையின் முதல் பாராளுமன்றத்திலேயே இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வாக் குரிமையைப் பறிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டமையைக் காணலாம். இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் இடதுசாரி மனப் போக்கு தந்த அச்சத்தோடு ஏற்கனவே முற்றியிருந்த இனவாதமும் ஒருங்கு சேர்ந்தே இந்தக் குடியுரிமைப் பறிப்பு என்பது நிறைவேற்றப் பட்டதனை இன்றைய அரசறிவியல் ஆய்வுகள் தெளிவாக விளக்கி நிற்கின்றன. (Kodikara, 1987:194)

1956இல் சிங்களம் மட்டுமேஉத்தியோக மொழி என்ற சட்டம் இனவாதத்தின் மிகமுக்கியமான வரிவடிவமாக அரங்கேற்றப்படக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். அன்று காலிமுகத்திடலில் பாராளுமன்ற முன்றலில் சத்தியாக்கிரகம் செய்த தமிழ் அங்கத்தினர் அரச சார்புக் குண்டர்களால் தாக்கப்பட்டார்கள். அன்றைய தாக்குதல் பின்னாளில் இன்று வரையான இனவாதத் தாக்குதலுக்கு கட்டியமாக அமைந்தது என்பதனை இன்றைய வரலாறு உறுதிப்படுத்துகின்றது.

இதுபோலவே தமிழர் உரிமைகள் தொடர்பாகப் பல சந்திப்புக்கள், சமரசத் திட்டங்கள், மாநாடுகள் கூடுவதும் இழுத்தடிப்பதும், கைவிடுவதும் தொடர் நிகழ்வுகளாகும். இதன் தொடக்கமாக 1957 இன் பிற்பகுதியில் பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தம் எழுதியமைகாயமுன் கிழித்தெறியப்பட்ட சம்பவத்தினைச் சுட்ட முடியும். பிரதேச சபைகளின் வழி தமிழர்களுக்கு சில அடிப்படை உரிமைகளை வழங்குவதற்கும், குடியேற்றக் கொள்கையில் தமிழர் தனித்துவத்தை பாதிக்காத நடைமுறைகளுக்கும், இந்த ஒப்பந்தத்தில் இடம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்றைய ஐ.தே.க. இன் முக்கிய தலைவரும் இலங்கையின் இனமுரண் விரிசலை திட்டமிட்ட முறையில் பேணியவர் எனவும், விமர்சிக்கப்படுகின்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தன் கண்டியாத்திரை மூலம், நாட்டின் இனமுரண்தீர்வாக வாய்த்த முதல் சந்தர்ப்பத்தை திட்டமிட்ட முறையில் தொலைத்துவிட்ட வரலாறு அடுத்து வரும் ஒவ்வொரு கால கட்டங்களிலும் பிரதிபலித்து நிற்பதனைக் காணமுடியும்.

1956இல் தொடங்கிய பேரினவாத நடவடிக்கைகள் எழுபதுகளில் புதிய பரிணாம வளரச்சியைக் கண்டது. 1972இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்கள் முன்னைய காலத்தில் தமிழர்களுக்கு இருந்த பாதுகாப்புக்களையும் இழக்கச் செய்து அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகள் ஆக்கியது. தமிழர் சிங்களவர்களிடையேயான வெறுப்புணர்விற்கும் பகையுணர்ச்சிக்கும் 72ஆம் ஆண்டு அரசியலமைப்பே முக்கிய காரணமாகும். நிர்வாகத்திலும் சட்ட ஒழுங்கிலும் தமக்கு தாழ்வான இடம் தரப்பட்டதாக தமிழர்கள் கருதுதல் தவிர்க்க முடியாத ஒன்றாகியது (Wilson, 1974:220). இந்நிலையில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் சேர்ந்து தங்களை தனித்த ஓர் அரசியல் எல்லைக்குள் வரையறுத்தன. 'ஈழம்' என்ற தமிழ் அரசுபற்றிய குரல்கள் அதனைத் தொடர்ந்து வலுப்பெறக் காணலாம். இந்தக் குரல் வலுப்பெற அவசர காலச் சட்டம், பயங்கரவாதத்தடைச் சட்டம் எனும் பெயர்களில் அரச யந்திரத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரங்கள் காலாக அமைந்தமையை ஆய்வனுபவங்கள் புலப்படுத்துகின்றன.

இந்த வகையில் தமிழர் கலாசார நடவடிக்கைகளை, கலாசார மையங்களை அழித்து ஒழிக்கும் செயற்பாடுகள் பல நடந்தேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் 1974இல் தமிழர் கலாசார விழா வாக நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின் போது மின்சாரக் கம்பங்களைச் சுட்டு மாநாட்டு நிகழ்ச்சிகளைக் குழப்பி, அந்த குழப்பத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கினாலும் அடிதடி சண்டையினாலும் 4 இளைஞர்கள் உட்பட 11 பேர் மரணமான சம்பவத்தை இங்கு சுட்டலாம். (போறா சமாதானமா 1982:47)

தொடரும் காலப்பகுதியில் நியமவடிவம் பெறாத இனமோதல் கள் நேரடியாகவே ஆளும் கட்சி அரசியல் வாதிகளினதும், அரச இயந்திரங்களினதும் அனுசரணையைப் பெற்று பயங்கரவாதமாக உருவெடுத்த காலப் பகுதியாக 1977ற்குப் பிற்பட்ட காலப் பகுதியைக் குறிப்பிடலாம்.

இனவாத வன்செயல்கள் அதிகரித்ததுடன் 1978ல் 1972ன் அரசியல் யாப்பு நீக்கப்பட்டு புதிய அரசியல்யாப்பு அமுலுக்கு வந்தது. இதன் ஒன்பதாவது வாசகத்தின்படி பௌத்தமதம் அரச மத அங்கீகாரம் பெற்றமை குறிப்பான கவனம் பெறவேண்டியது. இதே அரசியல் யாப்பின் 21(1) வாசகத்தின்படி ஒருவர் எந்த ஒரு தேசியமொழியிலும் கற்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு அமையவில்லை. சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டது.

நாட்டின் இனமேலாண்மையான அரசியல் நடைமுறைகளிடை சில பிரதேசங்களில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு இந்த வாய்ப்பு மறுக் கப்பட்டது மட்டுமன்றி அவர்களது இன அடையாளத்தையே மாற்றும் நிர்ப்பந்தமும் எதிர் கொள்ளப்பட்டது. குறிப்பாக நீர்கொழும்பு, கற்பிட்டி, சிலாபம் போன்ற பகுதிகளில் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வசித்து வரும் தமிழர்கள் படிப்படியாக தம் அடையாளங்களை இழந்து போதலை இன்றைய மானிடவியல் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. (Stirrat, 1988:24) ஒரு புறம் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளை சிங்களப் பாடசாலைகளாக்கும் செயற்பாடும், மறுபுறம் தமிழ்ப் பிள்ளைகள் தொழில் வாய்ப்பு மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக தம் கல்வி மொழியை சிங்களமாகத் தேர்ந்து கொள்வதும் சேர்ந்து இந்த அடை யாளமிழத்தலின் அடிப்படைகளாதலைக் காணலாம். (Sasanka, 1999:25)

எடுத்துக் காட்டாக நீர்கொழும்பு கடற்கரை ரோமன் கத்தோலிக்க தமிழ் மொழி மூலமான பாடசாலையில் மாணவர் வரவுவீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை கீழ்க்காணும் அட்டவணை எடுத்துக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை: 3.1

தமிழ் மொழி மூலமான பாடசாலை மாணவர் வரவு 1989

| வகுப்புகள் | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு 11 | 14 | 18 | 16 | 11 | 6 | 6 | 6 |
| 10 | 12 | 8 | 13 | 10 | 8 | 17 | 15 |
| 9 | 9 | 15 | 11 | 13 | 20 | 17 | 5 |
| 8 | 9 | 20 | 14 | 18 | 21 | 21 | 4 |
| 7 | 34 | 37 | 38 | 27 | 24 | 25 | 11 |
| 6 | 46 | 68 | 58 | 28 | 36 | 24 | 20 |
| 5 | 48 | 66 | 32 | 39 | 31 | 42 | 23 |
| 4 | 95 | 64 | 68 | 53 | 43 | 39 | - |
| 3 | 99 | 66 | 44 | 37 | 38 | - | - |
| 2 | 55 | 71 | 68 | 47 | - | - | - |
| 1 | 33 | 24 | 16 | - | - | - | - |

மூலம்: யசோதா.ப., 1989:64.

இவ்வாறாக மாணவர் வரவு குறைந்து சென்றமையின் விளைவாக ஆண்டு 8 தொடக்கம் 11 வரையான மாணவர்கள் மற்றொரு பாட சாலையான விஜயரட்ணம் மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டனர். அத்துடன் ஆண்டு 5 தொடக்கம் 7 வரையான தமிழ்மொழிமூல மாணவர், சிங்களமொழி மூல மாணவர் என வேறுவேறாகக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் ஆண்டு 3க்கு குறைந்தவை தனியே சிங்கள மொழிமூலமே கற்பிக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தப் புதிய ஏற்பாட்டில் மாணவர் வரவு பின்வருமாறு பிரதிபலிக்கக் காணலாம்.

அட்டவணை: 3:2

தமிழ், சிங்கள மொழி மூலமாணவர்களின் வரவு, 1990

| வகுப்புக்கள் | தமிழ் மொழி மூலம் | சிங்கள மொழி மூலம் |
|---|---|---|
| ஆண்டு 7 | 11 | 10 |
| 6 | 20 | 20 |
| 5 | 23 | 24 |
| 4 | - | - |
| 3 | - | 32 |
| 2 | - | 32 |
| 1 | - | 56 |

மூலம்: யசோதா, ப 1989:65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகு நிலையின் விளைவாக நீர்கொழும்பில் கடந்த காலங்களில் காணப்பட்ட 52 தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் இன்று 51 பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக்கப்பட்டுள்ளன. எஞ்சியிருப்பது விஜயரட்ணம் இந்துக்கல்லூரி மட்டுமே எனும் புள்ளிவிபரம் பண்பாட்டிடை கல்விசார் ஆய்வாளர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கக் கூடியது. (பிரசுரிக்கப்படாத கல்வித் திணைக்கள அறிக்கை, 2001)

இவ்வாறே அண்மைய நேர்காணல் ஒன்றில் பதிவு பெறும் 'ஹசின் பெர்னாண்டோ' வின் வாக்கு மூலத்திடையும் இப்பிரதேச உருமாற்றம் தெளிவாகவே வெளிப்படும்.

"எங்கட ஆக்களுக்கு அந்த நேரம் சொன்னார்கள், நீங்க இந்த இலங்கையில் வாழ்ற தெண்டால் எல்லோரும் சிங்களமாக மாற வேண்டும். அதிலும் நீங்க கடல் தொழில் செய்யிற ஆக்கள் உங்கட பிள்ளைகளுக்கு ஒரு வேலை கிடைக்கிறதெண்டாலும் சிங்களம் படிச்சிருக்க வேண்டும் அதால கடல் தொழில் செய்யற எங்கட மக்களை தமிழ் பேசும் சிங்களவர் என்று பதிஞ்சாங்க. போகப் போக பிறப்புச் சான்றிதழில் சிங்களவர் என்றே பதியத் தொடங்கிற்றாங்க. அதுக்கேத்த மாதிரி பாடசாலைகளையெல்லாம் சிங்களமாக மாத்தினாங்க" என்றார்.

இது போலவே அரசாங்கமொழி, நீதிமன்ற மொழி பற்றிய சட்டங்களும் நடைமுறையில் அர்த்தமற்றனவாகவே தொடரக்காணலாம். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடுதலை தரும் ஒன்றிய வெளியீடான போரா? சமாதானமா? குறிப்பிடுகின்றவாறு (1982:49)

தமிழ் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ளாத காலமே இல்லை எனும் அளவிற்கு கல்வி, வேலைவாய்ப்பு, குடியேற்றத் திட்டங்களின் வழி நிலப்பறிப்பு, பொலிசாரினாலும், ஆயுதப்படையினராலும் அடக்கு முறை, அரச பயங்கரவாதம் என இனமுரண், இன அழிப்பு என்ற காலகட்டத்தை அடையக் காணலாம்.

இந்தக் காலகட்டத்தில் தான் அரசியல் போராட்டத்தில் இளைஞர்களின் பங்களிப்பும் தீவிரமாகியது எனலாம். அது மட்டுமன்றி முன்னைய தமிழ் அரசியல் இயக்கங்கள் அஹிம்சையை வரித்துக் கொண்ட நிலைமாறி, வன்முறை, ஆயுதம், போராட்ட வழியானதும் இக்காலத்தில் தான். இலங்கை ஐக்கிய முன்னணி அரசு அன்று அறிமுகப்படுத்திய பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தரப்படுத்தல் கொள்கை இளைஞர்களை தீவிரமாகத் தூண்டிய காரணிகளின் முதன்மையானதாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தேசிய விடுதலை என்ற இன்றைய போராட்ட இலக்கின் வெற்றி முழுமையாக எய்தப்படும் போதுதான் தமிழர்களின் அனைத்து சமூக நிலைமைகளும் வளர்ச்சி பெற முடியும் என்பது இன்றைய யதார்த்தமாக அனைவராலும் உணரப்படுகின்றது. தமிழர்களின் வாழ்வு மட்டுமன்றி நீண்டகாலநோக்கில் முழு இலங்கையின் அமைதி வாழ்வும் இந்தப் போராட்ட முடிவின் வழிதான் தீர்மானமாகும் எனலாம். (Chandrika, 1994)

சமாதானமான இனஉறவு பேணுவதற்கான முயற்சியில் 1987இல் மேற் கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் முதல் மேல் கண்ட கூற்றுக்கு சொந்தமான முன்னாள் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் வரை அனைத்தும் பூர்வாங்க நிலையிலேயே முறிந்து போயின. மிக அண்மையில் போரின் உச்சத்தில் பல உயிரிழப்புக்கள், பொருள் இழப்புக்களின் பின்னரும் உலக மனித உரிமை சமாதான அமைப்புக்கள், அரசுகளின் ஒத்துழைப்பின் விளைவாக நோர்வே நாடு முன்னெடுத்த சமாதான முயற்சியும் இனவாத அரசியலின் எதிர்ப்புக் களிடை தடைப்பட்டது. மீளவும் சமாதானம் என்ற தேர்தல் வாக்குறுதி யுடன் புதிய ஐக்கியதேசிய முன்னணி அரசு பாராளுமன்றப் பெரும் பான்மை பெற்று பதவிக்கு வந்தது. ஜனாதிபதியும் பிரதமரும் முரண் படும் வெவ்வேறு கட்சி அரசியலைக் கொண்டவர்களாய் அமையும் புதிய அனுபவமாக இந்த ஆட்சி நிலைமை கவனம் பெற்றது. 'பேச்சு வார்த்தைகளினடியாக சமாதானம்' என்ற முனைப்பினை இந்த இரட்டை அதிகாரநிலைமை தோற்கடித்தது. மீண்டும்ஒரே கட்சி அதிகாரம் எனும் நிலையில் 'போர் வழி சமாதானம்' என்ற முன்னைய தத்துவம் மீளு யிர்ப்பு பெற்றமை இன்றைய வரலாறாகும். சமாதான வலைக்கும் (Peace trap) போர் வலைக்கும் (War trap) இடையிலான ஓர் ஒழுங்கமைவான ஊசலாட்டமாக இலங்கையின் இனத்துவ முரண்பாடும் அதன் சுழற்சிப் பாங்கும் அமைதல் பற்றிய ஆய்வவதானங்கள் இங்கு எம் கவனத்திற் குரியனவாகின்றன (Sahadevan, 2006; Uyangoda, 2007).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 4

# மொழிவழிக் கல்விக் கொள்கைகள்

## சுதந்திரம் வரையான காலப்பகுதி

பல்லின சமூகமாக மட்டுமன்றி பன்மொழிச் சமூகமாகவும் இலங்கை அமைகிறது. இங்கு வழக்கிலுள்ள மொழிகள், தனிப்பட்ட தேவைகள், தொடர்புகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படாமல் பொதுத் தேவைகளான கல்வி, நிர்வாகம் என்பவற்றோடும் பெரிதும் தொடர்புடையனவாக விளங்கக் காணலாம். இந்நிலையில் மொழிவழி இனக்குழுக்களின் இன ஆதிக்கக் கொள்கைகள், கல்வி மொழிக் கொள்கைகளிலும் பிரதி பலித்தன. இன உறவு விரிசலின் அடிப்படைகளான இவை பற்றிய ஆழமான பகுப்பாய்வு இன்றியமையாதது.

சமூகவாழ்வினதும், சமூக அசைவினதும் அடிப்படையாக அமையும் மொழியின் சிறப்பான பயன்பாட்டை இன்றைய உளமொழியியல், சமூக மொழியியல், கல்வி உளவியல் ஆகியன சிறப்பாக ஆராய்கின்றன. இவ் அறிவுத் துறைகளினடியாக இலங்கையின் கல்வியும் மொழியும் தொடர்பான பிரதான கொள்கைகளும், நடைமுறையில் எதிர்கொள்ளப் பட்ட பிரச்சினைகளும் இந்த இயலில் நோக்கப்படுகின்றன. பல்லின சமூகமான இலங்கையில் சுமுகமான இன உறவைப் பேணுதலில் கல்வி மொழி தொடர்பான கொள்கைகள் எப்படித்தவறிப் போயின என்பதைக் காண்பதுடன், இந்த அனுபவங்களினடியாகப் பொருத்தமான கல்வி மொழிக் கொள்கையினை இனங்காணவும் இப்பகுப்பாய்வுதுணையாக அமையும்.

சுதந்திரத்திற்கு முற்பட்ட, குடியேற்ற நாட்டாதிக்க காலக்கல்வி மொழிக்கொள்கைகள் ஆங்கில மொழிக்கு முதன்மைதருவனவாக அமைந்திருந்தன. அதன்வழியே கல்வி உயர்தொழில் வாய்ப்புக்களுக் கும் காலாக அமைந்திருந்தது. சுயமொழிகள் இரண்டாம் தர அந்தஸ் தினையே பெற்றிருந்தன. இந்நிலையில் சுதேச மொழிகளைக் காக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்கு அந்தஸ்துத் தேடும் போராட்டங்களின் விளைவாகப் புதிய கல்விக் கொள்கைகள் நாற்பதுகளின் ஆரம்பத்திலேயே முன்வைக்கப் படக் காணலாம்.

சுதேச மொழிக்கு முதலிடம் என்னும் முன்வைப்பானது பன் மொழிச் சமூக அமைப்பில் வளர்ச்சியடைந்த மற்றொரு மொழியை இரண்டாம், மூன்றாம் நிலைக்குத் தள்ளுவதாக அமையும் போது மொழிவழி இன முரண்நிலை தவிர்க்க முடியாததாகின்றமை, பன் மொழி சமூகங்களின் கடந்தகால அனுபவமாகும். குறிப்பாகக் குடியேற்ற நாட்டாதிக்கத்தினின்றும் விடுதலை பெறும் நாடுகளில் இத்தகைய குழப்பங்களும் முரண்பாடுகளும் எழுவது இயல்பானதே எனும் நிலை (Page, 1975:45) இலங்கையின் விடுதலைக்கு முன்னரே கருக்கொண்டு விட்டதெனலாம்.

இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் கல்விமொழிக் கொள்கை கள் பற்றிய தேடலானது, பத்தொன்பதாம் நூற்றாண்டு கல்வி வரலாற் றின் முக்கிய அறிக்கைகளான :

1. கோல்புறூக் அறிக்கை
2. மோர்கன் அறிக்கை

என்பனவற்றின் அடிப்படைகளிலிருந்து ஆரம்பமாவதே பொருத்த மானது. பின்னையகாலத்துக் கல்வி மொழிகள், நிலைமைகள் தொடர் பான முக்கியமான சில முடிவுகள் இவ் அறிக்கைகளின் வழியே ஆரம்ப மாகிவிட்டமை கவனத்திற்குரியதாகும். கல்வி நிர்வாகச் சீர்திருத்தம் தொடர்பாகவே 1833இல் முன்வைக்கப்பட்ட கோல்புறூக்–கமறோன் சிபார்சுகள் அமைந்தபோதும், இலங்கையின் கல்விமொழிக் கொள்கை களின் மையநிலை சிக்கலான ஆங்கில மொழிவழிக்கல்வி என்ற அம்சமும் இவ் அறிக்கையின் விளைபொருளே. கோல்புறூக்- கமறோன் விதப்புரையின்படி நிர்வாக மொழி அந்தஸ்தினை ஆங்கிலம் பெற்ற போது, அதுவே கல்வி மொழியாக அமைவது தவிர்க்க முடியாததாக இருந்தது.

> ஆங்கிலம் கற்றவர்கள், ஆங்கிலத்துக்கூடாகக் கற்பிக்கக் கூடியோர் மட்டுமே ஆசிரியர்களாகத் தகுதி பெற்றவர்கள் என்றும், சுயமொழிப் பள்ளிக்கூடங்களுக்கு அரசு ஆதரவு வழங்கக்கூடாது என்றும், ஆங்கிலக் கல்விக்கே அரசு ஆதரவு வழங்க வேண்டும்

என்றும் கோல்புறூக் குழு கருத்துக்களை முன்வைத்தது. (Mendis, 1956: 72-74)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேற்ற நாட்டாதிக்க ஆரம்ப நாட்களில் தமக்குரிய ஆளணிகளின் தேவை குறைந்தனவாக இருந்தபோது இங்கிலாந்திலிருந்து அவர்களை வரவழைக்க முடிந்தது. தேவை அதிகரித்த போது உள்ளூர் மக்களிடமிருந்து ஆளணியைப் பெற வேண்டியிருந்தது. இதற்கென இவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த வகையில் ஆங்கில அரசுக்கு விசுவாசமான ஓர் ஊழியர் கூட்டத்தை நிறத்தாலும் இரத்தத்தாலும் வேறுபட்டாலும் செயலாலும் சிந்தனையாலும் ஆங்கிலேயராக விளங்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவது ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கமாக இருந்தது. இதுவே கல்வியின் ஒரே இலக்கானது என்பது பொருத்தமானது. (Mendis, 1948:34)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னரைக் கூறில் கோல்புறூக்கின் விதப்புரைகள் கொண்ட செல்வாக்குப் போல பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைக் கூறினை வழிப்படுத்தும் சிந்தனைகளை மோர்கன் குழு விதப்புரைகள் வழங்கின எனலாம்.

நாட்டின் கல்வி நிலையினையும் அதன் எதிர்காலத்தையும் தற்போது நடைமுறையிலுள்ள கல்வியமைப்பின் சாதனைகளையும் அதில் வேண்டிய திருத்தங்களையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும், என்ற பிரேரணையை அப்போதைய சட்ட நிரூபணசபையின் உத்தியோகப் பற்றற்ற தமிழ் உறுப்பினரான மு.முத்துக்குமாரசாமி 1865 அக்டோபரில் சமர்ப்பித்தார். அவர் முன்மொழிந்த இப் பிரேரணை உத்தியோகப் பற்றற்ற பறங்கி அங்கத்தவரான மார்டென்சினால் (Martenz) வழிமொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசினால் சட்டசபையின் உபகுழு ஒன்று 1865 அக்டோபரில் நியமிக்கப்பட்டது. (Proceedings of the Legislative Council, 14.10.1065) அக்குழுவின் தலைவராக ராணி வழக்கறிஞர் சேர் றிச்சேட் மோர்கன் (Richard Morhan) செயற்பட்டார். இதனாலேயே இக்குழு மோர்கன் குழு எனப்பட்டது. இக்குழுவின் சிபார்சு 1867இல் சட்டநிரூபண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டு, 1868இல் குடியேற்ற நாட்டு செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் அரசுக் கொள்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. (Secretary of State to Governor of Ceylon, Colonial Office London. 26.08.1868).

மோர்கன் குழுவின் விதப்புரைகள் அக்காலத்து இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் நிலவிய கல்விக் கருத்துக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தன. இந்த வகையில் சுயமொழி கல்வி சார்பான கருத்துக்களும் கவனத்திற்குரியனவாகின. குறிப்பாக அக்காலத்தில் சுதேச மொழிகளினூடாக ஆரம்பக்கல்வி அளிப்பதன் மூலம் மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம், சமூகநிலை ஆகியவற்றில் மேம்பாட்டினைக்காண முடியும் என நிலவிய கருத்து (Nurullah and Naik, 1951: 205,206) மோர்கன் குழுவின் கவனத்திற்குரியதானது. இந்தவகையில் 1854இல் இந்தியாவில் வெளி யான வூட் அறிக்கையின் (Wood Dispatch) சிந்தனைகளும் இங்கு கவனம் பெறுகின்றன. கூடவே அனைத்து மக்களுக்கும் ஆரம்பக்கல்வி, கல்வியில் மதபீடம் பங்காளியாக வேண்டும் எனும் அக்கால இங்கி லாந்தின் கருத்தியலும் மோர்கன் குழுவின் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்தியது. மேலும் இக்குழுமுன் சாட்சியம் அளித்த பலரும் சுய மொழிக் கல்வி தொடர்பாக முன்வைத்த கருத்துக்களின் தர்க்கமும் தாக்கமுள்ளதாக அமைந்தது. எடுத்துக்காட்டாகச் சொந்த மொழியில் தம் பணிகளை அறிவோடும் திறனோடும் செய்வதற்கான அடிப்படை அறிவினைப் பெறும் வாய்ப்பு அளிக்கப்படுதலின் அவசியத்தை வலி யுறுத்தி எவ்.சி.பொன்சியன் (F.C. Bonjian) முன்வைத்த கருத்துக்களைக் குறிப்பிடலாம். (Sessional Paper VIII of 1867 (LC) அப்போதைய காலி மத்திய கல்லூரி அதிபர் ஜே.ஈ.அந்தனீஸ் (J.E. Anthonisz) அரசின் நோக்கு உண்மையில் மக்களின் கல்வி மேம்பாடுதான் என்றால் அதற்கு சுதேச மொழிக் கல்வியைத் தவிர வேறுவழியில்லை. மக்களின் கலாசாரத் தரங்களில் அவர்களை உயர்த்துதலே அரசின் கடமையாகும் என்று தெரிவித்தார். (Ibid, 85)

மேற்கண்ட விண்ணப்பங்களைக் கருத்தில் கொண்டதன் விளை வாக மோர்கன் குழுவினர் பின்வரும் முடிவுகளுக்கு வந்தனர் (Sessional Paper VIII of 1867, *op.cit*: 9-10):

1. ஆரம்ப சுய மொழிக்கல்வியில் போதிய கவனம் செலுத்தப் படவில்லை.
2. பொதுமக்களின் அறிவுவிருத்தியைக் கருத்தில் கொண்டு உள்ளூர் பாங்குக்கு ஏற்ற முறையில் கல்வி அளிக்கப்படவில்லை.
3. ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள், இரு மொழிப் பள்ளிக்கூடங்கள் என்பன உயர்தரக் கல்வியை நோக்கி நகர்வதற்கு வேண்டிய அடிப்படைப் பயிற்சியை வழங்கவில்லை.
4. பெண்கல்வி எந்த வகுப்பினருக்கு (சாதாரணமக்கள்) நன்மை யளித்திருக்க வேண்டுமோ அவர்களைச் சென்றடையவில்லை.

மோர்கனின் சுய மொழிக் கல்விக் கொள்கையானது ஆங்கில ஆட்சி யாளரின் மனப்பாங்கு மாற்றத்தைப் பிரதிபலித்தது. முன்னையகால ஆங்கில மேலாதிக்கப் போக்கு தளர்வடையத் துணையாகியது. எனினும் மோர்கன் குழு பார்வையில் சுயமொழி என்பது முழுமையான மேம்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்குப் பதிலாக தனியே ஆரம்ப நிலையிலுள்ள மாணவர்பற்றியதாக மட்டுமே அமைந்ததும் கவனத்திற்குரியது.

இங்கு ஆங்கிலக் கல்விக்குச் சமமான வளர்ச்சி கருத்தில் கொள்ளப்படவில்லை. ஆங்கிலக் கல்வியின் காத்திரமான வளர்ச்சிக்கு அது அடித்தளமாக அமையும் என்ற எண்ணமே இருந்தது (ஆறுமுகம், 1990:11)

சுயமொழிக் கல்வியில் அரசின் பங்கினை மோர்கன் அறிக்கை வலியுறுத்திய அதேவேளை அதன் கருத்தியல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதனை நோக்குதல் அவசியம். "ஆரம்ப மொழிக் கல்வியை பௌத்த, இந்து குருமாரிடம் விடுவதன் மூலம் பயனுள்ள அறிவு தரப்படவில்லை; அவர்கள் மூடநம்பிக்கைகளையே நிறையத் தருகின்றார்கள். எனவே கலைத்திட்ட மாற்றங்களுடன் ஆரம்ப கல்வியில் அரசு ஈடுபட வேண்டும்" என்பது மோர்கன் குழு கருத்தாகும். இதன் விளைவாக நாட்டில் ஆங்கில பாடசாலைகள், இருமொழிப் பாடசாலைகள், சுயமொழிப் பாடசாலைகள் என மூவகைப் பாடசாலைகள் பல தோற்றம் பெற்றன. இவற்றுள் ஆங்கிலப்பாடசாலைகள் கட்டணம் அறவிடுவனவாக, வசதிபடைத்தவர்களுக்கான பாடசாலையாக அமைய, கட்டணமின்றி அல்லது குறைந்தளவு கட்டணத்துடன் சாதாரண மக்களின் தேவைகளை நிறைவு செய்வனவாக இருமொழி, சுயமொழிப் பாடசாலைகள் அமைந்தன. இவ்வாறாக ஆங்கிலேயர் ஆட்சி கல்வியூடாக சமூக வேறுபாட்டினை வளர்க்கும் தம்போக்கினைத் தொடர்வதனை சுதந்திர காலம்வரை காணமுடியும். இந்த நடைமுறைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்த தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தினரின் சுயமொழி கல்வி தொடர்பான உணர்ச்சியினை அதிகரித்தமையும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பங்களிலும் இந்நிலைமையே நீடித்தது. 1901இல் குடிசன மதிப்பீட்டுப் பணிப்பாளரான சேர் பொன். அருணாசலம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

> அந்நிய மொழிச் சொற்களைக் கிளி போல மீளச் சொல்லும் பயிற்சியைத் தான் ஆங்கில மொழிப் பாடசாலைகள் தருகின்றன. சுதேச மொழிப் பாடசாலைகளில் சுயமான சிந்தனையையாவது பிள்ளைகள் பெற முடிகிறது. ஆங்கில பாடசாலைகளில் 12 வருடம் வரை படித்த பின்னரும் ஆங்கிலத்தை மிகுந்த தவறுகளுடன் பேசும் நிலையே காணப்படுகிறது. (Population Census Report; 1901:12)

அருணாசலம் அவர்களைப் போலவே வேறும்பலரும் தேசிய மொழிகளுக்குத் தரப்பட்ட இடம் தொடர்பாக விசனம் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள். தேசிய மொழிகள் தொடர்பான சமகால இந்திய இயக்கங்களின் செல்வாக்கிற்கு உட் பட்டவர்கள். அநகாரிக தர்மபாலா இக்குழுவின் பிரதான பேச்சாளராகக் கருதப்படுபவர். மற்றொரு குழுவினர் சமூகச் சீர்திருத்தநோக்கினர், மதச்சார்பின்மையின் அடியானவர்கள். ஆனந்த குமாரசுவாமியினால் தாபிக்கப்பட்ட பல் இன பன்மத அடிப்படையிலான இலங்கைச் சீர் திருத்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் (Ceylon Social Reform Society) 1906இல் இவர்களது பிரதிநிதிகள் குழு ஆங்கிலப் பாடசாலைகளில் தேசிய மொழிகளைக் கற்பித்தல் தொடர்பாக ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்.

> நிலவும் கல்வியமைப்பின் கீழ், நாட்டின் உயர்வகுப்பு இளைஞர்கள் சுதேசமொழிகளில் மிகக்குறைந்த அறிவுள்ளவராக இருப்பதனால் கிராம மக்களுடன் அறிவார்ந்த முறையில் தொடர்புகொள்ள முடியாத வராக உள்ளனர். சுயமொழி பேசும் தம் பெற்றோருடனேயே உரையாட முடியாது உள்ளனர். (Premaratne, 1969:574)

மூன்றாவது குழு தேசிய மொழிகளில் எழுதும் பத்திரிகையாளர், நாவலாசிரியர்களைக் கொண்டதாக இருந்தது. பியதாச சிறிசேன இவர் களில் குறிப்பிடத்தக்கவர். தேசிய பண்பாட்டினின்றும் மக்கள் துண்டாடப் படுவது குறித்து இவர்கள் கவலை கொண்டிருந்தனர்.

சுதேசிய குழுக்கள் மட்டுமன்றி, அக்காலத்து பௌத்த பாடசாலை அதிபராக இருந்த பிரித்தானியரான எவ்.எல்.வூட்வாட் (Woodward) போன்றோரின் எழுத்துக்களிலும் சுதேச மொழிகளின் அவசியம் உணர்த் தப்பட்டது. (Jayasuriya, n.d: 389 & 390) இவ்வாறாக தேசிய மொழி களைப் பாடசாலைகளில் புகுத்துவதற்கான வற்புறுத்தல்களாக இவை கொள்ளப்பட்டது. அத்துடன் இலங்கையின் கட்டாயக்கல்வி நிலை சம்பந்தமாக இங்கிலாந்து பொதுமக்கள் சபையில் நிகழ்ந்த விவாதங் களும் அரசின்பால் சுயமொழிக்கட்டாயக் கல்விக்கான தூண்டுதலை அதிகரித்தது. இவற்றின் அழுத்தங்கள் காரணமாக அரசு தவிர்க்க முடியாதபடி கல்வி சம்பந்தமான பல்வேறு குழுக்களையும் காலத்துக்குக் காலம் நியமித்துப் பல்வேறு கொள்கை முடிவுகளையும் எடுக்கவேண்டி இருந்தது. இதன்பிரகாரம் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இடம் பெற்ற கல்விசார் சிபார்சுகளில் மொழி நிலைமைகளை நோக்குவோம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாவது அறிக்கையாக 1901இல் எலிஸ் குழு அறிக்கை வெளிவந்தது. 1901இல் இலங்கையின் ஆளுநராக இருந்த சேர் வெஸ்ட் ரிஜ்வே (Sir West Ridgeway) யினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிலைமைகளிலும், கட்டாயக்கல்வியிலும் கவனம் செலுத்தும்படி 3 சிவில் உத்தியோகத்தரை உள்ளடக்கியதாக நியமிக்கப்பட்ட குழுவே எலிஸ் (Eillis) குழுவாகும் (Jeyasuriya, n.d. : 328). இக்குழு

1. பிள்ளைகளுக்குச் சிறந்த சுயமொழிக் கல்வியைப் பெற்றோர் வழங்குதலைக் கட்டாயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.
2. சுயமொழி பாடசாலைகளுக்கான உதவி நன்கொடை அதிகரிக் கப்பட வேண்டும் எனவும், ஆங்கிலப் பாடசாலைகளுக்கான உதவி நன்கொடை குறைக்கப்பட வேண்டும்.

எனவும் கூறியது (Sessional paper XXVIII of 1905).

அதேவேளை கல்விக்கான செலவீனத்தில் அரைப் பங்கினை உள்ளூர் நிதியிலிருந்தே பெறவேண்டும் என விதந்துரைக்கப்பட்டது. (ibid) இங்கு உள்ளூர் நிதியம் என்பது உள்ளூராட்சி அமைப்புக்களை யும், பெற்றோரையுமே குறிக்கின்றது. ஆனால் பெற்றோரைக் கட்டணம் செலுத்த நிர்ப்பந்திப்பது என்பது கட்டாயக் கல்வி என்ற கோட்பாட்டுடன் முரண்படுகிறது. இக்குறைபாட்டினால் கல்விக்கு வேண்டிய நிதி சேகரிப்பது பற்றி ஆராய வரித்தாக்கம் பற்றிய ஆணைக்குழுவின் உப குழு ஒன்று 1903ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. ஆயினும் அதனுடைய ஆலோசனைகளும் திருப்தியாக அமையாத போது 1905இல் ஹேபர்ட் வேஸின் (Herbert Wace) தலைமையில் ஆரம்பக்கல்வி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதுவே வேஸ்குழு என அழைக்கப்பட்டது. (Jeyasuriya, op.cit : 333) இக்குழுவின் விதப்புரைகளின் அடிப்படையாக நிறைவேற்றப்பட்ட 2 கட்டளைச் சட்டங்கள் இங்கு எம் கவனத்துக் குரியன. அவை.

1. 1906 இன் நகரப் பாடசாலைக் கட்டளைச் சட்டம்.
2. 1907 இன் கிராமப்புறப் பாடசாலைக் கட்டளைச் சட்டம்.

நகரப்பாடசாலைக் கட்டளைச் சட்டமானது மாநகரங்களிலும் உள்ளூர் சபையின் கட்டுப்பாட்டிலுள்ள நகரங்களிலும் கட்டாய சுயமொழிக் கல்விக்கு வழிவகுத்தது. சுயமொழிக்கல்வி கற்பிக்கும் பாடசாலைகளை பராமரிப்பதற்கும், நிர்மாணிப்பதற்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான அதிகாரங்களை ஆள்பதியினூடாக இச்சட்டம் வழங்கியது.

கிராமப்புறக் கட்டளைச் சட்டமானது கிராமப்புறங்களிலும் பெருந்தோட்டங்களிலும் கல்வி வசதியில்லாத பிள்ளைகளுக்குச் சுய மொழி கல்வி போதிக்க ஏற்பாடு செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு கட்டளைச் சட்டங்களும் 6-12 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான கட்டாய சுயமொழி கல்விப் போதனைக்கு வழிவகுத்தன. (Arumugam, 1973:61) முன்னையதுடன் ஒப்பிடுமிடத்து பின்னையது கிராமப்புறங்களில் சுயமொழிக் கல்வி விரிவாக்க முயற்சிகளை ஓரளவிற்கு மேற்கொண்டது எனலாம்.

வேஸ்குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து வந்தகாலப் பகுதிகளில் இலங்கையின் இடைநிலைக் கல்வியில் கூடிய அக்கறை செலுத்தப்பட்டது. இந்நிலையில் இடைநிலைக்கல்வி பற்றி பின்வரும் இரண்டு குழுக்கள் ஆராய்ந்தன. அவை

1. பிரிஜ்ட் குழு (Bridge Committee)
2. மக்லியட் குழு (Maclead Committee)

இவ்விரு குழுக்களும் 1911-1912 என சமகாலத்தவையாக இருந்த போதும் தமது அறிக்கைகளைத் தனித்தனியே வெளியிட்டன.

பிரிஜ்ட் நிலவும் இடைநிலை, உயர்கல்வி தொடர்பான ஒரு முழுமையான அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு நியமிக்கப்பட்ட வில்லியம் மக்லியட் தலைமையிலான குழுவிற்கு உதவும் முகமாக இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட அரசுபரிசோதகர். கல்வி மொழி பற்றிய இவரது கருத்துக்கள் பெறுமதியான ஆவணமாக கல்வியாளர்களினால் மதிப்பிடப்படும். (Jeyasuriya, n.d: 364)

ஒரு குழந்தையின் எண்ணங்கள் முழுவதும் அடங்கியுள்ள மொழிகளைத் தவிர்த்து பிறிதொரு மொழியில் ஊட்டப்படும் கல்வியானது புதிய மொழியினை மட்டும் கருத்தில் கொள்ளும் அளவுடன் எல்லைப்படுத்தப் படுவதொன்றாகும். (Sessional paper XXI of 1912 (L.C): 13) என்று பிரிஜ்ட் குறிப்பிட்டார். கீழ் வகுப்புக்களில் ஆங்கிலம் மூலம் கற்பிப்பது திருப்தியானது அல்ல என கருதிய பிரிஜ்ட் அதற்கான காரணத்தினையும் முன்வைத்தார். 20% திற்கும் குறைவானவர்களே பாடசாலைக்கு வருமுன் சிறிதளவேனும் ஆங்கில அறிவு பெற்றிருந்தனர். ஆங்கிலப் பாடசாலைகள் மாணவர்களை தேசிய உணர்வுறச் செய்தன (ibid:21) என்பதும் அவர் கருத்தாக இருந்தது. இதனால் கீழ் வகுப்புக்களில் ஆங்கிலத்தை உபயோகிப்பது விரும்பத்தக்கதல்ல என்றும் 12 வயது வரை பிள்ளைகளுக்குத் தாய்மொழிக் கல்வியே உகந்தது (ibid:17) என்றும், ஆங்கிலமொழி பேசும் குடும்பத்துப் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் போதனா மொழியாக இருக்க வேண்டும் என்பது பிரிஜ்ஜின் விதப்புரை. ஏனையோருக்கு முதல் 3 அல்லது 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு காலம் வரையில் அவர்களின் பேசும் மொழியுடன் ஆங்கிலத் தையும் கற்பிக்கலாம் (ibid:18) என்றார்.

உயர்கல்வி பற்றி பிரிஜ்ட் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார். வைத்தியர்கள், சட்டவல்லுநர்கள் தவிரப் பொது உயர்கல்வி வாய்ப் புக்கள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியேனும் இருக்க வேண்டும் எனவும் கருதினார். பணப் பிரச் சினை இருக்குமாயின் றோயல் கல்லூரியை பல்கலைக்கழகக் கல்லூரி யாகப் பயன்படுத்தலாம் எனவும் ஆலோசனை தெரிவித்தார்.

பிரிஜ்ஜின் அறிக்கை அக்காலத்தில் நிலவிய இடைநிலைக் கல்வி யின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியது உண்மைதான். ஆனாலும் கல்வி மொழி பற்றிய அவருடைய கருத்துக்கள் மேல் நாட்டுக் கலா சாரத்தைத் தழுவிய உயர் குலத்தினரை உருவாக்கும் ஒரு கருவியாகவே கல்வியைக் கருதியது. இந்தவகையில் குடியேற்ற நாட்டுக் கல்விக் கொள்கைக்கு இசைவானதாகவே பிரிஜ்ஜின் விதப்புரைகளும் அமைந் தது எனலாம்.

ஆள்பதி மக்லியத்தினால் (Governor Macallum) இலங்கையில் இடைநிலை உயர்கல்விக்கான அன்றைய வசதிகளை ஆராயவும் நிலவிய கல்வி அமைப்பைப் பார்வையிடவும், கலைத்திட்டம் பற்றிய ஆய்வைச் சிறப்பாக மேற்கொள்வதற்குமென 1911 ஜூனில் நியமிக்கப்பட்ட குழுவே மக்லியாட் குழுவாகும். இக்குழுவில் கே.டபிள்யூ.பீ.மக்லியாட் (K.W.B. Macleod) உடன் இணைந்து 9 அங்கத்தவர்களும் இடம்பெற்றனர். (Jayasuriya, op.cit: 364) பிரிஜ்ஜின் விசாரணையை ஒத்ததாக இவ் விசாரணைகள் அமைந்தாலும் இவர்களின் எல்லை பரந்ததாகக் காணப் பட்டது. ஆரம்ப இடைநிலைக்கல்வி உட்பட வகுக்கப்பட்ட நடை முறையிலுள்ள கலைத்திட்டம் நாட்டின் நிலைமைகளுக்கு ஏற்றதாக அமைந்துள்ளதா என்பதையும், கேம்பிரிஜ் உள்நாட்டுப் பரீட்சைக்கான கற்கை நெறிகள் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்கிறதா என்ப தனையும், அவற்றிலுள்ள குறைபாடுகள், இதனை தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகள் என்பன பற்றியும் ஆய்வை மேற்கொள்ளும் படி இக் குழு பணிக்கப்பட்டது. அத்துடன்

1. இலங்கையிலுள்ள தாய் மொழிக்கற்கைகளுக்கான செயற் பாடுகள்
2. கீழைத்தேய மொழிகள்
3. ஐரோப்பிய தற்கால மொழிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விஞ்ஞானம்
5. வர்த்தகக் கல்வி
6. கைவினை முயற்சிகள்
7. பெண்களுக்கான விசேட பயிற்சி

என்பன பற்றி விசாரணை செய்யுமாறு இக்குழு பணிக்கப்பட்டது. (Sessional paper XIX of 1912(L.C):3)

இதில் மொழி சம்பந்தப்பட்ட நிலைமைகளை மட்டும் நோக்குதல் பொருத்தமானதாகும். குழுவினர் மொழி பொறுத்து தமிழ், சிங்களம் ஆகியவற்றை கலைத்திட்டத்தில் சேர்ப்பது தொடர்பாக வினாக்கொத்துக்களைத் தயாரித்து விடையளிக்கும்படி பல பாடசாலை அதிபர்கள், நிர்வாகிகளுக்கு அனுப்பினர். இம்முயற்சிக்கு சிங்களவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். (Sessional paper XX of 1912) அதனால் மொழிசார்பாக நேரடியாகச் சிபார்சு செய்வதனை விடுத்துப் பின்வருமாறு சிபார்சுகளைச் செய்தனர்.

1. சுதேச மொழிப் பிள்ளைகளுக்கான ஆங்கில வாசினை. எழுத்துத் தொடர்பான கல்வி என்பது ஆங்கில உரையாடல் பயிற்சியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். கூடவே தாய் மொழியில் வாசிக்கவும் எழுதவும் துணையாகும் சில அறிவுறுத்தல்களையும் கொண்டிருக்க வேண்டும்.

2. ஆங்கிலத்தில் உரையாடல், வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பவற்றில் 4ஆம் தரத்தில் சித்திபெறாதவர்கள் ஆரம்பப் பாடசாலையிலிருந்து மேற்கல்விக்கு அனுமதிக்கக்கூடாது. அவ்வாறே சுதேச மொழிகளிலும் வாசிப்பு, எழுத்து என்பவற்றில் 4ம் தரத்தில் சித்தி பெறுவது அவசியமாகும்.

3. சுதேச மொழிகளின் தேர்ச்சி தொடர்பான கட்டாய நிபந்தனை 4ம் தரத்திற்கு அப்பால் செல்லக்கூடாது. (Sessional paper XIX of 1912 op.cit:177)

மக்லீயட் அறிக்கையும் கல்வி மொழிபற்றித் திடமான கருத்துக்கள் எதனையும் முன்வைக்கவில்லை. ஆயினும் பிரிஜ்ட், மக்லியட் அறிக்கைகள் முறைப்படி ஆள்பதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு பிரித்தானிய அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசால் மக்லியட் அறிக்கையே விரும்பப்பட்டதினால் அறிக்கையில் பல்கலைக்கழக கல்வி பற்றி குறிப்பிடப்பட்டதைத் தவிர்த்து ஏனையவற்றை 1914இல் திருத்தப்பட்ட சட்டக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவை மூலம் (Amended code of 1914) அரசு வெளியிட்டது (ஜயவீர, 1969: 657).

1920இல் இடம்பெற்ற கல்விக் கட்டளைச் சட்டமானது சுதேச மொழிக்கல்வி தொடர்பாக முன்னைய காலங்களில் காணப்பட்ட நிதி சம்பந்தமான திருப்திகரமற்ற நிலைமைக்குத் தீர்வு காண்பதாக அமைந் திருந்தது. இச் சட்டத்தின் பிரகாரம் மத்திய அரசானது அப் பொறுப் பினை ஏற்றுக்கொண்டமை சுயமொழிக் கல்வி வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

ஆயினும் தேசிய மறுமலர்ச்சியாளர்கள் இச்சிபார்சுகள் எதனை யும் அங்கீகரிக்கவில்லை. தேசிய மறுமலர்ச்சியாளர்களுள் சிலர் சட்ட நிரூபணசபையின் அங்கத்துவத்தைப் பெற்று அரசியல் அந்தஸ்தில் உயர்ந்திருந்தனர், அந்நிலையில் சட்டசபையில் தொடர்ந்தும் சுயமொழிக் கல்விபற்றிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு விவாதங்கள் நடைபெற லாயின. பொன். கனகரட்ணம், சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா, டபிள்யூ.தகநாயக்கா, சேர்.பொன்.இராமநாதன் போன்றவர்கள் இலங் கைக் கல்வி தொடர்பான கருத்துக்களை முன்வைத்தார்கள். ஏனைய வளர்ச்சியடைந்த நகரங்களில் காணப்பட்டது போல இலங்கையிலும் தரப்படுத்தப்பட்ட ஒரேவகையான கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும், ஒரே வகையான பொதுசனப் பள்ளிக்கூடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தாய் மொழிக்கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும், ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்பன மொழிப்பாடங்களாக்கப்பட வேண்டும் என்றும் இதனை நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு நாட்டு மக்களின் சுதேச பண்பாடு, கலை உணர்வு, சிந்தனை, தேவைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய இச்சபையின் குழுவோ அல்லது ஆணைக் குழுவோ நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை சட்டநிரூபண சபையில் அச்சமயம் முன் மொழியப்பட்டது. (பிரேமரட்னா, 1969:677)

தேசிய உணர்வினைத் தணித்து தமதாட்சியைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த இலங்கையர் கேட்கும் இக் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டிய தேவை பிரித்தானிய அரசுக்கு ஏற்பட்டது. அப்பின்னணியில் அப்பிரேரணை மீதான விவாதத்தைத் தொடர்ந்து ஆளுநர் மனிங்கினால் அப்போதைய உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்த மக்ரே (A. Macrae) தலைமையில் 1926 யூனில் ஒரு குழு அமைக்கப்பட்டது. (Jeyasuriya, op.cit: 479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்ரே குழுவினைப் பொறுத்தவரை அவர்கள் மூன்று முக்கிய பிரச்சினைகளில் கவனம் செலுத்தும்படி வேண்டப்பட்டார்கள். அவை வருமாறு

1. சுயமொழி பாடசாலைகளின் கல்விப் பரப்பை விரிவுபடுத்த எத்தகைய வழிகளைக் கையாள வேண்டும்.
2. இலங்கைப் பள்ளிக் கூடங்களில் சிங்களத்தையும் தமிழையும் போதனா மொழிகளாக்குவது எந்த அளவுக்கு முடியும்.
3. ஆங்கிலப் பள்ளிகளில் கீழைத்தேய மொழிகளின் போதனையை அதிகரிப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். (Sessional Paper XXVIII of 1929) மக்ரே குழுவினர் பலருடன் உரையாடித் தமது அறிக்கையைத் தயாரிக்க முயன்றனர்.

இந்தவகையில் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் டபிள்யூ. எச். கில் பற்றிக் (W.H. Kilpatrick) ஆணைக்குழுவின் வேண்டுதலின் பேரில் கல்விசார்பான தனது அபிப்பிராயங்கள் சிலவற்றை ஆணைக் குழுவிடம் தெரிவித்தார். மொழிபற்றிய கருத்தில் தாய்மொழிக் கல்வி அவசியம் என்றும் ஆரம்பநிலையில் அது கட்டாயம் எனினும் எல்லா நிலையிலும் அவ்வாறு இருக்கத் தேவையில்லை (Jeyasuriya, op.cit: 451) என்றும் குறிப்பிட்டார்.

இக்கருத்து மக்ரே குழுவினரின் சிபார்சுகளில் செல்வாக்குச் செலுத்தி இருந்தது. மக்ரே குழுவினரால் மொழி போதனை பற்றிப் பின்வருவன முன்வைக்கப்பட்டன.

1. பிள்ளைக்கு ஆரம்பமட்டத்தில் அதன் தாய்மொழியில் கற்பிக்கும் வசதிகளை இலங்கையிலுள்ள எல்லாப் பாடசாலைகளும் அளிக்க வேண்டும். பிள்ளைகளின் ஆரம்ப பள்ளிப் பருவத்தில் சுய மொழிகளில் கல்வி-அம்மொழி ஆங்கிலம், சிங்களம், தமிழ் எதுவாயினும் கட்டாயமாக எல்லோர்க்கும் இருக்க வேண்டும்.
2. இருமொழிகள் பற்றிய பிரச்சினையில் கூடிய தகவல் தேவையானதால் இரண்டாவது மொழி ஒன்றை எல்லாப் பள்ளிகளிலும் படிப்படியாக அதிகரிக்கும் முறையில் புகுத்தப்பட்ட திட்டத்தைத் திணைக்களம் தயாரிக்க வேண்டும் அதனை நடைமுறையிலுள்ள போதனை மொழியுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மூன்று மொழிகள் விளங்கும் நாடாகிய இலங்கையில் அவற்றை உபயோகிக்கும் சமூக அமைப்புக்கு ஏற்ப மாணவர்களைக் கவரக்கூடிய சிறந்த கல்வி முறையினால் தயார்படுத்த வேண்டும்.

4. கல்வி அறிவு நாட்டு மொழிகளில் பயன்தரும் அறிவை வளர்ப் பதை நோக்கமாகக் கொள்ளும் போது இளமைப்பருவத்து மொழியோடுள்ள நெருங்கிய உறவினால் கிடைக்கக்கூடிய மரபு அறிவு நன்மைகளை இழந்து விடக்கூடாது.

5. ஆரம்ப காலம் முடியும் வரை அதாவது 5ம் வகுப்புவரை எந்த மொழிபயன்படுத்தப் பட்டாலும் கல்வி இலவசமானதாக இருக்க வேண்டும்.

6. ஆங்கிலேய பறங்கி இனப் பிள்ளைகட்கு ஆரம்பக்கல்வி நீங்கு பத்திரம், ESLC வகுப்புவரைக்கும் இலவசக்கல்வி வசதிகளை அளிப்பது பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும் (Sessional paper XXVIII of 1929, op.cit:78-79)

ஆணைக்குழுவின் சிபார்சுகள் பாடசாலைகளில் மேல்வகுப்புகளில் ஆங்கிலத்தைப் புகுத்துவனவாக, அதுவரை சிங்களம் அல்லது தமிழ் மொழிகளை எல்லா நிலைகளிலும் பயன்படுத்திய சுயமொழிப் பாட சாலைகளில் கூட இடம்பெற்றன. சேர் பொன்.இராமநாதன் அதனை மறுத்து எல்லா நிலைகளிலும் தாய்மொழியே இருத்தல் வேண்டும் என்றார். மேலும் இவர்களின் ஆரம்பகட்ட சுயமொழி, இருமொழி பற்றிய கருத்து விளக்கங்கள் தெளிவற்றதாக இருந்தன. அன்றியும் இலங்கைப் பாடசாலைகளில் சிங்களம், தமிழ் மொழிகளில் போதனை வழங்குவதில் உள்ள நடைமுறை சாத்தியங்கள் தெரிவிக்கப்படாமை, ஆங்கில பாடசாலைகளில் கீழைத்தேய மொழிகளை வளர்ச்சியுறச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கவனம் செலுத்தப்படாமை போன்ற குறைபாடுகள் சுட்டிக்காட்டப் பட்டது. இவரது விதப்புரைகளைச் செயல்படுத்துவதற்கு நாட்டின் பொருளாதார நிலை சாதகமாக அமையவில்லை. இதனால் அரசின் கவனம் அதன்பால் ஈர்க்கப்படவில்லை. அக்காலப் பகுதியில் இலங்கை யின் அரசியல் சட்டத்தைத் திருத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தமையால் அதன் மூலம் கூடிய அதிகாரங்கள் கிடைக்குமென நம்பி இலங்கையின் தேசியத்தலைவர்கள் குழுவினரின் சிபார்சுகளில் கவனம் செலுத்தவில்லை. இச்சிபார்சுகள் தேசிய மொழிகளைப் போதனா மொழியாக்குவதற்கான அழுத்தங்களைக் கொடுக்க உதவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலப் பகுதியில் தோன்றிய சுயபாஷா இயக்கம், அரசியல் பிரதிநிதித்துவம், நிர்வாக கல்வி நிலைமைகளில் சுதேச மொழிகளின் அந்தஸ்து என்பனவற்றுக்கான வற்புறுத்தல்களை முன்வைத்தது. அக்கால சூழ்நிலை மாற்றங்களும் நிகழ்வுகளும் இலங்கையருக்கு சுயாட்சி வழங்கவேண்டியதன் அவசியத்தைப் பிரித்தானிய ஆட்சி யாளருக்கு உணர்த்தியது. இதனால் இலங்கையருக்கு சுயாட்சி வழங்குவ தற்கான பயிற்சியை அளிக்கும் சில சிபார்சுகளை முன்வைக்கும் பொருட்டு 1931இல் டொனமூர் ஆணைக்குழு அறிக்கை இடம்பெற்றது. (Mendis, 1903:113)

டொனமூர் யாப்பின் விளைவாக இலங்கையருக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டு அவர்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அரசாங்கசபை அமைக்கப்பட்டது. இச்சபை கல்வி முன்னேற்றங்களில் அதிக கவனம் செலுத்தியது. கல்விச் செயற்பாட்டுக்குழு ஏற்படுத்தப் பட்டு சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா அதன் தலைவராக செயல்படத் தொடங்கினார். இரண்டாம் அரசாங்கசபை (1936-47), சுயபாஷா இயக் கத்தின் அரங்கமாகத் தொழிற்பட்டது. இதன் பிரகாரம் 1939இல் கல்விக் கொள்கை, நிர்வாகம் சம்பந்தமான பணிகள் மறுபடியும் பரிசீலனை செய்யப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1941இல் கல்வி விசேட குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நெடுங்காலமாக இடம்பெற்ற பிரித்தானியராட்சியின் விளைவாகத் தனது சுதேச பொருத் தப்பாட்டை இழந்திருந்த இலங்கையின் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்து சீராக்கவென அமைக்கப்பட்ட அக்குழுவின் நடவடிக்கை களில் காத்திரமான செல்வாக்கு செலுத்தியவர் கன்னங்கரா. அதன் காரணமாக அக்குழு கன்னங்கரா குழு என அழைக்கப்பட்டது. (ஆறுமுகம், 1984:02)

1943 நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி விசேடகுழுவின் அறிக்கை, போதனா மொழிபற்றிக் குறிப்பிடுகையில் தாய்மொழி ஊடகத்தை இலட்சியப் பாதையாகச் சிபார்சு செய்தது. ஆரம்ப மட்டத்தி லிருந்து பல்கலைக்கழகம் வரை தாய்மொழி போதனா மொழியாக்கப் படவேண்டும் என்ற இலக்கினை இக்குழுவினர் ஆதரித்தனர். (Sessional paper XXIV of 1943 : 42). அவர்கள் தாய்மொழி என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் விதித்தவிதம் அன்று இலங்கையில் வழக்கிலிருந்த எல்லா மொழிகளையும் ஆங்கிலம் உட்பட உள்ளடக்கியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பெற்றோர் சிங்களவர் அல்லது தமிழராக இருப்பின் நிலைமைக்கேற்ப சிங்களம் அல்லது தமிழ்
2. கலப்புப் பெற்றோராயின் வீட்டுமொழி அதாவது பெற்றோராலும் பிள்ளைகளாலும் பேசப்படும் மொழி
3. ஏனையோர் விடயத்தில் பெற்றோர் விரும்பும் எந்தமொழியும் (மலாய்காரரும், பறங்கியரும் ஆங்கிலத்தைத் தெரிவு செய்ய சோனகர் தாம் வசித்த இடத்தைப் பொறுத்துச் சிங்களம் அல்லது தமிழைத் தெரிவு செய்தனர்.) (ibid, 40-41)

கல்வி விசேட குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் கல்விச் செயற்குழு தனது சிபார்சுகளை மே 1944இல் அரசாங்க சபையில் சமர்ப்பித்தது. அவை பின்வருமாறு:

1. ஆரம்ப பாடசாலையில் தாய்மொழி போதனா மொழியாகும்.
2. உயர்-ஆரம்ப பாடசாலையின் கீழ் பிரிவுகளில் தாய்மொழி அல்லது இருமொழி (bilingual) போதனா மொழியாக இருக்கலாம் (இரு மொழிகளில் ஒன்று ஆங்கிலம் என்ற வழக்கே கைக்கொள்ளப்பட்டது)
3. உயர்-ஆரம்ப பாடசாலையின் மேற்பிரிவுகளில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது இருமொழி போதனா மொழியாக இருக்கலாம். (Hansard, (SC) 1944:838)

அப்பிரேரணை விவாதிக்கப்பட்ட போது டபிள்யூ. தகநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா இருவரும் தனித்தனியாக முன்வைத்த திருத்தங்கள் கவனிக்கத்தக்கன. தகநாயக்காவின் திருத்தம்,

> எல்லாப் பாடசாலைகளிலும் ஆங்கிலம் கட்டாயம் இரண்டாவது மொழியாக, சிங்களம் அல்லது தமிழ் போதனா மொழியாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.

ஜெயவர்த்தனாவின் திருத்தம்

> எல்லாப் பாடசாலைகளிலும் ஆங்கிலம் விருப்புமொழியாகத் தாய் மொழி போதனா மொழியாக இருக்க வேண்டும்.

என்பதாகவும் அமைந்தது.(Hansard, (SC) 1945:423)

இவ்விரு திருத்தங்களும் தோற்கடிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆரம்ப பாடசாலையில் ஊடகம் தாய்மொழியேயாகும்.
2. உயர் - ஆரம்ப பாடசாலையின் கீழ்ப்பிரிவுகளில் ஊடகம் தாய் மொழி அல்லது இருமொழியாக இருக்கலாம்.
3. உயர் - ஆரம்ப பாடசாலையின் மேற்பிரிவுகளில் ஊடகம் ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழாக இருக்கலாம்.

இதனை நோக்கும் போது அன்றைய கருத்து மோதல்களின் மத்தியில் திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுக்கமுடியாமல் இழுபறிநிலை தொடர்ந்தும் காணப்பட்டதை அவதானிக்கலாம். சமகாலத்தில் அரச கரும மொழிபற்றிய விடயத்தில் அரசாங்க சபையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களும், கல்விமொழிக் கொள்கைகளும் பொருள் பொதிந்தவையாகக் காணப்பட்டன.

அரசாங்க சபை அங்கத்தவரான ஜயவர்த்தனாவின், நியாய பூர்வமான கால எல்லைக்குள் சிங்களத்தை அரசகரும மொழியாக்கும் நோக்கில் 1943 யூனில் கொண்டு வரப்பட்ட பிரேரணை 1944 மேயில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. அதுவருமாறு அமைந்திருந்தது.

1. அனைத்துப் பாடசாலைகளிலும் சிங்களம் கல்வி மொழியாக்கப்பட வேண்டும்.
2. அனைத்துப் பொது பரீட்சைகளிலும் சிங்களம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டும்.
3. அரசாங்க சபை செயற்பாட்டினை சிங்களத்திலும் நடத்தும் விதமாக சட்ட உருவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. மொழிபெயர்ப்புக்கென நூல்களைத் தேர்ந்திடவும் பிறமொழிகளிலிருந்து சிங்கள மொழிமாற்றம் செய்யவும் என ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும்.
5. ஆங்கிலத்தில் இருந்து படிப்படியாக சிங்களத்துக்கு மாறுவதற்கான படிமுறைகளை நிர்ணயிக்கும் நோக்கில் ஓர் ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும். (Hansard, (SC) 1943:769)

இது பற்றிய விவாதம் இடம் பெற்றபோது சிங்களம் எனும் பதம் வரும் இடங்களில் எல்லாம் தமிழ் வரவேண்டும் என்ற வி.நல்லையாவின் திருத்தத்திற்கு ஜெயவர்த்தனா இணங்கினார்.

இவ்வேளை சிங்கள அரசியல் தலைவர்களுள் ஒருவரும் பின்நாள் U.N.P. தலைவரும் நாட்டின் பிரதமமந்திரிகளுள் ஒருவராக விளங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமான டட்லி சேனநாயகா "ஒரே ஒரு அரசகருமமொழிதான் இருக்க முடியும், அது சிங்களம் அன்றி வேறு எதுவாக இருக்கலாம்" (Hansard (SC) 1944:816) என்று விவாதித்தமை கவனத்தில் கொள்ளத்தக்கது. இவ்வாறு அன்றே எழுந்த குரல்களின் தொடர்ச்சியை சுதந்திர இலங்கையிலும் ஆழக் கேட்கலாம்.

## சுதந்திரத்தின் பின்னைய காலப்பகுதி

இனவாத அரசியலின் இந்தப்போக்குகளுக்கு அரசியல்வாதிகளுடன் இணைந்து, கல்வியாளர்களில் சிலரும் துணைபோனமை, இலங்கையின் துரதிஷ்டவசமான கல்வி வரலாறாகும். இந்த வகையில் உலக கல்வியியல் ஆய்வு அனுபவங்கள் எல்லாம், இங்கு புதிய வியாக்கியானங்களுடன் அர்த்தமிழந்துபோகக் காணலாம்.

குறிப்பாக கல்வி மொழி தொடர்பாகப் பல்வேறு கல்வி உளவியல் ஆய்வுகளினடியாகவும், ஐக்கிய நாடுகள் நிறுவனம் முன்வைத்துள்ள தாய் மொழிக்கல்வியின் இன்றியமையாமையை உணர்த்தும் பிரகடனமும் இங்கு அரை குறையாகவே கருத்தில் கொள்ளப்படக் காணலாம்.

1. தாய் மொழியில் பிள்ளைகளினால் சிறப்பாக விளங்கிக் கொள்ள முடியும்.

2. தாய் மொழியானது பிள்ளையின் வீட்டுச் சூழலுக்கும் பள்ளிச் சூழலுக்கும் இடையிலான இடைவெளியைக் கூடியவரையில் குறுகியதாக்குகின்றது. உண்மையில் வீட்டிலிருந்து மாறுபடும் புதிய பள்ளிச்சூழலில் பொருத்தப்பாடு காணும் பிள்ளையின் நடத்தையில் மொழியும் மேலதிக சுமையாகிவிடாதிருக்கத் தாய்மொழி அவசியமாகின்றது.

3. புதிய கருத்துக்களைப் புதிய மொழியின் வழி பயில்வது, பிள்ளையின் உளநடத்தையிலே மேலதிகத் தடையாகின்றது.

4. பள்ளிக்கும் வீட்டுக்கும் இடையில் ஏற்படுத்தப்படும் இணக்கத்தினால் பிள்ளை பள்ளியில் படித்ததை வீட்டில் வெளியிடவும், பிள்ளையின் பள்ளிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கல்வி தொடர்பானவற்றிலும் கூட வீட்டிலோ அயலிலோ உள்ளவர்கள் சம்பந்தப்படவும் இது வழிவகுக்கின்றது. (UNESCO, 1953:43)

கல்வியில் சமவாய்ப்பு, சமூக நிதி என்பவற்றுக்குத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்ற கருத்து நிலையுடன் உருவாக்கப்பட்ட கன்னங்கரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி ஆணைக்குழு அறிக்கையின் நடைமுறைகூட, ஆரம்பக்கல்வி நிலையிலேயே தாய் மொழிக் கல்வியை வலியுறுத்தி இருந்தது. அதற்கு மேல் யாதேனும் இரு மொழிகளின் வழி, பெற்றோர் விருப்பத்தின் வழி கற்பதற்கு வழிவகுப்பதாகவே அமைந்திருந்தது. தமிழ் மாணவர்கள் சிங்களத்தில் பயில வழி சொன்ன அதேவேளையில் முஸ்லீம் மாணவர் கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றில் விருப்பமான ஒன்றைத் தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டது. பன்மொழிச் சமூகங்களுக்கு உகந்ததென இன்றைய சமூக உளவியல் ஆய்வு அனுபவங்கள் அறி விக்கும் பன்மொழி நிலையினை மறுக்கும் விதமாய் ஒரு மொழி ஆதிக்கத்தினை வலியுறுத்தும் பாங்கில் ஏனையவற்றின் தனித்துவங் களை மறுக்கின்ற விதமாகவே இங்கு அமைந்தமையை, அவ்வப்போது பாராளுமன்றத்தில் அரசியல் தலைவர்கள் நிகழ்த்திய உரைகளிடையே யும், அவர்கள் முன்வைத்த கல்விச் சீர்திருத்த அறிக்கைகளிடையேயும் அவதானிக்க முடியும்.

சுதந்திரத்திற்கு முன்னையகால தேசியவாதிகளின் தடத்திலேயே சுதந்திரத்திற்குப் பின்னையகால அரசியல்வாதிகளின் நிலைப்பாடும் அமைந்திருந்தது. ஐம்பதுகளில் கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக வில்மற் ஏ.பெரேரா போன்றோர்

> நாட்டின் நிர்வாகமொழியே கல்விமொழியாதல் வேண்டும், அதனைத் தீர்மானிக்காதவரை கல்வி மொழிபற்றிய கொள்கையை வகுக்க முடியாது.

என இடித்துரைத்த கருத்துக்கள் (Hansard (HR), 1950: 293) அரசகரும மொழியாக சிங்களம் மட்டும் என்ற கொள்கை உருவாகப்பயன்பட்டன எனலாம். 1950இல் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி கல்வி மொழியாகத் தேசிய மொழிகளின் உபயோகத்தைக் கொண்டுவருவ தற்கு நிலைமை பொருத்தமெனக் காணுமிடத்து அத்தகைய மாற்றத்தை நடைமுறைப்படுத்த கல்வி மந்திரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. (Educational Amendment Act No. 5 of 1951). இதன்படி 1951இல் விடுக்கப்பட்ட பணிப்புரையின்படி 1953இல் VIம் வகுப்பில் ஆரம் பித்து 1954, 1955 ஆண்டுகளில் முறையே VII, VIIIம் வகுப்புக்களின் ஊடாக மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. சிங்கள, தமிழ் பெற்றோரின் பிள்ளைகள் சிங்களம், தமிழ் என்ற ஊடகங்களில் கல்வி பயிலும் முறை கொண்டுவரப்பட்டது. சில பாடங்களுக்குப் போதிய ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக காட்டப்பட்டு VII, VIII ம் வகுப்புக்களில் விஞ்ஞானம், கணிதம் முதலியன ஆங்கிலத்தில் கற்பிக்க அனுமதிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இதுவும் 1953 நவம்பரில் மாற்றியமைக்கப்பட்டது. பின் 1956 இல் VIIம் வகுப்பிலும் VIII ம் வகுப்பிலும் எல்லாப் பாடங்களும் தேசியமொழிகளின் பிரயோகத்தை சிபார்சு செய்தது. (Sessional Paper I of, 1954)

இது போலவே தேசிய மொழிகளில் உயர்கல்வி தொடர்பாக 28 ஒக்டோபர் 1953இல் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவிடம் சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் தேசிய மொழிகளைப் பயன்படுத்தும் சாத்தியத்தை ஆராயும் பொறுப்பு ஒப் படைக்கப்பட்டது. 1954இல் வெளியிட்ட தனது இடைக்கால அறிக்கை யில் ஆணைக்குழு சுயபாஷைப் பிரயோகத்தின் கோட்பாட்டினை அங்கீகரித்தது. அந்த இடைக்கால அறிக்கையோடு ஆணைக்குழுவின் தலைவர் இணைத்திருந்த அவரது மாற்றுக் கருத்து கவனத்தில் கொள்ளப் பட்டது.

> தென் இந்தியாவில் அச்சிடப்படும் நூல்களினால் தமிழர்களுக்கு அனுகூலங்கள் இருப்பதாகவும் சிங்கள நூல்கள் போதுமானவையாக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். தனது கருத்தை வளர்த்து கவனம்செலுத்தப்படாவிட்டால் சிங்களம்பேசும் மாணவர்களைப் பிரதிகூலமான நிலைக்கு உட்படுத்தி தமிழ் பேசும் மாணவர்களைப் போன்று தரத்தினை அப்பாடங்களில் அடைவதை இயலாததாக ஆக்கிவிடும். ஓர் அரசகரும மொழிமட்டும் இருந்தால் இக் கஷ்டம் எழமாட்டாது. (Sessional Paper X of 1956 : 217)

என்று அவர் தெரிவித்த கூற்று, கல்விமொழிப் பிரச்சினையில் இன உணர்வு சார்ந்த அரசியல் சிந்தனைகள் முதன்முதலாகத் தலைதூக்கு தற்கான குறி காட்டி எனலாம்.

ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் அடிப்படையில் 1955 ஜனவரியில் அரசு வெளியிட்ட கொள்கைப் பிரகடனம் கணிதம், விஞ்ஞானம், மேற்கத்திய மொழிகள் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கு ஊடகமாகத் தேசிய மொழிகளைப் பயன்படுத்துவது என்பதை வெளிப் படுத்தியது. (ibid : 157&158) இதன்படி 1955 இல் கல்வி அமைச்சு விடுத்த பணிப்புரை 1956 ஜனவரியிலிருந்து IX ஆம் வகுப்பிலும் 1957 ஜனவரி யிலிருந்து X ஆம் வகுப்பிலும் அம்மாற்றத்திற்கு வழிவகுத்தது.

தேசிய மொழிகளில் உயர்கல்வி பற்றிய ஆணைக்குழு XI, XII ம் தரங்களில் போதனா மொழிமாற்றம் பற்றிக் கருத்தடிப்படையில் பிளவுபட்டது. பெரும்பான்மையினர் ஆதரவாகவும் சிறுபான்மையினர் (மூவர்) எதிர்த்தும் கருத்துத் தெரிவித்தனர். ஆணைக்குழுவின் இறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போது சிறுபான்மை அறிக்கை அதனுடன் புறம்பாக இணைக்கப்பட்டது. (Sessional Paper X of 1956: 176 - 209)

அதைத் தொடர்ந்து 1956 டிசம்பரில் வெளியிட்ட அமைச்சரின் பணிப்புரைக்கேற்ப 1958 ஜனவரியிலிருந்து XI ஆம் வகுப்பிலும் 1959 ஜனவரியிலிருந்து XII ஆம் வகுப்பிலும் குறிப்பிட்ட சில பாடங்கள் (கணிதம், விஞ்ஞானம், பொருளியல், அளவையியல், மேற்கத்திய மொழிகள், மேற்கத்திய இசை) தவிர எல்லாப் பாடங்களுக்குமான போதனா மொழியாக தேசிய மொழிகள் ஆக்கப்பட்டன. விதிவிலக்கான மேற்சொன்ன பாடங்களைப் போதிப்பதற்குரிய ஊடகத்தைத் தெரிவு செய்வதற்கு பாடசாலைகளுக்கு உரிமை கிடைத்தது. அவர்களின் தெரிவு ஆங்கிலமாக இருந்தமை தவிர்க்க முடியாததாயிற்று. இவ்விதமான படிமலர்ச்சியில் தேசிய மொழிகளுக்கூடாகக் கற்ற மாணவர்கள் 1959ல் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கோரும் நிலைமை உருவாகியது.

பல்கலைக்கழக மட்டத்தில் கல்விமொழிக் கொள்கையின் உரு வாக்கம் ஆரம்பத்திலிருந்தே பிரச்சினைகளை உண்டாக்கியது. இரண்டு முக்கிய பிரச்சினைகளை மையமாகக் கொண்டே இச் சர்ச்சை வளர்க்கப் பட்டுள்ளது. அவை பின்வருமாறு,

1. தேசிய மொழிகளில் போதுமான நூல்களின் பற்றாக்குறை
2. மாணவர்களிடையே ஆங்கில அறிவுக் குறைபாடு, அவர்கள் ஆங்கில நூல்கள் உபயோகிப்பதைத் தடை செய்யும். மறுபக் கத்தில் பாடசாலை மட்டத்தில் தேசிய மொழிகளில் கற்றுவந்த மாணவர்களுக்கு அனுமதி மறுப்பது, உயர்கல்வி பெறும் உரி மையை மறுப்பதாகும்.

என அமைந்தது. இந்நிலையில் வித்தியோதய, வித்தியலங்கார பல் கலைக்கழகங்களை உருவாக்கியும் இலங்கைப் பல்கலைக்கழகத்தை இணங்கவைத்தும், கலைத்துறையில் தேசிய மொழி ஊடகத்தை அமுலாக்குவதிலும் அரசு வெற்றி கண்டது. ஏனைய பாடத்துறைகளில் கொள்கையாக்கம் உறுதியானதாகக் காணப்படவில்லை. கலை, கீழைத் தேய கல்விப் பீடங்கள் தவிர்ந்த ஏனையவற்றில் நீண்டகாலத்திற்கு மாற்றங்கள் சாத்தியமில்லை என்ற கருத்தே மேலோங்கியது (The Ceylon Teacher, 1952: 163).

தேசிய மொழிகளில் உயர்கல்வி பற்றிய ஆணைக்குழு இதி லும் பிளவுபட்டே காணப்பட்டது. பெரும்பான்மையோர் மாற்றத்தை ஆதரித்து அரசுமுடிவு எடுக்க வேண்டும் எனக் கூற சிறுபான்மையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும் என அழுத்தினர் (Sessional paper X of 1956: 76 - 77).

இக்காலப்பகுதியில் உயர்கல்வி தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் போதனாமொழி பற்றி நிலைப்பட்ட கருத்துக்கள் எதனையும் கொண்டிருக்காமை குறிப்பிடத்தக்கது. 1963இல் வெளியான பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழு படிமுறையிலான மாற்றமே புத்திசாலித்தனமானதெனவும், அவ்விதமான மாற்றங்கள் தொடர்பான முடிவுகள் அந்தந்தப் பல்கலைக்கழகத்தினிடமே விடப்பட வேண்டும் எனவும் கருதியது. (Report of the University Commission, 1962) தொழில் நுட்பக் கல்வி ஆணைக்குழு 1963இல் வெளியிட்ட தனது அறிக்கையில் 5 ஆண்டுகளின் பின் நிலைமையை மீளாய்வு செய்வதென்ற நிபந்தனையுடன் ஆங்கிலத்தைத் தொடர்ந்தும் வைத்திருப்பதை விதந்துரைத்தது. (Sessional paper X of 1963: 152 - 153) 1964, 1966 ஆண்டுகளுக்குரிய அரசுக்கல்வி முன்மொழிவுகள் இரண்டும் அக்கருத்துக்களுக்கு உடன்பாடாக இருந்தன.

1. Proposals for a National System of Education 1964.
2. Proposals for Reforms in general and Technical Education 1966.

அதன்படி பல்கலைக்கழகங்கள் தத்தம் ஊடகங்களைத் தெரிவு செய்ய வழிவிடப்பட்டது. இன்றும் அந்த நடைமுறையே உண்டு. 1972இல் பல்கலைக்கழகச் சட்டம் அரசு கொள்கைக் கேற்ப பல்கலைக்கழகங்கள் செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை வெளியிட்டாலும் (Ceylon University Education Act. 1972: 74), அந்த எதிர்பார்ப்பு என்ன என்பதைத் தெளிவாகப் புலப்படுத்தவில்லை.

ஐம்பதுகளில் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தச் சட்டவிதிகள் இடைநிலைப் பாடசாலைகளில் போதனைமொழியை மாற்றும் பொறுப்பினை கல்வி அமைச்சருக்கு அளித்த நிலையில் அவ்வப்போது கல்வி அமைச்சுகள் தத்தம் இன அரசியல் லாபங்களை மனதில் கொண்டு கொள்கையில்லாத வியாக்கியானங்களைப் புதிது புதிதாக அறிமுகப்படுத்தக் காணலாம். அறுபதுகள் வரை ஆங்கில மொழி வழியான கல்வி தொடர்பாகத் தெளிவான ஒரு கொள்கை வெளிப்படாத போதிலும், 1962இல் தேசிய கல்வி ஆணைக்குழு தேசிய மொழிகளிலேயே கல்வி என வலியுறுத்தியது. (Sessional paper I of 1962 : 12). எனினும் முஸ்லீம், பறங்கிய இனப் பிள்ளைகளின் கல்விமொழி தொடர்பாகவும், தோட்டப் பாடசாலைகளில் பயிலும் தமிழ் மாணவர்கள் தொடர்பாகவும் இந்த அறிக்கை தெரிவித்த கருத்துக்களும் இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக இனவாத கல்வியாளர்களின் மதிப்பீடுகளும் இலங்கையின் இனவாதக் கல்விக் கொள்கைகளைத் துலாம்பரமாகக் காட்டிநிற்கின் றன. முஸ்லீம், பறங்கி இனப் பிள்ளைகள் சிங்கள மொழியிலேயே கற்கக் கூடிய கட்டாய விருப்புத் தேர்வு நிலையை இவை உருவாக்கின எனலாம். முஸ்லீம், பறங்கிய இன பிள்ளைகள் தொடர்பாக அன்று அகில இலங்கை முஸ்லீம் பேரவை, கல்வி அமைச்சருக்குச் சமர்ப்பித்த பிரேரணை ஒன்றில் இந்நிலை வெளிப்படையாகத் தெரியவரும்.

> உத்தியோக மொழியாக சிங்களம் இருக்கும் வரை தேசியகல்வி அமைப் பில் அதனின்றும் தப்பிக் கொள்வது யதார்த்தமாகாது, முடிந்தளவிற்கு நடைமுறைப்படுத்தக் கூடியவாறு தீவின் எல்லாப் பாடசாலைகளிலும் சிங்களமே கல்வி ஊடகமாக இருக்க வேண்டும். ஆங்கிலமும், தமிழும் கட்டாய இரண்டாம் மொழியாக அமைய வேண்டும். இது முடிவில் தேசிய ஒற்றுமைக்கும் ஒத்திசைவுக்கும் வழிவகுக்கும். வேறுபட்ட சமூகங்களுக்கிடையிலான அரசியல் சார்ந்த பிரச்சினைகளையும் இல்லாது ஒழிக்கும் (All Ceylon Muslim Council, 1964: 3).

மொழி தொடர்பாக இலங்கை முஸ்லீம்களின் அணுகுமுறையை மிக யதார்த்தமானது என்றும், Statesman like என்றும், கல்வியியல் பேரா சிரியர் ஒருவரே பாராட்டியுள்ளமை (Jeyasuriya, 1968:45) இந்நாட்டில் எந்தளவு தூரத்திற்கு இனவாதத்திற்குள் கல்வியியல் விழுங்கப்பட்டு விட்டதென்பதற்குச் சிறந்த சான்றாகும். அதுமட்டுமன்றி கட்டாய சிங்களமொழிக் கல்வியை எதிர்த்த பறங்கியர் சங்கப் பேரவையினரைக் குறுகிய பார்வை கொண்டவராக இதே பேராசிரியர் விமர்சிப்பதும் இங்கு நம் கவனம் பெற வேண்டும் (Jeyasuriya, op.cit :46) தமது இந்தக் கருத்தை நிலைநாட்ட 1885இல் கீறின் என்ற ஆங்கிலேயர் ஜேர்மனியிலோ, பிரான்சிலோ பிறந்த ஆங்கிலேயர் ஒருவர் ஜேர்மன் மொழியை அறி யாமை வெட்கப்படக் கூடியது எனக் குறித்ததைச் சுட்டி அது போலவே இலங்கையில் பிறந்த பறங்கியரும் இலங்கை மக்களின் மொழியைப் புறக்கணிப்பது ஏன்? என ஆதங்கப்படுகின்றார்.

இப்போக்கின் தீவிரத்தை, தேசிய கல்வி ஆணைக்குழுவினரின் மற்றொரு முன்மொழிவு அழுத்திக் காட்டுகிறது. அது மலையகத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிள்ளைகளது கல்விமொழி பற்றிய தாகும். சுற்றியுள்ள சிங்கள மக்களுடன் இணைப்பு ஏற்படுத்த வேண்டிய தேவையையும் சுட்டிக்காட்டி அம்மாணவர்கள் அரசகரும மொழி மூலம் (அன்று சிங்களம் மட்டும் தான் அரசகரும மொழி) கற்க வேண்டும் என அவர்கள் கூறினர். (Sessional paper XVII of 1962 : 18-20). தமது இந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கு ஆதாரமாக அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேறிய மக்களுக்கு ஆங்கிலமே போதனா மொழியாக அமைந்தது எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆனால் அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் குடியேறியவர்கள் வேற்று நாட்டவர்கள் என்ற போதிலும் கூட அங்கு மொழி வேற்றுமை இருக்கவில்லை. ஆங்கிலமே தாய்மொழியாக இருந்தது. இந்நாடுகளுக்கு இங்கிலாந்தில் இருந்தே மக்கள் சென்று குடியேறினர். எனவே அங்கு மொழிப்பிரச்சினை இடம்பெறவில்லை. ஆனால் தென்னிந்திய தோட்டத் தொழிலாளரைப் பொறுத்தவரையில் அவர்கள் முற்றாக வேற்று மொழி பேசுபவர்கள். இந்நிலையில் தாய் மொழி இல்லாத சிங்களத்தைப் போதனா மொழியாக்க வேண்டும் எனக் குறிப்பிட்டமை விநோதமான தொன்றாகும். அத்துடன் சுதந்திரத்தின் பின்னர் தோட்டத் தொழிலாளர் குடியுரிமை பறிக்கப்பட்ட நிலையில், அதாவது நிரந்தரமாக இங்கு வசிக்க முடியாத நிலையில் சிங்களத்தைக் கற்க வேண்டும் எனக் குறிப்பிட்டமை பயனற்றதொன்றாகும்.

> இத்தோட்டத் தொழிலாளர்கள் என்றாவது ஒருநாள் தமது தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டவர்கள். இந்நிலையில் இவர்கள் இங்கு பெறும்கல்வி இந்தியாவில் பயனற்றதாகும். எனவே ஜெயசூரியா அவர்களின் இக்கூற்று கவலைக்கிடமானதொன்றே (சொர்ணவல்லி, 1988: 47)

தமிழ் மலையகத்தொழிலாளரை சிங்களமயமாக்கும் ஜெயசூரியாவின் இந்தக் கருத்து 1966ஆம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கையிலேயே தெளிவான வரையறையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

1972இல் புதிய பல எண்ணக்கருக்களுடன் வெளியான கல்விச் சீர்திருத்தங்களில் கூடத் தாய்மொழி தொடர்பான கருத்து நிலை, கல்விமொழி என்ற புதிய வியாக்கியானத்தினால் அர்த்தமிழந்து போகக் காணலாம். இக் கொள்கையின் படி,

> சிங்களம் மூலம் கல்வி பயிலாத மாணவர்களுக்கு சிங்கள தேர்ச்சியினைக் கட்டாயமாக ஊட்டுவது பற்றி அமைச்சு கருத்துச் செலுத்தியுள்ளது. இத்தீர்மானம் கல்விக் கொள்கை பற்றிய ஒன்றாக அன்றி, அரசியல் கொள்கை பற்றியதாகவும் இருப்பதால் இப்போது இப்படியான நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அமைச்சுக்கு இல்லை. கட்டாயமெனும் பதத்தைப்பிரயோகிக்காமல் பெற்றோரின் கோரிக்கையையும் மாணவரின் விருப்பத்தையும் அனுசரித்து மூன்றாம் மொழியைக் கற்பதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கும் (கல்வியின் புதிய பாதை, 1922: 16-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது கல்வி முறைக்கு புத்துயிரளித்தது, தாய்மொழிப் போதனை. ஆனால் நமது கல்வி மரபில் இக்கல்வி அடிப்படை உண்மை காலத்துக்குக் காலம் மாற்றம் பெறுகின்றது. தாய்மொழி எனும் சொல் முதல் மொழி எனும் சொல்லாக மாறி, இன்று கல்விமொழி என்ற சொல்லால் விளக்கப்படுகின்றது. தாய்மொழி என்ற சொல்லும், முதல்மொழி என்ற சொல்லும் 'கல்விமொழி' என்ற சொல்லும் ஒரே கருத்தினைத் தரா. தாய்மொழி என்பதற்குச் சிங்களம் அல்லது தமிழ் எனும் கருத்துத் தரப்படுகின்றது. இது தாய் மொழிக் கொள்கைக்கு முரணானதாகும். (சந்திரசேகரம், 1975 : 204). புதியமொழி ஒன்றை போதனா மொழியாக்குவது உளவியல் ரீதியில் கண்டிக்கத்தக்கது. அத்துடன் இச் சீர்திருத்தத்தில் எந்த நாட்டிலும் சிறுபான்மை மக்களின் மொழி பெரும்பான்மை மக்களுக்குக் கட்டாயமாகக் கற்பிக்கப்படுவதில்லை எனக் கூறப்பட்டுள்ளமை ஏற்புடையதல்ல என்பதனை பல முன் உதாரணங்களின் துணையோடு நிறுவுவார் பேராசிரியர் சந்திரசேகரம்.

> நான்கு மொழிகளையும் மூன்று உத்தியோக மொழிகளையும் கொண்டுள்ள சுவிற்சலாந்தில் ஒவ்வொரு மாணவனும் தனது தாய்மொழியையும் மூன்று உத்தியோக மொழிகளில் ஒன்றையும் கட்டாய பாடங்களாகக் கற்க வேண்டும். சுவிற்சலாந்தில் 70% மான மக்கள் ஜேர்மன் மொழியைத் தாய் மொழியாகவும் 18% மான மக்கள் பிரெஞ்சு மொழியைத் தாய்மொழியாகவும் 10% மான மக்கள் இத்தாலிய மொழியைத் தாய் மொழியாகவும் கொண்டுள்ளனர். ஜேர்மன் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டோர் பிரஞ்சு அல்லது இத்தாலி மொழியைக் கட்டாய மொழியாகக் கற்க வேண்டும் (சந்திரசேகரம், 1975: 205)

உண்மையில் பெற்றோர் விரும்பும் மொழியென்றும், முதல்மொழி என்றும், போதனா மொழியைக் குறிப்பிடும் இன்றைய இலங்கையின் கல்வி மொழிக் கொள்கையானது எவ்வித அறிவியல் அடிப்படையுமில்லாதது என்பதும், இக்கல்விக் கொள்கையினால் உணரப்படுகிறது. கூடவே சிறுபான்மையினர் மட்டும் பெரும்பான்மையோர் மொழியைக் கற்க நிர்ப்பந்திக்கும் அதேவேளை பெரும்பான்மையோர் இன மேலாண்மைக் கொள்கைக்குத் துணைபோகின்ற நிலைமையும் இன்று வரை இனமுரண் விரிய அடிப்டைகளாவன. பல்லின சமூகங்களில் சுமுகமான உறவுநிலை வளர்ச்சிகண்ட நாடுகள் பரஸ்பர மொழி கற்றலின் அடிப்படையில் தமது உறவுகளை வளர்த்த பாடம் இங்கு உணரப்படவில்லை. முன்னர் குறித்தவாறு 1972இன் கல்விச் சீர்திருத்தங்களும், தமிழ்ப் பிள்ளைக்குக் கட்டாய பாடமாக சிங்களத்தை கற்பிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபார்சு செய்த அதே வேளையில் சிங்களவருக்குத் தமிழ் கற்பித்தலைக் கட்டாயமாக்க விரும்பவில்லை. அன்றைய அரசியல் சூழ்நிலையின் அழுத்தங்கள் காரணமாக தாய் மொழிக்குப் பதிலாக வேறு ஒன்று (அரச கரும மொழி) கையாளப்படலாம் என்ற சிந்தனையா என்று கேட்கத் தூண்டுவது நியாயமானதே. 1981 இன் கல்விச் சீர்திருத்த முன் மொழிவு களில் 'முதலாம் மொழி' என்ற பிரயோகம் அதே வியாக்கியானத்துக்கு இடம் கொடுப்பதை நிராகரிக்க முடியாது.

1990இல் இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சாகவும், இன அசைவுக்கான வழிமுறையாக சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் பரஸ்பரம் இருசாராருக்கும் வரி வடிவங்களும் கற்பித்தலும், பேசப்பழக்கலும் வலியுறுத்தப்பட்டிருக்கக் காணலாம். (Report of the Presidential Commission of youth 1990:83).

இணக்கமான இன உறவுக்குச் சாதகமான இந்த நிலைமைகளை மறுத்ததன்வழி, இந்நாட்டின் கல்வியியலாளர்கள் உள்ளிட்ட கொள்கை வகுப்பாளர் யதார்த்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டு தீர்வு காண்ப தற்கு பதில், கடந்த கால அனுபவங்களிலிருந்து பாடம் படிப்பதற்குப் பதில், தாமே இனவாத உணர்வு அலைகளுக்குள்ளாகிப் போயினர். இதன் விளைவுகளுக்கே இன்று இந்நாடு பலியாகியிருக்கின்றது (Arumugam, 1992:15).

## இணைப்பு மொழி

இலங்கையின் மொழிக்கொள்கைகளின் விளைவாக எழுந்த இன ரீதியான துண்டாட்டங்களை சரிப்படுத்தும் சிந்தனைகளிடை 'இணைப்பு மொழி' என்ற எண்ணக்கரு முதன்மை பெறுகின்றது. சிங்களம் பேசும் மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையிலான உரையாடலுக் கும் புரிந்துணர்வுக்கும் இந்த இணைப்புமொழி என்னும் சிந்தனை கைகொடுக்கும் என நம்பப்பட்டது. எனினும் எந்த மட்டத்தில் எவர் களிடையே இணைப்பு என்பதில் தெளிவான போக்கு இன்மையாலும் குறுகிய அரசியல் நோக்கிலான செயற்பாடுகளாலும் இணைப்புமொழி என்ற இவ் எண்ணக்கரு செயல்வடிவம் பெறுவது, கேள்விக்கிட மாகியது.

மொழிவழியாக வேறுபாடுகளைக் களைந்து இணக்கம் காணு வதின் அவசியம் எழுபதுகளிலேயே உணரப்படுவதைக் காணலாம். இதனை 1972இல் வெளியான கல்வியின் புதிய பாதையில் காணமுடியும். ஆனால் பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என்ற பேதங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இணைப்புமொழி விரும்பியவருக்கு மட்டும்' என்ற குறுகிய நோக்கிலான மேலாண்மை அரசியலும் (கல்வியின் புதியபாதை 1972: 16-17) இணைப்பு மொழி என்ற எண்ணக்கருவின் பயன்பாட்டினை அர்த்தம் இழக்கச் செய்தமை வரலாறாகும்.

1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசு, ஒருபுறம் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக பயன்படுத்துவது பற்றியும், மறுபுறம் சிங்களம் அல்லது தமிழை இணைப்பு மொழியாக்குதல் பற்றியும் கருத்தில் கொண்டது. எனினும் நடைமுறையில் ஆங்கிலத்தின் பாவனையே மிஞ்சிநிற்கின்றது. 1987இல் இடம்பெற்ற இந்திய - இலங்கை உடன்படிக்கை அமுலாக்கத்துடன் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பின் 13வது திருத்தம் தமிழையும் அரசமொழியாக உயர்த்தியதுடன் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்கவும் வழிசமைத்தது. தொடரும் காலங்களில் அவ்வப் போது இணைப்பு மொழிபற்றிப் பேசப்பட்டாலும் நடைமுறையில் தெளிவின்றியே காணப்பட்டது. ஆங்கிலம் உலக தொடர்பு மொழியாக அறிவு தேடலுக்கான மொழியாக அமையலாம். ஒருவேளை உயர் குழாத்தினருக்கிடையிலான தொடர்புக்கும் வழி சமைக்கலாம். ஆனால் நாட்டின் அனைத்து மக்களுக்குமான இணைவு என்பது இரண்டு தேசிய மொழிகளைப் பரஸ்பரம் கற்றுக் கொள்வதன் வழிதான் சாத்தியமாகும்.

1997 இன் பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள், சிங்கள. தமிழ் மாணவர்கள் பரஸ்பரம் ஒருவர் மொழியை மற்றவர் இரண்டாவது தேசிய மொழி என்ற விதத்தில் கற்றுக் கொள்வது பற்றி தெரிவித்த அம்சம் குறிப்பிடத்தக்கது (National Education Commission Reforms in General Education, 1997:11) ஆனால் அதேவிதப்புரை கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் (6 தொடக்கம் 9 வரை) ஆசிரியர் கிடைப்பதற்கு ஏற்ப என முடிவது நடைமுறைப்படுத்துவதில் உள்ள உறுதியின்மையையே பிரதிபலிக்கின்றது எனலாம். மேலும் சிரேஷ்ட இடைநிலைமட்டத்தில் (9 தொடக்கம் 11 வரை) இந்த தேசியமொழிகளை விருப்பு பாடங்களாக்கும் விதப்புரை சற்றும் கொள்கை இலக்கு இல்லாத நிலையையே காட்டி நிற்கின்றது (ibid: 12).

இந்நிலையில் புதிய கல்வி சீர்திருத்த ஆணைக்குழுவின் அடியாக ஜனாதிபதி 2000ஆம் ஆண்டு ஜனவரி முதல் முதலாம் வகுப்பில் இருந்து சிங்கள மாணவர்களுக்குத் தமிழும் தமிழ் மாணவர்களுக்குச் சிங்களமும் கற்பிக்கப்படல் வேண்டும் என முன்வைத்துள்ள சிபார்சு தேசிய மொழிகளே இணைப்பு மொழிகளாகும் என்ற இயல்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு வித்திடுகின்றன. எனினும் ஆண்டு ஒன்று கடந்தும் இதன் அமுலாக்கம் பலவீனமான நிலையில் உள்ளமையே யதார்த்தமாகும். இதனைவிட 'ஆங்கிலம் தொடர்பு மொழியாக' என்ற புதிய கோஷம் இப்பொழுது எழுப்பப்படுவதையும் காணலாம்.

இந்நிலை யதார்த்தமாக இன்றைய அரசியல் நிலைமைகள் திருத்தம் காணவேண்டியது அவசியமாகும். தேசிய உணர்வும், துணிவும் அமைதியான வாழ்வுக்கான மனப்பாங்கும் பொறுப்பிலுள்ளவர்களுக்கு ஏற்படும் போதே இணைப்பு என்ற கனவு நனவாகும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 5

# இனவழி அசமத்துவங்கள்

இருபதாம் நூற்றாண்டு இலங்கையில் கல்விப் போக்கின் எதிரொலி களை தேர்ந்தெடுத்த மைய நிலைமைகளான உயர்கல்வியின் இன ரீதியான பாகுபாடு, கல்விவழியான தொழில்வாய்ப்புக்களில் பாரபட்சம், பாடநூல்களின் வழியான இன உணர்வு, இன முரண்பாட்டில் ஆசிரியர், கல்விக்கான வளமும் வாய்ப்புக்களும், இன முரண்போரின் தாக்கங்கள் எனும் தலைப்புக்களின் கீழ் விரிவாக இவ் இயல் நோக்குகின்றது.

## உயர்கல்வியிலே பாகுபாடு

இலங்கையின் பல்கலைக்கழக அனுமதி முறையானது தொடக்கத்தில் முழுக்க முழுக்க தகுதியின் அடிப்படையில் போட்டிப் பரீட்சையின் மூலமே வழங்கப்பட்டது. எழுத்துப்பரீட்சைக்குப் புறம்பாக துணை வேந்தர், பேராசிரியர்கள், துறைத் தலைவர்களைக் கொண்ட நேர்காணல் முறையைக் கொண்டிருந்தது. முழுக்க முழுக்க கல்வித்திறனே பல் கலைக்கழக அனுமதியின் அடிப்படையாயிருந்தது. 1965ஆம் ஆண்டு வரை இந்த நடைமுறையே காணப்பட்டது. 1966ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சட்டத்தின் மூலம் உயர்கல்விக்கான தேசிய அவை ஆரம் பிக்கப்பட்டதிலிருந்து பல்கலைக்கழக அனுமதியில் அரசியல் அதிகாரத் தின் செல்வாக்கு இடம் வகுக்கப்பட்டது. பல்கலைக்கழக அனுமதி ஒழுங்குபடுத்தலை நோக்கமாகக் கொண்ட இவ் அவை உயர்கல்வி நிறுவனங்களையும் மத்திய அரசினையும் இணைக்கின்ற பணியினைச் செய்யும் என்ற சபையின் தலைவர் ஜி.பி. மலலசேகரா (Malalasekara, 1968: 52-53) வின்கருத்தினையும் இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

உயர்கல்வியில் அரசியல் தலையீட்டுக்கு வழிவகுத்ததின் விளை வாக தவிர்க்க முடியாதபடி இலங்கையின் இன அரசியல் பாகுபாடுகள் கல்விப்புலத்தினுள் மையம் கொண்டன. 'சிங்களம் மட்டும்' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தின் வழி பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியாளர்கள் இலங்கையின் ஏனைய இனக்குழுக்களை ஆதிக்கம் செய்வதற்காக, ஓரம் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே உயர்கல்வியில் இன ரீதியான பாரபட்சங்களை காணமுடிகின்றது. சிங்களம் உத்தியோக மொழியான போதே இலங்கையின் நிர்வாக சேவையில் தமக்குரிய இடங்கள் மறுக்கப்பட்டு, பாதிப்புக்குள்ளாகும் நிலையினை தமிழர்கள் உணர்ந்தார்கள். இதன் விளைவாக பெருமளவில் தொழில்சார் கல்வி நெறிகளை இவர்கள் நாடியமை கல்வியியல் வரலாற்று ஆய்வுகளால் உறுதி செய்யப்படுகின்றது. (Jeyasuriya, 1965:92)

> சிங்களத்தை தேசிய மொழியாக்கியதைத் தொடர்ந்து பொது நிர்வாகத்துறையில் தொழில் வாய்ப்புத் தமக்கு கிடைப்பது அரிதாகலாம் என்ற நிலையில் இலங்கைத் தமிழர் தொழில் சார்ந்த கல்வி நெறிகளில் பெரிதும் கவனத்தைத் திருப்பினர்

என டீ.சில்வா (De. Silva, 1978:86&87) குறிப்பிடுவதனை இங்கு கருத்தில் கொள்ளலாம்.

1970 திலிருந்து பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கொள்கைகள், தமிழ் மாணவர்களின் தொழில்சார் உயர்கல்வி நெறிகளான பொறியியல், மருத்துவம் போன்றவற்றினை மட்டுப்படுத்தும் தந்திரங்களாக அமைந்து, இலங்கையின் இன உறவுகளையும் சரி செய்யமுடியாத அளவுக்கு வெடிக்க வைத்தமை இன்று இலங்கையின் இனவாத கல்வி வரலாறாகியுள்ளது.

1969இல் நடைபெற்ற கல்வி பொதுத்தராதர (உயர்தர) பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழமை போல் அறிவிக்கப்பட்ட போது அதிகளவில் பொறியியல் துறைக்கு தமிழ் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமையைச் சுட்டி இது தமிழ் பரீட்சகர்களின் பாரபட்ச சலுகையினால் நேர்ந்ததென சிங்கள இளைஞர் இயக்கங்களினூடாக சிங்கள இனவாதம் ஓங்கி ஒலித்தபோது, திறமையின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதி என்ற முன்னைய கோட்பாடு தன்னிலை இழந்தது. முன் வழங்கப்பட்ட அனுமதிப் பட்டியல் இரத்துச் செய்யப்பட்டு புதிய பட்டியல் அறிவிக்கப்பட்டது. புதிய பட்டியலுக்காக கல்வி அமைச்சு தந்த விளக்கங்கள், பொருத்தமற்றனவாகவும், செய்ததை நியாயப்படுத்தும் கதைகளாகவும் இருந்தன. எடுத்துக்காட்டாக பொறியியல்துறையில் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு 100 தமிழ் மாணவர், 58 சிங்கள மாணவர், 03 முஸ்லீம் மாணவர், 01 பறங்கி இன மாணவர் என தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய பாஷைக்கல்வி என்ற நிலையில் மொழிவாரியாக வகுப்புக்களை நடத்த மேலும் மாணவர்களை எடுக்க வேண்டியுள்ளது என அறிவிக்கப் பட்டமையைக் கவனத்தில் கொள்ளலாம். 58 சிங்கள மாணவர்களை 51.7%த்தால் அதிகரித்து 146 ஆக்கிய அதேவேளை, தமிழ் மாணவர்களை 13% த்தால் மட்டும் அதிகரித்து 113ஆகக் கொண்டுவந்தமை கவனத்திற் குரியது (Arumugam, 1982:48). உண்மையில் தொடர்ந்தும் பொறியியல் கல்வி ஆங்கில மொழி மூலம் வழங்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது இந்தக் காரணகாரிய விளக்கம் எல்லாம் இன ரீதியான வேறுபட்ட வெட்டுப்புள்ளி நிர்ணயத்தை நியாயப்படுத்துவதற்காகவே என்பது வெளிப்படையானது.

1969/70, 1970/71 ஆண்டுகளுக்கான பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக இனரீதியான வெட்டுப்புள்ளிகளின் விபரத்தைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை: 5.1
பல்கலைக்கழக அனுமதி தொடர்பான இனரீதியான வெட்டுப்புள்ளி
1969/1970, 1970/1971

| கற்கைநெறி | சிங்களவர் | | | தமிழர் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1969/70 | 1970/71 | வெட்டுப் புள்ளி | 1969/70 | 1970/71 | வெட்டுப் புள்ளி |
| 1. பொறியியல் பேராதனை, மொறட்டுவை | 51.7 | 54.6 | 227.212 | 48.3 | 42.3 | 250.232 |
| 2. மருத்துவம் | 48.9 | 54.3 | 229 | 48.9 | 40.8 | 250 |
| 3. பல்மருத்துவம் | 52.4 | 40.4 | 229 | 38.1 | 57.1 | 250 |
| 4. விவசாயவிஞ்ஞானம் | 44.7 | 55.5 | 171 | 47.4 | 37.7 | 184 |
| 5. மிருக வைத்தியம் | 27.7 | 71.4 | 181 | 66.7 | 23.8 | 206 |
| 6. உயிரியல் விஞ்ஞானம் | | | 175 | | | 184 |
| 7. கட்டிடக்கலை | 69.7 | | 180 | 27.6 | | 194 |
| 8. பௌதீக விஞ்ஞானம் | | | 183 | | | 204 |
| மொத்த விஞ்ஞானம் | 57.7 | 58.2 | | 38.8 | 38.2 | |

மூலம்: Hansards Vol. 93/BK.5 of 6.1.71, Cols: 515-518 13 (1) BK of 5.12.74 Cols. 1277-78 and C.R.de Silva, Srilanka Journal of Social Studies Vol, 1, No.2 of 1978:105.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி, திட்டமிட்ட இந்த நடவடிக்கையினால் குறைக்கப்பட்டது. இன ரீதியாக தமிழ் மாணவர் களைப் பாதித்த இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் இக்காலப் பகுதியில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் முக்கியமானவை. ஏ.சி.எஸ். ஹமீட், வீ.தர்மலிங்கம், சி.எக்ஸ். மாட்டின் போன்றோர் தரப்படுத்தல் என்ற நடைமுறையின் அநீதியை எடுத்துப் பேசியிருந்தார்கள். (Hansard, 1974 Cols: 1279&1280)

> ஒரு இனம் எண்ணிக்கையில் சிறுபான்மை என்பதற்காக அவர்களுக்கான அனுமதியை மறுக்கக் கூடாது.

என்பது ஏ.ஸீ.எஸ்.ஹமீடின் (Hansard, 1973 Cols: 1506&1507) கருத்தாக முன்வைக்கப்பட்டிருந்தது. இதே விவாதத்தில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சி பாராளுமன்ற அங்கத்தினரான வீ.தர்மலிங்கம் தரப்படுத்தலின் இனவாத அடிப்படைகளை துல்லியமாக அம்பலப்படுத்தினார்.

> தரப்படுத்தல் என்ற கொள்கைக்குப் பின்னால் கல்வி சார்ந்த கருத்து நிலை ஏதும் இல்லை, இது பெரும்பான்மை சமூகத்தின், இன வாத அரசியல் கோரிக்கையை திருப்திப்படுத்தும் நடவடிக்கையே, இது சமூகத்தின் மீது இழைக்கப்பட்ட மிக அநாகரீகமான அநீதி.

எனக் குறிப்பிட்டிருந்தார். (Hansard, 1974 Cols: 1279&1280) இந்த விவாதத்தில் ஒரு சிங்களப் பாராளுமன்ற அங்கத்தவர்கூட தர்க்கரீதியான நீதியை முன்வைக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தரப்படுத்தல் என்ற கணித முறையானது இங்கே மொழிவழி மட்டுப்படுத்தலாக, குறித்த ஒரு இனத்தினைப் பாதிப்பதாகவும், மற்றைய இனத்திற்கு சலுகைவழங்குவதாகவுமே அமைந்தமை மேலும் பல ஆய்வறிக்கைகளினால் நிறுவப்பட்டது. (Sivasithamparam, M, 1974) 1971இல் இருந்து 1973 வரை வழக்கிலிருந்த தரப்படுத்தலுக்கு மேலதிகமாக சிங்கள அரசியலின் மற்றொரு கோரிக்கையான மாவட்ட ரீதியான 'கோட்டா' என்ற முறைமையும் 1974இல் அறிமுகப்படுத் தப்பட்டது. கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கும், பின்தங்கிய பிரதேசங்களுக்கும் சமூக பொருளாதார அசைவினை அளிப்பதற்காகவே இந்நடைமுறை என விளக்கமும் தரப்பட்டது. (Bandara, 1974) கல்வி யில் சமமின்மை பிரதேச ரீதியில் காணப்படுவது உண்மையே எனினும், இந்த சமமின்மையை நீக்குதற்கு ஒருவரின் வாய்ப்பினை மட்டுப் படுத்தி மற்றொருவருக்குத் தருதல் என்ற தரப்படுத்தல் செயல்பாட்டி னால் தமிழ் மாணவர்களே மேலும் பாதிப்புக்குள்ளாயினர். இதனைப் பின்வரும் அட்டவணை புலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 5.2

பல்கலைக்கழக அனுமதிபெற்ற தமிழ்மாணவர்கள் 1969-1975 வரை

| கற்கை நெறிகள் | 1969/70 | 1970/71 | 1971/72 | 1973 | 1974 | 1975 |
|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞானம் சார்ந்த கற்கைநெறிகள் | 38.8 | 35.3 | 33.6 | 25.9 | 20.9 | 19.5 |
| பொறியியல் | 48.3 | 40.8 | 34.7 | 24.4 | 16.3 | 14.2 |
| மருத்துவம் | 48.9 | 40.9 | 39.3 | 36.9 | 25.9 | 17.4 |
| கலை | 07.5 | 07.6 | 04.8 | 06.1 | 10.0 | 10.0 |

மூலம்: Second Annual Report of the University Grants Commission 1980.

அட்டவணை : 5.3

பல்கலைக்கழக அனுமதிபெற்ற சிங்கள மாணவர்கள் 1969-1975 வரை

| கற்கை நெறிகள் | 1969/70 | 1970/71 | 1971/72 | 1973 | 1974 | 1975 |
|---|---|---|---|---|---|---|
| விஞ்ஞானம் சார்ந்த கற்கைநெறிகள் | 57.7 | 58.2 | 67.0 | 73.1 | 75.1 | 70.0 |
| பொறியியல் | 51.7 | 54.6 | 62.4 | 72.1 | 78.8 | 83.4 |
| மருத்துவம் | 48.9 | 54.3 | 56.1 | 58.8 | 70.6 | 78.9 |
| கலை | 88.4 | 88.9 | 92.6 | 91.5 | 86.0 | 85.6 |

மூலம்: Second Annual Report of the University Grants Commission 1980.

விஞ்ஞானம் சார் கற்கை நெறிகள், பொறியியல், மருத்துவம் ஆகிய வற்றில் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி வீதம் குறைந்து செல்ல, சிங்களமாணவர்களின் அனுமதி வீதம் அதிகரிப்பதனைக் காணலாம்.

இன ரீதியாக தமிழ் மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாக் கப்பட்ட இதே வேளையில் ஏனைய சிறுபான்மை இனங்களான முஸ்லீம்கள், மலாய் இனத்தவர் ஆகியோரின் உயர் கல்விக்கான வாய்ப் புக்களை அதிகரிக்கும் முயற்சிகளில் பெரிதும் கவனம் செலுத்தப் பட்டது. எனினும் தரப்படுத்தலினதும், மாவட்டக் கோட்ட முறை யினதும் விளைவால் முஸ்லீம்களின் மொத்த அனுமதி வீழ்ச்சி ஏற் பட்டது. இந்த விடயம் அன்றைய அமைச்சரின் சிறப்பான கவனத்தைப் பெற்றது மட்டுமன்றி 1973இல் முஸ்லீம்களுக்கு மாவட்ட கோட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை பயன்படுத்தப்பட மாட்டாது என பிரகடனம் செய்யும் அளவிற்கு, இன உணர்வு தொழிற்படக் காணலாம். (Mahumud Badiuddin, 1973)

இதேவேளை வசதி குறைந்த பின்தங்கிய மக்களிற்கான சிறப்பான அனுதாபங்களோ, கவனிப்புக்களோ காணப்படவில்லை. கல்வியிலும், வாழ்க்கைத்தரத்திலும் மிகவும் பின்தங்கியுள்ள மலையக மக்களைப் பொறுத்தவரை சிறிதும் செலுத்தப்படாமை இங்கு கவனத்தில் கொள்ளப் பட வேண்டியதொன்றாகும். 1950களில் மொத்தக் குடித்தொகையில் 12.4% மாக இருந்த மலையகத் தோட்டத் துறை சார்ந்த தமிழர்களின் பல்கலைக்கழக அனுமதி மொத்தப் பல்கலைக்கழக இடங்களில் 1.4% மாக இருந்தது. 1963இல் இவர்கள் குடித்தொகை 10.6%மாக இருக்கை யில் 1967இல் பல்கலைக்கழக இடங்களில் 0.1%மட்டுமே இவர்களுக் கானதாகக் காணப்பட்டது (Uswatta, 1974: 293) தரப்படுத்தலும், மாவட்ட ரீதியான கோட்டாவும் இவர்களது உயர்கல்வி அனுமதியை மேலும் பாதித்ததுடன் மாவட்டக் கோட்டா முறையில் இவர்களதும் ஏனைய சிறுபான்மைக்குழுக்களினதும் பாதிப்பிலே பெரும்பான்மை இனக்குழு அதிக வாய்ப்புக்களைப் பெற்றது. 1974ல் நாட்டின் 71.9%மாக இருந்த சிங்கள இன மாணவருக்கு 75.1%மான விஞ்ஞானம்சார் இடங்கள் கிடைத்ததும், 78.8%மான பொறியியல்துறை இடங்கள் கிடைத்ததும், 70.6%மான மருத்துவத்துறை இடங்கள் கிடைத்ததும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியவை. 1975இல் இந்நிலை மேலும் அவர்களுக்குச் சாதகமாகவே அமையக் காணலாம். விஞ்ஞானம்சார் இடங்கள் 78% மாகவும், பொறியியல் 83.4%மாகவும், மருத்துவம் 78.9%எனவும் அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம்.

இனரீதியான இந்தப் பாகுபாடுகளின் விளைவாக நாட்டின் இன உறவு முரண் வளர்கின்ற நிலையில், 1975ஆம் ஆண்டில் அமைச்சர் பீற்றர்கெனமன் தலைமையில் ஒரு விசாரணைக்குழுவை அரசாங்கம் அமைத்தது. தரப்படுத்தல் தொடர்பான பல்வேறு முறைப்பாடுகளை யும் நன்கு கேட்டறிந்து பகுப்பாய்வு செய்த இக்குழுவானது மொழி வழித் தரப்படுத்தல் நாட்டின் இனங்களுக்கிடையில் பரஸ்பர சந்தேகம், நம்பிக்கையின்மை, பாரபட்ச நிலைகளை விளைவிப்பதால் 1975ஆம் ஆண்டில் இருந்து அதனை நிறுத்தி விடவேண்டுமென சிபார்சுசெய்தது. தரப்படுத்தலினாலும், மாவட்டக் கோட்டாமுறையினாலும் இன ரீதியாக தமிழர்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டதனை பல ஆய்வாளர் கள் உறுதிசெய்தனர் (de. Silva, 1974) (சுனில் பஸ்தியன், 1985).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976இல் இந்த அறிக்கைகளினடியாக 70% திறமை அடிப்படையிலும, 30% மாவட்டப்பங்கீட்டு அடிப்படையிலும், இதனுள்ளும் 15% பின்தங்கிய மாவட்டங்களுக்கு என முன்வைக்கப்பட்ட (பீற்றர்கெனமன், 1975) சிபார்சும் சிங்கள இனவாதிகளால் நிராகரிக்கப்பட்டது. மறுதலையாக 70% மாவட்டப்பங்கீட்டுத் திட்டமாகவும், 30% திறமைக்காகவும் அமையலாம் என இவர்கள் புதிய சிபார்சை முன்வைத்தனர். அமைச்சரவை மட்டத்தில் நடந்த விவாதங்களின் பின் சிங்கள ஆர்வமே முதன்மை பெற, மொழி ரீதியான தரப்படுத்தல் மாற்றியமைக்கப்பட்ட மாவட்டக் கோட்டா முறை என்பவற்றோடு 30% திறமை அடிப்படையில் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த வேறுபட்ட அனுமதி முறைகள் சில மாவட்டங்களில் அனுமதிபெறுபவர் தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தின. கூடவே சில பின்தங்கிய மாவட்டங்கள் இதனால் பயனடைந்திருக்கலாம். ஆயினும் மறுபுறத்தில் அபிவிருத்தி அடைந்த பகுதிகளாக கருதப்படும், கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இம்முறை பாதகமாகவே அமைந்தது. ஆனால் இந்த மாவட்டத்தில் இருந்துதான் தாழ்ந்த சமூகப்பின்னணியுடைய மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற முயற்சிப்பதைக் காண முடிகின்றது. இப் பகுதிகளின் நகரவாக்கம், கல்வியின் பரம்பல்நிலை அதாவது பாடசாலைகளின் எண்ணிக்கை போன்ற பல அம்சங்கள் இம் மாணவர்கள் 12ம் தரம் வரை கல்வியை மேற்கொள்ள உதவுகின்றன. ஆனால் மாவட்டக் கோட்டா முறையானது இவர்களுக்குப் பாதகமானதாக உள்ளது. விஞ்ஞான பீட அனுமதிக்கு முரணாக அனுமதி முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் கலை சம்பந்தமான பீடங்களுக்குரிய அனுமதியின் இன ரீதியான அமைப்பில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அதே வருடங்களுக்குரிய விகிதாசாரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை: 5.4

பல்கலைக்கழக அனுமதி-இனரீதியான வீதம் 1969/1970-1978

| பல்கலைக்கழக அனுமதி | 1969/ 1970 | 1970/ 1971 | 1971/ 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்களம் | 89.1 | 89.7 | 92.7 | 91.8 | 86.0 | 85.6 | 86.3 | 85.8 | 83.8 |
| தமிழ் | 6.9 | 7.0 | 5.9 | 5.9 | 10.1 | 10.1 | 8.6 | 9.2 | 15.3 |

மூலம்: பஸ்தியன், 1985: 258

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எனவே எழுபதுகளில் எமது உயர்கல்வி முறைகளில் தோன்றிய அனுமதி சம்பந்தமாக பல விதிகளும் சிங்களவர் தமது பிள்ளைகளுக்கு விரும்பத்தக்க பீடங்களில் அனுமதி பெற்றுக் கொள்வதற்கென மேற் கொண்ட வழிகளேயாகும்.

என்ற சுனில் பஸ்தியானின் (1985: 258) கருத்திடை இனவாத முடிவு களின் வர்க்கசார்பும், குறுகிய நோக்கும் மேலும் வெளிப்படுத்தப்படக் காணலாம்.

இத்தகைய ஒரு பின்னணியில், 1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக்கட்சி தன் கொள்கைப் பிரகடனத்தில் தமிழர்களுக்குப் பல்வேறு பாரபட்சங்களுடன் கல்வி விடயத்திலும் உள்ள பாரபட்ச நிலைகளை ஒப்புக்கொண்டு அதற்குப் பரிகாரம் தேடப்படும் என்ற உறுதியினையும் அளித்தது. பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே தலைமையில் ஒரு குழு இது தொடர்பாக அமைக்கப்பட்டது. அதனது அறிக்கை வெளியிடப்படாத போதும் தகவல் அறிக்கை ஒன்றின் பிரகாரம் 30% திறமை அடிப் படையிலும், 55% மாவட்டப்பங்கீட்டு முறையிலும், மிகுதி 15% பின் தங்கிய மாவட்டங்களுக்குமெனஅறிவிக்கப்பட்டது. இப் புதிய அனுமதி முறைக்கு எதிராக சிங்கள இளைஞர்களைத் திரட்டும் இனவாத அலைகள் மீண்டும் தெற்கில் பல பிரச்சாரங்களை மேற்கொண்டன. மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளின் ஆசீர்வாதத்துடன் இந்த எதிர்ப் புக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அரசு தன் முடிவில் உறுதியாக இருந்தது. இதன் விளைவாக மருத்துவம், பொறியியல் துறைகளுக்குத் தமிழ் மாணவர் தெரிவானது மீண்டும் அதிகரிக்க வழி ஏற்பட்டது. மீண்டும் சிங்களத் தேசியவாத இனவாதக் குழுக்கள் தமது சுயரூபத்தை வெளிப்படுத்தத் தொடங்கின. தமிழ் மாணவர்களுக்குப் புள்ளிகள் அதிகம் வழங்கியதாக தமிழ்ப்பரீட்சகர்கள் மீது குற்றம் சுமத்தலை அரச யந்திரங்களின் துணையுடன் மேற்கொள்ளத் தொடங்கின. குறிப்பாக சிங்கள இனவாதத்தின் குரலாக அன்றைய அமைச்சில் இருந்த அமைச் சரான சிறில் மத்யூ 1977ஆம் ஆண்டு விலங்கியல் விடைத்தாளின் குறித்த ஒருகேள்விக்கு தவறான முறையில் புள்ளிகள் வழங்கப்பட்டதாகக் கூறித்தமிழ் பரீட்சகர்களை மோசடிக்காரர் என்று குற்றம் சாட்டி தரப் படுத்தலின் அவசியத்தை மீண்டும் முன்வைத்து அனைத்து தொடர்பு சாதனங்களிலும் இன வாதப்பிரசாரங்களை மேற்கொண்டார்.

சிறில்மத்யூவின் குற்றச்சாட்டின் பொய்மையும், திரிபுநிலையை யும் எடுத்துரைக்கும் விதமாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் விவாதங்கள் அமைந்திருந்தன. குற்றச்சாட்டுக்குள்ளான விலங்கியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையின் தமிழ் பிரதம பரீட்சகர்களில் ஒருவரான கலாநிதி மனோ. சபாரத்தினம் அவர்கள் அமைச்சரின் குற்றச்சாட்டினை மறுத்து விசார ணைக்குக் கோரி சத்தியக் கடதாசியை நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் மூலமாக (Hansard 1978:Col 1831-34) முன்வைத்தார். அன்றைய நல்லூர் பாராளுமன்ற உறுப்பினரான எம்.சிவசிதம்பரம் உட்பட ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நீண்ட உரைகளை பாராளுமன்றத் தில் நிகழ்த்தினர். தமிழ்மொழி மூலமான குற்றச்சாட்டுக்குள்ளான விடைத்தாள்கள் வாழைச்சேனைக் காகித ஆலைக்கு எப்படிச் சென்றது என்பது முதல், இதேபோல் சிங்கள விடைத்தாள்களை மீள்பரிசோதிக்க முடியுமா என்பதுவரை விடுக்கப்பட்ட வினாக்கள் எல்லாம் அன்றைய அமைச்சர்களான சிறில்மத்யூ, காமினி திஸநாயக்கா போன்றோரால் கேள்விக்கிடமாக்கப்பட்டன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சகல இனங்களையும் சேர்ந்த சில பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒப்பமிட்டு வெளியிட்ட ஒரு பிரகடனத்தில் (7.12.1978) மிகத் தெளிவாக இதற்குப் பின்னால் உள்ள உள்நோக்கங்களையும், அவசரங்களையும் வெளிப் படுத்தியிருந்தனர். முன்னொருதடவை 1970இலும் இது போன்ற குற்றச்சாட்டு பொறியியல்துறை விரிவுரையாளருக்கு எதிராக முன் வைக்கப்பட்டதனைச் சுட்டிக்காட்டி, விசாரணையின் பின் அது வெறும் புரளி என வெளிப்படுத்தப்பட்டதனையும் இவர்கள் குறிப்பிட்டிருந் தனர். உரிய விசாரணையின்றி இன ரீதியில் இப்படிக் குற்றம் சாட்டு தலின் அநீதியை சுட்டி, இவர்களும் சரியான விசாரணையை வேண்டி நின்றனர். (Over Marking Alligations & Attitudes, 1978).

இதுவரை எந்த ஒரு விசாரணையும் நடந்ததில்லை. ஆயினும் சிறில் மத்யூவின் நோக்கம் எப்படியோ ஏதோ ஒரு வடிவில் மீண்டும் தரப்படுத்தலாக அல்லது குடித்தொகை அடிப்படையிலான பங்கீடு முறையாக பல்கலைக்கழக அனுமதியில் இன்றுவரை தெளிவின்றித் தொடர வழிவகுத்தது. 1978இல் இடைக்கால ஒழுங்காக பெற்ற புள்ளி களின் அடியாக அனுமதி என அறிவிக்கப்பட்ட போதும் இதே ஆண்டின் பிற்பகுதியில் இதனை மேலும் ஆராயவென ஓர் உபகுழு அமைக் கப்பட்டது. இந்தக்குழுவின் சிபார்சுப்படி 1979இல் பல்கலைக்கழக அனுமதி குறித்து புள்ளிகளின் அடிப்படையில் மட்டும் அனுமதி வழங்கப்படல் வேண்டும் எனவும் சிறப்புத் திறமைக்கு 30%உம், குடித்தொகை அடிப்படையில் 55%உம், கல்வி வசதி குறைந்த அம்பாறை, அனுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, திருகோணமலை, மன்னார், மொனராகலை, நுவரெலியா, முல்லைத்தீவு, பொலநறுவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா ஆகிய பன்னிரெண்டு மாவட்டங்களுக்கு 15%உம் ஒதுக்கப்படு மென அறிவிக்கப்பட்டது. இதன்வழி 1978-1980, 1980-1981 அனுமதி தீர்மானிக்கப்பட்டது. பின்னர் 12 அரசியல் மாவட்டங்களுடன் புதிதாகப் புத்தளமும் சேர்க்கப்பட்டது. 1981-1982 காலப்பகுதியில் 15% பின்தங்கிய பிரதேசங்களுக்கான இட ஒதுக்கீடு நீக்கப்பட்டு மாவட்டப்பங்கீடு 70%, சிறப்புத் திறமைக்கு 30% என அறிவிக்கப்பட்டது. பல்கலைக்கழக ஆணைக்குழுவின் இந்த இரண்டாம் அறிக்கை பலத்த எதிர்ப்புக்களைச் சந்தித்ததால் அமுல் செய்யப்பட முடியாத நிலை ஏற்பட்டது. (Second Annual Report of the University Grants Commission, 1980: 30-36)

இவ்வாறாக பல்கலைக்கழக அனுமதி பற்றி உயர்கல்வி அமைச்சுக்கு திட்டவட்டமான கொள்கை இல்லாததினால் காலத்திற்குக் காலம் ஒவ்வொருமுறையைப் பின்பற்றுவதாகச் சொல்லப்பட்டது.

- திறமைக்கு இடமளிக்கிறோம்
- மாவட்ட அடிப்படையில் குடித்தொகைக்கு ஏற்ப பங்கிடு கின்றோம்.
- பின்தங்கிய மாவட்டங்களுக்கும் வாய்ப்புத்தருகின்றோம்.

எனும் மூன்று நிலைப்பாடுகளுக்கிடையில் இந்தக் குழப்பங்கள் தொடர் கின்றன. கூடவே பல்கலைக்கழக அனுமதி நாட்டின் இன விகிதாசாரத் தினைப் பிரதிபலிப்பதாகவும் அமைய வேண்டும் என்ற கருத்து நிலை யும் குறிப்பிடத்தக்கது.

தற்போது பல்கலைக்கழக அனுமதியானது திறமைச்சித்தியின் அடிப்படையில் 40%மான மாணவர்களுக்கும், மாவட்ட ரீதியில் 55% மான மாணவர்களுக்கும், கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு 5%மான இடங்களும் ஒதுக்கப்படுகின்றன. பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக எழுபதுகளில் நடைமுறைக்கு வந்த தரப்படுத்தலும், ஏனைய பாரபட்சங்களும் ஏற்படுத்திய தாக்கங்கள் இன்றுவரை தொடரக் காணலாம். நிகழும் ஆயுதப்போராட்டத்தில் இளைஞர்களை இழுத்து விட்ட மைய நிகழ்வாகவும் தரப்படுத்தல் கால கல்விப்பாரபட்சங்கள் அமைந்தமை பற்றி விரிவாக இனமுரண்வரலாறு என்னும் இயலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சமூகவியலாளர் சமூகப்பிரச்சினைகள் பற்றிக்குறிப்பிடும் போது முதனிலைப்பிரச்சினை, வழிநிலைப்பிரச் சினை என பகுத்துக் கூறுவதுண்டு. சில சமயங்களில் வழி நிலைப் பிரச்சினைகளே மீள முதனிலைப் பிரச்சினைக்குக் காலாவதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை வளர்த்து நிற்பதுவும் என பிரச்சினைகளின் வாழ்க்கை வட்டம் செல்லும். (Neubeck, 1991)

இந்த வகையில் இளைஞர்கள் ஆயுதப்போராட்ட ஈடுபாடுமுதல் போர்க்காலத்துப் பாதிப்புக்குள்ளான கல்வி சூழல்வரை இன்றைய தமிழ் மாணவரின் பல்கலைக்கழக அனுமதியில் பாரியதாக்கத்தினை விளை விக்கின்றன. குறிப்பாக போரின் உக்கிரம் உணரப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி எம் கவனத்திற்குரியதாகும். இதனைப் பின்வரும் அட்டவணைகள் புலப் படுத்தும்.

*அட்டவணை : 5.5*

*யாழ்ப்பாண மாவட்ட மாணவர் அனுமதி திறமைச்சித்தி 1991-1993*

| | 1991/1992 | 1992/1993 | 1993/1994 |
|---|---|---|---|
| மொத்தமாணவர் அனுமதி (திறமைச்சித்தி) | 586 | 176 | 384 |
| மருத்துவம் | 44 | 16 | 21 |
| பொறியியல் | 60 | 20 | 57 |
| பௌதீகவிஞ்ஞானம் | 85 | 09 | 93 |
| உயிரியல் விஞ்ஞானம் | 27 | 05 | 06 |
| கலை | 220 | 89 | 87 |
| வர்த்தகவியல் | 63 | 19 | 72 |

மூலம்: சந்திரசேகரன், 1998: 2

*அட்டவணை : 5.6*

*தமிழ் மாணவரின் மொத்த அனுமதியும், யாழ் மாணவரின் அனுமதியும் 1991/1994*

| கல்வியாண்டு | தமிழ்மாணவர் மொத்த அனுமதி | யாழ்ப்பாணமாணவர் மொத்த அனுமதி | யாழ்மாணவர் வீதம் |
|---|---|---|---|
| 1989/1990 | 1113 | -- | -- |
| 1990/1991 | 1194 | -- | -- |
| 1991/1992 | 1375 | 963 | 70% |
| 1992/1993 | 696 | 349 | 50% |
| 1993/1994 | 971 | 518 | 53% |

மூலம்: சந்திரசேகரன், 1998: 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> *இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அனுமதி முன்னரை விட 60% ஆல் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு பல்கலைக்கழகமும் உயர் கல்வியில் ஆர்வம் கொண்டோரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (சந்திரசேகரம். 1993)*

இவ்வாறாக பல்கலைக்கழக அனுமதி தொடர்பான தரப்படுத்தலால் இலங்கையின் இனங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட உறவு விரிசல் இன்னமும் சரிசெய்யப்படாத ஒன்றாகவே தொடர்கின்றதெனலாம். இத்தகைய நிலையில் போரும் அகதிவாழ்வும் எமது கல்விவள நிலைமைகளை பாதித்துள்ள நிலையில் தமிழ் மொழி மூலமான பல்கலைக் கழக வெற்றிடங்கள் இருந்தும் தகுதியான மாணவர்கள் இல்லை என்ற அவலமும் சேர்ந்திருக்கக் காணலாம். இந்தப் பாரபட்ச நடைமுறைகளில் இருந்து விடுபட எல்லோருக்கும் கல்வி, திறமை, உளச்சார்பு உரிய வருக்கே தவறாது பல்கலைக்கழகக் கல்வி வழங்கப்பட வேண்டும், என்ற ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் யதார்த்தத்தில் தான் இந்த இன உறவு சீராக்கத்தினைக் காணமுடியுமென்பது தவறல்ல.

> எமது கல்வியை, அதற்கான வாய்ப்புக்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் எங்களுக்கு இல்லாத வரை எம்மால் ஒன்றும் செய்ய முடியாது போகும். அமைச்சர் சிறில்மத்யூ தாம் சிங்கள தேசத்தின் சார்பில் குரல் கொடுப்பதாகப் பேசியது போல், நாம் எமது தமிழ் தேசத்திற்காக போராட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அதனைப் போராடிப் பெறுகின்ற போது எமது பிரச்சினைகளை நாமாகவே தீர்ப்போம்.

என்று அன்று சிறில் மத்யூவுடனான பாராளுமன்ற விவாதத்தில் அ.அமிர்தலிங்கம் முன்வைத்த கருத்தானது (Hansard, 1978: Col, 1966 & 67) இன்றைய நிலைமைகளுக்கான மூலவிசையினை அடிக்கோடிட்டு நிற்றலைக் காணலாம்.

## தொழில்வாய்ப்புக்களில் பாரபட்சம்

ஆரம்ப கால முதலே தமிழர்கள் கல்வித் துறையில் சிறந்து விளங் கியதுடன், அறிவின் மூலமாகவும், தராதரத்தின் மூலமாகவும், போட்டிப் பரீட்சைகள் மூலமாகவும், அரசாங்க வேலைவாய்ப்புக்களைப்பெறு வதில் முன்னணியில் இருந்துவந்துள்ளனர். தமிழர் வாழ்வில் கல்வி என்பது ஒரு தொழில் துறை எனக் கருதப்படும் அளவிற்கு கல்விக்கும் தொழில் வாய்ப்புக்களுக்குமான இணைவு உணரப்பட்டது. கல்வி என்பது சமூக அசைவுக்கான கருவியான போது கல்விவழி பின் தங்கிய மக்கள் தொகுதி தம் அசைவு கருதி அதனை அரசியலாக்குதலை உலக நாடுகள் பலவற்றிலும் காணமுடியும். இதற்கு இலங்கையும் விதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கல்ல. இந்த வகையில் பாராளுமன்ற ஆட்சி முறையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை அதிகரித்தது என்பதிலும், வேலை வாய்ப்பு என்ற விடயம் தமிழர் பிரச்சினையை மேலும் எவ்வாறு உச்சப்படுத்தியது எனக் காண்பதே பொருத்தமானது என எஸ். ஜே. தம்பையாவும், திஸ்ஸ பெர்னாண்டோவும்1870-1946 வரையான காலப் பகுதியை உள்ளடக்கி ஆய்வு செய்து கூறிய முடிவுகளையும் 1946 இலும் அதனைத் தொடர்ந்து வரும் காலகட்டத்திலும் வேலைவாய்ப்பு சம்பந் தமாக சாள்ஸ் அபயசேகரா ஆய்வு செய்து கூறிய முடிவுகளையும் குறிப்பிடமுடியும். (அபயசேகரா, 1985: 260-269)

பல்வேறு கால கட்டங்களில் பலவித இனக்குழுக்களின் விகி தாசாரம், நிர்வாகத்தில் எவ்விதம் இருந்தது என்பதைத் தம்பையா எடுத்துக்காட்டுகின்றார். இலங்கையின் சிறுபான்மை இனங்களான பறங்கியரும், இலங்கைத் தமிழரும் அரசாங்க சேவையில் பெரும்பகுதி இடங்களை 1907 தொடக்கம் 1946 வரையிலான காலப்பகுதியில் பிடித்துக் கொண்டார்கள். அவர்களின் எண்ணிக்கை மக்கள் தொகை விகிதாசாரத்திலும் பார்க்க கூடியதாகவே எப்போதும் இருந்து வந்தது. சிலவேளைகளில் பறங்கியரைப் பொறுத்தவரை மருத்துவத் துறை, பொது வேலைப் பகுதி ஆகியவற்றில் பெரும் பகுதி இடங்களைப் பிடித்துக் கொண்டார்கள் என்பது அவருடைய ஆய்வின் முடிவாகும். இதனை பின்வரும் அட்டவணைகள் சுட்டும்.

அட்டவணை 5.7

**இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம்-மருத்துவம்**

| இனங்கள் | 1907 | 1925 | 1935 | 1946 |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 24.6 | 42.5 | 55.1 | 59.4 |
| தமிழர் | 14.7 | 30.8 | 25.8 | 33.3 |
| பறங்கியர் | 60.7 | 26.7 | 19.1 | 7.3 |

மூலம்: சாள்ஸ் அபயசேகரா, 1985: 262

அட்டவணை 5.8

**இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம்-பொதுவேலை**

| இனங்கள் | 1907 | 1925 | 1935 | 1946 |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 20.0 | 32.2 | 34.3 | 32.2 |
| தமிழர் | 10.0 | 7.1 | 28.6 | 25.4 |
| பறங்கியர் | 70.0 | 60.1 | 37.1 | 22.4 |

மூலம்: சாள்ஸ் அபயசேகரா, 1985: 262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.9

இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம்-நீதி

| இனங்கள் | 1907 | 1925 | 1935 | 1946 |
|---|---|---|---|---|
| சிங்களவர் | -- | -- | 26.7 | 49.1 |
| தமிழர் | -- | -- | 33.3 | 26.4 |
| பறங்கியர் | -- | -- | 40.0 | 26.5 |

மூலம்: சாள்ஸ் அபயசேகரா, 1985: 262

அட்டவணை 5.10

இன அடிப்படையில் தொழில் விகிதாசாரம்-குடியியல்

| இனங்கள் | 1907 | 1925 | 1935 | 1946 |
|---|---|---|---|---|
| சிங்களவர் | 33.3 | 43.6 | 40.0 | 59.5 |
| தமிழர் | 16.7 | 20.5 | 33.3 | 26.7 |
| பறங்கியர் | 50.0 | 35.9 | 27.3 | 13.8 |

மூலம்: சாள்ஸ் அபயசேகரா, 1985: 262

இதுபற்றி திஸ்ஸபெர்னாண்டோ கூறும் போது 'ஆட்சேர்ப்பில் இலங்கையர் பங்கு' எனக் கூறும் போது நிச்சயமாக சுதேச மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான சிங்கள மக்களுக்கே வேலைவாய்ப்புக் கிடைத்தது எனப் பொருள் கொள்ள முடியாது. ஆரம்ப காலத்தில் இலங்கையர் மயமாதல் பறங்கியரைக் கூடிய அளவில் பதவியில் அமர்த்துவதாகவே இருந்தது. இதற்கு ஆதாரமாக இலங்கையின் மருத்துவத் திணைக் களத்தின் இனரீதியான பிரதிநிதித்துவத்தையும், பொதுவேலைப் பகுதியில் இலங்கை உத்தியோகத்தர்களின் பிரதிநிதித்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றார்.

அட்டவணை 5.11

இன ரீதியான பிரதிநிதித்துவம் - மருத்துவத் திணைக்களம்

| இனங்கள் | 1910 | 1920 | 1930 |
|---|---|---|---|
| பறங்கியர் | 51 | 32 | 19 |
| சிங்களவர் | 21 | 31 | 47 |
| தமிழர் | 28 | 36 | 33 |

மூலம்: சாள்ஸ் அபயசேகரா, 1985: 264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.12

இன ரீதியான பிரதிநிதித்துவம் - பொதுவேலைப்பகுதி

| இனங்கள் | 1910 | 1920 | 1930 |
|---|---|---|---|
| பறங்கியர் | 15 | 23 | 27 |
| சிங்களவர் | 06 | 11 | 18 |
| தமிழர் | 04 | 07 | 19 |

மூலம்: சாள்ஸ் அபயசேகரா, 1985: 265

இதனைப்பற்றி திஸ்ஸபெர்னாண்டோ கூறும் போது "1930ஆம் ஆண்டளவில் சிங்களவர் தமது நிலையை மேம்படுத்திக் கொண்ட போது தமது மக்கள் தொகைக்கு ஏற்ற அளவினதான விகிதாசாரத்தை அடையவில்லை. அரசாங்க சேவையில் பறங்கியரின் ஆதிக்கம் வெளிப்படையான ஓர் அம்சமாக இருந்துவந்தது. பெரும்பான்மை சமூகத்தினரான சிங்களவரை விட தமிழர்களும் தமது மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு மேலான அளவு இடங்களைப் பிடித்துக் கொண்டனர்" இதற்கான காரணத்தை அவர் பின்வருமாறு கூறுகின்றார். "தமிழர்கள் கீழ்நாட்டுச் சிங்களவரைவிட ஆங்கில அறிவில் முன்னேறி இருந்தார்கள்".

இலங்கையின் இன முரண் வரலாற்றில் கல்வி வழியான இந்த வாய்ப்புக்கள் வகித்த இடம் முக்கியமானது. ஏற்கனவே நாம் கடந்த இயலில் கண்டவாறு தமிழ் மக்களின் தொழில் வாய்ப்புக்களை எவ்வாறு மட்டுப்படுத்துவது என்ற திட்டமிடலில் விளைந்தவைதான் பெரும்பாலான இன ரீதியான அரசியல் பாரபட்சங்கள் எனலாம். இந்த வகையில் தனிச் சிங்களச் சட்டம் முதல் பிள்ளை எனலாம். தொடர்ந்த காலத்து வளர்ச்சி கண்ட மற்றொரு பாரிய பாரபட்சமாக தரப்படுத்தலைச் சொல்லலாம். இவை எல்லாமே தொழில் வாய்ப்புக்களையே தம் குவிமையமாகக் கொண்டவை என்பது வெளிப்படையானது.

தனிச் சிங்களச் சட்டத்தினைத் தொடர்ந்து பல தமிழர்கள் தம் தொழில்வாய்ப்புக்களை இழக்க நேர்ந்தது. சிங்களத் தேர்ச்சி கட்டாயம் என்ற நிலையிலான தொழில் இழப்பு ஒருபுறம், சிங்களம் இல்லாததால் கிடைக்காமல் போன தொழில்வாய்ப்பு மறுபுறம், இவற்றுக்கு மேலாக தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் தொழில்வாய்ப்புக்களில் காணப்பட்ட மட்டுப்பாடும் ஒருங்குசேர, தமிழர்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகியது. அத்தோடு மையநிலைப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு, தொழிலுக்கும் அரசியல் செல்வாக்குக்கும் இருந்த உறவு நிலயை மேலும் மோசமாக்கியது. அரசியல் அதிகாரத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக் கொண்ட பெரும்பான்மை இனக் கட்சிகளின் தீர்மானத்தின் வழிதான் தொழில் வாய்ப்பு என்றான போது முன்னைய காலத்து தொழில்சேர்ப்பு நியமங்கள் அர்த்தமிழந்தன. இதன் காரணமாக சிங்கள மக்களுக்கு வேலைவாய்ப்புக்களில்பெருமளவிலான சலுகைகள் வழங் கப்பட்டதோடு, தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இத்தகைய அரசாங்கங்களின் செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் மத்தியில் அரசுக்கு எதிரான விரக்தி மனநிலை யையும், தீவிரவாத உணர்வுகளையும் உண்டுபண்ணின. இதுவும் இன்றைய இனப்பிரச்சினைக்கான மூலங்களில் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது.

1956ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டார நாயக்கா அவர்களினால் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டம் நிர்வாக சேவைக்கு சிங்களத் தகைமை கட்டாயம் வேண்டும் எனும் நிலையினை உண்டுபண்ணியது. இதன் காரணமாக நிர்வாக சேவையில் தமிழர்களின் சம்பள உயர்வு, பதவி உயர்வு என்பவற்றிற்கான உரிமைகள் மறுக்கப்பட்டன. அத்தோடு தொழில் வாய்ப்புக்களில் தமிழ் மக்களிற்கு எதிரான இனப் பாகுபாடு ஏனைய சேவைகளுக்கும், துறைகளுக்கும் விரிவடையச் செய்யப்பட்டதன் காரணமாக சுதந்திரத்திற்கு முன்பு அதிக வேலைவாய்ப்புக்களைப் பெற்றிருந்த தமிழ் மக்கள் சுதந்திரத் திற்குப் பின்னர் பெரும்பாலான வேலைவாய்ப்புக்களை இழக்க வேண்டி ஏற்பட்டது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் இனவாதநோக் கிலான திட்டமிட்ட செயற்பாடுகளேயாகும்.

சுதந்திரத்திற்குப் பின்பு அரசாங்க சேவையில் அமர்த்தப்பட்ட 82,000 பேருள் 30% தினர் தமிழர்கள். ஆனால் 1970ஆம் ஆண்டளவில் மொத்தம் 2,25,000 ஆட்கள் அரசாங்க சேவையில் தொழில் வாய்ப் புக்களைப் பெற்றுக் கொண்டனர். இவர்களுள் 06% தினர் மட்டுமே தமிழர்களாக இருந்தனர். (கீதபொன்கலன், 1987: 150-151) 1921இல் பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இலங்கையின் மொத்தக் குடித்தொகை யில் 76%மாக இருந்த சிங்கள மக்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் களில் 46% த்தினை மட்டுமே இவர்கள் பெற்றிருந்தார்கள். அதே நேரம் மொத்தக் குடித் தொகையில் 13%மாக இருந்த இலங்கைத் தமிழர்கள் இந்தத் தொழில்களில் 31.9%த்தினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (சத்தியசீலன், ஆண்டு குறிப்பிடப்படவில்லை: 97) ஆகவே சுதந்திரத்தின் பின் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றிக் கொண்ட சிங்கள இன வாத அரசாங்கங்களே தமிழ் மக்களின் வேலை வாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்களை திட்டமிட்டுக் குறைத்து விட்டனர் என்பது உண்மையே. இதனை நாம் தொடர்ந்து வந்த காலங்களின் புள்ளிவிபரங்களை அவதானிப்பதன் மூலம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

அட்டவணை 5.13

அரசாங்க சேவையில் தமிழர்களின் நிலை

| தொழில்துறை | 1956 | 1965 | 1970 |
|---|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவை | 30 | 20 | 25 |
| லிகிதர் சேவை | 50 | 30 | 05 |
| மருத்துவர் பொறியியலாளர் | 60 | 30 | 10 |
| ஆயுதப்படையினர் | 40 | 20 | 01 |
| தொழில்துறைகள் | 40 | 20 | 05 |

மூலம்: கீதபொன்கலன்.ச. 1987

1973ஆம் ஆண்டு உயர் நிர்வாக சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் 92பேர் சிங்களவர்களாகவும், 04பேர் தமிழர்களாகவும் காணப்பட்டனர். 1956ஆம் ஆண்டின் பின்பு ஆரம்பிக்கப்பட்ட அரச தொழிற்சாலைகள், கூட்டுத்தாபனங்கள் போன்றனவே தொழில் வழங்கும் பெரிய நிறுவனங்களாக இருந்தன. சிங்கள மொழிச் சட்டத்தின் காரணமாக தமிழ் மக்களுக்கு இதிலும் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என்றே கூறலாம். 1956ஆம் ஆண்டிற்கும் 1970ஆம் ஆண்டிற்கும் இடையே பொதுக் கூட்டுஸ்தாபனங்களில் 189,000 நபர்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. 1970ஆம் ஆண்டுவரை இலங்கை போக்குவரத்துச் சபை 52,000 ஆட்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டது. இதில் 98% மானோர் சிங்களவர் ஆவர்.

வெளிநாட்டுச் சேவைக்கான தொழில் ஆட்சேர்ப்பிலேயும் இந்த குறைந்து செல்லும் நிலைமை துல்லியமாகப் புலப்படுகின்றது. சுதந்திர இலங்கையில் 1960-1964இல் 60%மாக இருந்த சிங்கள இனக்குழுவின் அளவு 1970-1975களில் 100%மாக மாற தமிழ் இனத்துவக் குழுவின் நிலை இக் காலப்பகுதியில் 20%தில் இருந்து பூச்சியமாகும். இதனைப் பின்வரும் அட்டவணை பிரதிபலிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை: 5.14

வெளிநாட்டுச் சேவையில் இனத்துவ விகிதாசாரம்

| இனங்கள் | 1948 | 1949 | 1950 | 1953 | 1960-64 | | 1965-70 | | 1970-75 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | எண் | % | எண் | % | எண் | % |
| சிங்களவர் | 13 | 4 | 2 | 0 | 6 | 60 | 13 | 76.4 | 5 | 100 |
| தமிழர் | 6 | 1 | 3 | 2 | 2 | 20 | 3 | 17.6 | 0 | 0 |
| முஸ்லீம் | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 5.8 | 0 | 0 |
| பறங்கியர் | 1 | - | - | 1 | 2 | 20 | - | - | 0 | 0 |
| மொத்தம் | 20 | 5 | 5 | 4 | 10 | 100 | 17 | 100 | 5 | 100 |

மூலம்: H.S. Nissanka, SriLanka's Foreign Policy: A Study of No- Alignment (New Delhi, 1984) Tables, 3-7: 109-114.

அரசாங்கத்தின் வேலைவாய்ப்புத் திட்டங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையங்கள் சிங்களப்பகுதியில் பெருமளவில் ஆரம்பிக்கப் பட்டன. ஆனால் தமிழர் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறை என்ற இடத்தில் மட்டுமே ஒரு நிலையம் அமைக்கப்பட்டது. இதன் காரணமாக தமிழ் இளைஞர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவது கடினமாக இருந்தது.

மேலும் அரசாங்க நிதி உதவியுடன் இயங்கிய கூட்டுத்தாபனங் களைத் தவிர்த்து தனியார் துறைகளும் இளைஞர்களை வேலைக்கு அமர்த்தி தொழில் பயிற்சி பெறும் வாய்ப்புக்களையும் வழங்கி வந்தன. இவை தரத்திற்கும், திறமைக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்தமை யால் தெரிவு செய்தல் நியாயமாக நடைபெற்றது. ஆனால் அரசாங்கம் இத்துறையிலும் தலையிட்டு தேசிய தொழில் கள பயிற்சிச் சபை வாயிலாகவே தனியார் துறை நிறுவனங்களும் வேலைக்கு ஆட்களைத் தெரிவு செய்ய வேண்டுமென ஆணையிட்டது. உண்மையில் இன அடிப்படையில் வேலைவாய்ப்புத் தேடுவதிலும். தொழில்நுட்பப் பயிற்சி பெறுவதிலும் தமிழர் ஒடுக்கப்பட உருவான ஒரு திட்டமாகவே இது முடிந்து போனது. இதன் காரணமாக. க.பொ.த(உ/த) பத்திரம் பெற்ற தமிழ் இளைஞர்களுள் 41%தினர் வேலையற்றோராக இருக்க அதே பிரிவில் சிங்கள மாணவருள் 20% தினர் மட்டுமே வேலை யற்றோராக இருந்தனர்.

1970ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்த அரசாங்கம் மாவட்ட ரீதியாக அரசியல் அதிகாரிகளை நியமனம் செய்து வேலைவாய்ப்பு வசதிகளையும் அவர்களின் கைகளிலேயே கொடுத்தது. இதன் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும் தமிழ் மக்கள் பாகுபாட்டிற்குள்ளானார்கள். 1977ஆம் ஆண்டின் பின் வேலை வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ்ப்பிரதேசங்களில் மட்டுமே தமிழ் மக்களுக்கு ஒரு சிலவாய்ப்புக்களுக்கு இடமிருந்தது. அபிவிருத்தித் திட்டங்கள் இல்லாத இடத்து வாய்ப்புக்கள் பெருமளவில் இருக்கவில்லை. 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1974ஆம் ஆண்டுவரை 22,374 ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இதில் 18,000 பேர் சிங்களவர், 1,807 தமிழர். இந்த நான்கு ஆண்டுகளுக்கு இடையே 3,500 தமிழ் ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுக் கொண்டார்கள். இதன் காரணமாக தமிழ் மக்களின் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியப் பற்றாக்குறை நிலவியதோடு தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது. தமிழர் பகுதிகளில் ஆசிரிய வெற்றிடங்கள் இருந்தும் தமிழ் ஆசிரிய நியமனம் வேண்டிய அளவுக்கு வழங்கப்படவில்லை. 1982ஆம் ஆண்டு மொத்த ஆசிரியர் தொகையான 25,081 பேருள் சிங்களவர் தொகை 22,399 ஆகவும், தமிழர் தொகை 2,632 ஆகவும் இருந்தது. இதே போல் பொதுத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களும் மற்றும் தொழிற்சாலைகளும் பெரும்பாலும் சிங்களப்பகுதியிலேயே நிறுவப்பட்டமையினால் இவற்றுக்குத் தேவையான தொழிலாளர்கள், ஊழியர்கள், அதிகாரிகள் அந்தந்தப்பகுதிகளில் இருந்தே தெரிவு செய்யப் பட்டனர். ஆகையால் இங்கு தமிழர்களுக்கு எந்த வித வாய்ப்புக்களும் கிடைக்கவில்லை. இதனைப் பின்வரும் அட்டவணைகள் விளக்கும்.

அட்டவணை: 5.15

அரசாங்க சேவையில் இன அமைவு - 1972

| விபரங்கள் | சிங்களவர் | தமிழர் |
|---|---|---|
| 1972 ஆம் ஆண்டு மக்கள் தொகை | 72% | 20.5% |
| ஆட்சித்துறை, அலுவலர் நிலை, தொழில்நுணுக்கத்துறை | 67.7% | 28.5% |
| நடுத்தரப்பணிகள் | 81.2% | 15.3% |
| ஆசிரியர்கள் | 81.5% | 11.6% |
| சிறுமட்ட ஊழியர்கள் | 86.4% | 10.6% |
| தொழிலாளர்கள் | 85.5% | 11.6% |
| மொத்த விகிதம் | 82.63% | 12.93% |

மூலம்: கீதபொன்கலன், 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.16

பொதுநலத்துறையில் இன அமைவு - 1982 (எண்ணிக்கையில்)

| விபரம் | மொத்தம் | சிங்களவர் | தமிழர் |
|---|---|---|---|
| தபால், தந்தி, தலைமை அதிகாரிகள் | 46 | 44 | 02 |
| அரசாங்க லிகிதர்சேவை | 3320 | 3127 | 193 |
| போக்குவரத்து | | | |
| 1. புகையிரத சேவை | 214 | 209 | 05 |
| 2. லிகிதர்சேவை | 83 | 82 | 01 |
| 3. காவலர் | 195 | 181 | 14 |
| 4. சேவையாளர் | 480 | 473 | 07 |
| மருந்து தயாரிப்பாளர் | 480 | 473 | 07 |

மூலம்: கீதபொன்கலன், 1987.

1970ஆம் ஆண்டுக்குப் பின் இலங்கை கைத்தொழில்துறைக்கே முன்னுரிமை கொடுத்தது. இதனால் நுட்பத்துறையில் சிங்கள மொழி மூலம் கல்விப் பயிற்சி பெற்றவர்கள் பெரும்பாலான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றனர்.

மேலும் காவல்துறையிலும், பாதுகாப்புப்படையிலும் 1970ஆம் ஆண்டுக்குப்பின் தமிழர்களின் தெரிவு குறைவானதாகக் காணப்பட்டது. தொழில் துறையில் தமிழர்களுக்கெதிராகத் தற்போதைய அரசாங்கங்களால் கடைப்பிடிக்கும் இனப் பாகுபாட்டினை தேசியப் பாதுகாப்புப் படையில் நாம் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.

அட்டவணை : 5.17

பாதுகாப்புபடையில் இன அமைவு - 1982 (எண்ணிக்கையில்)

| திணைக்களம் | சிங்களவர் | தமிழர் |
|---|---|---|
| காவல்துறை | 16,050 | 940 |
| காலாட்படை | 9,780 | 220 |
| கடற்படை | 2,024 | 146 |

மூலம் : கீதபொன்கலன், 1987.

1983 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெற்ற அரசியல் நிகழ்வுகளின் காரணமாக இது மேலும் குறைக்கப்பட்டது. இதன் காரணமாக நாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு என்பது முழுமையாக சிங்களப் பேரினவாதிகளிடமே கொடுக்கப்பட்டது. (கீதபொன்கலன், 1987: 150-158)

இவ்வாறாக சுதந்திரத்திற்கு முன்னைய கால தமிழர்களின் வேலை வாய்ப்புக்கள் படிப்படியாக இழக்கப்படும் போது, அதிலே இனப் பிரச்சினை அதிகரிப்புக்கான அடிப்படையாகும். மொழி, கல்வி, தொழில்வாய்ப்பு என தனித்தனியாக நோக்குதற்குப் பதிலாக முழு தளாவிய வாழ்வுக்கான போராட்டமாக காணும் நிலைமை உருவாகும்.

## பாடநூல்களில் இன உணர்வு

கலைத்திட்ட செயற்பாட்டின் உயிர் மையமாக பாடநூல்கள் அமை கின்றன. அறிவுத்திரளின் உள்ளடக்கம் பாடநூல்களின் வழிதான் நிர்ணயமாகின்றது. கற்றலில் பெறும் அறிவு என்பது வெறுமனே விடய அறிவு என்பதாக மட்டும் அமையாமல் அவ்விடயம் தொடர்பான ஒட்டுமொத்தமான உளச்சார்பு, உணர்வுநிலைகளையும் மாணவரிடத்து வளர்ப்பதாக அமையவேண்டும். இந்நிலையில் கல்வி வழியான இன உணர்வு - முரண்நிலைகள் தொடர்பான இவ்வாய்வில் பாடநூல்கள் தொடர்பானதொரு பகுப்பாய்வு இன்றியமையாதது.

இலங்கையின் பாடநூல்கள் வரலாற்றினை எடுத்து நோக்கும் போது குடியேற்ற நாட்டாதிக்க காலம் ஆங்கில மொழி பாடநூல் களுடனேயே ஆரம்பிக்கின்றது எனலாம். இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் ஆக்கப்பட்ட இந்நூல்கள் அந்நாட்டுப் பண்பாட்டு நிலைமைகளைப் பேசுவனவாகவே அமைந்திருந்தன. "கற்கும் சுதேச மாணவர்களின் பண்பாட்டு சமூகச் சூழலுக்கு தொடர்பற்றவையாக இவை அமைந்திருந்தன" என அன்றைய பாடசாலை வித்தியாதரிசி ஹெல்ப்ஸ் குறிப்பிட்டார். (நிருவாக அறிக்கை பொ.போ.பணி 1872:324)

பல்வேறு கல்வியாளர்களினது விமர்சனங்களினடியாக பாட நூல்களை இலங்கையிலேயே உற்பத்தி செய்யும் நடைமுறை 1879இல் செயல்பாட்டிற்கு வந்தது. பலநூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள மொழியில் வெளியிடப்பட்டன. இந்த வகையில் தமிழ் நூல்கள் அரிதாகவே வெளியிடப்பட்டமையும் எம்கவனத்திற்குரியது. (ஆரிய தாசா & பெரேரா, 1960:1157). எனினும் கால ஓட்டத்தில் சுதேச மொழிக் கல்வி நிலை பெற்றதுடன், சுதேச மொழிப்பாட நூல்களை ஆக்குதல் ஓர் இன்றியமையாத தேவையானது. இதற்கென 1950இல் கல்வி வெளி யீட்டுச் சபை தாபிக்கப்பட்டது. சுதேசமொழிகள் போதனாமொழியாக் கப்பட்டதாலும் விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடப்புத்தகங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் தொகுக்க முன்வராததாலும் 1955 ஜுலை 15இல் சுயமொழிப் பாடநூல் அலகு ஒன்று தொடங்கப்பட்டது. இது பின்னர் உத்தியோக மொழித் திணைக்களத்தின் ஒரு பகுதியாக அரசகரும மொழித் திணைக் களச் சிறப்பாணையின் கீழ் நிறுவப்பட்டது. அரசாங்கம் பாடப்புத்தக உற்பத்தி முயற்சியை விரிவாக்கும் நோக்கோடு கல்வித் திணைக்களம் முதனிலை, கனிஷ்ட, சிரேஷ்ட பாடசாலைகளுக்கான நூல்களை எழுத ஆரம்பித்தது. பின்னர் இப் பணி கல்வி வெளியீட்டுத் திணைக்களத் திடம் 1966 ஒக்டோபர் 1ந் திகதி முதல் ஒப்படைக்கப்பட்டு இவ் அமைப்பே இன்றுவரை பாடநூல்களை வெளியிட்டு வருகின்றது. அரசின் இம்முயற்சிக்குப் புறம்பாக பலதனியார் அமைப்புகளும் தனிப்பட்டவர்களும் பாடநூல்களை எழுதி வெளியிட்டனர்.

இந்நிலையில் இலங்கையின் இன முரண் வரலாற்றில் பாட நூல்கள் வகிக்கக்கூடிய பங்கினை மதிப்பிடும் இவ்வியலானது,

1. பன்மைப்பண்பாடுகளைக் கொண்ட இலங்கையின் பாடநூல் களில் ஓர் இனத்துவக் குழுவைச் சேர்ந்த பிள்ளை பிற இன மதக்குழுக்கள் பற்றிய பரஸ்பர புரிந்துணர்வு மதிப்பினை பெறு தற்கான உள்ளடக்கம் உண்டா?

2. இந்நூல்களில் இன முற்சாய்வு முரண்நிலைமைகளைப் பிரதி பலிக்கும் அல்லது இனக்குழுக்களிடை வேறுபாடுகளை மாணவ ரிடத்து வளர்க்கும் விடயங்கள் உள்ளனவா?

3. எந்தளவிற்கு இந் நூல்கள் இலங்கையர் என்ற பொது அடையாள உணர்வு நிலையை முன்னெடுப்பனவாக உள்ளன?

என்ற அடிப்படை வினாக்களின் வழி, இலங்கையின் பாடநூல்களை உள்ளடக்க பகுப்பாய்விற்கு உட்படுத்துகின்றது.

இனத்துவ-பண்பாட்டு உள்ளடக்கங்களுக்கு களமாகக்கூடிய மொழி, சமூகக் கல்வியும் வரலாறும், சுகாதாரக்கல்வி, சமயம் ஆகிய நூல்களே ஆய்வுக்கு எடுக்கப்படுகின்றன. இலங்கையில் இனமுரண் வரலாற்றில் மையநிலைப்பகுதிகளான எழுபதுகளைத் தொடரும் காலப்பகுதியில் நிலவிய பாட நூல்களே நுண்ணாய்விற்கு உட்படுத்தப் பட்ட போதும் ஆங்காங்கே ஒப்பியல் நோக்கில் முன்னைய காலத்து நிலைமைகளும் நோக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மொழிசார்நூல்கள்

தமிழ், சிங்களம், ஆங்கிலமொழி நூல்கள் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. குறிப்பாக ஆரம்ப, கனிஷ்ட இடைநிலை பாடநூல்களே எடுத்து நோக்கப்படுகின்றன.

### தமிழ் மொழிசார் நூல்கள்

தமிழ்ப்பாடநூல்களைப் பொறுத்தவரை அரசு பாடநூல்களை வெளியிடும் காலம் வரையான நூல்கள், அதற்குப் பிந்திய கால நூல்கள் என இரண்டு வகையினதாக தன்மை ரீதியில் பகுத்து நோக்கலாம். பொதுவான அரசின் பாடநூல்கள் அறிமுகத்திற்கு வரும் வரையில் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிக்குமான நூல்கள் சுதந்திரமாகவே தயாரிக்கப்பட்டன. ஒரு பொதுவான சபை மேற்பார்வை செய்த போதும் இந்நூல்கள் தனித்தனியாக எழுதப்பட்டன. இவற்றை விட ஏனைய துணைநூல்கள் பலவும் தனிப்பட்ட வெளியீட்டு நிறுவனங்களால் அல்லது தனிப்பட்டவர்களால் எழுதி வெளியிடப்பட்டன. இவையும் அரசினால் அங்கீகரிக்கப்பட்டன.

அரசின் கட்டுப்பாட்டுடனான பொது நூல்களின் உருவாக்கம் வரை, தமிழ்ப் பாடநூல்களில் ஏனைய இனத்துவக்குழுக்கள் பற்றிய, பண்பாடுகள் பற்றிய பதிவுகளைக் காண முடியாது. குறிப்பாக சிங்கள மக்களின் பண்பாடு பற்றியோ, பௌத்தம் பற்றியோ அலகுகளைக் காண்பதரிது. மாறாக பெரும்பாலான பாடநூல்கள் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் உணர்வை, தமிழ் இன உணர்வை வளர்ப்பனவாகவே அமைதலைக் காணமுடியும். இலங்கை சார்ந்த தேசப்பற்றுக்குப் பதிலாக தமிழ் நாடு சார்ந்த பற்றுணர்வினை வளர்ப்பனவாக இவை அமைந்தமையும் எம் கவனத்திற்குரியதாகும். ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் கற்றவர்களிடத்து இப் பாடநூல்களின் தாக்கம் கணிசமானளவு இருப்பதனைக் காணலாம்.

இப்பாட நூல்களின் முதல் அத்தியாயம் பெரும்பாலும் தமிழ் வாழ்த்தாக அல்லது தமிழ்நாட்டு வாழ்த்தாக அமையும். பெரும்பாலும் நாடறிந்த தேசியக் கவிஞர் சுப்பிரமணியப்பாரதியாரின் பாடல்களில் இருந்து இவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும். எடுத்துக் காட்டாக அரச அங்கீகாரம் பெற்ற தரம் VI பால பாடத்தில் (19ம் பதிப்பு - யாழ்ப்பாணம், 1960) தமிழ் மொழிவாழ்த்து, கடவுள் வாழ்த்து என்பன தொடர்ந்து இடம்பெறுவதைக் குறிப்பிடலாம். 3ம் அத்தியாயம் தமிழர்கள் பற்றியது. இதில் இலங்கை தமிழ்நாடு ஆகியன ஒரு காலத்தில் பெரும் தமிழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமாக (Greater Tamillakam) தமிழர்களின் தேசமாக இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இந்த நிலப்பரப்பு இந்தியத் துணைக்கண்டத்தின் கணிசமான அளவினை உள்ளடக்கியதாகத் தரப்படும். இந் நூலில் வேறு எங்குமே இலங்கை பற்றிய பதிவுகளைக் காணமுடியாது. உண்மையில் இதனை ஓர் இந்தியப் பாட நூலாகவே கொள்ளமுடியும். இந் நூலின் வழி எல்லாப்பிள்ளைகளுமே பாரதியாரின் பிரபல்யமான பாப்பா பாட்டினைக் கற்றிருப்பார்கள். இந்தப் பின்னணியில் வளரும் ஒரு தமிழ்ப் பிள்ளை தன்தாய் நாடாக தமிழ்நாட்டையே கருதி வளரும். பின்னாளில் தாய்நாடு- சேய்நாடு எனத் தமிழ் நாட்டையும், இலங்கையையும் கற்பிக்கும் காலத்துப் பிள்ளையின் கருத்துருவம் மேலும் வரையறைக் குட்படுத்தப்படும். இலங்கையின் ஏனைய சமுதாயக் குழுவினரிடம் இருந்து அன்னியப்பட்ட சிந்தனையே இங்கு மிச்சமாகும்.

அரசு பாடநூல்களை வெளியிடும் பொறுப்பை முழுமையாக ஏற்றதுடன் தமிழ் பாடநூல்களில் தன்மை ரீதியான பாரிய மாற்றங்களைக் காண முடிகின்றது. முன்னைய சுதந்திர பாடநூலாசிரியர்கள், தமிழ் பண்டிதர்களுக்குப் பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டதாகவே இந் நூலாசிரியர் குழு அமைக்கப்பட்டது. இங்கு அரசுக்கு விசுவாசமானவர்கள் அல்லது அதிகாரத்திலிருந்த அரசியல் வாதிகளின் செல்வாக்குக்கு உட்பட்டவர்களாக இக்குழுவினர் அமைந்தனர். இந்தவகைப்பாட்டுக்குள் அடங்காதவர்களும் கூட தாம் அரசின் கடுமையான மேற்பார்வைக்கு உட்பட்டிருப்பதனை உணர்ந்தநிலையில் இன்று பாவனையில் உள்ள தமிழ்மொழி நூல்கள் அமைந்திருப்பதனைக் காணலாம். இனவாத அடிப்படையிலான ஒரு சொல்லும் இடம் பெறாத விதமாக இந்நூல்கள் கவனமாக அமைக்கப்பட்டுள்ளன. பாலர் வாசகம் முதல் அனைத்து நூல்களிலும் தேசத்து ஒற்றுமையை வலியுறுத்தும் வண்ணமாகவே தம் பாடங்களை கொண்டிருக்கின்றன. ஆனால் சிங்கள மொழிப் பாடங்களில் முற் சாய்வான பதிவுகள் முதல் வகுப்பு நிலையிலேயே தொடங்கி விடுகின்ற துரதிஷ்ட நிலையினை இங்கு அவதானிக்கலாம்.

முதலாம் சிங்கள நூலில் ஓர் இலங்கைப் படத்தின் பின்னணியில்
இலங்கை எமது தேசம்
எனது அன்பு தேசம்
நான் பிறந்த தேசம்
இது எனது தேசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடத்தின் பின்னணியில் ஒரு சிங்கள அம்மா, அப்பா, பிள்ளைகளைக் கொண்ட குடும்பம் சித்திரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இங்கே எனது தேசம் எனச் சிங்களப் பிள்ளைக்கு இலங்கை ஒரு சிங்கள தேசமாகவே உணர்த்தப்படுகின்றது. தனது இன மொழிக் குழுவைத் தவிர வேறு இன மேதும் இங்கு வாழ்வதாக அந்தப் பிள்ளைக்கு அறியத் தரப்பட வில்லை. அதே வேளை இதே பாட நூலைவெளியிட்ட இலங்கைப் பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ் முதல் நூலில் காணப்படும் காட்சி மறுதலையானது என்பதனையும் இங்கு கருத்தில் கொள்வது இன்றியமையாதது. தமிழில்,

நாங்கள் தமிழர்
நாங்கள் முஸ்லீம்கள்
நாங்கள் சிங்களவர்
எங்கள் தேசம் இலங்கை
எல்லோரும் இந்நாட்டுமக்கள்
நாங்கள் நண்பர்கள்

உரு 5.1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வாசகங்கள் மூன்று இனங்களின் குடும்பத் தலைவர்களும் கை கோர்த்து நிற்கின்ற படத்தின் சித்திரிப்புடன் அமைந்திருப்பதைக் காணலாம். இந்த இரண்டு நூல்களுமே ஒரே காலப்பகுதியில் பதிப் பிக்கப்பட்டன. ஒரே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் திட்ட மிடப்பட்டு வெளியிடப்பட்டவை. எனினும் இரு வேறு கருத்து நிலை களைப் பிரதிபலித்து நிற்கின்றன. தமிழ், முஸ்லீம் பிள்ளைகளுக்கு அப்படிக் கற்பிப்பதனை பொருத்தமற்றது (ஆபத்தானது அல்லது ஒருங் கிணைவைச் சிதைத்து விடுவதாகும்) என கருதுகின்றதா என அன்றைய ஆங்கில சஞ்சிகை ஒன்றில் எழுப்பப்பட்ட வினா இலங்கையின் கல்வி யமைப்பில் காணப்படும் இன மேலாண்மை நோக்கினை அம்பலப் படுத்தி நிற்கக் காணலாம். (Lanka Guardian 1975: 5-6)

1986இல் தமிழ் நூல்கள்ள மீள உருவாக்கம் செய்தவேளை தரம் 3 இல் முன்னர் காணப்பட்ட 'ஈழம் எங்கள் நாடடா இன்பமான வீடடா' என்ற பாடல் நீக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி எந்த ஒரு பாடத் திலும் தேசத்தின் பன்மைச் சூழலை பிள்ளைகள் உணரக் கூடிய பாடங்கள் தவிர்க்கப்படுவதனையும் காணலாம். பதிலாக கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, கவிஞர். மா.பெரியசாமி. கவிஞர் அழ வள்ளியப்பா ஆகியோரின் வானம் கறுத்தல், வீதி விதிகள், பயில்வோம் போன்ற பொதுவான தலைப்புக்களில் அமைந்த சிறுவர் பாடல்களே இடம்பெறக் காணலாம். (தமிழ் 3, 2000: 19, 39, 08) சிறுவர் பாடல்களின் வழி இனத்துவ பண்பாட்டுப் பன்மைகளை வெளிப்படுத்திய பாடல்கள் நீக்கப்பட்டது போன்றே, உரை நடையில் அமைந்த பன்மைப்பாட்டினை விளக்கும் பாடங்களும் புதிய பாடநூல்களில் நீக்கப்பட்டன.

எடுத்துக்காட்டாக தரம் மூன்றில் அத்தியாயம் 26ல் மாத்தறையில் இருக்கும் தமிழ்ப் பிள்ளை ஒருவர் யாழ்ப்பாணத்தில் வாழும் நண்பனுக்கு எழுதுவதாக ஒரு கடிதம் இடம்பெறுகிறது. இனங்களுக் கிடையிலான ஒற்றுமை பற்றிய உணர்வு பூர்வமான சிந்தையுடன் திட்டமிட்டு இந் நூல் அமைக்கப்பட்டமையை இந்த அத்தியாயம் பிரதிபலித்தது.

> எங்கள் வீட்டுக்கு அயலிலேயே சிங்களவரும் முஸ்லீம்களும் வசிக்கின்றனர். எல்லோரும் சகோதரர்கள் போல ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். என் நண்பர்களில் ஐந்தாறுபேர் சிங்களவர், இரண்டு மூன்று பேர் முஸ்லீம்கள்-சிங்கள நண்பர்கள் ஓரளவு தமிழ் பேசுவார்கள். எனக்கும் ஓரளவு சிங்களம் தெரியும் அதனால் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக விளையாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே பாடலில் 'பாலா வீட்டுத் தைப் பொங்கல்' என்னும் ஓர் அத்தியாயம் இடம் பெற்றிருந்தது. பாலாவின் சித்தப்பா பொங்கலுக்கென கண்டியி லிருந்து வரும் போது விமல் என்ற பக்கத்து விட்டுச் சிங்களப் பையனை யும் அழைத்து வருகின்றார். இங்கு வந்ததும் பாலாவும் விமலும் நெருங்கி உறவாடுகின்றனர். விமலுக்கு சற்று தமிழ் தெரியும் என்பதால் உரையாடல் நன்கு நடைபெறுகிறது. தமிழ் சிங்கள பண்டிகைகள் - பண்பாட்டு அமசங்கள் பற்றி கலந்துரையாடல் நடைபெறுவதாக பாடம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறே முஸ்லீம் சிறுவர்கள் இஸ்லாமிய பண்பாடு பற்றிய பதிவுகளையும் ஆங்காங்கே காண முடிந்தது. எனினும் தற்போது ஆண்டு 3ல் இவையாவும் நீக்கப்பட்டு ஆண்டு 4ல் பாலா வீட்டுத் தைப் பொங்கல் என்னும் பாடம் 'சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள்' என்ற புதிய தலைப்பின் கீழ் எழுதப்பட்டுள்ளது. தரம் 3இல் காணப்பட்ட அதே விடய உள்ளடக்கங்களை கொண்டதாக ஆண்டு 4 பாடநூல் அமைவதைக்காணலாம். (தமிழ் 4ம் ஆண்டு, 2000, 1-2)

எழுபதுகளில் உருவாக்கப்பட்டு எண்பதுகளின் மத்திவரை நடை முறையிலிருந்த தரம் 4 பாடநூல்களின் 37ம் அத்தியாயம்

இலங்கை மணித்திருநாடு எங்கள் நாடே-இந்த
இனிய உணர்ச்சி பெற்றால் இன்பவீடே
.........................................................
.......................................................... (இலங்கை)
சிங்களவர் செந்தமிழர் மகமதியர் என்னும்
செல்வப் புதல்வர்க் கொரு தாய் நாடு
மங்களமாய் அன்று வாழ்ந்த நாடு - இன்றும்
மங்களப் புகழ் பெருக்கி வாழும் நாடு (இலங்கை)

– புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

இப்பாடலின் வழி பல்லினங்களின் சங்கமமாய் இலங்கையின் புகழ் பாடப்படும் தமிழ் பாடநூல்களாக இவை இருந்த போதிலும் இவற்றிடை ஏனைய இனத்துவ குழுக்களைச் சேர்ந்த பிள்ளைகள் பற்றி அறிமுகங் களையும் ஆங்காங்கே காண முடியும். ஆனால் தற்போதைய ஆண்டு 4 தமிழ் பாடநூலில் இவை நீக்கப்பட்டு இவற்றுக்குப்பதிலாக எம்.ஸி.எம். ஸுபைரின் 'புரிந்து கொண்டால்' எனும் பாடல் இடம் பெறுகிறது. இதில்

எங்கள் நாடு இன்ப வீடு
என்றே உணர்ந்திடுவோம்-இதனை
நன்றே உணர்ந்திடுவோம்-இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப வீட்டில் வாழும் சோதரர்
இனியர் நம் அறிவோம்-இந்த
எண்ணத்தைப் பெறுவோம்.

இனமும், ஏற்கும் சமயமும், மொழியும்
ஏற்றந் தருவனவாம்-ஏற்போர்க்
கேற்றந் தருவனவாம்- இவற்றின்
பெயரைச் சொல்லிப் பிளவை பெருக்கல்
பேதையர் செயலாம்- உதவாப்
பேதையர் செயலாம்.

கருத்து மோதல் காணும் போது
கனிவாய் ஆய்ந்திடுவோம்- நுணுகிக்
கனிவாய் ஆய்ந்திடுவோம்- நியாயப்
பொருத்த மெங்குண்டோ அங்கு
விட்டுக் கொடுத்திடுவோம், பேதம்
விரட்டி யோட்டிடுவோம்!

எம்.ஸி.எம்.ஸுபைர்
காலத்தின் குரல்கள்

*(கல்வி வெளியீடு. தமிழ் 4ம் ஆண்டு, 2000 :40)*

சிங்களவர், செந்தமிழர், மகமதியர் எனும் செல்வப் புதல்வர்கள், மங்களப்புகழ் பெருக்கி வாழும் நாடு என்கின்ற இலட்சிய நிலையிலான இன இசைவு சித்திரிப்புக்களுக்குப் பதிலாக இன்றைய யதார்த்தத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக இனங்களுக்கிடையிலான முரண்நிலை யினின்றும் விடுபடுவதற்கான போதனையாக ஸுபைரின் புதிய பாடல் அமைகின்றது. எனினும் பிஞ்சு மனங்களில் முரண்பாட்டினை விதைத்து விடுகின்ற, கற்பிக்கும் ஆசிரியரின் கருத்தேற்றங்களின் வியாக்கியானங் களுக்கு இடமளிப்பதாகப் புதிய பாடல் அமைந்தமையை வகுப்பறை அனுபவங்கள் உறுதி செய்கின்றன.

### சிங்கள மொழிசார் நூல்கள்

சிங்கள மொழி மூலமான முதல் மூன்று நூல்களும் ஒரே பண்பாட்டுத் தன்மையானவை (Mono Cultural). இங்கு பண்பாட்டு எல்லையானது தனியே சிங்களம் என்பதற்கும் அப்பால் 'சிங்கள பௌத்த' என்ற பண்பாட்டு வரையறையைக் கொண்டிருக்கிறது. இந் நூல்களில் காணப் படும் மாணவர்களும், பெற்றோரும் சிங்கள பௌத்த என குறிப்பிடாத போதும் நூலில் காணப்படும் படமும் உள்ளடக்கமும் சிங்கள பௌத்த என்ற அழுத்தத்தையே தருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் 2, சிங்களம் 3 ஆகிய நூல்களின் மைய நிலைப் பாத்திரங்களாக வரும் நிமால், மாலா ஆகிய பாத்திரங்கள் சிங்கள பௌத்த குடும்பத்தினர். அத்துடன் இந் நூலில் இலங்கையின் வரலாற்று ஐதீகங்கள் நிறையவே சேர்க்கப்பட்டுள்ளன. நேரடியாக துட்டகைமுனுவின் போர்பற்றிப் பேசப்படாவிட்டாலும் சிங்கள 2 இல் நந்த மித்ர பற்றிய குறிப்பு ஒன்றில்

> துட்டகைமுனு போர் வேளை, நந்த மித்ர என்ற மாவீரன் மிகச்சிறப்பாகப் போராடி மன்னனுக்கு வெற்றிதேடிக் கொடுத்தான். (சிங்களம் 2:121)

என்று குறிப்பிடப்படுகின்றது. இந் நூலின் சிங்கள பௌத்த உணர்வு நிலை ஆசிரியர்களின் உணர்வாகப் பிரதிபலிக்கக் காணலாம். எந்த இடத்திலும் பிற இனத்துவ குழுக்களும் இந் நாட்டில் வாழ்கின்றனர் என்று அந்தப் பிள்ளை அறிந்திடச் சாத்தியமில்லை. சிங்கள பௌத்தர் மட்டுமே வாழும் நாடு என்பதே பிள்ளையின் கருத்தை நிறைக்கும். சிங்கள மல்லாத வேறு பெயர்களையும் கூட இந் நூல்களில் காண முடியாது. பிள்ளைகளின் நண்பர்களாக ஜெயந்த, கமனி, சிறிமல் போன்றவர்களே குறிப்பிடப்படுகின்றனர். (சிங்களம் 1: 72, சிங்களம் 2: 6-8) மேலே காட்டிய நந்த மித்ர பற்றிய குறிப்பிலிருந்து 'யாருடனான போர்' என்ற கேள்வி எழுப்பப்பட்டு அதிலிருந்து பிற இனத்துவ குழு பற்றிய தரவுகள் பேசப்படலாமே ஒழிய நேரடியாக ஏதுமில்லை.

முதல் 3 நூல்களும் சிங்களம் பௌத்தம் வளர ஒரே ஒரு பண்பாடு என்ற எல்லையுள் நிற்கக் காணலாம். ஏனைய கனிஷ்ட இடைநிலை நூல்களிலும் ஏனைய இனக் குழுக்களை புறக்கணிக்கும் நிலையே காணப்படுகின்றது. கூடவே சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் வளர்ச்சி பற்றிய பண்பாட்டு தரவுகளாகவே உள்ளடக்கங்கள் அமைகின்றன.

இன்றைய இனவாத முற்சாய்வான பிரதிமைகளில் வலுவான இடம்பெறும் துட்டகைமுனு பிரதிமை இந்நூல்களில் எவ்வாறு தரப் பட்டிருக்கின்றது என்பதனைக் காண்பது அவசியமானது. துட்டகைமுனு ஐதீகம் பற்றிய கலாநிதி டபிள்யூ.டீ. சிறிவீராவின் மீளாய்வில் குறித்த வாறு தேசம் என்பதற்கு மேலாக இனம், சமயம் என்பன இலங்கையர் உணர்வில் முனைப்பானவை. ஆரிய-திராவிட வேறுபாடுகளை துட்ட கைமுனு- எல்லாள போர் வழி நிலை நாட்டும் இக் கருத்தாக்கங்கள் பாடசாலை நூல்களில் இடம்பிடிக்கின்றன எனலாம் (Sriweera: 1976: 76-77)

துட்டகைமுனு-எல்லாள போர் என்பது நிலமானிய அமைப்பின் வழியான இரண்டு அரசர்களுக்கிடையிலான போர்தான். மாறாக சிங்கள-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கிடையேயான இனப் போர் அல்ல. (Sriweera: 1976: 76-77) இதே விதமான கருத்தியலைப் பேராசிரியர் லெஸ்லி குணவர்தனா (Gunawardane, 1979 Vol. 102) வின் அண்மைய ஆய்வுகள் வலியுறுத்தக் காணலாம்.

கல்வியாளரின் கருத்துக்கு முரணாக துட்டகைமுனுவை சிங்கள பண்பாட்டுத் தலைவராகக் காணும் அரசியல் வாதிகள், இன வாதிகள் நிலைப்பாடே பாடங்களின் வழி பிள்ளைகளிடமும் விதைக்கப்படு கின்றது. இலங்கையின் வரலாற்றை சிறிய வகுப்புக்களிலேயே கற்பிக்க விளையும் போது துட்டகைமுனு கதையை ஊடகமாகத் தெரிதலின் ஆபத்தும் உணரப்பட வேண்டும். சிங்களம் தரம்த 9 இல் துட்ட-கைமுனுவின் போர் வெற்றி என்பவற்றுக்குப் புறம்பாக துட்டகைமுனு வின் வாழ்வு பற்றிய 3ம் பாடத்தின் அறிமுகம்.

> 'அச்சமில்லாத அன்னையும் வல்லமை மிக்க தலைவனான மகனும்' என அமைதல் கவனத்திற்குரியது. கூடவே.
>
> 'நாட்டுக்காக, இனத்துக்காக, சமாதானத்திற்காக வாழ்வைத் தியாகம் செய்பவர்களின் வீரவரலாறு எங்கள் வரலாறு' என்று முன் னிட்டமையும், நாடு, இனம், சமயம், என இங்கு தரப்படுவன இலங்கை, சிங்கள இனம், பௌத்த சமயம் எனவும் கொள்ளப்படும்.
>
> துட்டகைமுனு- எல்லாளன் போர் பற்றிய விரிவான விளக்க முடிவில்
>
> மிக முக்கியமான தேசிய வாழ்வுக்கான பாடங்களை எங்கள் மூதாதையர் விட்டுச் சென்றுள்ளார்கள். அவற்றினையிட்டு நாம் பெருமைப்பட வேண்டும் அவர் வழியில் எங்கள் நாட்டுக்கும், இனத்துக்கும் சேவை செய்வது எம் கடன்

*(சிங்களம், தரம் 3, : 148-149)* எனக் கூறப்படும். கற்கும் மாணவர்கள் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாடே அவர் தம் கடமை ஒழுக்கம் என்பது போலப் பொருள் கொள்ளப்படும் ஆபத்தும் இருக்கின்றது.

துட்டகைமுனு-எல்லாளன் மரணத்தின் பின் அவன் நினைவாகத் தூபி ஒன்றை நிறுவி, அவ்வழியால் செல்பவர்கள் அத்தூபிக்கு முன் இசை ஒலிக்காது, மௌனமாக வணக்கம் செலுத்தக் கட்டளையிட்டமை போன்ற விடயங்களுக்கு இப் பாடங்களில் இடமில்லை. (Mahavamsam, Ch XXV) பதிலாக துட்டகைமுனு - எல்லாளன் போர் பற்றிய விபரங் களை மீளவும் தரம் 4, தரம் 8 சிங்கள மொழி நூல்களில் காண முடியும். துட்டகைமுனுவின் சமயப்பணி பற்றிய எழுத்துக்களிடையேயும் கூட "திராவிட அரசன் எல்லாளனிடமிருந்து பிற்ற (Pitta) ரட்டயை மீட்ட துட்டகைமுனு" என்ற மீள் பதிவுகளையே காண முடிகின்றது. (சிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களம் தரம் 8:20) இவ்வாறான வரலாற்றுப் பதிவுகளை விட கவிதை வழியான உணர்வு வெளிப்பாடுகளும் துட்டகைமுனுவை மகிமைப் படுத்துவதுடன் அவனது இனப் போரின் இராணுவ வெற்றியினை பாடுவனவாக இந்நூல்களில் இடம் பெறக் காணலாம். (பன்ரிஸ் ரணவீர வின் கவிதை - ஆண்டு 9 சிங்களம்)

துட்டகைமுனு கதைபோலவே 1ம் விஜயபாகு பற்றிய வரலாற்றுப் பதிவுகளும் 'அப்பே ஜாதிய', 'சிங்கள ஜாதிய' என்ற பதங்கள் அடிக்கடி மிகவும் உணர்வுபூர்வமாக பதிவு பெறுகின்றன. (சிங்களம் தரம் 4 : 110) மேலும் இரண்டு இடங்களில் மிக உணர்வு பூர்வமாக 1ம் விஜயபாகு வுக்கு சிங்கள இனம் எக்காலமும் கடமைப்பட்டது என்ற வாசகங்களைக் காண முடியும். (சிங்களம் தரம் 5: 70 : 75) இந்தப்பாட அலகினைத் தொடரும் பயிற்சியில் 'இளவரசன்' துட்டகைமுனு இலங்கையை எவ்வாறு ஒருமைப்படுத்தினான் என்பதனை உங்கள் முதியோரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என அமைவதும் கவனத்திற்குரிய தாகும். விஜயபாகுவிலிருந்து துட்டகைமுனுக்கு மீண்டு, அங்கிருந்து இன ரீதியில் தமிழர்களுக்கு எதிராக, சிங்கள மக்களை ஒன்றுபடுத்தல் என்ற இனவாதப் பதிவைப் பல பிள்ளைகள் தம்முதியோரிடமிருந்து பெறக் கூடும். வரலாற்று வழியான இந்த தூண்டிகளுக்கான துலங்கல், பிள்ளைகளின் மனங்களில் இன ரீதியான முற்சாய்வையே விளை விக்கும் எனலாம்.

இவ்வாறாக இலங்கையின் வரலாறு என்பது சிங்கள மக்களின் வரலாறாக, பௌத்தத்தின் வரலாறாகவே பதிவு பெறுகின்றது, கண்டி யின் கடைசி மன்னனாக தரம் 5இல் விளக்கப்படும் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஒரு தமிழன் என்ற உண்மை மறைக்கப்படுவதும் கவனிக் கத்தக்கது. சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் தந்தையான அநகாரிக தர்மபாலாவையும் ஏனைய அரசர்களையும் வர்ணிக்கும் இந்த பாட விபரிப்புக்கள் சிங்கள கலாசார அடிப்படைகளை எடுத்து விளக்கி உலகறியச் செய்த ஆனந்த குமாரசாமி பற்றி ஒரு வார்த்தை தானும் எழுதியதில்லை. இவ்வாறாக வரலாற்றை ஒரு வழிப்பாதையாக, இன வாதம் வளர்க்கும் திசையில் மட்டுமே எழுதப்பட்டிருக்கக் காணலாம்.

ஒரே ஒரு விதிவிலக்காக தரம் 6இல் சிங்கள மொழி நூலில், முற்போக்கு கவிஞரான சாகர பவன் சூரியாவின் 'வடக்கிலிருந்து ' என்ற கவிதை இடம்பெறும். வடக்குக்கும், தெற்குக்கும் உள்ள இயற்கைச் சிறப்புக்களையும், மனித பொதுமையையும் அழகாக இக் கவிதையில் அவர் சுட்டுவார். இனவாத மேலாதிக்க பாலைவனத்தில் ஒரு சிறு துளிநீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தாற் போல இந்த கவிதை எனக் குறிப்பிடும் சுனில் பஸ்தியன் & ரெஜிஸ்ரீவர்த்தன அவர்கள் கருத்து எம் கவனத்திற்குரியதாகும். (Bastian & Sriwardana, 1981:56)

### ஆங்கில மொழிசார் நூல்கள்

ஆங்கிலப் பாட நூல்கள் நாட்டின் அனைத்து இனக் குழுக்களை சேர்ந்த பிள்ளைகளுக்கும் பொதுவானவை. இந்த வகையில் நாட்டின் பன்மைப் பண்பாட்டினைப் பிரதிபலிப்பதாக அவை அமைவது இன்றியமை யாதது. கூடவே இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் கருதப்படுகின்ற நிலைமையில் உள்ளடக்கத்தின் வழி பரஸ்பர பண்பாட்டு அறிவுக்கும் புரிதலுக்கும் துணையாகும் விதமாக அவற்றினை அமைப்பது அவசிய மானது.

இந்தப் பின்னணியில் நடைமுறையிலுள்ள ஆங்கில நூல்களை உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும் போது அவை பல் பண்பாட்டுத் தன்மைக்குப் பதில் ஒரே பண்பாடு (Mono Cultural) தன்மையதாகவே பெரிதும் அமைந்துள்ளதைக் காணலாம். பாட அலகுகளில் வருகின்ற பாத்திரங்கள், அவற்றின் பின்புலம் அனைத்தும் சிங்கள பெயர், சிங்களப் பிரதேசம் என்றவாறே அமையக் காணலாம்.

ஆண்டு 3க்கான Lets Learn English என்ற பாடநூலில் My Self என்ற முதல் அத்தியாயத்தில் நாட்டின் பன்மைச் சமூக எண்ணக் கருவை வெளிப்படுத்துவதாய்

I AM RUWAN
I AM MEER
I AM NIZAR
I AM KUSUM

என்ற பெயர் அடையாளங்கள் சுட்டும். எனினும் தெளிவான பண் பாட்டு மூலமோ, குறிப்பான பண்பாட்டு அடையாளமோ இங்கு தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (English Grade 3, 2000:1)

ஆண்டு 4க்கான English for me பாட நூலின் முதலாம் அத்தி யாயத்திலேயே உலகச் சிறுவர்களின் இணைப்பு நிலை சித்திரிக்கப்படும். இலங்கை, இந்தியா, நைஜீரியா, யப்பான், இங்கிலாந்து என்கின்ற இந்த நாடுகளை பிரதிநிதித்துவம் செய்யும் சிறுவர் சிறுமியரில், இலங்கை யின் பிரதிநிதியாக சமன் (Saman) மட்டுமே காட்டப்படுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு 5.2




கீதா என்ற ஒரு சிறுமி நெற்றிப் பொட்டுடன் சித்தரிக்கப்படுகிறாள். ஆனால் அவள் இந்தியச் சிறுமியாகவே இங்கு காட்டப்படுகிறாள் (English, 2001:1)

தொடரும் அலகெங்கும் சமன் குடும்பம் பற்றிய தரவுகளினூடாகவே பாடங்கள் நகர்த்தப்படும். விடயங்களின் நிகழ்களங்கள் வெலிகம, நெலும்புர எனும் சிங்கள கிராமங்களாகவே அமைகின்றன. மேலும் இப்பாட அலகுகளில் Rauf, Rani, Raja, Rohan என்னும் மாணவர் பாத்திரங்களும் உண்டு. எனினும் இந்தப் பெயர்கள், பன்மைத் தன்மை கொண்டனவாக வெளித்தெரிந்தாலும், பாடங்களுக்கான ஓவியச் சித்திரிப்புக்களிடைவரும் ஏனைய பாத்திரங்களின் வழி சிங்கள பண்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சத்திற்குரியதாகவே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. எடுத்துக் காட்டாக சித்திரிக்கப்படும் ராணியின் தாயார் சிங்களச் சேலைக் கட்டுடனேயே காணப்படுகின்றார் (English Year 4:25). இந்தப் பாட அலகில் மட்டுமன்றி அனைத்துப் பாட அலகுகளின் பாத்திரங்களும் சிங்கள உடைப்பாரம்பரியத்தை வெளிப்படுத்துவனவாகவே அமையக் காணலாம். இவ்வாறான சிங்கள பண்பாட்டு மைய நோக்கு தொடரும் பாடநூல்கள் அனைத்திலும் வியாபித்திருக்கக் காணலாம்.

மேலும் சமன் என்ற பாத்திரத்தை மையமாகக் கொண்டே பிற பாத்திரங்கள் உருவாக்கப்படுகிறது. தரம் 6ற்கான The World Through English இல் 1ம் அத்தியாயம் சமன் என்ற சிங்களச் சிறுவனின் புதிய ஆசிரியை திருமதி. ஜயலத் அவர்களின் அறிமுகமாக அமையும் Getting to Know One another என்ற இந்த அலகில் ஆசிரியர் தன்னை அறிமுகம் செய்து அவ்வாறே மாணவர்களை அறிமுகம் செய்யுமாறு கேட்பார்.

உரு 5.3

UNIT ONE

WELCOME TO THE ENGLISH CLASS

1. GETTING TO KNOW ONE ANOTHER




This is the first English lesson in Grade 6. The children have got a new English teacher.

Teacher: Good morning, Children.
I'm your English teacher, Mrs. Jayalath.
I'm from Kurulugama. I'm happy to meet you.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Now please tell me your names.
Tell me where you come from.
Saman: I'm Saman. I'm from Kurulugama.
Teacher: Thank you, Saman. What about the others?
I am Saman. I am from Karuligama!
Thank You Saman. What about others?

என்பதுடன் பாடம் முடியும். சமனின் நண்பர்களாக நிமல், சீதா, அப்துல், பாலா ஆகிய பெயர்களை அலகு 2 அலகு 3 இல் தான் அறிமுகப் படுத்தப்படுகிறது. இவ் அறிமுகம் சமனை மையமாகக் கொண்டே அமையும்.

இந்தப் பாட நூலின் ஓவியச் சித்திரிப்புக்கள் யாவும் சிங்கள உடை அலங்காரம், சிங்கள பௌத்த கிராம காட்சிகள் என்பனவாகவே அமைகின்றன. இந்நூல்களின் ஆலோசனைக்குழு, எழுத்தாளர்குழு, ஓவியர் குழு என்பவற்றில் ஏறத்தாழ 100% மும் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஆசிரியர் குழாமாகவே அமைந்துள்ளமையும் குறிப்பாக அவ தானிக்கப்படும். இந் நூல்களில் கணிசமானவை இலங்கை, நோர்வே, யுனெஸ்கோ இணைந்த ஆரம்ப ஆங்கிலக்கல்வி திட்டத்தின் கீழானது என்பதும் இங்கு கவனம் பெற வேண்டியதொன்றாகும்.

## சமூகக்கல்வியும் வரலாறும்

1972ஆம் ஆண்டின் புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் வரலாறு, குடியியல், சமூகவியல், பொருளியல், புவியியல் எனத் தனித்தனியாக இந்த அறிவுத் தொகுதிகள், மாணவருக்குப் பயன்படும் வகையில் சமூகக் கல்வி என்று ஒன்றிணைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் மூலம் மாணவரிடையே இடம்பெறும் அறிவு வளர்ச்சியோடு, நாட்டுப் பற்றும் வளர்க்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது (கல்வியின் புதிய பாதை 1972 : 13). பொருத்தமான முறையில் பாடப்பரப்பு வகுக்கப்பட்டு அதற்கான பாடநூல்கள் எழுதப்பட்டிருப்பின் இவ் எண்ணம் நிறைவேறி யிருக்கும். இன்று பாவனையிலுள்ள சமூகக்கல்வியும் வரலாறும் ஆண்டு 9 சமூகக்கல்வியும் வரலாறும் ஆண்டு 8 ஆகிய 2 பாடநூல்களையும் எடுத்து நோக்கின் ஆண்டு 9 பாட நூலில் இலங்கையில் அன்னியர் படையெடுப்புப் பற்றிக் குறிப்பிடும் போது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோருடைய படையெடுப்புக்கஸ்ளைக் குறிப்பிட 'அன்னியர் படையெடுப்பு' என்ற பதமே பெரும்பாலும் கையாளப் பட்டுள்ளது. ஆனால் தென்னிந்திய அரசர்களின் படையெடுப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமட்டும் 'தென்னிந்திய ஆக்கிரமிப்பு' என்ற பதம் கூடுதலாக எடுத்தாளப்பட்டுள்ளது. (108) இதற்குரிய உதாரணங்களை இப்பாட நூலில் இருந்து நாம் காண முடியும். மேலும் யாழ்ப்பாண இராச்சியம் ஒரு பிராந்திய அரசு. (181) என்ற விளக்கம் அன்றைய கால கட்டங்களில் நாடளாவிய தேசிய அரசு எதுவும் தொடர் ஆட்சி செலுத்தாத நிலையில் கேள்விக்குரியதே. யாழ்ப்பாண அரசு பற்றிய தகவல்கள் இருந்தும் அவை போதுமான அளவு வழங்கப்படாமை தமிழரது வரலாற்று இருட்டடிப்பு செய்யப்பட்டதா என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது.

அதே போல வரலாறு ஆண்டு 8 எனும் நூலில் கலைகள் பற்றிக் குறிப்பிடும் போது 1ம் பராக்கிரமபாகுவின் தமிழ் மகாசாயபற்றிக் கூறுகையில் "தமிழ் கைதிகளைக் கொண்டு கட்டுவிக்கப்பட் தெமழ மகாசாய என்பதே இம்மன்னனால் கட்டப்பட்ட மிகப் பெரிய தூபி" (26) எனவும், பொலநறுவைக்கால 1ம் இலக்கச் சிவன் கோவில் "சிங்கள மன்னர்களுக்குச் சேவை புரிந்த தென்னிந்தியக் கூலிப்படையினர் வழிபடுவதற்கு கட்டப்பட்டிருக்கலாம் (26) எனவும் குறிப்பிடுவது தமிழர்களைப் பற்றி ஒரு தாழ்வான கணிப்பீட்டை வளர்ப்பதாக முடியும். இத்தகு போக்கு "இலங்கையில் இனவாதம் பாடநூல்களிலிருந்தே தொடக்கம் பெறுகின்றது என்பது அழுத்தமாகக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்". (துரைமனோகரன், வீரகேசரி, 18.8.1999) என்ற கருத்து பொருத்தமானதேயாகும் என எண்ண வைக்கின்றது.

**சுற்றாடற்கல்வி**

சுற்றாடற்கல்வி தரம் 6 எனும் நூலில் 8வது பாடம் 'இலங்கை மக்கள்' என்பதாகும். அதில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், மலேகாரர் ஆகிய இனக்குழுக்கள் இலங்கையில் வாழும் மக்கள் என்று காட்டும் போது அவர்களுள் சிங்களவரே முதல் வந்தவர்கள் என்றும் ஏனையோர் பிற்காலங்களில் காலத்துக்குக் காலம் வந்து குடியேறியவர்கள் என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். (55) இலங்கையின் 1வது மன்னன் விஜயன் என்றும் அவனது பின்னோர்களே சிங்களவர் என்றும் வலியுறுத்தும் பாணி இலங்கையின் பூர்வீகக் குடிகளான இயக்கர், நாகர் பற்றிய செய்திகள் அனைத்தும் மறைத்து விட்டு சிங்கள இனத்துக்கு முதன்மை இடம் கொடுக்கும் முயற்சியாகும். மேலும் இதேநூலில் இந்தியாவில் சாஞ்சி தூபியில் விஜயனது இலங்கை வருகை பற்றிய சிற்பம் ஒன்று இருப்பதாகவும் அதில் சிங்க உருவத்தினுடைய கொடியொன்று காணப்படுவதாகவும், அது புராதன சிங்களவரின் குலச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னமாக இருக்கலாம் எனவும், அது இன்றைய தேசிய கொடியின் சின்னமாகக் கொள்ளப்பட்டிருக்கக் கூடும் (57) என்ற கருத்துக்கள் மக்களிடையே பரஸ்பர மதிப்பை உருவாக்குதற்குப் பதிலாக உயர்வு, தாழ்வு மற்றும் வேறுபடுத்தல் மனப்பான்மையையே உருவாக்கும் எனலாம்.

**சமயம்**

சமய பாடநூல்களை கருத்தில் கொள்ளுகின்ற பொழுது அவை அடிப் படையில் தத்தம் மதக்கருத்தியல்களை, அவற்றின் வழியான விழு மியங்களை விளக்குவனவாக அமைகின்றன. கூடவே தத்தம் மதங்கள் பற்றிய உயர்வினை, பெருமைகளை மாணவர் மனங்களில் விதைக் கின்றனவாகவும் அமையக்காணலாம். இந்த வகையில் சமூகத்தில் ஒருங்கிணைப்புக்குப் பதிலாக வேறுபாடுகளை அழுத்துவனவாகவே இந் நூல்கள் அமைந்துவிடுகின்றன. தத்தம் மதங்கள் பற்றி அறிவது போதாது பிறமதங்களின் பெருமைகள், அவை வலியுறுத்தும் விழு மியங்கள் பாடநூல்கள் ஊடாக மாணவரிடையே சென்றடைய வேண்டும். இது இடம்பெறவில்லை என்பதே உண்மையாகும்.

**இன ஒருமைப்பாட்டில் ஆசிரியர்**

இலங்கையின் இன ஒருமைப்பாட்டுக்கான கல்வி (Education for Racial Integration) என்ற அமைப்பினுடைய ஆய்வின் முடிவுரையில் சிறி வர்த்தனா அவர்களின் கூற்று இன்று வரை அர்த்தமுள்ளதாக அமை கின்றது. தேசிய ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புதலில் பல்வேறு இனத்துவக் குழுக்களிடையே சிறப்பான உறவை பேணுவதில் ஆசிரி யர்கள் பங்கு மிக முக்கியமானது, (சிறிவர்த்தனா, 1960 : 11) நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் சிறிவர்த்தனாவின் எதிர்பார்ப்பு இலங்கை யில் எதிர் நிலையில் இருப்பதனையே ஆய்வுகள் சுட்டிநிற்கின்றன. ஆசிரியர்களின் நிலையானது ஒருமைப்பாட்டினை வளர்ப்பதற்குப் பதிலாக இனங்களுக்கிடையிலான முரணைவளர்ப்பதாகவே அமையக் காணலாம். ஆசிரியர்களின் இந்த நிலைமைக்கு அரணாகவும், களமாக வும் பாடநூல்களின் இன உணர்வுத் தன்மையும் துணை போவதை இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் பற்றியபிரதிமைகள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபடும். இலங்கையைப் பொறுத்தவரை இவர்கள் சமூகத்தால் பின்பற்றப் படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த வகையில் ஆசிரியர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளச்சார்பு, விழுமியங்கள் இலகுவில் மாணவர்களால் பின்பற்றப்படும். இன்றைய இலங்கைக் கல்வி அமைப்பில் ஆசிரியர்களின் உருவாக்கம் பற்றிய ஒரு நுண் நோக்கு அவர்களின் ஆளுமைப் போக்கினை மதிப்பிட உதவும்.

சுதந்திரத்திற்கு முன்னைய கால ஆசிரியர் பல்லின குழுக்களுடன் கல்வி பயிலும் வாய்ப்பினைப் பெற்றவராக இருந்தார். ஆனால் சுதந்திரத் திற்குப் பின்னைய கால ஆசிரியதலைமுறையினர் குறிப்பாக சுய மொழிக் கல்விக்குப் பின்னால் தனித்தனி தீவுகளாகிப் போனதே வரலாறாகும்.

1. பல்கலைக்கழகப் பட்டம்
2. ஆசிரிய கலாசாலைப் பயிற்சி/கல்வியியல் கல்லூரிப் பயிற்சி
3. தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்.

என மூன்று வகை ஆசிரியகுழாமும் இன வழியாக பிரிக்கப்பட்ட பாடசாலை, ஆசிரிய கலாசாலை, பல்கலைக்கழக கல்வியமைப்பிலேயே பயின்றவர்கள் இவ்வாறாக இனத்துவ அடிப்படையில் பிரிக்கப்பட்ட ஆசிரியர் குழாத்தின் சமூக சூழல், சமூகமயமாக்கலுக்கு ஏற்பவே அவர்களது உளச்சார்பும் அறிவுத் திரளும் அமையக் காணலாம்.

இந்த நிலையில் முற்சாய்வினை வளர்க்கக் கூடிய, தூண்டக்கூடிய, பாடநூல்களின் வழியாக அறிவைப் பெறுதலும் அந் நூல்களின் வழியாக அறிவைத் தருதலும் தவிர்க்க முடியாத இலங்கையின் வகுப்பறைச் சூழலில் ஒருமைப்பாட்டுக்குப் பதில் முரண்நிலையை தோற்றுவிக் கின்ற ஆசிரிய அனுபவங்களாகவே அமைந்து விடுகின்றன. குறிப்பாக இனவாத உணர்வின் வழியான சிங்கள பாடநூல்களைக் கற்பிக்கும் ஆசிரிய களங்களில் இந் நிலை பெரிதும் உணரப்படும். கொழும்பு பல்கலைக்கழக மானுடவியல் துறை விரிவுரையாளர் கலாநிதி சசங்க பெரேரா அண்மையில் மேற்கொண்ட சில ஆய்வு முடிவுகள் அதிர்ச்சி யான சில அவதானிப்புக்களை வெளிப்படுத்துகின்றன.

1. கற்பிக்கப்படும் மாணவர்கள் சார்ந்த இனக்குழ தவிர்ந்த ஏனைய குழுக்கள் பற்றிய எதிரான பிரதிமையை வளர்த்தல்.
2. கற்பிக்கும் குழுவிற்கு ஏனைய குழுக்களைப் பற்றிய தரவுகள் எதனையும் கற்பிக்காது தவிர்த்தல். அதன் வழி தாம் சார்ந்த குழுவின் மேலாதிக்கத்தை நிலை நாட்டுதல்.

என்ற இரு நிலைகளில் இந்த வகுப்பறை அனுபவங்களைக் காணலாம். (Susanka, 1992:17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி பிரதேசக் கற்பித்தல் அனுபவங்கள் தொடர்பான இந்த ஆய்வுத் தரவுகள், வரலாறு தொடர்பான கற்பித்தலில் ஆசிரியர்கள் கொண்ட ஆர்வத்தையும் அறிவு நிலையையும் வெளிப்படுத்தும்.

- *பாடங்களில் தரப்பட்ட வரலாறு நியாயமான அளவுக்கு சரி யானதா?*

  – ஆம் மிகச் சிறந்த அறிஞர்குழாம் இந்நூல்களை ஆக்கி யுள்ளது. இவற்றினை விட, நாம் மகாவம்சத்தை நன்றாகப் படித்துள்ளோம். எங்கள் வரலாற்றுக்கான மிக நம்பகமான மூலமாக அது அமைந்துள்ளது.

- *நவீன ஆய்வுகள் தமிழர்களும் சிங்களவர்களைப் போல நெடுங் காலம் இங்கு வாழ்ந்து வந்தமை பற்றி எடுத்துக் காட்டுவதனை அறிவீர்களா? பெரும்பான்மை சிங்களக் குடியேற்றங்கள் வடக்கி லிருந்தல்ல, தென்னிந்தியாவில் இருந்தே வந்தன என இன்று பொதுவாக ஏற்கப்படும் கருத்துடன் உடன்படுகின்றீரா? சில சிங்கள சாதிக் குழுக்களான நவன்தன்ன* (Navandanne), *சலாகம* (Salagama) *என்பவை 15ம் நூற்றாண்டில் தென் இந்தியாவின் கேரளத்திலிருந்து வந்த மக்களைக் கொண்டது என அறிவீர்களா?*

  – என் 18 வருடகால ஆசிரியப் பணியுடன் எனது பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி அனுபவத்தில் இப்படியான தேவதைக்கதைகள் பலவற்றைக் கேட்டுள்ளேன். உண்மை யில் தமிழர்கள் பிந்தி வந்தவர்கள். சிங்களவர் தான் முதல் மூத்த குடியினர். மகாவம்சம் இதனைத் தெளிவாக விளக்கு கின்றது. எங்கள் வரலாற்று ஆசிரியர் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார். எல்லாக் குடியேற்றங்களும் வடக்கிலிருந்து தான் வந்தன. தெற்கிலிருந்தல்ல. சில கலப்பு மணங்கள் நடந்திருக்கலாம். நான் நீண்ட காலம் வரலாறு கற்பித்து வந்தவன். இப்போது சமூகக்கல்வி கற்பிக்கின்றேன். இவ் வாறான கோட்பாடுகள் தமிழ் பிரச்சாரக்காரர்களால் முன் வைக்கப்படுவது. இதற்கு மேலைத்தேய கல்வி பயின்றவர் களும் துணை போகின்றார்கள்.

*சிங்கள–தமிழ் மக்களின் இடையறாத முரண்பாடாகவே வரலாற் றினைக் கற்பிப்பது, இன்றைய இனங்களுக்கிடையிலான உற வினை பாதிப்பதாக அமையும் என நீங்கள் கருதியதில்லையா?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாங்கள் தமிழருடன் நெடுங்காலமாகப் பிரச்சினைப்படு கின்றோம். இவர்களை அகற்றும் வரை பிரச்சினை தான். எங்களுக்குச் செல்வதற்கென்று இடமேதும் இல்லை. அவர் களுக்குத் தமிழ் நாடு இருக்கின்றது. இதனைவிட என்ன விளைவுகள்தான் வந்தாலும் எங்கள் இளைய தலைமுறைக்கு எங்கள் மூதாதையர் தியாகங்களை அறியத் தருவது எம் கடமையாகும். அன்று எங்கள் அரசர்களான துட்டகைமுனு, 1ம் விஜயபாகு போன்றோர் செய்த தியாகத்தை ஒத்ததாகவே இன்று எங்கள் பொலிசும், படைவீரர்களும் செய்யும் தியாகங் களை எம் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

- இலங்கையின் இனப்பிரச்சினையை இராணுவ செயற்பாடுகளை விட அரசியல் பேச்சுவார்த்தை, விட்டுக் கொடுப்புக்களின் மூலம் தீர்ப்பது நல்லதென நீங்கள் கருதவில்லையா?

  - நான் என் மாணவர்களுக்கு எப்போதும் சொல்வது அரசியல் தான் எங்களைச் சீரழித்தது என்று, தமிழர் பிரச்சினையை நாங்கள் இராணுவ ரீதியில் ஒழிக்க வேண்டும். அவர்களைத் தோற்கடித்தபின் அவர்கள் கூறும் அநீதிகளை கருத்தில் கொள் ளலாம். அவர்கள் தம் பங்குக்கு மேலாகக் கேட்பதுதான் எப்பவும் பிரச்சினை, இத்தனைக்கும் நாங்கள் தான் பெரும் பான்மை; நாங்கள் நாட்டுக்கு முதலில் வந்தவர்கள்.

- சமூகக் கல்வியில் உள்ள வரலாற்றுப் பாடத்துக்கு மேலாக இன முரண்பாடு தொடர்பான உங்கள் சொந்தக் கருத்துக்களை பாட சாலை வகுப்பறையில், தனியார் கல்வி நிலைய வகுப்பறைகளில் நீங்கள் சொல்வதுண்டா?

  - எப்போதும் சொல்வேன், ஒரு ஆசிரியர் என்ற வகையில் அது என் கடமை

- சில உள்ளூர்வாசிகள் உங்களையும், ஏனைய சில ஆசிரியர் களையும் 1983 இனக்கலவர வேளை தமிழர்களுக்கு எதிராக மாணவர்களைத் தூண்டி விட்டீர்கள் என்கின்றார்கள்? இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

  - எல்லாம் பொய், சில மாக்ஸியவாதிகளும், மேலை நாட்டுக் கல்வி பெற்றவர்களும் தேசப்பற்றாளர்களை இனவாதிகளாகப் பெயர் சூட்டுகின்றார்கள். இவர்கள் துட்டகைமுனு அரசனை அநகாரிக தர்மபாலாவைக் கூட இனவாதிகள் என்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மாணவர்களிடம் யாரையும் கொல்லவோ, பாதிப்புறச் செய்யவோ சொல்வதில்லை. நாங்கள் பௌத்தர்கள், ஆனால் அவசியம் ஏற்படும் போது எங்கள் பெருந்தலைவர்கள் சொல்வது போல நாட்டினைக் காக்க போரிடுவது அவசியம்.

- *ஆக, நீங்கள் விரும்பியபடி மாணவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவது சரி எனக் கருதுகிறீர்களா?*

- ஆம், ஓர் உண்மை ஆசிரியன் கடமை அது.

(Susanka, 1992: 20&21)

மேற்கண்ட நேர்காணல் ஓர் உதாரண விடயக் கலை ஆய்வு மூலமாக இருந்தாலும், நிலவும் பல வகுப்பறைக் காட்சிகளுக்கு சாட்சியாக அமைவது எனலாம். எதிரான, தவறான பிரதிமைகளை மிகவும் உறுதியாக கற்பித்தலின் வழி மாணவ சமுதாயத்திடம் விதைக்கும் நிலையினை இது காட்டிநிற்கின்றது.

வகுப்பறைக்குப் புறம்பான ஆக்கத்திறன் சார் கலை நிகழ்வுகள் போன்றவற்றிலும் கூட இந்த வகையான பேதநிலையான சித்திரிப்புக் களையும், அதன் வழியான முற்சாய்வான சமூக மயமாக்கல்களையும் காணமுடியும். கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் துட்ட கைமுனு நாடக அனுபவம் இதற்குச் சான்றாக அமையும். ஆய்வாளரின் நேரடி அவதானத்தில் இந்நாடக பாத்திரங்களின் சித்திரிப்பு, நாடகத் துக்கான மாணவர் எதிர்வினை என்பன இன முரண் வளர்ச்சிக்கு துணை போகும் நிலை கவனத்திற்குரியது. துட்டகைமுனு அரசனைப் பட்டாடை முடிசகிதம் சித்திரித்த நாடகம் எல்லாளனை தெருச்சண்டி யன் அல்லது நாகரீகமடையாத ஒரு தோற்றத்தைக் கொண்டவனாக வெளிக்காட்டியது. நாடக வசனங்களில் கூட எல்லாளன் மீதான காழ்ப்பு வளர்க்கப்பட்டு ஈற்றில் எல்லாளன் விழும்போது அனைத்து மாணவர் களும் கைதட்டி ஆரவாரிக்கும் களமாக அந்த அரங்கம் முடிவுபெற்றது. (அநுல வித்தியாலயம், 1990)

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வரலாறு பற்றிய மேலதிக செய்திகளை ஆசிரியர் அறிவதற்கான களங்களாக இனவாதப் படைப் புக்கள் அமைவதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். சிறில் மத்யூவின் 'Sri Lanka Budha Sasana Beragania' போன்ற நூல் களின் வழியான தொல்லியல் சான்றாதாரங்கள் பல ஆசிரியர் பெற்றுக் கொண்டதற்கான ஆய்வுப்பதிவுகள் நாட்டின் கல்வி கற்பித்தல் சூழலின் ஆபத்து நிலையை வெளிப்படுத்துகின்றது (Sasanka 1992). புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான நோக்கிலான ஆய்வு முடிவுகள் பாடநூல்களில் இணைக் கப்படாத நிலையில் ஆசிரியர் அறிகை நிலையில் மாற்றம் என்பதும் சாத்தியமற்றதாகின்றது.

தமிழ் மொழி மூல வகுப்பறைகளின் பாட அலகுகள் இடம்தராத போதிலும், இங்கும் வரலாற்றில் விடப்பட்ட, திரிக்கப்பட்ட விடயங்கள் என்ற வகையில் தமிழ் உணர்வை முதன்மைப்படுத்தும் நிலைமை களைக் காண முடியும். தமிழின தொன்மை, மகோன்னதம், சிங்களவர் தமிழர்களுக்கு பின்னாலே வந்தவர்கள் என்ற கருத்தியல்களினடியாக தமிழ் மாணவர் மனதிலும் சிங்கள இன வெறுப்பு அல்லது சிங்களவர் களிலும் மேம்பட்டவர்கள் நாம் என்ற மேலாண்மையுணர்வு ஏற்படும் நிலைமைகளும் இங்கு எம் கவனத்திற்குரியதாகும். தொடரும் போர் சூழல், பரஸ்பரம் இந்த முரண் உணர்வை வளர்ப்பதாகவே அமையக் காணலாம். போராட்ட அமைப்புக்களின் பிரசுரங்கள், பிரசார நோக் கிலான பல்வேறு எழுத்துக்கள் இடையேயும் இத்தகு இன முரண் உணர்வினை வளர்க்கும் தன்மை கொண்ட ஆக்கங்கள் இந் நிலை மைக்கு மேலும் தூபமிடுவன.

இவ்வாறான நிலைமைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட பள்ளிக்கூட நிலைமைகளும் கூட சில தனித்துவமான கல்வி ஆளுமைகளால் சாத்தியப்பட்டமையும் இங்கு கவனத்தில் கொள்ளல் வேண்டும். சிங்கள பாடசாலை ஒன்றில் நீண்ட காலம் பணிபுரிந்த யாழ்ப்பாண தமிழ் அதிபர் ஒருவருடனான நேர்காணல், இன முரண் உணர்வை வளர்க்கக் கூடிய நிலைமைகளை முன்னதாகவே கருத்தில் கொண்டு அமைப்பு ரீதியாக தீர்வு கண்ட ஆளுமையாக அவரை வெளிப்படுத்துகிறது. 'இலங்கை மக்கள் இலங்கையர்' என்று எண்ண வேண்டுமே தவிர சாதி அடிப் படையில், இன அடிப்படையில் உள்ள பிரிவுகளை வலியுறுத்தும் வகையிலோ அதை பெரிதாகத் தூக்கிப்பிடிக்கும் முறையிலோ அமையக் கூடாது என்பதே எனது எண்ணம். படிவங்களின் கேள்விக் கொத்தில் கூட இன ரீதியான, சாதி ரீதியான பாகுபாடு வலியுறுத்தும் வகையில் இடம்பெறக்கூடாது What is your Nationality? உனது தேசிய இனம் என்ன? என்று இருப்பதே சிறந்தது. நம் நாட்டில் இன ஐக்கியம் குலைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். எனது பாடசாலையில் இரண்டு இன மாணவர்களும் கல்வி கற்கின்றனர். சிங்கள, தமிழ் மாணவர்களின் வகுப்பறைகளை வெவ்வேறு கட்டிடங்களில் வைக் காமல் ஒரே கூரைக்குள் அருகருகே அமைத்து பாடப் போதனைகளை நடத்த வழிசமைத்தேன். சிங்கள மாணவன், தமிழ் மாணவன், முஸ்லீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் என்று விழிப்பதை தடைசெய்து ஏ வகுப்பு மாணவர் பி வகுப்பு மாணவர் என்று அழைக்குமாறு உத்தரவிட்டிருந்தேன். உதார ணமாக மாணவன் என்னிடம் முறைப்பாடு கொண்டு வரும் போது தமிழ் மாணவன் "தனக்கு சிங்கள மாணவன் அடித்திட்டான்" என்றோ, சிங்கள மாணவன் தனக்கு "தெமழ லமய மட காலாதியன்னாவா" என்றோ முறையிட்டால் அந்த முறையீட்டை ஏற்றுக் கொள்ளாது, மாறாக குற்றச்சாட்டை சுமத்திய மாணவனுக்கு முறையான பூசை கொடுத்து வந்தேன். இவ்வாறான தனித்துவ ஆளுமைகளின் தீர்க்க தரிசனமான செயற்பாட்டினை கூட நாட்டின் இனவாத அலை அடித்துச் சென்றது. இனக் கலவரங்களின் உக்கிரதாண்டவத்தில் பாடசாலையின் தமிழ்ப் பிரிவை மூடி அதனைத் தனிச் சிங்கள பாடசாலையாகவே நடத்த நேரிட்டமையை மிகுந்த துயருடன் நேர்காணலில் வெளிப்படுத்துவார். அனுராதபுரம் சென் ஜோசப் பாடசாலையின் அதிபர் ஆர் ஸ்ரனிஸ் லொஸ். *(2000)*

## வளமும் வாய்ப்புக்களும்

கல்வி இலக்குகளை எய்துவதில் கல்விசார் வளங்களினதும், வாய்ப் புக்களினதும் பங்கு மிக முக்கியமானது. இவ் வளங்களும் வாய்ப் புக்களும் கல்வி அமைப்பொன்றின் கருத்தியல் மற்றும், அக் கல்வி அமைப்பு நிலை பெறும் தேசத்தின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளிலும் தங்கியுள்ளது. இந்த வகையில் இலங்கையின் சமூக வரலாற்றில் இனத்துவ அடிப்படையில் வளப் பகிர்விலும், வாய்ப் புக்களிலும் பேதங்களை நாம் அவதானிக்க முடியும். வளப் பங்கீட்டில் தாழ்ந்த வசதிகளைப் பெற்ற பண்பாட்டுப் புலங்களில் கல்வி நிலை மையும் பின்தங்கியதாய் அமைவது தவிர்க்க முடியாததாகிறது. இத்தகு ஏற்றத்தாழ்வுகளுக்கு மேலாண்மைப் போக்கான குடியேற்ற நாட்டாதிக்க அரசியலே அடிப்படையானது. அதன் வழி சுதேச அரசியலின் பேரின வாத நோக்கிலான பாரபட்சங்கள் இன்றுவரை தொடர்கின்றன.

கல்வி வளங்களை இழப்பதிலிருந்து இனத்துவ அடையாளங் களின் தனித்துவத்தினை இழத்தல் வரை இந்த வளப்பகிர்வு குறை நிலை, வளமறுப்பு என்பவற்றின் விளைவுகளைக் காணமுடியும். (Susanka, 2000)

இந்தவகையில் இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒப்பீட்டு ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்ட மலையகக் கல்வி பற்றிய நுண்ணாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் வழி இந்த இனவாத நோக்கிலான செயற்பாடுகள் இங்கு ஆழ நோக்கப்படுகின்றன.

இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சிநிலை பெற்றதனைத் தொடர்ந்து மத்திய மலைநாட்டுப் பகுதியில் பல பெருந் தோட்டங்கள் திறக்கப்பட்டன. இங்கு வேலை செய்வதற்கென்று குறைந்த கூலியுடன் பல தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டனர். ஆரம்பத்தில் குடும்பங்களை இந்தியாவில் விட்டுவந்த தொழிலாளர்கள், தேயிலைத் தோட்டங்கள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து நிரந்தரமாகக் குடும்பங்களுடன் வந்து தங்க ஆரம்பித்தனர். அக்காலம் முதல் மலையகப் பிள்ளைகள் தமக்கெனக் கல்வி வாய்ப்புக்களைப் பெற முடியாத நிலைமை தொடர் கதையாகும். பல்வேறு ஆணைக்குழுக்கள், வெள்ளையறிக்கைகள் அறிமுகமாகியும் கல்வி நிலையில் மேம்பாடு காணப் படவில்லை. இங்கு 'கல்விக்கு யார் பொறுப்பு' என்ற அடிப்படைக் கேள்விக்குப் பதில் காண்பதிலேயே ஆரம்ப காலங்கள் போயின எனலாம். தோட்டத்துரைமாரிடம் தான் பெறுப்பு இருக்கவேண்டும் என்பது குடியேற்ற நாட்டாதிக்கக் கல்விக் கொள்கையாக இருக்க (Chatopatyaya, 1978:174). அரசு நன்கொடை வழங்குவதற்கும் சில நிபந்தனைகளை விதித்தது. இவ்வாறான கட்டுப்பாடுகளை விரும்பாத தோட்டத் துரைமார் நன்கொடையை நிராகரித்து தமது விருப்பப்படியே சில பாடசாலைகளை அமைக்க முன்வந்தனர். 1900ஆம் ஆண்டளவில் 440,000 தோட்டத் தொழிலாளர்கள் இருந்தனர். ஆனால் 37 ஆரம்பப் பள்ளிக்கூடங்களே இருந்தன. இவற்றையும் மத நிறுவனங்களே அமைத்திருந்தன. (சந்திரசேகரம் 1974:9) இப் பாடசாலைகளும் மத கல்வியில் மட்டுமே பெரும்பாலும் கவனம் செலுத்தின.

1903, 1904ஆம் ஆண்டுகளிலே தோட்டக் கல்வியில் அரசோ, துரைமாரோ பெரிதும் அக்கறை செலுத்தாததன்மையினை அக்கால மாணவர் குடித் தொகை பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை மாணவர் வரவு தொடர்பான புள்ளிவிபரங்கள் என்பன கல்விவாய்ப்புக்களின் மோசமான நிலையை துல்லியமாகப் புலப்படுத்தி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை, 5.18

தோட்டப்பள்ளிக்கூடங்கள் தொடர்பான விபரங்கள் - 1903

| விபரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| 1. மொத்தத் தோட்டங்கள் | 1857 |
| 2. இந்தியத் தொழிலாளர் தொகை | 4,06,821 |
| 3. பாடசாலை செல்லும் வயதடைந்த மாணவர் தொகை (6-12 வயது வரை) | 25,000 |
| 4. பதிவு செய்யப்பட்ட பள்ளிக் கூடங்கள் அவற்றுள் | 43 |
| i. அரச பள்ளிக்கூடங்கள் | 02 |
| ii. தனியார் பள்ளிக் கூடங்கள் | 05 |
| iii. மதநிறுவனங்களினால் நிறுவப்பட்ட பள்ளிக் கூடங்கள் | 36 |
| 5. மாணவர் வரவு | 1765 |
| i. ஆண்கள் | 1598 |
| ii. பெண்கள் | 177 |

மூலம்: Burrows, 1905.

அட்டவணை: 5.19

தோட்டப் பள்ளிக்கூடங்களின் கல்வி விபரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | சராசரி பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் தோட்டச் சிறாரின் தொகை | 21,045 |
| 2. | ஆரம்பத்தில் அடிப்படைக்கல்வி பெற்ற பையன்கள் | 7, 721 |
| 3. | கற்பித்தல் முயற்சிகள் உள்ள தோட்டங்கள் | 409 |
| 4. | அண்மையிலுள்ள பள்ளிக்கூடங்களால் நன்மை பெறக்கூடிய தோட்டங்கள் | 119 |
| 5. | அண்மையில் உள்ள பள்ளிக்கூடங்களால் நன்மை பெற முடியாத தோட்டங்கள் | 89 |
| 6. | கற்பித்தல் வசதியற்ற தோட்டங்கள் | 145 |
| 7. | கங்காணிமாரின் குழந்தைகள் கல்வி பெற வசதி உள்ள தோட்டங்கள் | 65 |

மூலம்: Chatto Padhayaya; 1979: 176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகள் பற்றாக்குறையான நிலையில் அடிப்படைக்கல்வியே போது மானது என்ற கருத்தியலும், நிலமை மேம்படுத்தப்படாமல் தொடர்வ தற்கு ஏதுவாயிற்று. தற்போதைக்கு சிறிதளவு கணிதம், சிறிதளவு எழுத்து, வாசிப்பு போதும் என்ற பரோஸ் விதப்புரை இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டாகும். (Burrous, 1905) மேலும் இலங்கை அரசானது 1905இல் ஆரம்பக்கல்வி பற்றி ஆராய முன்வந்தது. இதற்கு ஹேபர்ட் வேஸ் (Herbert Wace) என்பவரைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றினையும் நியமித்தது. (Wace, 1905) இக்குழு தமது அறிக்கையில் பலமான அத்திவாரமுடைய, வரவேற்கத்தக்க கல்வியை தோட்டத் தொழிலாளர் பெற முடியாமையைச் சுட்டிக் காட்டியதோடு பின்வருமாறும் கூறியது.

> நாம் தொழிலாளிக்கு அவன் மேனிலையை அடையக் கூடிய கல்வியை அளிப்போமாயின் அவன் அச் சமூகத்திற்குப் பொருத்தமானவனாக இருக்கமாட்டான். (Chattopadhyalya, Op.Cit,. 180)

இம்மனப்பாங்கு இக்குழுவிடம் மட்டுமல்லாது, தோட்டக்கல்வி பற்றி ஆராயவும், சிபார்சுகளைச் செய்யவும் என இலங்கைக்கு வந்த சகல ஆணைக் குழுக்களிடமும் இருந்தமை துர்ப்பாக்கியமானது.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தோட்டத் தொழிலாளர்கள் இங்கு வந்த போதும் 1907ஆம் ஆண்டின் பின்னரே அவர்களது கல்வி பற்றிய சட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1907ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கிராமப்புறப் பள்ளிக் கூடக் கட்டளைச் சட்டமானது தோட்டப் பிள்ளைகளுக்கு கல்வி வழங்கும் பொறுப்பைத் தோட்ட மேலதிகாரி யிடம் வழங்கியது. அவ்வாறு அவர்கள் வழங்க மறுப்பின் கல்விப் பணிப்பாளர் தாமே அவ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதற்கான செலவை உரிமையாளரிடம் அறவிட சட்டம் இடம் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து 1920ஆம் ஆண்டு கட்டளைச் சட்டமும், அதனை மீள அமைக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட 1931ஆம் ஆண்டு கட்டளைச் சட்டமும் குடியேற்ற நாட்டாதிக்க கால மலையக கல்வி சார் சட்டங்களாக உருவாக்கப்பட்ட போதும் மாணவர் கல்வி நிலைமையில் எதுவிதமான மேம்பாடுகளையும் காணவில்லை. பின் 1939இல் மலை யகக் கல்விக்குத் தோட்டச் சொந்தக்காரர்கள் தான் பொறுப்பு என்ற நிலை மாற்றம் கண்டு ஏனைய பாடசாலைகளைப் போலவே தோட்டப் பாடசாலைகளும் எனப் பேசப்பட்ட போதும், இந்த கல்வியைக் கட்டாய மானதாக்கவோ, அதற்கான வசதிகளைச் செய்து தரவோ திட்டம் ஏதும் இருக்கவில்லை. குடியேற்ற நாட்டாதிக்க தேவைகளினடியான இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பின்மையுடன் நாட்டின் இன மேலாண்மை சார் கருத்தியலும் இணைந்து கொண்ட போது மலையகமாணவர் கல்வி நிலை மேலும் குழப்பமான தாகியது.

சுதந்திரத்திற்கு முன்னதாகவே இந்த பேரினவாத அலைகளின் தோற்றத்தினை அவதானிக்க முடியும். நாற்பதுகளின் அரசாங்க சபை விவாதங்களிடை பி.எச் அலுவிகார முன்வைத்த 'மலையகப் பிள்ளை களுக்கு சிங்களம் கற்பிக்கப்பட வேண்டும்' என்ற கருத்தியலில் இந்த பேரினவாத கருத்தியலின் தொடக்கத்தினைக் காணலாம். (Jeyasuriya, 1969. 129) இந்நிலையில் சீ. டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் கல்வி அமைச்சராகிய பின்னர், 1945 இனைத் தொடர்ந்து தான் அனை வருக்கும் இன, மத, மொழி வேறுபாடின்றி கல்வி என்ற கருத்தியல் ஓரளவிற்கு மலையகப் புலங்களிலும் பயன்தரத் தொடங்கியது. எடுத்துக்காட்டாக 1947 இல் கொண்டு வரப்பட்ட புதிய சட்டத்தின் படி 25க்கு குறையாத பிள்ளைகள் இருப்பின் அங்கு பள்ளிகளை அனைத்து தளபாடம், கட்டிடம், தகுதியான ஆசிரியர் நியமனம், தங்குமிடவசதி என அனைத்து வசதிகளும் தோட்டச் சொந்தக்காரரினால் தரப்பட வேண்டும் எனும் நிலையில் சில கல்வி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

மேலும் சுதந்திர இலங்கையின் 1951ஆம் ஆண்டு கல்விச் சட்டம் 14 வயது வரை கட்டாயக் கல்வி, தாய் மொழி போதனை என மேலும் சில அம்சங்களைக் கொண்டிருந்த போதிலும், அவற்றினைக் கட்டா யமாக நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏதுமிருக்கவில்லை. மலையக மக்களின் வறுமை நிலையோடு 1956இல் அறிமுகப்படுத் தப்பட்ட சிங்களமேஅரசகரும மொழி, பாடசாலைகளின் தேசிய மயமாக்கம் என்ற செயற்பாடுகளும் ஒருங்கு சேர்ந்து மலையகப் பிள்ளை களின் கல்வி நிலைமையை மட்டுப்படுத்துவனவாகவே அமைந்தன.

குறிப்பாக தேசிய மயமாக்கலின் போது அரசு எல்லாப் பாடசாலை களையும் மலையகப் பகுதியில் பொறுப்பேற்கவில்லை. வசதிகள் குறைந்த பாடசாலைகளை அரசு மூடியது. இதனால் இப் பாடசாலை களில் கல்வி பயின்ற மாணவர்கள் அண்மையிலுள்ள, சிங்களத்தைப் போதனா மொழியாக் கொண்ட அரச பாடசாலைகளில் கல்வி பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் பெரும்பாலான தோட்டப் பாடசாலைகள் ஐந்தாம் வகுப்பு வரையே இருந்தன. இதனால் ஐந்தாம் வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடர மாணவர்கள் விரும்பின் சிங்கள மொழி மூலமான அரச பாடசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலை உருவானது. 1963 தொடங்கம் 1965 வரை கல்வி மந்திரியாக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பி.பி.ஜி. கலுகல்ல 1965ஆம் ஆண்டிலே தோட்டப் பள்ளிக்கூடங்களைக் கையேற்று அவற்றை ஒரு ஸ்தாபனமாக அமைத்து அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் எனக் கூறினார். (Hansard 1965: Col 1205) இதற்குப் பதில் அளித்த பாராளுமன்றச் செயலாளர் 1964 இல் தேசிய கல்வித் திட்டத்தில் தோட்டப் பள்ளிக் கூடங்களின் அமைப்புப் பற்றி ஆராயப்படும் எனக் கூறினார் (Hansard 1965: Col 1205). ஆனால் இவை இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதே உண்மையாகும்.

இக்காலப்பகுதியின் பள்ளிக்கூடங்கள் பற்றிய புள்ளி விபரம், தமிழ் மாணவர்களின் பள்ளிக்கூடப் பற்றாக்குறையைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

அட்டவணை 5.20

தமிழ் மாணவர்களுக்கான பள்ளிக்கூடங்கள் 1956-1963

| வருடம் | தமிழ் மாணவர்களுக்கான பள்ளிக்கூடம் | சிங்கள மாணவர்களுக்கான பள்ளிக்கூடம் |
|---|---|---|
| 1956 | 884 | 4084 |
| 1957 | 881 | 4335 |
| 1958 | 879 | 4524 |
| 1959 | 875 | 4664 |
| 1960 | 874 | 4839 |
| 1961 | 873 | 4961 |
| 1962 | 873 | 5226 |
| 1963 | | 5552 |

மூலம் : (Chattopadyaya, 1979: 193, 194)

இதுபோலவே அரச பள்ளிக்கூடங்களை பொறுப்பேற்றதன் விளைவாக, ஏற்கனவே தோட்டத் தமிழ் பிள்ளைக்கு இருந்த கல்வி வாய்ப்புக்கள் இழக்கப்பட்டமையை அல்லது குறைக்கப்பட்டமையைப் பின்வரும் விபரங்கள் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 5.21

பள்ளிக்கூடங்களில் தமிழ் பிரிவு

| | | |
|---|---|---|
| 1. பண்டாரவளை | 1. Little Flower Convent<br>2. சென் ஜோசப் கல்லூரி | தமிழ் பிரிவு இல்லை<br>12ம் வகுப்பு விஞ்ஞானம் மட்டும் |
| 2. இரத்தினபுரி | 1. சென் லூகாஸ்<br>2. Ferguson High School | 6-10 வரை தமிழ் பகுதி<br>1-5 வரை தமிழ் பகுதி |
| 3. மாத்தளை | 1. பி.எம். எஸ்<br>2. சென். தோமஸ்<br>3. விஜயா கல்லூரி<br>4. கிறிஸ்தவக் கல்லூரி | 1-5 வரை தமிழ் பகுதி<br>12ம் வகுப்புவிஞ்ஞானம்மட்டும்<br>தமிழ் பகுதி முற்றாக இல்லை.<br>தமிழ் பகுதி முற்றாக இல்லை. |
| 4. நாவலப்பிட்டி | 1. சென் மேரீஸ்<br>2. சென் அன்றூஸ் | தமிழ் பகுதி முற்றாக இல்லை<br>தமிழ் பகுதி முற்றாக இல்லை |
| 5. ஹட்டன் | 1. சென். கபிறியல் | தமிழ் பகுதி முற்றாக இல்லை |

மூலம் - கொழும்பு கல்வித் திணைக்களத்தின் தமிழ் பிரிவு அறிக்கை, 1980

1975ஆம் ஆண்டு 60 மலையக தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டதோடு, சில சிங்களப் பாடசாலைகளாகவும் ஆக்கப்பட்டன. எடுத்துக் காட்டாக 1975இல் பதுளை உயர்தரப்பாடசாலை, உதுசுலு, கொன்வென்ற் ஆகியவைகளின் தமிழ் பகுதி நீக்கப்பட்டு இவை முறையே விசாகா வித்தியாலயம், விகாரமகாதேவி வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப் பட்டன. இதே நிலைமை மலை நாட்டின் கம்பளை, நாவலப்பிட்டி, மாத்தளை, றக்குவான போன்ற பகுதிகளில் காண முடிகின்றமையைக் குறிப்பிடலாம். இதற்கு மேலாக 1977இல் நடைபெற்ற இனக்கலவரம் மேலும் பல பாடசாலைகளைச் செயலிழக்கக் காரணமாகியது. இக்காலப் பகுதியில் தோட்டப் பாடசாலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினைப் பின் வரும் அட்டவணை வெளிப்படுத்தும்.

அட்டவணை: 5.22

தோட்டப் பாடசாலைகளில் மாணவர் ஆசிரியர் தொகை

| ஆண்டு | தோட்டப் பள்ளிக்கூடங்கள் | மாணவர் | ஆசிரியர் |
|---|---|---|---|
| 1975 | 720 | 58614 | 1105 |
| 1976 | 725 | 50816 | 984 |
| 1977 | 694 | 46721 | 1178 |
| 1978 | 336 | 26230 | |

மூலம் : இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுகளின் பள்ளிவிபரத் தொகுப்பு 1979

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 5.23

மலையகப் பள்ளிக் கூட நிலைமை 1980

| பிரதேசம் | | பள்ளிக்கூடங்களின் தொகை |
|---|---|---|
| 1. | கண்டி கிழக்கு | 09 |
| 2. | கண்டி மேற்கு | 42 |
| 3. | மாத்தளை | 18 |
| 4. | நுவரெலியா | 114 |
| 5. | குருணாகல | 01 |
| 6. | பண்டாரவளை | 72 |
| 7. | இரத்தினபுரி | 33 |
| 8. | கேகாலை | 39 |
| | மொத்தம் | 358 |

மூலம் : பள்ளிக்கூட புள்ளிவிபரம் : 1980

1980இல் 317 தோட்டப் பள்ளிகள் அரசால் பொறுப்பேற்கப்பட்டது பின் 1981இல் அனைத்து பள்ளிகளும் பொறுப்பேற்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. எனினும் பொறுப்பேற்ற பின் புனரமைப்பு பணிகளிடை பிள்ளைகள் செல்ல வேண்டிய தூரத்தைக் கருத்தில் கொள்ளாமையால் சில பாடசாலைகள் மூடப்பட்டன. ஹட்டன், தலவாக்கொல்லை, பொகவந்தலாவை பிரதேசங்களில் மட்டும் 18 பாடசாலைகள் மூடப் பட்டன. (தொழிலாளர்கள் பாதை, 1983) இதன் விளைவாகப் பல பிள்ளைகள் தம் கல்வியை கைவிடும் நிலை ஏற்பட்டதும் இங்கு நம் கவனத்திற்குரியது.

அதே வேளை மலையக கல்விக்காக அரசு ஒதுக்கும் நிதியில் மாற்றம் ஏதுமில்லை. 1950களின் பின் 20 கோடி ரூபாவாக இருந்த இலங் கையின் கல்விச் செலவு 1978இல் 80 கோடியாக அதிகரித்த வேளை மலையக கல்விச் செலவு இக்காலப் பகுதியில் 10 லட்சத்திலிருந்து 20 லட்சமாக மட்டுமே அதிகரித்தது. (சிவலிங்கம் 1978 : 7) இந் நிதிக் கேற்பவே பள்ளிக்கூட அளவு, ஆசிரியர் எண்ணிக்கை என்பன அமைந் திருந்தன. சிறைக் கூடத்தை விட, மாட்டுத் தொழுவத்தை விட மோசமான ஓர் அறைப் பள்ளிகளே இங்கு காணப்பட்டன. இவை தொழிலாளர் குழந்தைகள் தேயிலைச் செடிகளை மிதித்து நாசப்படுத்தி விடாமல் அவர்களைத் தடுத்து வைக்கும் சிறைக் கூடங்கள் என மு. நித்தியானந்தன் (1979: 63) குறிப்பிட்டவாறு பாடசாலைகள் சிறியனவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதோடு ஓர் ஆசிரியருக்கான மாணவ விகிதம் 75:1 இருந்தமையும் கவனத்திற்குரியது.

இந் நிலைமையில் ஒதுக்கப்பட்ட நிதி கூட அதிகாரிகளின் இன வாதப் போக்குகளால் செலவழிக்கப்படாமல் மீளத் திருப்புதலும் இங்கு அதிர்ச்சியான அவதானிப்பாகும். இப்பிரதேசங்களின் உயர் அதிகாரிகள் பெரிதும் பெரும்பான்மை இனம் சார்ந்தவராக இருக்கின்றமையால் தோட்டத் தமிழ் பாடசாலைகளின் தேவைகள் கவனத்தில் கொள்ளப் படுவதில்லை. எடுத்துக்காட்டாக 1981இல் நுவரெலியா மாவட்ட கல்வி செலவினமாக கல்வியமைச்சு 10 மில்லியன் ரூபாவை ஒதுக்கி யிருந்தது. அதே காலத்தில் அவசரகால சட்டத்தை அமுல் நடத்த அரசுக்கு 11 மில்லியன் ஒரு நாளைக்கு மட்டும் செலவானது என்பது மறுபக்கம். இத்தனைக்கும் ஒதுக்கப்பட்ட 10 மில்லியனில் ஒரு சதத்தை யேனும் செலவு செய்யாமல் நுவரெலியா கல்வித் திணைக்களம் திறைசேரிக்குத் திருப்பியனுப்பியது என்பதே இங்கு எம் கவனத் திற்குரியது. (சொர்ணவல்லி 1988: 84)

தேசிய பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்காளிகளாக உழைக் கும் மலையக மக்களுக்கான வள ஒதுக்கீடு மிகக் குறைந்தளவாகவே அமைந்துள்ளமையை இன உறவு சார் பாரபட்சம் பற்றிய ஆய்வுகள் தெளிவாக வெளிக்காட்டிய போதும் (Gunatilleke, 1977: 30) நிலைமை யில் இன்றுவரை மிகக் குறைந்தளவு மாற்றங்களையே அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறாக வள ஒதுக்கீட்டிலுள்ள குறைபாடு என்பது பாடசாலை களின் பௌதீக வளங்களிலிருந்து, மனித வளமாகிய ஆசிரியர்கள், எண்ணிக்கை, தரம் என்பவற்றிலும் தொடர்ந்து பிரதிபலித்து நிற் கின்றது. மலையகத்தின் ஆசிரிய மாணவ விகிதம் 90களில் ஓர் ஆசிரி யருக்கு 55 மாணவர் என்ற விகிதத்தில் அமைந்திருந்ததனை ஆய்வுகள் சுட்டுகின்றன (சந்திரசேகரம் 1993: 116)

இந்த ஆசிரிய குழாத்திலும் கிட்டத்தட்ட 25% மானவர்கள் தொண்டர் ஆசிரியர்களாக உள்ளமையும் எம் கவனத்திற்குரியதாகும். இந் நிலையில் மலையக கல்வி மேம்பாட்டிற்கென குறைந்தது 4000 ஆசிரியர்களாவது புதிதாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மலையக கல்வி மேம்பாட்டு அமைப்புக்களால் முன்வைக்கப்பட் டுள்ளது. தமிழ் மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கான ஆசிரியர் தேவை அதிகளவில் உணரப்படும் அதே வேளையில் 16,000 பெரும் பான்மை ஆசிரியர்கள் சிங்கள கல்வி துறையில் மேலதிகமாகக் காணப் படுகின்றமையையும் இங்கு நாம் அவதானிக்கலாம். (இந்திரஜித் 1998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் தொழிற் சங்க ரீதியிலும், தனிப்பட்ட முறையிலும் மலையகக் கல்வியில் ஈடுபாடு கொண்ட அரசியல் தலைமைகள் மேற்கொண்ட முயற்சிகள் கூட நாட்டின் இனவாத குரல்களிடை நசுங்கிப் போனமையைக் காண முடியும். தொண்ணூறுகளின் பின்னரைப் பகுதியில் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கால் நடை, பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த எஸ்.தொண்டமான் அவர்கள் மலையகக் கல்வி மேம்பாட்டுக்கான இந்திய உதவி திட்டத்தின் கீழ் தமிழக ஆசிரியர்கள் சேவையைப் பெற்றுக் கொள்ளவென முன்வைத்த ஆலோசனை இனவாத நோக்கில் பெரும்பான்மை சமூகத் தலைவர்களால் விமர்சிக் கப்பட்டு ஈற்றில் கைவிடப்பட்டமை இங்கு நம் கவனத்திற்குரியதாகும். (இந்திரஜித், 1998)

இவ்வாறே ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட பல சர்வதேச தொண்டர் அமைப்புக்களினால் மலையக கல்வி மேம்பாட்டிற்கென வழங்கப்பட்ட, வழங்கப்படுகின்ற உதவிகளும் கூட உரிய இடம் சேர்வதில், உரியவாறு பயன்படுத்தப்படுவதில் பல தடைகளைச் சந்திப்பதும் இன்றைய எம் ஆய்வுக் களங்களிடை பதிவு பெறும் இனவாத அரசியலினதும், இன வாத நோக்கிலான அதிகாரிகளினதும் கூட்டு நடவடிக்கைகளாகின்றன. மேற்கண்ட நிலைமையை பின்வரும் விடயக்கலை ஆய்வு துல்லியமாக வெளிக்காட்டும்.

ஹட்டன் புனித கபிரியேல் மகளிர் மகாவித்தியாலயத்தில் சிங்கள, தமிழ் மாணவிகள் பயின்று வருகின்றனர். இங்கு பயிலும் தமிழ் மாணவிகள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தமை சீடா செயற்திட்டத்தின் கவனத்திற்குட்பட்டது. இவர்கள் நிலையை மேம்படுத்தும் நோக்கில் 80 இலட்சம் ரூபாவில் இரண்டு மாடிக்கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. அதே வேளை சகல வசதிகளுடனும் விளங்கிய சிங்கள மாணவர்களின் மேலதிக வசதிக் கென 20 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

புதிய கட்டிட வேலைகள் பூர்த்தியாகி, சம்பிரதாய பூர்வமான திறப்பு விழா ஏதும் நடைபெறாமலேயே தமிழ் மாணவியருக்கான கட்டிடத்தில் சிங்கள மாணவியர் அமர்த்தப்பட்டனர். தமிழ் மாணவியர் நவராத்திரியைக் கொண்டாடிய வேளையிலேயே இந் நிகழ்வு இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கையால் அதிருப்தியுற்ற தமிழ் பெற்றோர் மத்திய மாகாண தமிழ் பிரிவு கல்வியமைச்சருடனும், பிற மாநகரசபை உறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு 5.4 இனவாத அரசியலும் அதிகாரிகளும்



பினர்கள், கல்விப் பணிப்பாளர்கள், சீடா செயல் திட்ட அதிகாரிகள் போன்றோரிடம் கலந்துரையாடி முதலமைச்சரிடமும் இது பற்றி விளக்கப்பட்டது.

சிங்களப் பிரிவுக்குப் புதிய கட்டிடம் ஒன்று அமைப்பதென்றும் திட்டப் படியே தமிழ் மாணவியருக்கென கட்டப்பட்ட இக் கட்டிடத்தை தமிழ் மாணவியரிடமே கையளிப்பதெனவும் முதலமைச்சருடனான சந்திப்பில் முடிவானது. எனினும் மறு நாளே அதிகார அழுத்தங்களினால் இந்த முடிவு மாற்றப்பட்டது. சிங்கள, தமிழ் மாணவர்கள் அடுத்தடுத்த வகுப்புக்களில் இருந்தே படிக்க வேண்டும் என முடிவானது. கூடவே அருகிலிருந்து சிங்கள, தமிழ் மாணவர் பயில்வது இன ஒற்றுமைக்கான ஒரு வழி முறை, எனவேதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது எனவும் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மாணவிகள் எந்த வித வசதிகளும் இல்லாமல் கஷ்டப்பட்ட போது கவலைப்படாதவர்கள், இம் மாணவியருக்கென புதிய கட்டிடம் கட்டப்பட்டதும் இன ஒற்றுமை பற்றிப் பேசுவது விசித்திரமாக இருப்பதாக தமிழ் பெற்றோரும், மாணவரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

> இன ஒற்றுமைக்கான பரீட்சார்த்த களமாக பாவித்து தமிழ் மாணவிகளை மேலும் கஷ்டத்துக்குள்ளாக்காமல் தமிழ் பிரிவுக்கென அமைக்கப்பட்ட கட்டிடத்தை அப்பிரிவினருக்கே வழங்க வேண்டும் (வீரகேசரி, 1996)

என்ற அவர்களின் ஏகோபித்த கோரிக்கையானது, அதிகார நியாயங்களுக்குள் அமுங்கிப் போனது. இந் நிலையில் ஒன்றாக இருந்தது போதும், எங்களுக்கெனத் தனித் தமிழ் வித்தியாலயமே தீர்வாகும் என்ற குரலே இப்பொழுது மக்கள் குரலாகியுள்ளமையைக் காணலாம். (வீரகேசரி 25.1.1996)

மலையகப்பட்டதாரி ஆசிரியர் கழகத்தலைவர் திரு.மு.நேசமணி விடுத்துள்ள மேற்கண்ட அறிவிப்பு இன ஒருமைப்பாட்டுக்கான வழிகள், இன ஒற்றுமையென்ற பெயரிலேயே மேற்கொள்ளப்படும் இன மேலாதிக்கச் செயற்பாடுகளால் எவ்வாறு இன உறவு விரிசல்களுக்கும் பிரிவுக்கும் காலாகி விடுகின்றன என்பதற்கு சான்றாக அமைகின்றது. ஹற்றன் புனிதக பிரியேல் மகளிருக்கான விவகாரம் நாட்டின் இன்றைய இன உறவு நிலைமையின் திசையைப் பிரதிபலிக்கும் ஒரு குறியீடாக அமைந்து விடுவதனையும் நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

மேற்கண்ட இனவாத பாரபட்ச நிலைமைகளின் விளைபொருளாகவே, இன்றைய மலையக கல்வி நிலை, இதனை அண்மைய கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்), கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்:) சித்திகள், பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்ப்பு எனும் குறிகாட்டிகளை வைத்து நோக்குமிடத்து மலையக மாணவர்களின் பின்தங்கிய நிலை நன்குவிளங்கும். க.பொ.த சாதாரண சித்திகளைப் பொறுத்தவரை 1990 களில் உயர்தர சித்தி பெற்ற 43 பாடசாலைகளில் மலையக பாடசாலைகள் எதுவும் அடங்காமை கவனம் பெறும் (சந்திரசேகரன் 29.10.1995) பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரை மலையக மாணவர் நிலை மிக மிக குறை நிலையானது. பிராந்திய நிலையில் புதிய பல்கலைக்கழகங்களுக்கான கோரிக்கைகள் வலுப் பெறும் இன்றைய இலங்கையில் மலையக நிலைமை பாடசாலை கல்வி வசதிகளை கோரி நிற்பதாக அமைதலே யதார்த்தமாகும்.

புதிய கல்வி சீர்திருத்தம், பாடசாலை மீளமைப்பு என்ற செயற்பாடுகளிடை உள்ளதையும் இழந்து போகும் ஆபத்து நிலைமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக் களங்களிடை ஆதங்கத்துடன் முன்வைக்கப்படும் புதிய சீர் திருத்தப்படி தரம் 1-9 வரையும் தரம் 10-13 வரையுமான இருவகைப் பாடசாலைகளே இருக்குமென கூறப்படுகின்றது. மலையகத்தில் இன்றுள்ள 700 பாடசாலைகளில் 600 பாடசாலைகள் தரம் 1-5 வரை உள்ளவையாகும். புதிய திட்டப்படி இன்னும் நான்கு வகுப்புகள் கட்டப்பட வேண்டும் இவ்வாறு கூட்டி இப்பாடசாலைகளை மேம் படுத்துதற்கான சாதியக்கூறுகள் ஏதும் காணப்படுவதாயில்லை. இந் நிலையில் நூற்றுக் கணக்கான பாடசாலைகள் மூடப்படும் ஆபத்து எதிர் கொள்ளப்படலாம் என்ற அச்சமே மலையக கல்வி சார் ஆர்வலர்களிடம் இன்று மேலோங்கியுள்ளது.

இவ்வாறே கட்டாய ஆங்கில மொழிக் கல்வியெனும் அண்மைய கல்விச் சீர்திருத்த முன்வைப்பும் மலையக மாணவர் எதிர்கொள்ளும் மிகப் பெரிய ஆபத்தென மலையகக் கல்வி ஆர்வலர்களால் முன் வைக்கப்படும் அடிப்படைக்கல்விக்கே அல்லாடும் ஒரு நிலையில் ஆங்கில கல்வி என்ற புதிய இலக்கு மலையக மாணவரை மேலும் பின்தள்ளும் ஒரு முயற்சியாகவே கொள்ளப்படுகின்றது. (குறிஞ்சிக் குரலோன் 17.5.2000: 8)

இவ்வாறாக இலங்கையின் கல்வி புலத்து வளப்பகிர்வில் இன வாத அடிப்படையில் நிலவும் பாரபட்சங்களுக்கான சிறப்பான எடுத்துக் காட்டாக மலையகக் கல்வி நிலைமை தொடரக் காணலாம். இன ரீதியான அரசியல் பொருளாதாரக் கல்விக் கொள்கையில் பாரிய அடிப்படை மாற்றங்களை எதிர் நோக்கி மலையகக் கல்விப் புலம் காத்திருக்கின்றது எனலாம்.

## போரின் தாக்கங்கள்

இலங்கையின் இன முரண்வரலாற்றில் என்றுமில்லாதவாறு உக்கிர மடைந்த போர் சூழலில் அனைத்து நிறுவனங்களும் நிலை குலைந்து போயுள்ளன. இந்த வகையில் கல்வி நிறுவனமும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. தொடரும் இடப் பெயர்வுகளும், குண்டு வீச்சுக்களும், போக்குவரத்து வசதியின்மைகளும் கல்வியை மாணவர் இடைநிறுத் தவோ அன்றி ஆர்வமின்றி தொடரவோ வழி செய்கின்றன. இந்த வகையில் சிறுவர் பாதுகாப்பு நிதிய ஆய்வு அறிக்கைகள் கள நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றன. குடா நாட்டில் மட்டும் 18 வயதுக்குக் குறைந்த பாடசாலை செல்லாத மாணவர்கள் தொகை 7,889 பேராகும் பாடசாலைக்கு ஒழுங்காக செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை 6,923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மதிப்பிடப்பட்டுள்ளது. இப் பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்புக்கான காரணங்களாக பின்வருவன இனம் காணப்படும்.

*அட்டவணை: 5.24*

*பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாமை, பாடசாலைக்கு செல்லாதோர் தொகையும் காரணமும்.*

| காரணங்கள் | | தொகை |
|---|---|---|
| 1. | பொருளாதாரப் பிரச்சினை | 3800 |
| 2. | சீருடை இல்லாமை | 190 |
| 3. | பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாமை | 275 |
| 4. | அப்பியாசக் கொப்பிகள் இல்லாமை | 336 |
| 5. | பாடசாலைக் கல்வியை விட்டு வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் | 1548 |
| 6. | பாடசாலையிலிருந்து இடைவிலகிய போதும் வேலைக்குச் செல்லாத சிறுவர்கள் | 1740 |
| 7. | தமது குடும்ப வேலைகளில் ஈடுபடும் சிறுவர்கள் | 1357 |
| 8. | சுகவீனமுற்ற தனது பெற்றோரைப் பராமரிக்கும் சிறுவர்கள் | 92 |
| 9. | சுகவீனம் காரணமாகப் பாடசாலை செல்லாத சிறுவர்கள் | 177 |
| 10. | ஏனைய வீடுகளில் வேலைசெய்யும் சிறுவர்கள் | 191 |
| 11. | விவசாய நிலங்களில் வேலைக்கு அமர்த்தப்பட் சிறுவர்கள் | 603 |
| 12. | மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட சிறுவர்கள் | 253 |

மூலம் : சிறுவர் பாதுகாப்பு நிதிய அறிக்கை, 2000.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு சிறுவர்கள் எதிர்நோக்கும் பின்வரும் ஆபத்தான நிலைமைகள் காரணமாக அமைகின்றன.

*அட்டவணை: 5.25*

*சிறுவர்பிரச்சினை நிலைமைகள்*

| நிலைமைகள் | | தொகை |
|---|---|---|
| 1. | பெற்றோரில் ஒருவரை இழந்த சிறுவர்கள் | 6587 |
| 2. | பெற்றோரை இழந்த சிறுவர்கள் | 485 |
| 3. | பெற்றோரால் கைவிடப்பட்ட சிறுவர்கள் | 146 |
| 4. | பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத சிறுவர்கள் | 2078 |

மூலம்: சிறுவர் பாதுகாப்பு நிதிய அறிக்கை, 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான தரவுகளின் பின்னணியில் தேர்ந்தெடுத்த சில குடாநாட்டு பாடசாலைகளில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சில அவதானங்கள், கல்வியில் போரின் தாக்கத்தினை துல்லியமாகவே வெளிப்படுத்து கின்றன. எழுமாற்று மாதிரியாக தெரிவுசெய்த பாடசாலையான யாழ்ப் பாணம் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய கனிஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களில் நான்கு தடவைகளுக்கு மேல் பாடசாலை மாறிய பிள்ளைகளைச் சந்திக்க நேர்ந்தமை குறிப்பிடத் தக்கது. ஆங்காங்கே விமானக் குண்டு, எறிகணை தாக்குதலுக்குள்ளான மாணவர்களையும் வகுப்பறையில் சந்திக்க முடிந்தது. படிப்பில் ஆர்வ மின்மை, வன் செயல் நடவடிக்கை, பதகளிப்பு, தனிமையில் ஒதுங்குதல் என இம் மாணவர்களின் நடத்தைகளிலும் விலகல் நிலைமைகள் அவதானிக்கப்பட்டது.

இம் மாணவர்களின் போர்க்கால அனுபவங்களை ஓவிய வெளிப் பாடாக்கித் தருமாறு கேட்கப்பட்ட விடத்து தரப்பட்டவை அவர்களின் அக உலகின் அவலங்களையே புலப்படுத்தி நிற்கின்றன. குண்டு வீசும் விமானம், எரியும் வீடு, இறந்த குழந்தை என்றவாறே பெரும்பாலான ஓவியங்கள் அமைந்திருந்தன.

குண்டுவீச்சுகள் தணிந்துள்ள 1995க்குப் பிற்பட்ட காலத்து அதே பாடசாலையிலான அவதானங்கள், புதிய அடக்கு முறையின் வெளிப் பாடுகளாக மாணவர் உள நிலமைகளை வெளிப்படுத்துகின்றன. சூழ்நிலை இறுக்கங்கள், இராணுவ கெடுபிடிகள் என்பன மாணவர் விளையாட்டுக்களிலும் கூட பிரதிபலித்தமையைக் காணலாம். வழமை யான 'கள்ளன்-பொலிஸ்' விளையாட்டுக்குப் பதில் குழந்தைகளாகப்

உரு 5.5 போர்ச் சூழலின் பிள்ளை மனப்பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்து ஒருவரை ஒருவர் தாக்குதல் பாதிக்கப்படும் குழு வீழ்ந்து விடுதல் என்றவாறு அமைதலைக் காணலாம். இத்தகு விளையாட்டுப் பாத்திரங்கள் பின்னாளில் நிஜமான போராட்டப் பாத்திரங்களாக மாறி விடுதலும் ஆங்காங்கே அவதானிக்கப்பட்டது.

இவ்வாறாக போரின் தாக்கத்துக்கு உட்படும் நிலைமைகளை சிங்கள மாணவர்கள் மத்தியிலும் காணமுடிகின்றது. குறிப்பாக எல்லைக் கிராம புலங்கள், தலைநகர்ப் பாடசாலை புலங்களிடை தாக்குதல் அச்ச நிலைமைகளின் விளைவான பதகளிப்பு நிலைமைகளைக் காணலாம். அதே வேளை வறுமையும், கவர்ச்சிகரமான ஊதிய சேமநலத் திட்டங்களும் தென்னிலங்கை கிராமத்துப் பிள்ளைகளைப் போரில் பங்கு பெறும் படையினர் ஆக்கிவிடுகின்றமையும் தொடர்கதைகளாகும்.

இலங்கை உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் 1 கோடி 30 லட்சம் சிறுவர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐ.நா சிறுவர் நிதிய அறிக்கை கூறுகின்றது. போரில் சிக்கிய சிறுவர் வன்செயலின் இலக்குகள், ஆயுதப் போரில் நேரடியாகப் பலியாவோர், மறைமுகமாய் பாதிப்புறுவோர், இலகுவில் வெளித் தெரியாத அவலங்கள் என உலகளாவிய நிலையில் 1997 இல் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையானது, இது தொடர்பாக விபரமாக சொல்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை இந்தப் போரின் தொடக்க மையங்களில் ஒன்றாக இருந்த கல்விவாய்ப்பு மறுப்புக்கள், பாரபட்சங்கள் என்பன போரின் தீவிரத்துக்கான காரணிகள் ஆகும். பின்னாலே போரின் விளைவான இடப்பெயர்வு, அழிப்பு என மீளவும் கல்விப் புலங்களையே நிலைகுலைக்கும், இன உறவை விரிசலாக்கும் சுழற்சியான செயற்பாடாகுதலை அவதானிக்கலாம்.

இவ்வாறாக இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் கல்விப் போக்கின் எதிரொலிகளாக இன ரீதியான கல்விவாய்ப்பு மறுப்பு, கல்வி வழியான தொழில் வாய்ப்பு, இழப்பு, இன முரணை வளர்க்கும் கற்பித்தல் செயற்பாடு, இன முரண் போரின் விளைவான கல்வி வள அழிப்பு என சங்கிலித் தொடரான பாதகமான நிலைமைகளை காண முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 6

# எதிர்காலம் ....

பன்மைச் சமூகங்களின் இசைவான நிலைவேற்றில் கல்வி இன்றியமை யாத இடத்தினை வகிக்கின்றது. பண்பாடுகளுக்கிடையிலான புரிந் துணர்வையும், உறவையும் வளர்த்துள்ள தேசங்களின் நாகரிக வரலாறு என்பது அப்புலங்களின் கல்வி வரலாற்றோடு நெருக்கமாய் இணைந் துள்ளது. இனங்களுக்கு இடையிலான சுமுகமான உறவு: பண்பாட்டுப் பன்மையில் ஒருமை என்கின்ற இலட்சிய நிலையினை வேண்டிநிற்கும் இருபத்தோராம் நூற்றாண்டு இலங்கையின் யதார்த்தமானது கடந்த நூற்றாண்டின் சமூக நிலைமைகளின் விளைபொருளாகவே அமைகின்ற தெனலாம்.

இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் இனங்களுக்கிடையிலான உறவானது முரண்பாடுகளின் வரலாறாகவே பதியப்பட்டுள்ளது. இம் முரண்பாடுகளைக் களைந்து சுமுகமான உறவினைப் பேணவேண்டிய கல்வியே இனங்களுக்கிடையிலான விரிசலுக்கும், வெடிப்புகளுக்கும் களமாக துணைபோனமையை இவ்வாய்வு தெளிவாக்கி நிற்கின்றது.

தேசிய விடுதலை, சுயநிர்ணயம் என்பவற்றினடியாகவே இன் றைய முரண்நிலைகளுக்கான தீர்வினைக் காணமுடியும் எனும் கருத் தியல் முன்வைப்புகளிடையே இலங்கையின் இன்றைய இன முரண் பாட்டின் தன்மை புலனாகும். இலங்கையின் இனத்துவ குழுமங்களின் பண்பாட்டுத் தனித்துவம், பண்பாடுகளுக்கிடையிலான பரஸ்பர புரிந் துணர்வு. மதிப்பு என்பவற்றினடியாகவே இனங்களுக்கிடையிலான உறவுகளின் பேணல் சாத்தியம் என்பதனையே இந்த ஆய்வுத் தேடலும் உறுதி செய்கின்றது.

இனங்களுக்கிடையிலான இசைவினை வளர்க்கும் கல்விக் கொள்கைகளும், நடைமுறைகளும் சுமுகமான வாழ்வுக்கு வழிவகுக் கின்றன. முரண்பாட்டின் அடிப்படைகளை இனம் கண்டு, பிரச்சினை நிலைமைகளை களைந்து, வேறுபாடுகளை சமன் செய்து கொள்வதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான கல்விச் செயற்பாடுகளின் தேவை இன்று உலக புலங்களிலெல்லாம் பெரிதும் உணரப்படுகின்றது. கல்வியானது தன் தனித்துவ இலக்குகளை இழந்து இனவாத அரசின் கைப்பொம்மையாக அல்லது களமாக ஆகிவிடுகின்றபொது ஒருமைக்குப் பதிலாக பிரிவினையே விளைபொருளாகிவிடும். இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் கல்வியும் இன உறவும் இந்தத் திசையிலேயே செல்வதனை இவ் ஆய்வுத் தரவுகளின் வழி துல்லியமாய் உணரமுடிகின்றது.

இனத்துவ உறவென்பது தனியன்கள், குழுக்கள், சமூக மட்ட நிறுவன செயற்பாடுகள் என்பவற்றின் வழியே நிர்ணயமாகின்றது. அமைப்பு ரீதியாகவும், உளச் சார்பு ரீதியாகவும் மாற்றங்களைக் காண்கின்றது. குறித்த பண்பாட்டுப் புலங்களின் சமூக வரலாற்றினடியாக இம் மாற்றங்கள் வழிப்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் குறித்த சமூகத்தின் வரலாற்றினை நகர்த்தும் சமூக. அரசியல், பொருளாதார, பண்பாட்டு விசைகளையும், அவற்றின் திசைகளையும் இவ்வாய்வு முக்கியமாக கவனத்தில் கொண்டது.

இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் சமூக வரலாறு என்பது குடியேற்ற நாட்டாதிக்க கால பின்னணியில் தொடர்கின்றது. குடியேற்ற நாட்டாதிக்க இலக்குகள், அக்காலத்து சமூக நிலைமைகளை நிர்ணயித்த மேட்டுக்குடியினரின் விழுமியங்கள், கோலங்களின் வழியானது. இந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப்தங்களில் ஒன்றுபட்ட இனத்துவ உறவு நிலையைக் காணமுடிகிறது. குடியேற்ற நாட்டாதிக்கத்தினின்றும் விடுதலை, சுதேசபண்பாடுகளின் மறுமலர்ச்சி என்ற கருத்தியலினடியாக இந்த ஒற்றுமை நிலைமை இக்காலப் பகுதியில் இலங்கையில் பேணப்பட்டமையைக் காணலாம்.

சுதேச உணர்வே நாளடைவில் குறுகிய இனத்துவ வரையறைக்குள் மட்டுப்படுத்தப்பட்டமை, முனைப்பான மாற்றப் புள்ளிகளின் ஊடாக இவ்வாய்வில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த வகையில் இலங்கையின் பிரதான இனத்துவக் குழுக்களான சிங்கள - தமிழ் குழுமங்களை ஒன்றிணைத்த சேர் பொன். அருணாசலத்தின் தலைமைத்துவம் மிகக் குறுகிய காலத்திலேயே, இனவழி தனித்துப் போன வரலாற்றுப் பதிவுகளைக் குறிப்பிடலாம்.

குடியேற்ற நாட்டாதிக்கத்துக்கெதிரான சுதேசிய மறுமலர்ச்சியானது தத்தம் சுயங்களைத் தேடும் பயணத்தில் முற்சாய்வான பல எண்ணத் திரள்களையும் சேர்த்துக் கொண்டது. ஐதீக கதைகளுக்கும், ஐதீகமான இன மேலாண்மை வரையறைகளினுள்ளும் பண்பாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்களை, சுயத்தின் பிரதிமைகளைத் தேடியதன் விளைவாக. இலங்கையில் இனமையவாதம் தலை தூக்கியமையை காணமுடிந்தது.

இந்த இனமையவாதமே ஒரு பண்பாடு என்ற உணர்வு (Mono - Cultural Consciousness) முனைப்பு வளர துணையாகியது. இலங்கை சிங்களவர்களின் தீவு. சிங்களம் மட்டுமே அரச கருமமொழி, ஒரு மொழிமட்டும் தான் அரச கரும மொழியாக இருக்கமுடியும், அது சிங்களம் அன்றி வேறெதுவாக முடியும் என்கின்ற இன மேலாண்மைக்கு வழி வகுத்தது. இலங்கையின் அரசியல் நிலைமாற்றங்களும் இனமுரண் வரலாறும் என்ற இயல் 3 இல் விரிவாகவே இந்த பிரிகோடுகள் காட்டப்பட்டுள்ளன. இந்த சுயம்பற்றிய தேடலினதும், உணர்வுகளினதும் விளைவான முற்சாய்வு எண்ணங்களே இனங்களுக்கிடையிலான வருங்கால உறவை நிர்ணயிக்கும் பாரபட்ச செயல்பாடுகளுக்கு அடிப்படைகளானமையை இயல் – 4,5 என்பவற்றில் விரிவாக காணப்பட்டது.

ஏற்கனவே ஆய்வின் அறிமுகத்தில் குறித்தவாறு முற்சாய்வு என்கின்ற உளச் சார்பும், பாரபட்சங்களும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று இணையாகவும், ஒன்றை ஒன்று தோற்றுவிப்பனவாகவும் இன்றுவரை தொடரக் காணலாம். இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் முதற் கூறான குடியேற்ற நாட்டாதிக்க கால கொள்கைகள், சுதேச இனக் குழுக்களின் உறவு நிலைகளைக் கருத்தில் கொண்டவைகள் அல்ல. தமது குடியேற்ற நாட்டாதிக்கத் தேவைகளையே மையமாகக் கொண்டவை. தமது நலன்களுக்காக உள்ளூர் இனக் குழுக்களிடையே பேதங்களை வளர்க்கக்கூடிய கொள்கைகளையும் கூட, இக்கொள்கைகள் தயக்கமின்றி நிலைநாட்டின.

இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் கல்விசார் இன உறவுக் கோலங்களின் முற்சாய்வும், பாரபட்சங்களும்.

1. கல்வி மொழிசார் கொள்கைகள்
2. கல்விக்கான வாய்ப்புக்களும், வளப்பகிர்வும்

எனும் முனைப்பான மையங்கள் பற்றிய நுண்ணாய்வின் வழி இவ்வாய்விலே வெளிப்படுத்தப்பட்டன.

மொழி என்பது ஒரு பண்பாட்டின் வெளிப்பாட்டு ஊடகமாக மட்டுமன்றி, பண்பாடுகளுக்கிடையிலான ஊடகமாகவும் அமைந்திருக்கின்றது. அத்தோடு பன்மைச் சமூகங்களின் பரஸ்பர புரிந்துணர்வுக்கும், உறவுக்கும் வழிவகுக்கின்றது. சமுகமான பன்மைப் பண்பாட்டு வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது, நிலவும் மொழிகளுக்குத் தரப்படும் சமநிலை வாய்ப்புகளின் வழியானது. உலக பன்மைச் சமூகங்களின் இந்த பாடங்கள் இலங்கை அனுபவத்தில் இன்றுவரை பயிலப்படாமலேயே போகக் காணலாம்.

சுதேச மொழிகளில் கல்வி என்ற முதல் முன்வைப்பிலேயே பெரும்பான்மை இனங்களின் மொழியான சிங்கள மொழியில் கல்வியென்பது வெளிப்பட்டது. பின்னர் அனுபந்தமாகவே தமிழையும் என்பது சேர்த்துக்கொள்ளப்பட்டது. முஸ்லீம், தோட்டப்பாடசாலை மாணவர்களின் கல்வி மொழி தொடர்பான விவாதங்களில் "பெரும்பான்மை இனமொழியே கல்வி மொழியாதல் வெண்டும். ஏனெனில் அதுவே அரச கரும மொழியாக இருக்கின்றது; உலக நடைமுறையும் அதுவே என்கின்ற விளக்கங்கள் அரசியல்வாதிகளிடமிருந்து மட்டுமன்றி கல்வியியற் பேராசிரியர்கள் மட்டத்திலிருந்தும் (Jeyasuriya, 1968) புறப்பட்டமை இலங்கையில் இனவாத அரசியலினுள் கல்வியியலும் அமிழ்ந்து போனமைக்கான குறிகாட்டி எனலாம். தமிழ் மாணவர்களுக்கு தென்னிந்திய நூல்கள் உண்டு. சிங்கள மாணவர் பின்தள்ளப்படுவார்கள், தோட்டப் பிள்ளைகள் சுற்றியுள்ள சிங்கள மக்களுடன் இணைந்துவாழ சிங்களம் கல்வி மொழியாதல் வேண்டும், எனும் இனவாத நோக்கிலான நியாயங்களாகவே இவர்களது முன் வைப்புக்கள் அமைந்தமை விரிவாக இயல் 4 இல் தெளிவுபடுத்தப்படுகின்றது. சிங்கள மொழிக் குழுமத்தினை மையமாகக் கெண்ட, ஏனைய இனக் குழுமங்களை சிங்கள மயமாக்கும் சிந்தனைகளாகவே இம் மொழிக் கொள்கைகள் அமைந்தபோது, இலங்கையின் மற்றைய பிரதான இனக் குழுமமான தமிழ்குழுமம் விழிப்புக் கொண்டதும், தமது உரிமைக்காக முனைப்புக் கொண்டதும் இனவாதத்திற்கு எதிரான போர் நிலைவரை உணரப்படுகின்றது.

ஆங்காங்கே இரண்டாவது மொழி, இணைப்பு மொழி என்கின்ற பெயர்களில் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையினைத் தவிர்க்கும் சிபார்சுகள் முன்வைக்கப் பட்டபோதும் செயலளவில் அவை உரிய இலக்கினை காணமுடியவில்லை என்பதே வரலாறாகும். இன முரண் விரிவால் துண்டுபட்ட இனங்களை இணைக்க ஆங்கிலம் இணைப்பு மொழியாக வேண்டும் என்பதிலிருந்து, சிங்கள மாணவர்களுக்கு தமிழும், தமிழ் மாணவர்களுக்குச் சிங்களமும் கற்பிக்கப்பட வேண்டும் என்பது வரை நீண்ட பகுப்பாய்வுகளின் பின்னான விதப்புரைகள் முன்வைக்கப்பட்டன. எனினும் அவற்றுடனான விளக்கக் குறிப்பில் முனைப்பு பெற்ற இனவாத அணுகு முறைகளாலேயே அவை செயலிழந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரும்பான்மையினர் சிறுபான்மையோர் மொழியை கற்க கட்டாயப் படுத்த முடியாது" எனும் எடுகோளிலிருந்து "பரஸ்பரம் மொழி கற்பிக்க ஆளணி வசதியில்லை" எனும் சாட்டுக்கள்வரை இந்தக் கொள்கைகளின் நடைமுறைப் பலவீனங்களைத் தெளிவாகக் காணமுடிந்தது.

கல்வி மொழி சார்ந்த மேலாண்மைக் கொள்கைகள் அனைத்துமே சிங்களம் அரச கரும மொழி என்ற மையப் புள்ளியிலே சங்கமமா கின்றன. இதன் விளைவாக அரச நிர்வாக பதவி வாய்ப்புக்களில் ஏற்பட்ட பாதிப்புக்கள், குறிப்பாக தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற மாணவர்களை தொழில் சார் கல்வித் துறைகளுக்குத் தூண்டியதும், இத்துறைகளின் உயர் கல்வி வாய்ப்புக்களில் அளவுக்கு மிஞ்சிய வீதத்தில் தமிழ் பிள்ளை களுக்கு இடம் தரப்படுகின்றது என்ற இனவாத கோஷங்களும் தரப் படுத்தல் என்ற இனவாத நடைமுறைக்கு வடிவம் தந்தமை, இயல் 6 இன் முதல் பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. கல்வி வாய்ப் புக்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை அட்டவணை 5.1. 5.2, 5.3 என்ப வற்றில் விரிவாக காணமுடியும். அறிவியலுக்குப் புறம்பான இனவாத செயலாக விமர்சிக்கப்படும் இந்நடைமுறை, இலங்கையின் இன உறவுகளின் விரிசல் தீவிரமானதோர் போராட்ட வடிவம் பெற தூண்டல் காரணியாகியமையை இங்கு கவனத்திற்குரியதாகும்.

தமக்கான கல்வி வாய்ப்புக்கள் இன ரீதியான தரப்படுத்தல், மாவட்ட கோட்டா என்ற வியாக்கியானங்களினால் மறுக்கப்படும் போது பாதிக்கப்பட்ட இளைஞர் தாமே இவற்றுக்கான பரிகாரங்களைத் தேட நேர்ந்தமையை இன்றைய இனப்போரின் தொடக்கப் புள்ளிகளில் தரிசிக்க முடியும். அவ்வப்போது இன உறவின் இந்த முரண் விரி சலை சரிசெய்யும் நோக்கில் பல கல்வி ஆணைக்குழுக்கள் அமைக்கப் பட்டதும், சிபார்சுகள் முன்வைக்கப்பட்டதும், நாட்டின் இனவாத அரசியலினுள் அவை பலமிழந்து போனமையும் யதார்த்தமாகும்.

இவ்வாறே கல்விக்கான வள ஒதுக்கீட்டிலும் இன அடிப்படை யிலான பாரபட்ச நிலைமைகள் வெளிப்படக் காணலாம். குறிப்பாக கல்வி வள ஒதுக்கீட்டில் பெரிதும் பாதிக்கப்பட்ட மலையகக்கல்விப் புலம் இயல் 5 இன் 5 வது பகுதியில் விரிவான கவனம் பெறுகின்றது.

> சிறிதளவு கணிதம், சிறிதளவு வாசிப்பு எழுத்து போதும், அதற்கு மேல் கல்வி வழங்கின், பின் தோட்டத் தொழிலாளர்களுக்கான தேவையில் பாதிப்பு ஏற்படும் (Burrous, 1905; Chattopadhayaya, 1979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற வெளிப்படையான சுரண்டல் வழியான இனவாத போக்குகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அரச மயமாக்கம் என்ற கொள்கையினடியாக நாட்டின் பல்வேறுபாகங்களிலும் தனித்துவமாய் இயங்கிய பல பாடசாலைகளின் வளங்கள் அரசுடமையாக்கப்பட்ட போதும் இம் மலையகப் புலமே பெரும் பாதிப்புக்குள்ளானமையை அட்டவணை: 5.19, 5.20, 5.21 என்பன துல்லியமாகக் காட்டி நிற்கின்றன. குடியியல் உரிமைப் பறிப்புடன் இழக்கப்பட்ட அரசியல் பலம், பின்னைய காலத்து தொழிற்சங்க அரசியல், அமைச்சுப் பதவிகள் என விருத்தி கண்ட நிலையிலும் கல்வி வாய்ப்புக்களில் "இருந்தவற்றையே இழத்தல்" எனும் நிலையாகவே இன்றும் காணப்படுகின்றது. பன்னாட்டு உதவி நிறுவனங்களின் துணையுடனான மேம்பாட்டுத் திட்டங்களையும் கூட இனவாத நோக்கில் தடுத்துவிடும் அதிகார தலைமைகளின் நிலைமைகளை ஹற்றன் புனித கபிரியேல் மகளிர் வித்தியாலயம் தொடர்பான விடயக்கலை ஆய்வு துல்லியமாகக் காட்டிநிற்கின்றது. மேற்கண்ட வளமறுப்பு, வளமிழப்பு என்ற நிலைமைகளுக்கு அப்பால் இனத்துவ அடையாளத்தையே இழந்துபோதலும் ஆங்காங்கே கல்விசார் இன உறவு கோலங்களாய் வெளிப்படுவதும் இங்கு கவனம் பெறுகின்றது. நிர்கொழும்பு போன்ற பிரதேசங்களில் தன்னமைவாக்கல் செயல்முறையாக தமிழ் பிள்ளைகள் தம் சுய பண்பாட்டுத் தனித்துவங்களை இழந்து சிங்கள மயமாக நிர்ப்பந்திக்கப்பட்ட நிலைமைகளும் இங்கு இணைத்து நோக்கப்பட வேண்டியன. இயல் 3 இன் ஹசீம் பெர்னான்டோவுடனான நேர்காணல் குறிப்பு இந்த நிலைமாற்ற படிமுறையை தெளிவாகவே புலப்படுத்தி நிற்கின்றது.

இன உறவு மேம்பாட்டில் கல்வியின் இடம்பற்றிய இன்றைய உலக ஆய்வுத் தரவுகள், கல்வி வழி இனங்களுக்கிடையிலான பரஸ்பர அறிமுகத்தினை வலியுறுத்துகின்றது. பண்பாட்டுப் பன்மை என்ற எண்ண கருவாக்கத்தின் வழி பரஸ்பரம் பண்பாட்டு தனித்துவங்களை அறியும், அறிவிக்கும் வண்ணமான கலைத் திட்ட, கற்பித்தல் ஏற்பாடுகளை அழுத்தி நிற்கின்றது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் தொடக்க காலமுதலே இந்த கருத்தியல் கவனம் பெறாதுபோனமையை இயல் 5 இன் 3ம் பகுதியான பாடநூல்கள் பற்றிய நுண்ணாய்விடை காணமுடிந்தது.

இணக்கமான புரிதலுக்கான அடிப்படைகளை உள்ளடக்காமை என்பதற்கு மேலாக விரிசலுக்கான முற் சாய்வுகளை விதைக்கும் விடயங்களைக் கொண்டதாக இலங்கையின் பாடநூல் பரப்புகள் அமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், உள்ளடக்கப் பகுப்பாய்வின் வழி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. குடியேற்ற நாட்டாதிக்க கால இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள் தந்த அந்நிய பண்பாட்டுப் புல உணர்வுகள் சுதேசிய கல்வி நூலாக்கத்துடன் சுதேச இனவாத நோக்கினுக்குப் பலியான நிலைமைகள் இவ்வாய்வில் குறிப்பான கவனம் பெற்றன. அதே வேளை சிங்களம், சமூகக் கல்வியும் வரலாறும் போன்ற பாடநூல்கள் சிங்கள மையவாதத்துடன் அமையப் பெற்றமை தெளிவுபடுத்தப்படும். ஆண்டு ஒன்று முதல் மொழி பாடநூலில் இருந்தே இந்த பேதமான சமூகமயமாக்கல்கள் தொடங்கி வைக்கப்படுதலைக் காணமுடியும். (உருவப்படம் 5.2)

ஒரே பண்பாட்டு அளிக்கைகளாக இந்த பாடநூல்களின் தன்மை அமைந்தமையும், ஐதீக கதைகளின் வழி இனமுரண் உணர்வுகள் வளர்க்கப்பட்டமையும் நாட்டின் இனத்துவ ஒருமைப்பாட்டுக்கான தனியன்களின் உளவியல் நிலைமைகளைப் பாதிப்பனவாகவே அமைந் தமை புலனாகும். குறிப்பாக வரலாறு கற்பித்தல் நிலைமைகள் தொடர் பான ஆசிரியர்களிடத்தான நுண் அவதானங்களிடை வெளிப்பட்ட இனவாத நோக்கிலான முற்சாய்வு எண்ணங்கள் அதிர்ச்சி தருவன: அதேவேளை இன்றைய இனமுரண் விரிவுக்கான அடிப்படைகளை இனம் காட்டுவன.

மேற்கண்ட சமூகக் கல்வி வரலாறு பாடநூல்களின் ஆக்கம் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சன ஆய்வுகள், மேலும் சமூகக்கல்வி பாடநூல் ஆக்க சபையில் ஒரு தமிழர் தானும் இல்லை என்ற ஆய்வுக் குரல்கள் இன்றுவரை கேட்கப்படவே இல்லை எனலாம். அதுபோலவே றெஜி சிறிவர்த்தனா எண்பதுகளில் சுட்டிக்காட்டியது போல பாடநூல்களின் ஆக்கம் தொடர்பான இலங்கையின் கல்வியமைப்பில் தெளிந்த கொள் கைகள் ஏதும் இருந்ததில்லை என்பது இவ் ஆய்வுத் தரவுகளின் வழியும் நிதர்சனமாகும்.

இலங்கையின் அரச மொழி-கல்வி மொழி தொடர்பான இனவாத கொள்கைகள் அனைத்துமே மொழிவழியான தொழில் வாய்ப்புக்களில் குவிந்திருந்தமையை இவ்வாய்வும் உறுதிசெய்கின்றது. ஆங்கில கல்வி வாயிலாக தமிழ், பறங்கியின மக்களுக்கு அதிகமாக கிடைத்த தொழில் வாய்ப்புக்களை மட்டுப்படுத்தும் நோக்கிலான "சிங்களம் மட்டும் அரச கருமமொழி, சிங்கள மொழிவழி கல்வி" என்ற இலக்குகள் பெரும்பான்மை இனமக்களுக்கான வேலைவாய்ப்புக்களை அதிகரிப் பனவாக அமைந்திருப்பது இயல் 5 இன் 2 வது பகுதியில் விரிவாக விளக்கப்பட்டது. 5.13-5.17 வரையான அட்டவணைகள் தரும் புள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்கள் இந்த வாய்ப்புக்களில் நிகழ்ந்த பாரபட்சங்களை தெளிவு படுத்துகின்றன.

இலங்கையின் கல்விசார் இன உறவுக் கோலங்கள் பற்றிய மேற் கண்ட பகுப்பாய்வின் சாரமாக பின்வரும் காட்டுருவை முன்வைக் கலாம்.

உரு : 6.1 இலங்கையின் கல்விசார் இன உறவுக் கோலம்




தொகுத்து நோக்கும் போது இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் கல்வி சார் இன உறவுப் போக்கானது, இன ரீதியான மேலாண்மை, பேரினவாத முனைப்பாகத் தோற்றம் காட்டியபோதும் அதன் குவிமையங்களாக, வளங்களுக்கான போட்டி அல்லது பொருள் சார் நலன்கள் என்பனவே துலங்கிடக் காணலாம்.

> முற்சாய்வும். பாரபட்சமும் பிற குழுக்கள் போட்டிக்கு வராமல் தடுக்கும் முகமூடிகள்

எனும் கரி வில்லியம்ஸின் (Williams, 1948) கருத்தியலை இந்த ஆய்வும் மீள வலியுறுத்துவதாக அமைகின்றது. குடியேற்ற நாட்டாதிக்க காலத்தின் வரலாறாக கல்வியுள்ளிட்ட நவீனமயமாக்க கூறுகள் இங்கு அறிமுகமானபோதும் உறுதியான பொருளாதார கொள்கைகளையோ மேம்பாட்டுத் திட்டங்களையோ காணமுடியாத நிலையில் நிலவும் வளங்களை மட்டாகப் பகிர்வதில் அரசியல் பொருளாதார, சமூகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலங்களில் முரண்பாடே விளைபொருளாகின்றது என்கின்ற வள போட்டிக் கோட்பாட்டின் (Resource Competition Theory) யதார்த் தத்தினை இலங்கையின் இன்றைய இன முரண் வரலாறாக இவ் வாய்வின்வழி தரிசிக்க முடிகின்றது. (Glazer & Moynihan,1975).

இவ்வாறான முரண் போட்டி நிலைமைகளே கூட்டு இனத்துவ உணர்வாகவும், பிராந்திய ஒருமைப்பாட்டுக்கான செயற்பாடுகளாகவும் வடிவம் பெறுகின்றன. மேற்கண்ட கூட்டு இனத்துவ உணர்வின் வழியேயே தத்தமது பண்பாட்டின் தனித்துவ மீள் உருவாக்க தேடலாக தேசிய விழிப்புணர்வும் உயிர்ப்புப் பெறுகின்றது.

தேசிய விழிப்புணர்வு என்பது தத்தமது சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைக்கான சுயநிர்ணயம் எனும் நிலையில், அரசியல் அதிகாரத்தினை நோக்கிய எதிர்ப்புணர்வாக எழுச்சி பெறுகின்றது எனும் டெஸ்பெரஸின் (Despres, 1975) பன்மைச் சமூகங்கள் தொடர் பான ஆய்வு முடிவுகளை இவ்வாய்வுப் புல நிலமைகளும் உறுதி செய் கின்றன.

இத்தகைய அதிகார மையங்களை நோக்கிய எதிர்ப்புக்களை இராணுவ மயமாதலின் வழி அடக்கும் நிலைமைகளில் இன முரண், வன்முறைவடிவம் எடுப்பதும் இன்றைய ஆய்வு அனுபவங்களாக பதிவு பெறுகின்றன (Enloc, 1973; Horowitz, 1985). இத்தகு எழுச்சிகள் அடக்கப்படும் போது, மேலும் மேலும் உறவு விரிசலுக்கும், அழிவு களுக்கும் வழிவகுக்கும் உலக நிலைமைகள் இலங்கையின் இன்றைய இனத்துவ உறவு நிலை தொடர்பான எச்சரிக்கையாகலாம்.

## பண்பாட்டுப் பன்மை

பண்பாட்டுப் பன்மை, பண்பாட்டுச் சனநாயகம் என்ற இலக்குகளினடி யாக இலங்கையின் இன்றைய இன உறவு விரிசல் சீர் செய்யப்பட வேண்டும்.

> மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாக பிறந்தவர்கள், கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமானவர்கள், ஒருவருக்கொருவர் சகோதர உணர்வு களுடன் நடந்து கொள்ள வேண்டும்

எனும் உலக மனித உரிமைகள் அறிக்கையின் பொருள் அர்த்தம் பெறும்போதே இனத்துவ உறவு நிலைகளிலும் மேம்பாடு எய்தப்படும்.

இந்தவகையில் கல்விசார் இன உறவு தொடர்பாக முன்வைக்கப் படும் தன்னமைவாக்கல், நெகிழ்வுடன் பொருத்தப்பாடு காணல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்துபோதல் என்பன சாத்தியமற்றவை என்பதனை இலங்கையின் இனத்துவக் குழுக்களின் பாரம்பரிய தனித்துவங்களின் வழியாக உணரமுடியும். அடக்கு முறையில் இணக்கம் என்பதற்கு பதிலாக பல்வேறு இனத்துவக் குழுக்களின் பங்களிப்பைப் பெற்றுத் தரும் 'பன்மையில் ஒருமை' என்ற கோட்பாடும் நடைமுறையுமே (Rose, 1990) தேசத்துக்கு நன்மைபயக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை

## உத்தியோகபூர்வ வெளியீடுகள்


*கொழும்பு கல்வித்திணைக்களத்தின் தமிழ் பிரிவு அறிக்கை, கொழும்பு, 1980.*

*சிறுவர் பாதுகாப்பு நிதிய ஆண்டறிக்கை, யாழ்ப்பாணம், 2000.*

*பொதுப்போதனைப் பணிப்பாளர் நிர்வாக அறிக்கை, கொழும்பு, 1900–1915.*

Census of Population and Housing General Report, Dept. of Census & Statistics, Ministry of Planning & Information - 1827 - 1981.

Ceylon Universtiy Act, Parliament of Sri Lanka, Colombo, 1972.

Commonwealth Secretariat - Report of the Commonwealth Observer. Phase II, London, 1993.

Educational Amendment Act No 5 of 1951 Colombo, 1951.

Hansard (SC), 25th May 1944; 30th May 1944; 25th January 1945; 26th September 1950; 6th January 1971; 5th December 1974; 11th December 1978, Colombo.

National Education Commission Reforms in General Education, Colombo, 1997.

Population Census Report Colombo, 1907.

Proceeding of the Legislative Council, Colombo, 1865.

Report of the University Commision, Colombo, 1962.

Report of the National Council for Higher Education for 1966/1967, Colombo, 1968.

Second Annual Report of the University Grants Commission, Colombo, 1980.

Sessional paper VIII of 1867 - Report of the Sub Committee of the Legislative Council.

Sessional Paper XXVII of 1905 (LC) Report of the Commission on Elementary Education in Ceylon (appendix-A)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sessional Paper XIX of 1912 (LC) Report of the Education Committee of 1911 -12.

Sessional Paper XX of 1912 The Final Report of the Education Committee of 1911 - 1912.

Sessional Paper XXI of 1912 (LC) Secondary School in Ceylon - J.R.R.Bridge.

Sessional Paper XXVIII of 1929 Report of the Commission of the System of Education in Ceylon.

Sessional Paper XXIV of 1943 Report of Special Committee of the Education.

Sessional Paper I of 1954 Ceylon.

Sessional of X of 1956 Ceylon (Appendix - 1).

Seessional of X of 1956 Report of the Commission on higher Education in the National Language. (Appendix-D).

Sessional Paper I of 1962 Interim Report of the National Education Commission.

Sessional Paper X of 1963 Report of the Commission of inquiry of Technical Education.

Sessional Paper of I of 1990 Report of the Presidential Commission of Youth.

Statistical Abstract, US Bureau of Census, Washington D.C.: US. Govt. 1993.

### நூல்கள்

ஆறுமுகம். வ, கல்விப் பாரம்பரியங்கள், கல்விக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1994.

இலங்கையிற் கல்வி, பாகம் II & III, கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு, 1969.

சமூக விஞ்ஞானிகள் சங்கம், இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும், கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், 1985.

கல்வியின் புதிய பாதை, கல்வியமைச்சு வெளியீடு, கொழும்பு, 1972.

குலசேன, கே.ஜி., பாடசாலை முகாமைத்துவ செயற்பாடுகள், செல்வராஜா, எம் (பதிப்பாசிரியர்கள்), கொழும்பு, 1991.

கீதபொன்கலன்,ச., பௌத்த சிங்களவரும், சிறுபான்மையினரும், செரா வெளியீடு, பெசன்ற் நகர், சென்னை, 1987.

சண்முகலிங்கன், என். & பக்தலத்சலபாரதி, இலங்கை இந்திய மானுடவியல், மெய்யப்பன் பதிப்பகம், 2004.

சத்தியசீலன், ச., இலங்கையின் இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம், n.d.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகரம்,ப., கல்வித்துவம், யாழ் கூட்டுறவு தமிழ்நூல் பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1975.

சந்திரசேகரம், சோ & கருணாநிதி.மா., இலங்கையிற் கல்வி கவிதா பதிப்பகம். மதுரை, 1993.

சமுத்திரன், இலங்கை தேசிய இனப்பிரச்சினை, காவ்யா, சென்னை, 1983.

சொர்ணவல்லி, பத்மநாப ஐயர் , இலங்கையில் தோட்டப் பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும் பிரச்சினைகளும், தமிழியல், யாழ்ப்பாணம், 1998.

தணிகாசலம்பிள்ளை. ச.நா., கல்வி நிர்வாகம், தணிகைப்பதிப்பகம், யாழ்ப் பாணம், 1999.

தமிழீழ மக்கள் மன்றம், இலங்கையில் இனப் போராட்டம், யாழ்ப்பாணம், 1988.

நித்தியானந்தன். வி., இலங்கையில் அரசியல் பொருளாதார அபிவிருத்தி, 1948-1956 கலைப்பீடம் யாழ் பல்கலைக்கழகம், 1989.

பக்தவத்சலபாரதி.சீ., பண்பாட்டு மானுடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.

புஸ்பரத்தினம்.ப., பூநகரி, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடு யாழ்ப்பாணம், 1993.

விடுதலைதரும் ஒன்றியம், போரா சமாதானமா, (யுத்தய சாமாய என்ற சிங்கள நூலின் தமிழாக்கம்) கொழும்பு, 1982.

ஜெயவர்த்தனா, குமாரி, இலங்கையின் இன - வர்க்க முரண்பாடுகள், சித்தாரா அச்சகம், சென்னை, 1978.

Arasaratnam. S., Sri Lanka After Independence, Nationalism, Communalism & Nation Building, University of Madras Publication, 1986.

Arumugam.V., Language in Education in a Multilingual society- The Sri Lankan experience, Inaugural lecture, University of Jaffna, 1992.

Bankas, James. A., Multi-Cultural Education: Theory and Practice. 2nd ed. Boston: Allyn Bacon, 1988.

Bastian, Sunil & Sriwardene, Reggie, School Text-books and Communal relations in Sri Lanka Council for Communal Harmony through the Media, Colombo, 1981.

Boateng, E.A., A Political Geography of Africa, Cambridge University press, 1979.

Carr, E.H., What is History? London, 1961.

Chattopadyaya, H.P., Indians in Sri Lanka P.S Publishers, 14, Have Spcet Calcutta, 1979.

Crapo, Richley H., Cultural Anthropology, DPG, The Dushkin Publishing Group, Inc, 1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Das Gupta, Jyothinidra, Language, Conflict and National Davelopment, Berkely: Union of California Press, 1970.

de Beer, Z.J., Multi Racial South Africa- the Reconciliation, London: Oxford University Press, 1961.

Despries, Leo A., Ethnicity and Resource Competition in Plural Societies, Mouton Publisher, Thettague, 1975.

Dharmadasani, M.D.(ed), Sri Lanka - An Island in Crisis, Smlimar Publishing House, Varanasi, 1975.

Enlore, Cyntia, Ethnic Conflict and Political Development, Little Brown, 1973.

Ewan, J M Mc & Robert. B Sutcliffe (ed), The Study of Africa, Methuen Co Ltd, London, 1965.

Ferguson, chartes, Language Factor in National Development, Sudy of the role of Language., London, n.d.

Frank, A ., Study of the Role of Second Language in Asia, Africa, and Latin America, Washington, D.C: Center for Applied Linguistic of the Modern Language Association, 2000.

Glazer, Nathan & Danial, P.Moyihan, Ethnicity Theory and Experience, Haward University press, 1975.

Henlin, James.M., Sociology: A down to earth approach, Bostan: Allyn and Bacon, 1995.

Horowitz. D.L., Ethnic Groups in Conflict, University of California press, 1985.

Jeyasuriya,J.E., Educational policies and progress, During British rule in Ceylon (Sri Lanka) 1976-1948,Associated Educational Publishers, Wesley press, Colombo, nd. 1968, Education in Ceylon, Before and After Independence, Associated Educational Publishers.

Kodikara, S., Indo- Ceylon Relations Since Independence, The Ceylon Institute of World Affairs, Colombo, 1987.

Laborede, E.D., Australia, New Zealand and the Pacific Island, Melbourne: William Heinemann, 1993.

Lorvevin, Marianne, Apartheid - Power and Historical Falsification,France: UNESCO, 1980.

Manoharan, Chelvadurai, Ethnic Conflict and Reconciliation in Sri Lanka. Univ.of Hawaii press, Honolulu, 1978.

Mendis. G.S., Ceylon Today and Yesterday, the Associated News Paper Ceylon Ltd, Colombo, 1903.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ceylon Under the British Colombo Apatheones Co. Ltd, Colombo, 1944.

The Colbrooke- Cameron paper Selected and edited OUP, vol.I, 1956.

Nash, Paul, Authority and Freedom in Sri Lanka, John Wiley & Sons Inc. New york, 1966.

Narullah and Naik.J.P., A History of Education in India, Macmillan, Bombay and London, 1951.

Neubeck, Kenneth, J., Social Problems - A Critical approach, Mc Graw-Hill New York, 1991.

Nissanka,H.S.,Sri Lanka's Foreign Policy A study of Non-Alignment, New Delhi, 1984.

Padnis, Urmila, Ethnicity and Nation Building in South Asia: A case study of Sri Lanka, UNESCO, Paris, 1972.

Pathmanathan.S., Kingdom of Jaffna, part I. Colombo, Arul Rajendram, 1978.

Pattanayak.D.P., Multi-Lingualism and mother tongue Education, Delhi, 1951.

Philips, Rajan (ed), Sri Lanka: Global Challenges and National Crises - Proceedings of Hector Abhayavardhna Felilitation Symposium, SSC, Colombo, 2001.

Ragupathy.P., Early Settlement in Jaffna, An Archaeological Survey, Madras, 1987.

Remy, Richard C, Government in the United States, Newyork: Scribner Educational Publisher, 1984.

Roberts, Micheal, "Problems of collective identity in Multi-Ethnic Society: Sectional Nationalism Vs., Ceylonese Nationalism 1900-1940" in Michael Roberts (ed) Collective identities, Nationalism and Protest in modern Sri Lanka. pp 337-360, Colombo: Marga Institute, 1979.

Rose, Peter I., They and We, Racial and Ethnic Relations in the United States, Mc Graw- Hill Publishing Company, New York, 1990.

Rusell, Jane, Communal Politics Under the Donoghmore Constitution, 1931-47, Tisara Pralasakiyo Ltd. Colombo, 1982.

Sasanka.P., The world According to me : An interpretation of the ordinary, the Common and the mundane, International Center for Ethnic Studies, Colombo, 1999.

Seidman, Edward & Sappaport, Julian (ed), Re-defining social Problemes, New York: Plenum Press, 1976.

Sharma, K.L., Society and Polity in Modern Sri Lanka, South Asian Publishers (Pvt) Ltd., New Delhi, 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Shaver, James, (ed), Hand Book of Research on social study teaching & Learning, New York, Mc Millan, 1990.

Simpson, George E & J.Milton Yinger, Racial and Cultural Minorities, (4th ed.) New york: Harper & Row, 1972.

Sparks Allster, The Mind of South Africa, New York, 1990.

Stirrat, R.L., On the Beach: Fishermen, Fish Wives and Fish Traders in Post-Colonial SriLanka, Delhi: Hindustan Pub-Corporation. 1988.

UNESCO, Racism and Apartheid in South Africa and Namibia, 1974.

Warnapala, W.A.Wiswa, Ethnic Strike and Politics in Sri Lanka. Navarank, Lake House book shop, 1994.

Waston, K., Education and Colonialism in Peninsular Malaysia in Education in the Third world,1985 Keith Waston(ed), London: Groom helm.

William, Cary Mc , A Mask for previlege: Anti-Semitism in America, Bostan: Little Brown.

Wilson, A.J., Politics in Sri Lanka 1947-1973, London: The Machallam Press. Ltd. 1974

The break-up of Sri Lanka- The Sinhalese - Tamil Conflict, London, 1988.

## சஞ்சிகைகள்

ஆறுமுகம்.வ., சுதந்திர இலங்கையில் கல்வி மொழிக் கொள்கையாக்கம், கலைஞானம், கல்விக் கழக வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1984.

ஆறுமுகம்.வ., இலங்கை கல்வியில் மோர்கன் அறிக்கை. கலைஞானம், கல்விக்கழக வெளியீடு, யாழ் பல்கலைக்கழகம், 1990.

கிருஷ்ணராசா, செ., இலங்கையில் இனப்பிரச்சினையின் புராதன கருவூலங்கள். விருட்சம், வணிகமாணவர் சங்க வெளியீடு, 1986.

சண்முகலிங்கன், என்., அறிவும் உணர்வும் அரசியலும்: பௌத்தம் துரோகம் செய்தது? நூல் தடைவிவகாரம் – மீளாய்வு. சிந்தனை VI இதழ் III கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1997.

சந்திரசேகரம், சோ., மலையகத்தில் பாடசாலை செல்லாத பிள்ளைகள், ஊற்று, யூன் 1974.

சிவலிங்கம், இரா., மலையகத்தில் கல்வித் தீண்டாமை, குறிஞ்சிமலர், கொழும்பு: இலங்கைப் பல்கலைக்கழகம், 1978.

மெயின்டல், டெயிட் ரே, சிறுபான்மையினர் என்றால் என்ன?, யுனஸ்கோ கூரியர் ஆகஸ்ட், 1993.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதராஜன்.சி., தமிழீழ மண்ணில் சிங்கள குடியேற்றங்கள், தமிழீழ நோக்கு, தமிழீழ வள ஆய்வு சஞ்சிகை, தொகுதி 1, பகுதி 2, யாழ்ப்பாணம், 1992.

Bandara, Madduma C.M., Sarasari Sisunge Pradeshiya Vyaapthiya saba Dstrika Kumays Pilibanda Adahan, Keepayak, Srilanka Samajavadi Adhyayanan kavaya, No 4, 1974.

Begley, Vimala, Excavation in Pomparippu; Ancient Ceylon Vol 4, May 1981.

Behiens, Michael & Ranch Andreas, South Africa on the Road to Democracy in Aussen Politic, German Foreign Affairs Review, Vol 42. 4191, 4th Oct' 91, Habrug, 1991.

Chai-Hon-Chan, Education and Nation Building in Plural Societies: the west Malaysian Experience,Development studies Monograhp: No.6, Canberra: Australian National University, 1977.

Connor, W., 'Nation Building or Nation Destroying?', World Politics, april'72, 1972.

Daraniyagala, S., Archaelogical Exploration in Ceylon part 2, Ancient Ceylon - N02., Dec. 1972: 1-18, 1972.

De Silva, C.R., Weightage in University Admission: Standardization and District Quotas, Modern Ceylon studies 5,2 (1972), 1972.

Weightage in University Admissions Standardistation & District Quotas in Sri Lanka, Marga, Vol 5, N0.2, 1974.

EJIS, European Journal of Inter - Cultural Studies, Sweden, 2000.

Gunadara, Jagdish, S., Issues of Discrimination in European Education systems, in Comparative, Education, Vol. 36 number 2 May 2000, Carfax publishing. U.K, 2000.

Gunawardane, R.A.C.H., The People of the Lion; The Sinhala Identity & ideology in History & Historiography, Sri Lanka Journal of the Humanities Vol V. Nos 1 & 2., 1979.

Hartshorne, Ken, Education in the transition period, in South Africa Foundation Review, August' 1990.

Jeyasuria,J.E., Development in University Education, University of Ceylon Review, Vol. XXIII, No 1 & 2, 1965.

Jorgenson, C.C., I.Q tests & their Educational Supporters, Journal of Social Issues, No. 29, 1973.

Kearney, Robert N., Language and Rise of Tamil Separatism in Sri Lanka, Asian Survey, Vol. XVIII, 5, May, 1975 pp 521 - 34, 1975.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kumari Jayawardena, Aspects of Class & Ethnic Consciousness in Sri Lanka, Development and Change, Vol.14, 1983.

Rappaport, J., In Praize of Paradox: A Social policy of Empowerment over preventation, American, Journal of Community Psychology. Vol 9, 1981.

Sahadevan, P., Negotiating Peace in Ethnic Wars, International Studies, 43:3, pp 239 - 66, 2006.

Sasanka, P., Teacher's role in the ethnic conflict I & II, Pravada, vol. 1 No. 11 &12, 1992.

Sieber, S.D., The integration of Field work and Survey methods, in American Journal of Sociology, Vol.78, No.6. University of Chicaco Press, 1973.

Sitrampalam, S.K., Ancient Jaffna- An Archaeological Perspective, Journal of South Asian Studies, Vol. 3 No. 113, Faculty of Arts, Jaffna, 1984.

Sriweera, W.I., The Dutagamini - Elara Conflict : A historical re interpretation in Modern Ceylon, Studies, Vol. 7, No. 1 & 2, 1980.

Uswatta Aratchi, University admission in Ceylon, Modern Asian Studies, Vol. 8, No. 3, 1974.

Uyangoda, Jeyadeva, Ethnic Conflect in Sri Lanka: Changing Dynamics, Policy Studies 32, Washington, DC: East-West Center, 2007.

### பாடநூல்கள்

சமூகக்கல்வியும் வரலாறும், ஆண்டு 8, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு, 1999.

ஆண்டு 9, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு.

சிங்களம், தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 5, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், - தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு, 1986-2000.

சுற்றாடற் கல்வித்தரம் 6, பாடநூல் வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

தமிழ் - தரம் 3 - தரம் 4, கல்வி வெளியீட்டுத் திணைக்களம் கொழும்பு, 2000.

தமிழ் - தரம் 6 & தரம் - 7, கல்விவெளியீட்டுத் திணைக்களம் - தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு, 2000.

பாலபாடம் – தரம் VI, தனலக்குமி புத்தகசாலை, யாழ்ப்பாணம், 1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செய்தித்தாள்கள்

இந்திரஜித், எம்., மலையகத்து தமிழக ஆசிரியர் ஆட்சேபனைகளின் பின்னணியில் இனவாத குரல்கள், விரகேசரி, 12.7.1998, கொழும்பு, 1998.

குறிஞ்சிக் குரலோன், ஆங்கில மொழிக் கல்வியில் எதிர்கொள்ளப்படும் ஆபத்து, ஞாயிறு தினக்குரல், 27.06.2001 கொழும்பு, 2001.

சந்திரசேகரம், சோ 2000 ஆம் ஆண்டில் மலையக கல்வி வீரகேசரி, வாரமலர் 29.10.1995 த எக்ஸ்பிரஸ், நியுஸ் பேப்பர் லிமிட்டெட் கொழும்பு, 1995.

துரைமனோகரன், வீரகேசரி கொழும்பு 18.08.1999, கொழும்பு, 1999.

நேசமணி, மு., அட்டன் புனித கபிரியேல் பிரச்சினைக்கு தமிழ் வித்தியாலயமே தீர்வாகும், வீரகேசரி, 25.01.1996 கொழும்பு, 1996

பாரதி, இராசநாயகம், இனவாதப்பிரதிநிதித்துவத்தின் ஆரம்பம் வீரகேசரி 3.7.1993.

ஸ்ரனிஸ்லோஸ், தினகரன் வாரமலர், கொழும்பு, 2000.

All Ceylon Muslim Council, The Daily News, The Associate News papers of Ceylon Ltd. (17.3.1964)

Chandrika, K., Times of Ceylon, 6.11.1994.

Over Marking, Allegations & Attitudes - Comments by some University Teachers, 7th Dec. 1978.

### பிரசுரிக்கப்படாத ஆய்வேடுகள்

யசோதா பத்மநாதன், நீர்கொழும்பில் சிங்களம் பேசும் தமிழர், வரலாற்றுத்துறை, கலைமாணிப்பட்ட ஆய்வு (பிரசுரமாகாதது), யாழ். பல்கலைக்கழகம், 1992.

Arumugam, V., A Comparative Study of Language Policies and problems in Ceylon and India since Independence (un published M.Phil. Thesis). Institute of Education, University of London.

Arumugam, V.,Discrimination in Education A Study to the problems encountered by the Srilankan, Tamils, Theepam Institute, Jaffna, 1982.

Sriwardane, Education for racial integration in Ceylon, unpublished dissertation, University of Peradeniya, 1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் கல்வியும் இன உறவும்

**கௌரி சண்முகலிங்கன்**

கல்வியின் சமூக பண்பாட்டுப் பரிமாணங்கள் தொடர்பாக ஆராயும் இந்நூல் இனவாத கருத்தியல் நடைமுறைகளுக்குள் அமிழ்ந்து போயுள்ள இலங்கையின் கல்வியும் இனஉறவும் தொடர்பான ஆழமான - ஆக்கபூர்வமான சிந்தனைகளை முன்வைக்கின்றது.



**கௌரி சண்முகலிங்கன்:** இவர் யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த தேசிய பாடசாலையான வேம்படி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகமாணிப் பட்டத்துடன், கல்வியியல் முதுகலைமாணிப் பட்டதாரியாகவும் விளங்குகின்றார். சமூகவியல் பேராசிரியரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இந்நாள் துணைவேந்தருமான பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களின் வாழ்க்கைத் துணையான இவர், பேராசிரியரின் ஆய்வு - சமூக பணி களங்களிடையே உறுதுணையாக விளங்குபவர். பேராசிரியருடன் பல சர்வதேச ஆய்வரங்கு அனுபவங்களைப் பெற்றவர்.

ISBN 978-955-659-188-0
9 789556 591880
விலை ரூபா 450.00

குமரன் புத்தக இல்லம்

விடயம்: கல்வியியல் / அரசியல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

#374